
வெண்கலச் சிலை

அல்லது

கன்னியின் முத்தம்


மூன்றும் பாகம்

நாகை-ஸி. கோபாலகிருஷ்ண பிள்ளை
இயற்றியது



சென்னை :
வி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்

ரிஜிஸ்தர் செய்தது] 1916 [விலை 12 அணா


PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

ஓம்

முகவுரை

ஆங்கில மொழியில் நாவல் எழுதுவதில் நிகரற்று விளங்கிய ரெயினல்ட்ஸ் என்னும் நூசைமகனார் இயற்றிய நாவல்களுள் 'வெண்கலச் சிலை அல்லது கன்னியின் முத்தம்' என்னும் இந்நாவல் மிகச் சிறந்ததாகும். இதனைத் தமிழில் எழுதத் தொடங்கி, முதலாளின் முற்பகுதியை எமது நண்பரும், தமிழிலும் ஆங்கிலத்திலும் முதிர்ந்த ஆராய்ச்சியுடையவருமான ஸ்ரீமான் ஆ. சங்கரலிங்கம் பிள்ளை, B. A., அவர்கள், இரண்டு பாகத்தில் எழுதி முடித்தார்கள். அந்த இரண்டு பாகங்களும் தமிழ் நன்மக்களின் நன்கு மதிப்பைப் பெற்றன. ஆனால், அந்தோ! முதலாளின் பிற்பகுதியையும் தமிழில் எழுதி நாவலை முற்றுப் பெறுவிப்பதற்குள், அவர் அகால மரணத்திற்கு ஆளாயினர். முதலிரண்டு பாகங்களையும் படித்து மகிழ்ந்த தமிழ் மக்கள் ஏனைய இரண்டு பாகங்களையும் படித்துக் கதையின் முடிவைத் தெரிந்து கொள்ளுவதில் வேட்கை பெரிதும் கொண்டவர்களாயிருக்கிறார்கள் என்பதை இனிதறிந்த மெஸர்ஸ் 'வி. குமாரசாமி கர்யுடு அண்டு சன்ஸார்' எம்மை எழுதும்படி வற்புறுத்தினர்கள். இந்நாவலின் முதலிரண்டு பாகங்களையும் இயற்றிய ஆசிரியரைப்போல் யாம் அவ்வளவு ஆற்றலுடையேம் அல்லேமாயினும், அவர் முடிக்காமல் அரைகுறையில் வைத்துச் சென்ற ஒரு நூலைத் தமிழ் மக்களுக்கு ஒருவாறு முடித்துக் கொடுத்தல் குற்றமாகாதென்னும் நம்பிக்கையினால் இந்நாவலின் மூன்றும், நான்காம் பாகங்களை எழுதத் துணிந்தாம்.

சென்னை,
1—6—15.

நாகை-ஸி. கோபாலகிருஷ்ணன்.

வெண்கலச்சிலை

அல்லது

கன்னியின் முத்தம்

மூன்றும் பாகம்

அதிகாரம் - 54

சத்திரம்

குதிரைகள்மீது ஏறிச் சென்ற பிரயாணிகள், வழியிலிருந்த ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். அப்போது சூரியன் மேற்றிசை மலைகளுக்குப் பின்புறத்தில் மறைந்தான். பிரயாணிகளுடைய முதல் நாள் பிரயாணம் இந்தச் சத்திரத்தில் தங்கியதோடு முடிவு பெற்றது.

அந்தச் சத்திரம் பழைய காலத்தில் கட்டப்பட்டதாயும், மிக விசாலமானதாயும் இருந்தது. அந்தச் சத்திரத்தின் சொந்தக்காரரும் அவருடைய மனைவியும் பிரயாணிகளை அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். ஏனெனில் சீவகனுடைய கம்பீரமான தோற்றத்தையும், சுமுகியின், — இவளுக்குத் தேவகி என்னும் மற்றொரு பெயரும் உண்டு என்பதை நம்முடைய வாசகர்கள்

மறந்திருக்க மாட்டார்கள், — உயர்ந்த ஆடையையும், பிங்கலன் என்னும் வேலைக்காரன் இவர்கள் இருவரிடத்திலும் நடந்து கொண்ட மாதிரியையும் பார்த்தவுடன், இந்தப் பிரயாணிகள் பெரிய பிரபுக்கள் என்றும், இவர்களை உபசரிப்பதால் அதிகமான வரும்படி கிடைக்குமென்றும் சத்திரத்தின் சொந்தக்காரரும் அவருடைய மனைவியும் நினைத்தார்கள்.

அந்தச் சத்திரம் ஜனசஞ்சாரம் இல்லாத தனியான ஓர் இடத்தில் இருந்தது. பிரயாணிகளுடைய குதிரைகளுக்குத் தீனி வைத்து, அவைகளை லாயத்தில் கொண்டு போய்க் கட்டும்படி சத்திரத்தின் சொந்தக்காரர் வேலைக்காரனுக்குக் கட்டளை யிட்டுவிட்டு, வழிப்போக்களை மேன்மாடிக்கு அழைத்துச் சென்றார். மேன்மாடியில் ஐந்தாறு அறைகள் வரிசையா யிருந்தன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அறை தனியாக விடப்பட்டது. இரவு எட்டுமணிக்குள் சாப்பாடு தயாராகி விடுமென்றும், தயாரானவுடன் கூப்பிடுவதாகவும் சத்திரத்தின் சொந்தக்காரர் சிவகனிடம் சொல்லிவிட்டுக் கீழே சென்று விட்டார். சுமுகி தன்னுடைய அறைக்குச் சென்றாள்; பிங்கலன் தன்னுடைய அறைக்குச் சென்றான். சுமுகியினுடைய தோழிப் பெண்களாகிய காமாக்ஷி, மீனாக்ஷி இருவரும் தங்கள் தங்களுக்குரிய அறைகளில் இருந்தார்கள். சிவகனும், யுத்தகோலத்திற்கு உரிய இரும்புச் சட்டை யணிந்து சிறந்த போர் வீரனைப்போல் தோன்றிய கண்ணகியும் ஓர் அறையில் இருந்தார்கள். ஆண்வேடம் பூண்டுள்ள கண்ணகிக்குத் தனியாக ஓர் அறை இருந்தபோதிலும், ஏதோ சம்பாஷணை செய்வதற்காக அவள் சிவகனுடைய அறையில் இருந்தாளே தவிர வேறில்லை. இன்னமும் சிவக

னுக்கு உண்மை தெரியாதாகலால், அவன் தன்னே டிருக்கும் போர்வீரனே ஆண்மகன் என்றே நினைத் திருந்தான்.

"இன்னுரென்று என்னால் அறிந்துகொள்ள முடி யாதபடி யிருக்கும் தைரியமுள்ள நண்பரே! நம்மோடு வந்த அழகிய பெண்மணியைப் பற்றி நீர் என்ன நினைக் கிறீர்?" என்று சீவகன் கண்ணகியை நோக்கிக் கேட் டான்.

"உண்மையிலேயே அவள் அழகிற் சிறந்தவளாகக் காணப் படுகின்றாள்!" என்று கண்ணகி பதில் கூறினாள். அவ்விதம் பதில் சொன்னபோது அவள் விட்ட பெரு மூச்சினால் அவளுடைய மார்பு, — இரும்பு உடையினால் பிணிக்கப்பட் டிருந்தபோதிலும், — விம்மிற்று. ஆனால் சீவகன் அதைக் கவனிக்கவில்லை.

"ஆ! பெண்களே நாம் பாராட்டிப் போற்றுவதற்கு 'அழகு' ஒன்று மாத்திரம் இருந்தால் போதுமா? கடந்த சில வாரங்களுக்குள்ளாக, என் அருமைச் சிநே கிதரே, நான் மூன்று அழகிய பெண்மணிகளைப் பார்த் தேன். அவர்களுள் ஒவ்வொருவரும் இன்னொரு ராம ராவண யுத்தத்தை உண்டு பண்ணுவதற்கு, — மற்றொரு விசுவாமித்திரருடைய தவத்தைக் கெடுப்பதற்குப், — போதிய ஆற்றல் வாய்ந்த அழகுடையவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனாலும் இந்த மூன்று அழகிய பெண்களும் வெவ்வேறு வகையான குணதிசயங்களை உடையவர்களா யிருக்கிறார்கள். இருளுக்கும் ஒளிக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ அவ்வளவு வித்தியா சம் இவர்களுடைய குணதிசயங்களில் காணப்படுகின் றது. முதலில் பூதகியை எடுத்துக் கொள்ளுவோம்—"

என்று சிவகன் சொல்லிக் கொண்டு வந்தபோதே "அவள் சுமுகியின் சகோதரி என்று நான் நினைக்கிறேன்!" என இடைமறித்துக் கண்ணகி கூறினாள்.

"ஆம்; அவள் சுமுகியின் சகோதரியே! அவளை இதற்கு முன்பு பார்த்திராவிட்டால், சுமுகியின் அவயவ அமைப்பில் இப்போது நீர் அவளைப் பார்க்கலாம். வேறு வகையில் அவளுடைய அழகை வர்ணித்துரைக்க என்னால் முடியாது. சுமுகியினுடைய சரீரநிறம் தூய்மையான சிவப்பு; பூதகியினுடைய சரீரம் கருமுகில் போன்ற கரிய நிறமுடையது. சுமுகியினுடைய கூந்தல் மைபோன்று கரியதாய், பட்டுப்போன்று வழுவழுப்பாய், கருமணல்போன்று பளபளப்பாயிருக்கும்; பூதகியினுடைய தலைமயிர் செந்தூரம்போற் சிவந்து, கோரைநார்போல் சிறிது கரடுமுரடாயிருக்கும், இவ்வளவேதான் அவர்களுக்குள் காணப்படும் வித்தியாசம். மற்றப்படி பூதகிதான் தேவகி; தேவகிதான் பூதகி! இப்போது பூதகி எத்தகைய அழகுடையவளாய் இருக்க வேண்டுமென்றும், அவளுடைய சரீர உறுப்புக்கள் எவ்விதம் அமைந்திருக்க வேண்டுமென்றும் நீரே மனோபாவனைசெய்து பாரும். சுமுகியை நீர் பார்த்திருக்கிறபடியால், அவ்விதம் மனோபாவனை செய்வது உமக்குக் கடினமாயிராது," என்று சிவகன் கண்ணகியிடம் புகன்றான்.

"நல்லது; சரீர அழகில் அவர்கள் இத்தகைய வித்தியாசமுடையவர்களாயிருக்கிறார்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். அவர்களுடைய குணவழகில் காணப்படும் வேற்றுமைகள் யாவை?" என்று கண்ணகி வினவினாள்.

"குணவித்தியாசத்தைப் பற்றியா? ஓ! அதைப் பற்றி நான் பேசவே கூடாது! அவ்விஷயமாய், என் னுடைய அபிப்பிராயம் யாதென்பதை வெளிவிட்டுச் சொல்ல நான் தயாராயில்லை. நல்லது; நான் மூன்று பெண்மணிகளைக் கடந்த சில வாரங்களுக்குள் காணும் படி நேர்ந்தது என்று சொன்னேனன்றே? அவர்க ளுள் பூதகியைப் பற்றியும் தேவகியைப் பற்றியும் உம் மிடம் சொல்லிவிட்டேன். மூன்றுவதான கண்ணகி என்பவளைப்பற்றி உம்மிடம் சில வார்த்தைகள் உரைக்க விரும்புகிறேன். அவளைப்பற்றி நான் சமுகியிடம் வழி யில் பேசிக்கொண்டு வந்ததை நீர் கவனித்திருத்தல் கூடுமே?" என்று சிவகன் பேசிக்கொண்டு வந்த போது, போர்வீரனுடைய முகம் விளர்த்தது.

தன்னுடைய பெருமையைப் பற்றித் தன்னுடைய முன்னிலையிலேயே புகழ்ந்து பேசும்படியான வித மாய்ச் சிவகனுடைய சம்பாஷணை திடீரென்று திரும் பியதானது மேகனுடைய வளர்ப்பு மகளாகிய கண்ண கிக்கு ஒருவிதமான அதிசயத்தையும் காணத்தையும் உண்டாக்கியது. ஆகவே அவளுடைய முகம் வியர்த்து விளர்த்தது ஓர் ஆச்சரியமன்று.

சிவகன் மீண்டும் பேசத்தொடங்கி "நண்பரே! பூதகி, தேவகி, கண்ணகி என்னும் மூன்று பெண்களும் ஆடவர் மனத்தைக் கவரவல்ல பேரழகு வாய்ந்தவர் களே யாவார்கள். எப்படிப்பட்ட உறுதியான மன மூடையவனையும், எத்தகைய பரமவிரோதியையும் தன் வசப்படுத்த வல்லமையுடையது பூதகியின் அழகு. மனிதனுடைய மூளையைக் கலக்கி, அறிவை மயக்கி அவனைப் பணியும்படி செய்யவல்லது தேவகியின்

அழகு—'' என்று சொல்லிக்கொண்டு வந்தபோதே இடையில் சிறிதுநேரம் பேசாமல் தயங்கினான்.

''தங்களுடைய பேச்சை இன்னும் நீங்கள் முடிக்கவில்லையே?'' என்று கண்ணகி உசாவினாள்.

''ஆம்; என்னுடைய வர்ணனையை இன்னும் நான் முடிக்கவில்லை. பிரகாசம் பொருந்திய கண்களையுடைய பூதகி, கொவ்வையை நிகர்த்த இதழினையுடைய தேவகி இவர்களை விடுத்து, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் பொருந்தி மனிதனுடைய ஆன்மாவைப் பரிசுத்தப்படுத்தும் பேரிலக்கணம் வாய்ந்த கண்ணகியின் நிகரற்ற பேரழகை வர்ணிக்கப் புகும் போது என்னுடைய மனத்தில் பலவகையான எண்ணங்கள் தோன்றி அவளழகை வர்ணிப்பதற்குத் தகுதியான வார்த்தைகள் அகப்படாதபடி செய்துவிட்டன. ஆதலால் நான் தயங்கினேன். ஆனாலும் கண்ணகியின் உருவினை நினைக்கும்போது, அவள் அழகு என்னுடைய மனத்தில் என்றும் நிலைத்திருக்கக்கூடிய காதலை எழுப்பி விட்டது என்று நிச்சயமாய்க் கூறுவேன். பூதகியின் அழகு அவள் நேரில் இருக்கும்போது மாத்திரமே எனக்கு இன்பத்தை விளைவிக்கும் இயல்புடையது. தேவகியின் அழகோ ஆரம்பத்தில் அதிகமான காதலைக் கொடுத்தபோதிலும் காளடைவில் அக் காதலை மழுங்கச் செய்துவிடும். ஆனால் கண்ணகியின் அழகோ அவள் இருக்கும்போதும், இல்லாதபோதும், இன்றைக்கும் மற்று என்றைக்கும் ஒரேவிதமான காதலை என் மனத்தில் எழுப்பி, என்னைப் பேரானந்த இன்ப சாகரத்தில் படிந்து நிற்கும்படி செய்துவிட்டது. அதிகம் கூறுவானேன்? 'காணினுங் கேட்பினுங் கருதினும் களிதரும்' இன்பவல்லியே கண்ணகி! பூதகியையும்

சுமுகியையும் நான் பாராதிருந்தால், கண்ணகியையே காதலித்திருப்பேன். இதிற் சந்தேகமில்லை!" என்று சீவகன் கூறினன்.

இவ்விதம் சீவகன் கூறியபோது கண்ணகியின் முகத்தில் ஒருவகையான மாறுதல் உண்டாயிற்று. களங்கமற்ற அவளுடைய முகமண்டலம் பொறுமை என்னும் மேகத்தால் சூழப்பட்டு வருத்தம் என்னும் மழையைப் பொழிவதைப்ப அவள் கண்களிலிருந்து நீர்த்துளிகள் முத்துப்போல் உதிர்ந்தன. இதனைக் கவனித்த சீவகன் பெரிதும் துயருழந்தவனாய், "நண்பரே! உமக்கு வருத்தம் வரும்படியான சங்கதியை நான் பேசியதற்காக வருந்துகிறேன். உம்முடைய மனத்தில் இப்போது நிகழ்ந்துகொண்டிருக்கும் எண்ணங்களை நான் அறிவேன். அந்தக் கண்ணகி என்பவளைக் காதலிக்கின்றீர்,—அவளைக் காதலியாக அடைந்தால் ஜன்ம சாபல்லியம் கிடைக்குமே என்று கருதுகிறீர். நண்பரே! நீர் அவளை ஏற்கனவே அறிந்திருக்கின்றீர் என்றும், அவளை உம்முடைய மனத்தின் அடிவாரத்திலிருந்து நேசிக்கிறீர் என்றும் நான் நினைக்கிறேன்," என்று பரிவுடன் பகர்ந்தான்.

"ஆம்; அக் கண்ணகி என்பாளை நான் ஏற்கனவே அறிவேன். என்னை நான் எவ்வளவு அன்பாக நேசிக்கிறேனோ, அவ்வளவு அன்பாக அவளை நான் நேசிக்கிறேன்" என்று கண்ணகி பதில் புகன்றாள்.

"ஓ! அப்படியா? ஆனால் நீர் அவளையே காதலியாகப் பெறுவதற்கு இறைவன் அருள் புரிவாராக! அவள், சாதாரணமான ஓர் உழவன் மகளாயிருப்பினும், காட்டிலிருந்துகொண்டு காய்கனிகளைப் புசிக்கும்

சாதாரணமான சிறுமியாயிருப்பினும், பெரிய மன்னர்களுக்குப் பத்தினியாக இருக்கக்கூடிய பேரழகும் பெருங் குணமும் வாய்ந்தவள்'' என்று சீவகன் கூறினான்.

இவ்விதம் இவர்கள் வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது, சத்திரத்தின் சொந்தக்காரர் அவ்விடம் வந்து சாப்பாடு தயாராகி விட்டதாகக் கூறினார். இரும்புச் சட்டை தரித்திருந்த கண்ணகி சீவகனிடம் ''நண்பரே! நான் தனியாக உண்பது வழக்கம். ஆதலால் நான் என்னுடைய அறைக்குப் போகிறேன். சாப்பாட்டை என்னுடைய அறையில் கொண்டுவந்து வைத்துவிடும்படி சொல்லுங்கள். நான் காலையில் தங்களைப் பார்க்கிறேன்,'' என்று சொல்லிவிட்டுத் தன்னுடைய அறைக்குச் சென்றுவிட்டாள்.

இதற்கிடையில், தன்னுடைய அறையிலிருந்து, சீவகன் இருந்த அறைக்குச் செல்லுவதற்காக, வெளியே வந்த சுமுகி இடைவழியில் பிங்கலனைச் சந்தித்தாள். அவன் விளக்கில்லாமல் இருளடைந்திருந்த சோழியில் நின்றுகொண்டிருந்தான்.

''ஆ! வாலிபனே, நீ இங்கேயா நின்றுகொண்டிருக்கிறாய்? உன்னோடு நான் தனித்துப் பேசவேண்டுமென்று விரும்பினேன். இதுதான் அதற்குத் தகுந்த சமயம். என்னோடு நான் இருக்கும் அறைக்கு வா. அங்கே நாம் அச்சமின்றியும், பிறரால் பார்க்க முடியாதபடியும் சம்பாஷிக்கலாம்'' என்று சுமுகி கூறி, அவனை அழைத்துக் கொண்டு தன்னுடைய அறைக்குச் சென்றாள்.

''தேவகியே! நீ என்னோடு எதைப் பற்றிப் பேசுவதற்கு விரும்பினாய்?'' என்று பிங்கலன் கேட்டான்.

"ஆ; அந்தப் பெயரால் என்னை அழைக்காதே, — சுமுகி என்று என்னை இனி அழைப்பாயாக! நாம் ஒருவரை யொருவர் நன்கறிந்து கொள்ளுவோம். நாம் இனிச் சிநேகிதர்களாக இருப்போம்," என்று சுமுகி உரைத்தாள்.

"தேவகியே! என்னுடைய நட்புரிமையால் உனக்கு ஆக வேண்டுவது என்ன இருக்கிறது?" என்று பிங்கலன் கேட்டான். அப்போது அவனுடைய வாயுரை குழறிற்று; மெய் விதிர் விதிர்ப்பு எய்தியது. மிருக சுபாவமான காமவேட்கை அவனுடைய கண்களில் பிரதிபலித்தது.

"ஐயோ! மறுபடியும் சொல்லுகிறேன்; அந்தப் பெயரால் என்னை அழைக்காதே, இனிமேல் நாம் நண்பர்களா யிருப்பதா, அல்லது விரோதிகளாயிருப்பதா? தயை செய்து பதில் சொல்லு!" என்று மீண்டும் சுமுகி வினவினாள்.

"உன் விஷயத்தில் பொறுமையும் சகிப்பும் நான் எதற்காகக் காட்டவேண்டும்? உன்னுடன் நட்புரிமை யோடு இருப்பதற்குரிய அவசியந்தான் என்ன இருக்கிறது? நாம் இருவரும் அந்த இடத்தில் இருந்த போது," — என்று பிங்கலன் சொன்னபோது, "ஆம்; ஆம்! எனக்கு ஞாபகமிருக்கிறது. அந்த இடத்தின் பெயரைச் சொல்ல வேண்டாம். ஒருசமயம் நம்மை யறியாமல் யாராவது கேட்டுவிடப் போகிறார்கள். பக்கவில் பக்கம் பார்த்துப் பேசவேண்டும்; இரவில் அது தானும் பேசலாகாது!" என்று சுமுகி பதைத்துக் கூறினாள்.

"சரி; நல்லது! நான் இடத்தைக் குறியிடவில்லை. நாம் இருவரும் ஒரே வீட்டில் இருந்த போது — நான்

உன்னைச் சார்ந்திருக்கும் ஒரு சாமானிய மனிதனையும், நீ 'அழகு' என்னும் தெய்வீக அம்சம் பொருந்திய வானத்தில் ஒளிரும் பிரகாசம் பொருந்திய நட்சத்திரம்போலும் இருந்தபோது, — நான் உன்னைக் காதலித்தேன். காதலித்தது மாத்திரம் அன்று; உன்னைப் புகழ்ந்தேன், — சிலாகித்தேன், — வணங்கினேன், — வழிபட்டேன்!" என்று பிங்கலன் மொழிந்தான்.

"நீ சொன்னவை எல்லாம் உண்மையே. ஆனாலும் அந்தக் காதல் விஷயத்தை இதுவரையில் நீ மறந்து போயிருப்பாய் என்று நம்புகிறேன்," எனச் சுமுகி கூறினாள்.

"இல்லை; நான் அதை மறக்கவில்லை! அந்தக் காதலுணர்ச்சியோடு மற்றோர் உணர்ச்சியும் இப்போது என் மனத்தில் உண்டாகியிருக்கிறது. அஃதாவது, — பழிக்குப்பழி வாங்கவேண்டு மென்னும் உணர்ச்சிதான்!" என்று பிங்கலன் ஆத்திரத்தோடு கூறினான்.

"ஆ! அவ்விதம் செய்வது கொடுமையாகும், — கோழைத்தனமாகும், — மூர்க்கத் தன்மையாகும், — மிருக சுபாவமாகும்!" என்று சுமுகி அச்சங் கலந்த தைரியத்துடன் கூறினாள்.

"என்னுடைய நடத்தையைப்பற்றி நீ எவ்வளவு கடுமையான அடைமொழிகளைப் பிரயோகித்த போதிலும், அவைகளை நான் பொருட்படுத்தப் போகிறதில்லை. ஏனெனில், நான் உன்னுடைய பாதத்தில் வீழ்ந்து என்னுடைய காதலைத் தெரிவித்தபோது நீ நடந்து கொண்டமாதிரியைக் காட்டிலும் அவைகள் கொடுமையுடையனவாக மாட்டா!" என்று பிங்கலன் வற்புறுத்தி மொழிந்தான்.

"அப்படியானால், பிங்கலா, என்னை நீ மன்னிக்க மாட்டாயா? கடந்துபோன விஷயங்களை மறந்துவிட மாட்டாயா? பிங்கல! என்னை மன்னித்து விடுவதாக நீ தயை செய்து கூறினால், ஆ! என் மனம் எவ்வளவு ஆறுதல் அடையும்" என்று சுமுகி மிகுந்த ஆர்வமையுடன் நவின்றாள்.

"முடியாது, — முடியாது, ஒரு போதும் முடியாது! நீ சிவகனைக் காதலிக்கின்றாய். அந்த உண்மையை மறைக்க முடியாது, — என்னை ஏமாற்றவும் ஏலாது" என்று பிங்கலனுரைத்தான்.

"நீ உண்மை அறியாமல் பேசுகின்றாய். நல்லது; நான் சிவகனைக் காதலிக்கின்றேன் என்றே வைத்துக் கொள்! அதற்காக நீ என்ன செய்யவேண்டுமென்கிறாய்?" என்று சுமுகி அதிகாரத்தோடு வினவினாள்.

"அவர் என்னிடம் அன்பாகவும் தயாளத்துடனும் நடந்து கொண்டார். நான் இருப்பதற்குச் சிறிதும் விரும்பாத இடத்திலிருந்து அவர் என்னை அப்புறப் படுத்தினார்," என்று பிங்கலன் புகன்றான்.

"ஆம்; அவரும் உனக்கு உதவி செய்தார்; கடந்த இரவு நீயும் அவருக்குப் பேருபகாரம் புரிந்திருக்கின்றாய்! அவ்விஷயம் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனாலும், பிங்கலனே, நீ செய்திருக்கும் பிரமாணத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள். அந்தப் பிரமாணத்தின்படி 'வெள்ளை மாளிகை', 'பதுமினி மாளிகை' இவைகளின் அதிசயத்தைப் பற்றி நீ வெளியில் ஏதும் பிரஸ்தாபிக்கக் கூடாது; தெரியுமா?" என்று சுமுகி உரைத்தாள்.

"ஓ! அவ்விஷயம் எனக்குத் தெரியும். ஆனாலும், அந்தச் சூழ்நிலையில் இருந்தும் தவறுமலே, போதுமான படி சிவகருடைய காதில் சில இரகசியங்களை நான் ஓதக்கூடும் என்பதை நீ மறந்து போனாயோ?" என்று பிங்கலன் கேட்டான்.

"ஐயோ, அவ்விதம் செய்து எனக்கு அழிவு தேடாதே. நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்; உனக்குப் புண்ணியமுண்டு; என்னை மன்னித்து விடு!" என்று சுமுகி தன் கண்களில் நீர் ததும்ப வாயில் உரை தடுமாற நவின்றாள்.

"ஒரு நிபந்தனை மீது அவ்விதம் செய்வேன்; அஃதாவது நீ என் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும்," என்றான் பிங்கலன்.

"சரி; உன்னுடைய கருத்தை நான் அறிந்து கொண்டேன். உன் விருப்பப்படியே, என் மனதிற்கு விரோதமாயும், — என்னுடைய பெண்டன்மைக்கு மாறுபட்டதாயும், — நான் செய்யப்போகும் செயல் இருந்தபோதிலும், நடந்து கொள்ளுகிறேன். இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு நான் உன்னுடைய அறைக்கு வருகின்றேன். நீ போகலாம்," என்று சுமுகி இறுதியில் கூறி, அவனை ஒருவாறு சமாதானப் படுத்தி அனுப்பி விட்டாள்.

அவன் சென்ற பிறகு சுமுகி, சிவகன் இருந்த அறைக்குச் சென்றாள். எல்லோரும் போஜனம் செய்தார்கள். சுமுகி பற்பல விஷயங்களைப் பற்றி நெடு நேரம் சிவகனோடு சம்பாஷித்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு தன்னுடைய அறைக்கு எகினாள். அவளுடைய தோழியர் இருவரும் தங்கள் தங்கள் அறைக்

குச் சென்றார்கள். மாளிகைக்குள் விருந்தவர்கள் அயர்ந்து உறங்கிய படியால், எங்கும் அமைதியே குடி கொண்டிருந்தது. சீவகனுக்கு மாத்திரம் தூக்கம் வரவில்லை. ஏதோ ஒருவகையான சக்தியால் திடீரென் உந்தப்பட்டவனைப் போல், அவன் தன் படுக்கையி லிருந்து எழுந்து மெதுவாக நடந்து வெளியே சென் றான். பிங்கலனுடைய அறை ஓரமாக அவன் சென்ற போது, அறைக்குள் ஏதோ ஓசை கேட்பதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. சிறிது மாத்திரமே திறந்து வைக்கப்பட்டிருந்த சாளரத்தின் வழியாய் எட்டிப் பார்த்தான். ஆ! என்ன ஆச்சரியம்! சுமுகியின் உருவம், பிங்கலனுடைய படுக்கைக்குச் சமீபத்தில், ஒரு வாளாயுதத்தை ஓங்கியபடியே நிற்பதைக் கண் டான்; உடனே அறைக்குள் விரைந்து நுழைந்தான். ஆ! அதற்குள் வாளாயுதம் நித்திரை செய்துகொண் டிருந்த பிங்கலன் கழுத்தில் விழுந்து விட்டது!

அதிகாரம் — 55

கொலைகாரி

நடுராத்திரியில் நடந்த அப் படுகொலைக் காட்சியின் நடுவே சீவகன் திடீரென்று தோன்றியதானது, சுமு கியின் மூளையைக் கலக்கிவிட்டது. அவள் ஏதுமே தோன்றுமல் மரப்பாவை எனத் தன்னை மறந்து நின் றாள். ஆ! அப்போது அவளுடைய மனத்தில் உண் டான பற்பல வகையான உணர்ச்சிகள், அலைமீது அலை வந்து மோதுவதுபோல், ஒன்றன்பின் ஒன்றாய், மின்

சாரத்தைக் காட்டிலும் பன்மடங்கு வேகமாய்ச் சென்று, அவள் மூளையைத் தாக்கி முகத்திலுண்டாக்கிய வேறுபாட்டை யாரே எடுத்துரைக்க வல்லார்? அச்சம், அவமானம், கோபம், வெறுப்பு முதலானவைகள் எல்லாம் ஒரே காலத்தில் அவள் மனத்தில் தோன்றின. ஆனாலும் அவள் வாய்திறந்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை; தன்னுடைய அவயவங்களை ஒரு சிறிதும் அசைக்கவில்லை. விழித்தகண் விழித்தபடியே அவள் சிவகனைப் பார்த்தாள். இதற்கு முன்பு அன்பொளி வீசிக்கொண்டிருந்த அவளுடைய கண்களில் இப்போது நரகாக்கினி எரிந்துகொண்டிருந்தது. வானத்திலிருந்து இறங்கிய தெய்வ கன்னியைப்போல் இதற்கு முன்பு அவள் காணப்பட்டாளாயினும், இப்போது பாதாளத்திலிருந்து எழும்பிய அரக்கியைப் போல் தோன்றினாள். அவளுடைய தோற்றமே பயங்கரமாயிருந்தது. சிவகன் சிறிதுநேரம், ஏதுமே தோன்றாதவனைப் கற்சிலைபோல் ஸ்தம்பித்து நின்றான். இருவரும் சிறிதுநேரம் மௌனமாய் நின்றார்கள். ஆ! அப்போது அவ்வறையில் குடிகொண்டிருந்த அமைதி மிகவும் பயங்கரமாயிருந்தது.

"சுமுகியே, இத்தகைய சதிச்செயலை யார் செய்ய வேண்டும்? நீ செய்திருக்க முடியுமா? என்னுடைய கண்களை நான் நம்பமுடியுமா? என்னுடைய பார்வை என்னை மயக்கிவிட்டதா? ஆ! இன்னது சொல்வதென்றும், இன்னது செய்வதென்றும் எனக்குத் தோன்றவில்லையே!" என்று சிவகன் சொப்பனத்தில் பேசுபவனைப் போல், மெதுவாயும் விட்டுவிட்டும் பேசினான்.

"ஐயோ! கடவுளே, — கடவுளே! என்னை மன்னியும், — என்மீது இரக்கம் காட்டும்!" என்று சுமுகி

வாய்விட்டுக் கூறி தன்னுடைய இருகரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு கோவென அலறினாள். அவளுடைய கண்களிலிருந்து, படுக்கையில் வெட்டுண்டு கிடந்த பிங்கலன் கழுத்திலிருந்து குமிழிகொண்டு கிளம்பிய இரத்தத்தைப்போல் நீர் பெருகிக் கொண்டே யிருந்தது.

"சுமுகியே,— சுமுகியே! கொடுமை,— கொடுமை! இத்தகைய பயங்கரமான செயலை நீ செய்ததற்கு, ஏதாவது ஒரு தகுந்த காரணம் இருக்கவேண்டு மென்றே நான் நினைக்கிறேன். இல்லாவிடில், பெண்கள், சாதாரணமாய் மனத்தால் நினைத்திடினும் அவர்களுக்குப் பேரச்சத்தை விளைவிக்கும், கொலைத்தொழிலை, நீ, — பெண்ணைப் பிறந்த நீ, — உன்னுடைய கையிலேயே இயற்ற ஒரு சிறிதும் துணிந்திருக்க மாட்டாய்! பெண்ணே! உன்னுடைய கை இரத்தத்தில் தோய்க்கப்பட்டதற்காக நான் பெரிதும் வருந்துகின்றேன். எதற்காக நீ இக்கொடுங்கொலை புரிந்தாய்? விரைவில் விளம்பு," என்று சீவகன் பரிதாபங் கலந்த அதிகாரத்தோடு உசாவினன்.

நடுக்கடலில் வீழ்ந்தவன் ஒரு சிறு துரும்பு அகப்படினும் அதனைப் பிடித்துக்கொண்டு கரையேற முயல்வதைப்போல், சுமுகி சீவகன் வாயிலிருந்து வெளிப்போந்த இரண்டொரு அனுதாபமொழிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள்.

"ஆம்; ஆம்! நண்பரே! மனிதப் பிறவிக்கு ஏற்காத, அதிலும் என்னைப்போன்ற பெண்ஜன்மத்திற்கு ஒரு சிறிதும் தகுதியற்ற, இச் செயலை நான் புரிந்ததற்குக் காரணமுண்டு. ஆனாலும் அதை நான் சொல்ல

முடியாது; ஏனெனில் நான் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால் அக்காரணம் அறிந்தால் நான் குற்றவாளியா, அல்லது குற்றவாளியன்று என்பது புலப்படும். அப்போது என்னை நிந்திப்பதற்குப் பதிலாக எனக்காக அனுதாபப்படுவீர்கள். சிவகரே! உங்களுடைய அன்பும் அபிமானமும் இவ்வுலகத்தில் எனக்குக் கிடைக்கக்கூடிய அரிய பொருள் என்று கருதி, மற்றவர்களுடைய நன்கு மதிப்பைப் பொருட்படுத்தாமலும், உலகத்தாருடைய பூஷணையையும் தூஷணையையும் ஒரு சிறிதும் கவனியாமலும் நான் இருந்தேன். உங்களுடைய நன்கு மதிப்பே எனக்கு இவ்வுலகத்தில் வேண்டப்படுவது என்று எண்ணி அதனை அடைய முயன்றேன். ஆனால், சந்தர்ப்பம் என்னைப் பற்றி இழிவாயும் கேவலமாயும் உங்களை நினைக்கும்படி செய்துவிட்டது. ஆதலால் என் மனம் இருளடைந்தது; ஜன்மம் பயனற்றுப் போய்விட்டது!" என்று சுமுகி மிகுந்த ஆற்றமையுடன் உரைத்தாள்.

"சுமுகியே! நீ சொல்வது உண்மையே! நான் உன்னுடைய நட்புரிமையைப் பெறுவதற்குப் பெரிதும் விழைந்தேன். ஆனால், இப்போது உன்னைப் பற்றி நான் நல்லபிப்பிராயம் கொள்ளுவதற்கு எப்படி முடியும்? உன்னுடைய கூட்டுறவையும் நட்புரிமையையும் நான் எவ்விதம் விரும்பக்கூடும்? குந்தி நகரத்திற்குச் சமீபத்தில் மரமடர்ந்த தோப்புக்குள் நீ செய்த செயலை நினைவு கூர்ந்து பார்! அங்கே நீ செய்தது படுகொலையும், இரத்தப் பெருக்கும்! பெண்ணே! இப்போது இந்தப் படுக்கையைப் பார்!" என்று சீவகன் கூறிப் பிங்கலன் வெட்டுண்டு கிடந்த சயனத்தை அவளுக்குச் சுட்டிக் காட்டி, "இங்கேயும் படுகொலை; இரத்தப்

பெருக்கு! அந்த வாலிபனுடைய சரீரம் தலைவேறு உடல்வேறுய்க் கிடப்பதையும், பக்கை முழுவதும் வெறுப்பைத் தரத்தக்க இரத்தத்தில் நனைந்திருப்பதையும் பார்க்கும்போது, உன் உடம்பு நடுங்கவில்லையா? மனம் பதைக்கவில்லையா? ஏ! பெண்ணே, ஒரு முறை கொலை புரிந்தவர்கள் பிரமஹத்தி தோஷத்தினால் பீடிக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் கொலை செய்வதிலேயே நாட்டமா யிருப்பார்கள் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அந்த உண்மையை நான் உன்னிடம் கண்டேன். ஒரு முறை செய்த கொலை போதாதென்று மறுமுறையும் ஒரு கொலைபுரிந்தாயே? இன்னும் எத்தனை கொலைகள் புரிய நீ நினைத்திருக்கிறாயோ? ஒரு முறை வாளாயுதத்தை இரத்தத்தில் நனைத்த கை, மீண்டுமீண்டும் இரத்த வெறியினால் நனைக்க முயலும்! ஆதலால், இத்தகைய உன்னை நான் எவ்விதம் விரும்பமுடியும்?" என்று தொடர்ந்து மொழிந்தான்.

"ஆம்; ஆம்! நீங்கள் கூறியது நியாயமே! ஆனாலும், என் அன்பரே, நான் சொல்லுவதைத் தயை செய்து கேளுங்கள்! இன்றோடு தங்களையும் தங்களுடைய அன்பையும் நான் இழந்துவிட்டேன் என்பது எனக்குத் தெரியும்! நாம் இருவரும் இனி எப்போதுமே ஒருவர் முகத்தில் ஒருவர் விழியாதபடி பிரிந்துபோகவேண்டும், — ஒருவரை ஒருவர் மறந்துவிடவேண்டும், — என்பதும் எனக்குத் தெரியும்! ஆனாலும், நிணம் தின்னும் சூர்மகளிரைப்போல், இரத்தம் சிந்துவதில் விழைவுகொண்டு நான் இச்செயல் செய்யவில்லை என்பதையும், அந்த வாலிபன் புரிந்த செயல் எப்படிப்பட்ட தயாள குணமுடையவர்களையும் இரக்கமற்ற கொலைகாரர்களாக மாற்றவல்லது என்ப

தையும் தாங்கள் அறிந்துகொள்ளவேண்டும்! உண்மை அறியாமல், என்னைப் படுகொலை புரியும் பாதகி எனப் பிறழ நினைந்து, அந்த நினைப்போடு தாங்கள் பிரிய லாகாது" என்று சுமுகி கீழே வீழ்ந்து சீவகனுடைய பாதத்தைப் பிடித்துக்கொண்டு பரிதாபத்தோடு கூறினாள்.

"பிங்கலன் என்ன செய்தான்?" என்று சீவகன் கேட்டான்.

"ஆ! அதைச் சொல்லுதற்கு இப்போது முடியாது. ஏனெனில் அஃது ஒரு பெரிய கதை! நான் தங்களை விட்டுப் பிரியவேண்டும், — எனக்கு விடைகொடுங்கள்!" என்று சுமுகி கூறினாள்.

"பெண்ணே! என்னைவிட்டுப் பிரிந்து செல்ல வேண்டுமென்று சொல்லுகிறாயே? அஃது எப்படி முடியும்? முதலாவதாக, உன்னைக் கொங்குதேசத்தின் தலை நகராகிய மாயாபுரிக்கு அழைத்துப்போவதாக நான் எமனுக்குக் கூறியிருக்கின்றேனே? அந்த நிபந்தனையிலிருந்து தவறி நடக்க என்னால் எப்படி முடியும்? இரண்டாவதாக, இவ்விடத்தில் கொலையுண்டு கிடக்கும் பிங்கலனுடைய சரீரத்தை அப்புறப்படுத்தாமல் நாம் எவ்விதம் இந்த மாளிகையிலிருந்து நீங்க முடியும்?" என்று சீவகன் கேட்டுவிட்டு, "ஆ! பூதகி, உன்னால் நான் எவ்வளவு கஷ்டத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கிறது!" என்று தானே பெருமூச் செறிந்து கூறினான்.

"என்ன! என்னுடைய நடத்தையினால், என் சகோதரியாகிய பூதகிமீதும் அருவருப்புக் கொள்ளுகிறீர்களோ? அவ்விதம் எண்ணுதீர்கள். அவள் சிறிதும்

களங்கமில்லாதவள்; ஒரு குற்றமும் செய்யாதவள்! என்னுடைய குற்றத்தினால், உங்களுக்கு அவள்மீதுள்ள அன்பும் மதிப்பும் குறையாவென்று நான் நினைக்கிறேன். பூதகியை எப்போதும்போல் நேசிப்பதாக எனக்கு உறுதி கூறுங்கள்'' என்று சுமுகி சிவகணக்குறையிரந்து வேண்டினாள்.

''நீ கொலைகாரியாக இருந்தால், அதற்காக நான் பூதகியை ஏன் வெறுக்கவேண்டும்? ஒரே பாம்பினிடமிருந்து விஷமும் பிறக்கிறது; இரத்தினமும் பிறக்கிறது! விஷத்தை வெறுப்பதினால் இரத்தினத்தையும் வெறுக்கவேண்டுமென்பது என்ன நியாயம்? உன்மீது எனக்கேற்பட்ட வெறுப்பு பூதகிமீது எனக்குள்ள அன்பை இன்னும் அதிகப்படுத்தியிருக்கிறது. ஆதலால் அவளை நான் எப்போதும் போலவே நேசிப்பேன்!'' என்று சிவகன் உரைத்தான்.

''நண்பரே! தாங்கள் கூறிய இந்த உறுதிமொழிக்காக நான் என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். ஏனெனில், நான் எவ்வளவு கொடியவளாயிருந்தபோதிலும், என் சகோதரியை அன்புடன் நேசிக்கிறேனாதலால், அவள்மீது என்னுடைய சதிச்செயலின் பாவம் ஏற்றப்படக் கூடாதென்பது என் விருப்பம்'' என்று சுமுகி சொன்னாள்.

''நல்லது; நாம் இந்த விஷயத்தைப்பற்றி இன்னமும் பேசுவதற்கு அவகாசம் இப்போதில்லை. காலமோ சென்றுகொண்டே இருக்கிறது; இன்னும் இரண்டொருமணி நேரத்திற்குள் சூரியன் எழுந்து விடுவான், இறந்துபோன பிங்கலனுடைய சரீரத்தை நாம் அப்புறப்படுத்த வேண்டுமே? இதற்கு என்னசெய்கிறது?'' என்று சிவகன் கவலையுடன் கேட்டான்.

"சிவகரே! அதைப்பற்றித் தாங்கள் சிறிதும் மனங் கவலல் வேண்டாம். அதை என் பொறுப்பில் விட்டு விட்டுத் தாங்கள் தங்களுடைய அறைக்குச் சென்று சுகமாய் நித்திரைசெய்யுங்கள்; நான் பார்த்துக்கொள் ளுகிறேன்" என்று சுமுகி அலட்சியமாய்க் கூறினாள்.

"ஓ! உன்னுடைய வார்த்தைக்கு நான் சிறிதும் இணங்கேன். அறையில் கொலையுண்டு கிடக்கும் மனித னுடைய சரீரம் அப்புறப் படுத்தப்படாமல் இருக்கும் போது, நான் அமைதியுடன் எவ்விதம் உறங்கக் கூடும்? உன்னைக் காட்டிக் கொடுப்பதிலும் எனக்கு இஷ்ட மில்லை. என்மீது பிறர் சந்தேகிக்கும்படி செய்து கொள் ளவும் நான் சம்மதியேன்" என்று சிவகன் புகன்றான்.

"உண்மையில் கொலைபுரிந்தவள் நானன்றோ? அப் படியிருக்கும்போது பிறர் உங்களைச் சந்தேகிக்கும்படி நான் விடுவேனா? நானே கொலை செய்ததாகப் பயிரங் கத்தில் ஒப்புக்கொண்டுவிடுகிறேன்" என்று சுமுகி விளம்பினாள்.

"அவ்விதம் ஒப்புக்கொள்ளுவதால் உனக்கு ஏற் படக்கூடிய கதி என்னவென்பது தெரியுமா?" என்று உசாவினான் சிவகன். "என்னை அதிகாரிகள் பிடித்து விசாரித்து எனக்கு மரணதண்டனை விதிப்பார்கள் என்று நீங்கள் கவலைப்படுகிறீர்கள்போல் தோன்று கிறது. அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம். நான் எந்த விதத்திலும் தப்பித்துக் கொள்வேன். நான் ஒரு வருடைய வரவை எதிர்பார்க்கிறேன்; அவர் வந்துவிட் டால் நான் விடுதலை அடைவது நிச்சயம். ஒருகால் அவர் வராமலிருந்து விட்டால், நீங்களே என்னை விடு விக்கும்படி அதிகாரிகளுக்குக் கட்டளையிட வேண்டும்" என்று சுமுகி சொன்னாள்.

"என்ன! நான் அதிகாரிகளுக்குக் கட்டளை இடுவதாவது!" என்று சீவகன் ஏதுந் தோன்றாதவனாய் அதிசயத்தோடு வினவினான்.

"ஆம்; தாங்களே கட்டளையிட வேண்டும். நிகும்பன் கொடுத்த மோதிரம் தங்கள் கை விரலில் ஜோதிமயமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறதே? அதைக் காட்டினால் அதிகாரிகள் தங்கள் கட்டளைக்குக் கீழ்ப் படிவார்கள் என்பதை நீங்கள் மீறந்து விட்டீர்களோ?" என்று சுழுகி பதில் கூறினாள்.

"சரி; மற்றொரு விஷயம் இருக்கிறதே? உன்னைக் கொங்கு தேசத்திற்கு அழைத்துச் செல்வதாய் எமனுக்குச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேனே; அதை நான் எவ்விதம் நிறைவேற்றுவது?" என்று சீவகன் வினவினான்.

"ஓ! அதைப்பற்றித் தாங்கள் கவலைப்படவேண்டாம். நான் எமனுடைய வேறு சில நிபந்தனைகட்கு உட்பட்டிருக்கிறேன். ஆதலால் நீங்கள் என்னைக் கொங்கு தேசத்திற்கு அழைத்துப்போகாவிட்டால், அதற்காக அவன் தங்களையாவது என்னையாவது தண்டிக்கமாட்டான். ஆதலால் இந்த இடத்திலேயே நாம் ஒருவருக்கொருவர் விடை பெற்றுக்கொண்டு பிரிய வேண்டியதுதான். தவிர, நான் கொங்குதேசத்திற்குப் போகவேண்டுவது அவசியந்தான் என்று எமனுக்குத் தோன்றினால், அதற்குத் தகுந்த வழியை அவன் ஏற்படுத்துவான். ஏனெனில், அவனுக்கு எல்லா விஷயங்களையும் இருந்த இடத்திலிருந்தே அறியும் சக்தி உண்டு. ஆதலால், இங்கே நடந்த நிகழ்ச்சியை அறிந்து, என்னை அப்புறப்படுத்த வேண்டுமென்னும் எண்ணம் இருந்தால், அதை நிறைவேற்றுவதற்கு ஏதாவது

சூழ்ச்சி செய்து விடுவான். ஆதலால் தாங்கள் என்னைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படவேண்டாம். நாம் இருவரும் இப்போது சந்திப்பதுதான்; இனி என்னைப் பார்க்கத் தங்களால் முடியாது. நான் உங்களை விட்டுப் பிரிந்துபோகவேண்டும். எனக்கு விடை கொடுங்கள்" என்று சுழுகி மொழிந்தாள்.

"என்ன! நம்முடைய பிரயாணம், — அஃதாவது நாம் இருவரும் சேர்ந்து செய்யும் பிரயாணம், — ஏற்கனவே முடிந்துவிட்டதென்றும், இனி என்னை விடுத்துத் தனியாகப் பிரிந்துபோக வேண்டுமென்றுமா சொல்லுகிறாய்?" என்று சீவகன் உசாவினான்.

"ஆம்; இன்றிரவு நடந்த சம்பவத்தினால் நாம் ஒருவரை விட்டொருவர் பிரியவேண்டுவது அவசியந்தான். ஏனெனில், முதலாவதாக, என்னை இன்னமும் நேசிக்க வேண்டுமென்றும், என்னுடு நட்புரிமை பாராட்ட வேண்டுமென்றும் உங்களைக் கேட்டுக்கொள்ளவாவது, கட்டாயப்படுத்தவாவது முடியாது. முடிந்தபோதிலும், கொலைத் தொழில் புரிந்த கொடிய பாதகியாகிய என்னுடைய வேண்டுகோளுக்கு நீங்கள் இசையமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன். இரண்டாவதாக நீங்கள் சம்மதித்துவிட்டபோதிலும், அதிகாரிகளுடைய கையிலிருந்து நான் விடுதலை அடைந்தபோதிலும், உங்களோடு இருப்பதற்கு நான் சம்மதியேன். ஏனெனில், உலகத்தார் என்னைக் கொலைகாரி என்று இழித்துப் பேசுவார்கள். உலைவாயை மூடலாம், ஊர்வாயை மூட முடியுமா? தங்களோடு நான் இருந்தால், என்னால் தங்களுக்கும் அபகீர்த்தி யுண்டாகும்; உலகத்தார் தங்களையும் நிந்திப்பார்கள். இவைகளை எல்லாம் உத்தேசிக்கும்போது நாம் இருவரும் பிரிந்து விடுவது

தான் நலம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆதலால் எனக்கு விடை கொடுங்கள்'' என்று சுமுகி உரைத்தாள்.

''சரி; ஆழ்ந்து சிந்தித்துத்தானே இவ்விதமான முடிவுக்கு வந்திருக்கிறாய்?'' என்று சிவகன் கேட்டான். அப்போது அவனுடைய முகத்திலும் குரலிலும் ஒரு வகையான பரிவும் வருத்தமும் கலந்து தோன்றின.

''நான் கொண்ட தீர்மானத்தை அசைப்பதற்கு எந்த மனித சக்தியினாலும் முடியாது. ஆதலால், — இராணுவ வீரராகிய சிவகரே, — நாம் ஒருவரிடமிருந்து ஒருவர் விடை பெற்றுக்கொள்ளுவோம், — கடைசி முறையாக!'' என்று சுமுகி புகன்றாள்.

சிறிது நேரத்திற்கு முன்பு ஒளியுடன் திகழ்ந்த அவளுடைய கண்கள் இப்போது நீரினைச் சொரிந்தன. ஆனாலும் முத்துக்களைப்போல் உதிர்ந்துகொண்டிருந்த கண்ணீரைத் தன்னுடைய கரங்களால் துடைத்துக் கொண்டு, மிகுந்த அன்பும் பரிவும் நிரம்பிய பார்வையுடன் அவள் சிவகனை ஏறிட்டுப் பார்த்து சில நிமிஷங்கள் அசையாது நின்றாள்.

''சுமுகியே! உன்னை இவ்விதம் விட்டுவிட்டு, — பின்னால் உன்னுடைய நிலைமை என்னவாகும் என்பதை அறிந்துகொள்ள முடியாதபடி இருக்கும் சந்தேகத்தில் என்னை அமிழ்த்திக்கொண்டு, — நான் மாத்திரம் பிரிந்து செல்வது, தைரியமற்ற பயங்காளி செய்யும் செயல் போல் இருக்கிறதென்று எனக்குத் தோன்றுகிறது'' எனச் சிவகன் கூறினான்.

''இங்கே இருப்பதால் நீங்கள் என்னை இன்னமும் அதிகமான கஷ்டத்தில் அமிழ்த்துகிறவர்களாவீர்களே தவிர வேறில்லை'' என்று சுமுகி மொழிந்தாள்.

"அப்படியானால், நீ இந்த அறையில் இருக்கமாட்டாயா, என்ன?" என்று சிவகன் சுமுகியைக் கேட்டான். அப்போது அவனுடைய பார்வை, மறுபடியும் படுக்கையில் வெட்டுண்டு கிடக்கும் பிங்கலன்மீது சென்றது. ஆ! அந்தக் கோரமான காட்சியைக் கண்டு சிவகன் உடல் நடுங்கினான்.

"நீங்கள் இந்த அறையிலிருந்து நீங்கி உங்களுடைய அறைக்குப் போனபிறகு, நானும் இந்த அறையிலிருந்து நீங்குவேன். நீங்கி வெளியே சென்று, இங்கே நடந்த படுகொலையைப் பற்றித் தெரிவிப்பேன், — பிங்கலனை நானே கொன்றதாக எல்லோரிடத்திலும் கூறி என் குற்றத்தை ஒப்புக்கொள்ளுவேன். உடனே இந்த மாளிகையில் ஆரவாரமும் குழப்பமும் உண்டாகிவிடும்" என்று சுமுகி கூறினாள்.

"சுமுகியே! நீ இந்த வீட்டிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் ஓடிப்போய் விடுவது நலமாயிருக்குமே?" என்று சிவகன் பரிதாபத்தோடு உரைத்தான்.

"ஓ! அவ்விதம் நான் செய்யமாட்டேன். ஏனெனில், நான் அவ்விதம் ஓடிவிட்டால், பிறகு எல்லோரும் உங்கள்மீதுதான் சந்தேகம் கொள்ளுவார்கள், — நீங்களே பிங்கலனைக் கொன்றதாக நினைப்பார்கள். உங்களை அபாயத்திற்கு உள்ளாகும்படி நான் செய்யேன். தயைசெய்து நீங்கள் இந்த அறையிலிருந்து போய்விடுங்கள்" என்று சுமுகி சொன்னாள்.

மறுநிமிஷத்தில் சிவகன் அவ்வறையிலிருந்து மெதுவாக நீங்கினான். சுமுகி மாத்திரம் பயங்கரமான அந்தப் பிண அறையில் தனித்திருந்தாள்.

அதிகாரம் — 56

குற்றத்தை ஒப்புக்கொள்ளல்

சுமார் அரைமணிநேரம் கழிந்தது. அந்த அரைமணி நேரம் வரையிலும் மாளிகை மிகுந்த அமைதியுற்றிருந்தது. பிறகு சத்திரத்தின் சொந்தக்காரரும், அவருடைய மனைவியும் படுத்திருந்த அறைக் கதவை யாரோ மிகுந்த பலமாய்த் தட்டினார்கள். அவ்வோசை கேட்டு அவர்களிருவரும் திடுக்கிட்டு விழித்தார்கள்.

"யார் எங்களுடைய நித்திரையைக் கெடுத்தவர்கள்? இந்நேரத்தில் இங்கேவந்து கதவைத் தட்டக் காரணமென்ன?" என்று சத்திரத்தின் சொந்தக்காரர் கோபத்துடன் கேட்டார்.

"கதவைத் திறந்தால் சொல்லுகிறேன்" என்று வெளியே இருந்து பதில் வந்தது.

"அடியே! அந்தக் குரல் ஒரு பெண்ணுடைய குரல் போலிருக்கிறது. சீக்கிரம் எழுந்துபோய் கதவைத் திறந்துபார்; என்ன சங்கதி என்று விசாரி," என்று சத்திரத்தின் சொந்தக்காரர் தம் மனைவியிடம் சொன்னார்.

கணவனுடைய கட்டளைப்படியே அவள் எழுந்து சென்று கதவைத் திறந்து பார்த்தாள். சுமுகி தன் முன் நிற்பதைக் கண்டாள்.

"அம்மா, என்ன சங்கதி? உங்களுடைய முகம் ஏன் வேறுபட்டிருக்கிறது? இன்னேரத்தில் இங்குவந்து நீங்கள் கதவைத் தட்டக் காரணம் என்ன?" என்று சத்திரத்தின் சொந்தக்காரி சுமுகியைக் கேட்டாள்.

"உங்களுடைய கணவனை என்னோடு வரச் சொல்லுங்கள். நீங்களும் என்னோடு வரவேண்டும்" என்று சுமுகி கூறினாள்.

"அம்மா, நாங்கள் வருவதற்குத் தடையில்லை. என்ன சங்கதி என்பதைத் தெரியுங்கள். தாங்கள் இருந்த விடத்தில் யாராவது திருடர்கள் வந்தார்களா? அல்லது தங்களை யாராவது துன்பப் படுத்தினார்களா? சொல்லுங்கள்" என்று சத்திரத்தின் சொந்தக்காரி வினவினாள்.

"முதலில் என்னோடு வாருங்கள். பிறகு நான் விஷயம் என்ன வென்பதைத் தெரிவிக்கிறேன்" என்று சுமுகி கூறினாள்.

உடனே சத்திரத்தின் சொந்தக்காரரும், அவருடைய மனைவியும் சுமுகியைப் பின்தொடர்ந்து சென்றார்கள். சுமுகி அவர்களை அழைத்துக்கொண்டு பிங்கலனுடைய அறைக்குள் நுழைந்து படுக்கையைக் கையினால் சுட்டிக் காட்டினாள். அவர்கள் இருவரும் பயத்தினால் உடல் நடுங்க, வாய் குழற, மனம் பதைக்க ஓவென்று அலறிக்கொண்டே இரண்டொரு அடி பின் வாங்கிச் சென்றார்கள். பிங்கலன் வெட்டுண்டு கிடந்த கோரமான காட்சி உள்ளபடியே அவர்கள் மூளையைக் கலக்கிவிட்டது. படுக்கை முழுவதும் இரத்தத்தில் நனைந்து ஒரே சிவப்பாக இருந்ததைக் கண்டவுடன், அவர்களுடைய சரீரத்திலும் இரத்த ஓட்டம் நின்று விடும்போலிருந்தது. செய்வது யாதென அவர்கட்கு விளங்கவில்லை.

"நானே இக்கொலை புரிந்தேன்" என்று சுமுகி உரத்த குரலில் சிறிதும் அச்சமின்றி உரைத்தாள்.

"என்ன! அம்மா, நீங்களா கொலை செய்தீர்கள்! இல்லை; இல்லை! நான் நம்பவேமாட்டேன்" என்று சத்திரத்தின் சொந்தக்காரர் கூறினர். ஏனெனில், சுமுகி அக்கொலை செய்திருக்க முடியாதென்றும், அந்தக் கோரமான காட்சியைக் கண்டவுடன் அவளுடைய மூளை நிலை பிறழ்ந்துவிட்ட தென்றும், பயத்தினால் அவள் உளறுகிறாள் என்றும் அவர் நினைத்தார்.

"ஐயையோ! தெய்வமே, கொலை, — கொலை! எங்களுடைய வீட்டில் படுகொலை!" என்று வாய்விட்டு அலறிக்கொண்டு வெளியே ஓடி சத்திரத்தின் சொந்தக்காரி அம்மாளிகையின் முன்புறத்தில் படுத்திருந்த ஜனங்களை எழுப்பிவிட்டாள். சிறிது நேரத்திற்குள் பெருங் கூட்டம் கூடிவிட்டது. ஜனங்கள் பற்பல விதமாய்ப் பேசிக்கொண்டார்கள். தானே கொலை புரிந்ததாக சுமுகி வற்புறுத்திக் கூறியவுடன் எல்லோரும் அவளையே சந்தேகித்தார்கள். தப்புவதற்கு முடியாதபடி அகப்பட்டுக்கொண்ட ஒரு மானை வேட்டை நாய்கள் சூழ்ந்துகொள்ளுவதுபோல, அவர்கள் சுமுகியைச் சூழ்ந்துகொண்டார்கள். சுமுகி மெதுவாக அந்த அறையிலிருந்து நீங்கித் தன்னுடைய அறைக்குச் சென்று, வாயிற் கதவை மூடிக்கொண்டாள். ஏனெனில் தன்னை ஜனங்கள், கோபாவேசத்தில், ஏதாவது செய்துவிடுவார்கள் என்று அவள் அஞ்சினாள். ஆனாலும், தப்பித்துக்கொண்டு அவள் ஓடமுடியாதபடி சிலர் அவ்வறையின் வெளிப்புறத்தில் காவலிருந்தார்கள்.

இந்தச் செய்தியைக்கேட்ட மீனாட்சியும், காமாட்சியும் முதலில் சுமுகி கொலை செய்திருக்கமாட்டாள் என்றும், அவள்மீது வீண்பழி சுமத்துகிறார்கள் என்றும் கருதினார்கள். அவர்கள் ஏதும் தோன்றாதவர்களாய்,

பரபரப்புடன் தங்கள் அறையிலிருந்து வெளியேவந்து சுமுகியின் அறை நோக்கிச் சென்றார்கள். கதவு சாத்தப்பட்டிருப்பதைக் கண்டு, பலமாய்த் தங்கள் குரல் காட்டித் தட்டினார்கள். உடனே சுமுகி கதவைத் திறந்தாள். அவர்கள் இருவரும் உள்ளே சென்றவுடன் சுமுகி பழையபடியும் கதவைச் சாத்திக்கொண்டாள். படுகொலையைப்பற்றிய விவரம் என்னவென்று அவர்கள் தங்கள் எஜமானியைக் கேட்டார்கள். பிங்கலனைத் தானே கொலை செய்ததாயும், அவ்விதம் செய்ததற்குக் காரணம் இன்னதெனவும் சுமுகி கூறினாள். அப்புறந்தான் அவர்களுக்கு உண்மை புலப்பட்டது,—நம்பிக்கை உண்டாயிற்று. ஆ! தங்களுடைய எஜமானி கொலை புரிந்தாள் என்று தெரிந்தவுடன் அவர்கள் இருவருடைய மனமும் எவ்வளவு துயருற்றது என்பதை யாரே எடுத்துரைக்க வல்லார்? எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினார்கள்! ஆயிரம் இருப்புக் கோல்களை நன்றாய்ப் பழுக்கும்படி காய்ச்சி மார்பிற் செருகியதுபோல் அவர்களுடைய மனம் புண் அடைந்தது.

இதற்கிடையில் சத்திரத்தின் சொந்தக்காரர் சீவகன் படுத்திருந்த அறைக்குச் சென்று அவனை எழுப்பி,—உண்மையில் சீவகன் நித்திரை புரியவில்லை; ஆழ்ந்த யோசனையிலிருந்தான்,—விஷயத்தைச் சொல்லிவிட்டுப் பிறகு இரும்புக் கவசமணிந்த கண்ணகியின் அறைக்குச் சென்று அவளிடமும் சங்கதியைத் தெரிவித்துவிட்டு வெளியே சென்று ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டுச் சமீபத்திலுள்ள கிராமத்திற்குச் சென்று அதிகாரிகளிடம் இச் செய்தியைத் தெரிவித்துவிட்டு வரும்படி ஆக்கியாபித்தார்.

அன்றிரவு நடந்த நிகழ்ச்சியானது சீவகனுக்குப் பெருங் கவற்சியை விளைவித்துவிட்டது. சத்திரக்காரர் போனபின்பு அவன் தன் இரு கைகளையும் பின்புறம் கட்டியபடியே அறையினுள் மெதுவாக உலாவிக்கொண்டிருந்தான்; — ஆனால் அவனுடைய மனமோ வெகு தூரம் வேகமாய்ச் சென்று கொண்டிருந்தது. பயங்கரமான துயரக் காட்சியோடு ஆரம்பிக்கப்பட்ட அன்றைய இரவு நாடகம் எவ்விதம் முடிவுபெறும் என்று அவன் சிந்தித்துக் கொண்டிருந்தான். பூதகியை விட்டுப் பிரிந்துவிட வேண்டுமென்று தன்னை வற்புறுத்திய எமன், மேலும் மேலும் அதிகமான துன்பங்களைக் கொடுப்பதற்காக இம்மாதிரியான நிகழ்ச்சிகள் நிகழும்படி முன்னதாகவே தன்னுடைய சூழ்ச்சியினால் செய்திருக்கக்கூடுமோ வென்று சீவகன் சந்தேகித்தான். தப்ப முடியாத பல இடுக்கண்களைக் கொண்டுவந்துவிட்டு இறுதியில் தன்னை அழித்துவிடுவானே அந்தப் பயங்கரமான எமன் என்று அவன் நினைத்தான்.

கண்ணகியோ, படுகொலையைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன், இடிமுழக்கம் கேட்ட நாகம்போல் உடல் நடுங்கினாள். சீவகனைப் பற்றியும், அவன் தன்னைப்பற்றிப் புகழ்ச்சியோடும், காதலுரிமையோடும் கனிந்து பேசிய பேச்சுக்களைப்பற்றியும், அவள் கண்டு மகிழ்ந்த இன்பக் கனவுகள், கனவுகளாகவே போயின. உறங்குவதற்கு முன்பு அவள் சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்திருந்தாள்; உறங்கப் போனபோதோ 'திருப்தி' என்னும் பெருங்கடலில் அழுந்தியிருந்தாள். உறங்கிய பின்போ சந்தோஷம், திருப்தி, இன்பம் என்னும் மூன்றும் கலந்திருந்த பேரானந்த பெருவாரியாகிய கனவில் நீந்தி விளையாடிக்கொண்டிருந்தாள். அப்படிப்

பட்ட கிலேயிலிருந்தவளுக்கு, 'பிங்கலன் கொல்லப்பட்டான்' என்னும் செய்தி எவ்வளவு மனத் தடுமாற்றத்தையும், அச்சத்தையும் விளைத்திருக்கும்? அவள் ஏதும் தேன்றுதவளாய்,— தன்னுடைய கண்களையும் செவிகளையும் நம்பாதவளாய்,— மூளைகலங்கிய பித்தர்களைப் போல், அறைக்குள்ளேயே அங்கு மிங்கும் அலைந்தாள்,— தானே பேசினாள்! சிரித்தாள்! அழுதாள்! சுமுகியின் செயலுக்காக மிக வருந்தினாள். சுமுகியின் கதி யாதாகுமோ என்று அஞ்சினாள்! சுமுகியினுடைய சொந்தச் சகோதரியைக் காட்டிலும் அதிகமான துக்கமும் தயரமும் அவள் அடைந்தாள். சுமுகியினுடைய கொடிய செயல் தன்னைச் சிவகனிடமிருந்து பிரித்து விடுமோ என்று கவன்றாள்.

வெள்ளி முளைத்தது; பொழுதும் விடிந்தது! பக்கத்துக் கிராமத்திலிருந்து நிகும்பனுடைய கட்சியைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் பலர் குதிரைகள்மீது ஆரோகணித்தபடியே சத்திரத்தின் முன்பு வந்து நின்றார்கள். அவர்களோடுகூட நியாயாதிபதி ஒருவரும் வந்திருந்தார். சத்திரத்தின் முகப்பில் சிவகனும், கண்ணகியும், — கண்ணகி இரும்புக் கவசம் அணிந்துகொண்டு ஒரு சிறந்த போர்வீரனைப்போல் இப்போதும் விளங்கினாள் என்பதை நேயர்கள் மறந்துவிடக்கூடாது—சுமுகி புரிந்த கொலையைப்பற்றி இரகசியமாயும் வருத்தத்துடனும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

நியாயாதிபதி, சத்திரத்திற்கு வந்தவுடன் சுமுகி இருந்த அறை வாயிலில் ஒரு போர்வீரனையும், கட்டிடத்தின் தெரு வாயிலில் மற்றோர் இராணுவ வீரனையும் காவல் வைத்துவிட்டுப் பிங்கலன் வெட்டுண்டு கிடந்த அறைக்குச் சென்றார். அந்த அறையின் அமைப்பு,

படுக்கை இருந்த இடம், கொலையுண்டவன் கிடந்த மாதிரி, இவைகளைப்பற்றிய குறிப்புகளைத் தம்முடைய பதிவுப் புத்தகத்தில் எழுதிக்கொண்டு, பிறகு அந்த அறையிலிருந்து நீங்கி, கொலைபுரிந்த குற்றவாளி அடைக்கப்பட்டிருந்த அறைக்குப் போனார். சுமுகி, பைத்தியம் பிடித்தவளைப்போல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் மீனாட்சியும் கமாட்சியும் கவலை நிறைந்த முகத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். நியாயாதிபதியைக் கண்டவுடன் அவர்கள் மூவரும், பலிபீடத்தின் முன்பு நிற்கும் ஆடுகளைப்போல் விழித்தார்கள்.

"பெண்ணே! நீதானு அந்த அறையில் வெட்டுண்டு கிடக்கும் வாலிபனைக் கொன்றது? அவனை நீ கொன்றதாக நீயே வெளியிட்டு உன்னுடைய குற்றத்தை ஒப்புக் கொண்டாயாமே? அஃது உண்மைதானு? உன்னைப் பார்த்தால், பேரழகுடனும் குணத்துடனும் விளங்கும் ஒரு தெய்வ மகளைப்போல் தோன்றுகின்றது. இவ்வளவு அழகிய பெண் இவ்வளவு கொடுமையான காரியத்தைச் செய்யத் துணிவாளா என்னும் சந்தேகம், நீ கொலை புரிந்ததாகச் சொன்னபோதிலும், என் மனத்தில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. சங்கதி என்ன? நீதானு உண்மையில் அவனைக் கொன்றாய்? அவனை நீ கொல்லுவதற்குக் காரணம் என்ன? அவனை எவ்விதம் கொன்றாய்? உண்மையை மறைக்காமல் தெளிவாகவும் விவரமாகவும் சொல்" என்று நியாயாதிபதி சுமுகியைக் கேட்டார்.

"ஐயா, நான்தான் பிங்கலனைக் கொன்றேன், — இந்தக் கையே அவனைக் கொன்றது!" என்று சுமுகி தன் வலக் கையை நீட்டிக் காட்டிக் கூறி "அதில்

சிறிதும் சந்தேகமே இல்லை. ஒரு பாவமும் அறியாத மற்றவர்களைப் பற்றிச் சந்தேகித்து அவர்களை அநாவசியமான கஷ்டங்களுக்கு உட்படுத்த எனக்கு இஷ்டமில்லை. அதனற்றான் என் குற்றத்தை நானே ஒப்புக் கொண்டேன். இன்றேல் நான் கொலைபுரிந்தபிறகு தப்பித்துக்கொண்டு போயிருப்பேன். அப்போது என்னை ஒருவரும் பார்க்க முடியாது" என்று மீண்டும் தொடர்ந்து மொழிந்தாள்.

"பெண்ணே! இரக்கமும் சாந்தமும் இயல்பாகவே அமைந்திருக்கவேண்டிய பெண் உடம்பைப் பெற்ற நீ, இராட்சசர்களைப்போல் கொடுமையும் கோரமும் கொண்டவளாய் இப்படிகொலை புரியக் காரணமென்ன? அவன் உனக்கு ஏதாவது தீமை புரிந்தானோ?" என்று நியாயாதிபதி கேட்டார்.

"ஐயா, அதிகம் சொல்லுவானேன்? அவனைக் கொன்றேன்; நான் உயிர் பிழைத்தேன். நான் அவ்விதம் அவனைக் கொல்லாதிருந்திருப்பேனானால், இதுவரையில் நான் கொலையுண்டு இறந்திருப்பேன்" என்று சுருங்கக் கூறினாள்.

"ஆம்; ஐயா! என்னுடைய எஜமானி இரத்தங் குடிப்பதில் பிரியமுடைய பேயல்லள். சாந்தமும் சீலமும் ஒருங்கமைந்தவள். தன்னைக்காத்துக்கொள்ளும்படி அவள் இவ்வளவு பயங்கரமான செயலைச் செய்தாளே தவிர வேறில்லை. ஆதலால் தயை செய்து அவளை மன்னிக்கவேண்டும்" என்று காமாட்சி இரங்கிக் கூறினாள்.

"பெண்ணே! நீ உன்னுடைய எஜமானிமீது அதிகமான அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறாய் என்பதை

நான் அறிந்துகொண்டேன். ஆனாலும் நான் என்ன செய்யலாம்? நான் என்னுடைய கடமையைச் செய்ய வேண்டும்'' என்று நியாயாதிபதி காமாட்சியை நோக்கிக் கூறிவிட்டுப் பிறகு சுமுகியைப் பார்த்து ''அம்மா! நீ என்னோடு வரவேண்டும்; உன்னை நான் காவற்கூடத்திற்கு அழைத்துப் போகவேண்டும்'' என்று அதிகாரத்தோடு சொன்னார்.

''ஐயா, இவ்வளவு சீக்கிரத்திலா என்னை இவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்த விரும்புகிறீர்கள்! தயை செய்து இன்னும் இரண்டு மூன்று மணிநேரம் இங்கே இருக்கும்படி எனக்கு நீங்கள் உத்தரவு கொடுத்தால், அச்செயல் ஒருபெரும் புண்ணியமாகும். என் சகோதரி இன்னும் இரண்டு மூன்றுமணி நேரத்திற்குள் இங்கே வருவாள். அவளைப் பார்த்துவிட்டுப் பிறகு தங்களோடு வருகிறேன்'' என்று சுமுகி சொன்னாள்.

''உன்னுடைய சகோதரியா? அவள் பெயரென்ன?'' என்று நியாயாதிபதி கேட்டார்.

''அவள் பெயர் பூதகி!'' என்று சுமுகி சொன்னாள்.

''என்ன! பூதகியா! எங்களுடைய எஜமானுகிய கிரும்பருடைய போஷணையில் இருந்து வருகிறளே, அந்தப் பூதகியா? அவளுடன் பிறந்தவளா நீ?'' என்று நியாயாதிபதி ஆச்சரியத்தோடு கேட்டார்.

''ஆம்!'' என்று சுமுகி பதில் சொன்னாள்.

உடனே, நியாயாதிபதிக்குச் சிறிது இரக்கம் உண்டாயிற்று. இன்னும் இரண்டுமூன்று மணி நேரம் கழித்து அவளை அழைத்துப் போவதாக அவர் சொல்லிவிட்டு அவ்வறையிலிருந்து நீங்கினார். சுமுகியைப் பார்ப்பதற்கு யார் வந்து போனபோதிலும்

அவர்களைத் தடுக்கவேண்டாம் என்று காவற்காரனுக்கு அவர் உத்தரவு செய்து விட்டு, தாம் தங்கவேண்டிய இடத்திற்குச் சென்றார். சுமுகி, தன் இரண்டு தோழியர்களோடும் ஏதோ இரகசியமாய்ப் பேசிக்கொண்டிருந்தாள்.

அதிகாரம் — 57

முதற் காவலன்

சுமுகிக்கும், அவளுடைய நன்றியறிதலுள்ள இரண்டு தோழியர்களுக்கும் நடந்த சம்பாஷணை இரகசியத்தில் நடந்தபடியால் அதன் விவரத்தைச் சொல்லமுடியாமல் நாம் சிறிது தயங்குகிறோம்; — ஏனெனில் நமக்கே விவரம் தெரியவில்லை. இருந்தபோதிலும் சுமுகியின் கட்டளைப்படி நடப்பதாக அவர்கள் இருவரும் உறுதி கூறினார்கள் என்பது மாத்திரம், "சரி; அப்படியே செய்கிறோம்" என்று அவர்கள் இருவரும் சற்று உரத்துக் கூறியதைக்கொண்டு, நமக்குத் தெரியவருகிறது. சம்பாஷணை முடிந்தபிறகு அவர்கள் இருவரும் தங்களுடைய அறைக்குப் போவதற்காக வெளியே வந்தார்கள். சுமுகி இருந்த அறைவாயிற்படியில் நின்று காவல் புரிந்துகொண்டிருந்த போர்வீரன் மீனாட்சியைக் கண்டவுடன் "அம்மா, நமஸ்காரம்!" என்று பணிவுடன் சொன்னான்.

"காவற் சேவகனே! நான் யார் என்பதை நீ அறிவாயோ? இதற்கு முன்பு என்னை எங்கேயாவது பார்த்த ஞாபகம் உன்க்கு இருக்கிறதோ?" என்று மீனாட்சி வினவினாள். "ஓ! ஞாபகமில்லாமலென்ன?

உங்களைப்போன்ற அழகிய பெண்களுடைய முகத்தை ஒருமுறை பார்த்தால், பிறகு அந்த முகத்தை எப்படி மறக்க முடியும்? உங்களுடைய சகோதரி காமாட்சியின் அழகிய முகமும் என் மனத்தில் பதிந்திருக்கிறது. நீங்கள் இருவரும் எங்கள் எஜமானியாகிய பூதகி அம்மாளிடம் சேடியர்களாக இருந்தீர்களே?'' என்று காவலன் சொன்னான்.

''ஆம்; இப்போது எங்களுடைய எஜமானியாயிருக்கும் சுமுகி பூதகியின் சகோதரி என்பதை அறிவாயோ?'' என்று மீனாக்ஷி கேட்டாள்.

''சிறிது நேரத்திற்கு முன்பு, நியாயாதிபதி உள்ளே பேசிக்கொண்டிருந்தபோது என் காதில் விழுந்த இரண்டொரு வார்த்தைகளைக்கொண்டு நான் அவ்விதந்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. ஆனாலும் சுமுகியை நான் இதுவரையில் பார்த்ததே இல்லை; பூதகிக்கு ஒரு சகோதரி இருக்கிறாள் என்று நான் கேள்விப்பட்டதுமில்லை'' என்று காவலன் சொன்னான்.

''நல்லது; இருக்கலாம்! என்னை நீ இதற்கு முன்பு எங்கே பார்த்தாய்?'' என்று மீனாக்ஷி உசாவினாள்.

''குந்தி நகரத்தில் பிரபுக்கள், சபைகூடிப் பேசத் தீர்மானித்திருந்தார்களல்லவா? அச்சமயத்தில் குந்தி நகரத்திற்கு வெளியில் சிலமைல் தூரத்தில் நிகும்பர், குந்தி நகரத்தின்மீது படை எடுத்துச்சென்று, கூடப் போகும் பிரபுக்கள் சபையைக் கூடவொட்டாமல் தடுக்கும் நோக்கத்துடன், கூடாரம் அடித்துக்கொண்டு தங்கியிருந்தார் அல்லவா? அப்போது கொங்கு தேசாதிபதியின் பிரதிநிதியான ஒருவனும் கூட நிகும்பருடைய கூடாரத்திற்கு வந்து அவருடைய விருந்தினராக ஒரு

நாள் இரவு தங்கியிருந்தாரன்றோ? அப்போது பூதகி அக்கூடாரத்திற்குச் சமீபத்தில் பைம்புற்றரையில் உல்லாசமாய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். நீங்களும் உங்கள் தங்கையும் அவளோடிருந்தீர்கள். அப்போது தான் உங்களைப்பார்த்தேன். பிறகு நான் உத்தியோகத்தின்மேல் வேறூருக்குப்போய் விட்டேன்'' என்று காவலன் கூறினன்.

''ஓ! அப்படியா? மிகவும் சந்தோஷம். இந்த மாளிகையில் நடந்த படுகொலையைப்பற்றி நீ ஏற்கனவே அறிந்திருப்பாய் என்றே நம்புகிறேன். கொலையுண்ட பிங்கலன், என் எஜமானியை என்னமோ செய்திருக்கிறான். இல்லாவிட்டால் அவனை அவள் கொலை செய்யக் காரணமில்லை'' என்று மீனாக்ஷி சொன்னாள்.

''உங்கள் எஜமானி என்று சுமுகியைத் தானே சொல்லுகிறீர்கள்? அப்படியானால் பூதகியிடம் நீங்கள் இப்போது வேலை பார்க்கவில்லையோ?'' என்று காவலன் உசாவினன்.

''இல்லை; இப்போது நாங்கள் சுமுகியிடந்தான் வேலை பார்க்கிறோம். முன்பு இருந்த வேலையை விட்டு விட்டோம். எங்கள் எஜமானிமீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டிருப்பது எங்களுக்கு எவ்வளவு மனவருத்தத்தை உண்டாக்கி யிருக்கிறது என்பதை நீ அறிவாயா? அறியமாட்டாய். நெருப்பில் விழுந்த புழுப்போல் நாங்கள் துடிக்கிறோம்'' என்று மீனாக்ஷி கூறினாள்.

''இருக்கும்; இருக்கும்! அன்போடு நடத்தும் எஜமானுக்கு ஏதாவது ஆபத்து வந்தால், வேலைக்காரர்களுக்கு வருத்தமுண்டாகாமலிருக்குமா? உங்கள் எஜமானி சுமுகி, பூதகியைப்போல் இருப்பாளா, அல்லது

வேறுவிதமாய் இருப்பாளா? இருவரும் உடன்பிறந்த சகோதரிகள் என்று சொன்னீர்களே, — அதற்காகக் கேட்கிறேன்'' என்று காவலன் கேட்டான்.

''நீயே நேரில் பார்த்துத் தெரிந்துகொள். ஏதோ ஒரு பொருளை மறதியாக வைத்துவிட்டவளைப்போலும், அதை எடுக்கப் போகிறவளைப் போலும் நான் உள்ளே போகிறேன். போகும்போது இரண்டு கதவுகளையும் நன்றாய்த் திறந்துவைத்துப் போகிறேன், நீ வெளியிலிருந்தபடியே என் எஜமானியைக் கூர்ந்து பார்'' என்று மீனாக்ஷி காவலனிடம் சொல்லிவிட்டு, இரண்டு கதவையும் திறந்துகொண்டு சுமுகியின் அறைக்குள் நுழைந்தாள். காவலன் சுமுகியினுடைய உருவத்தை நன்றாய்ப் பார்த்துக்கொண்டான். ஏதோ ஒரு சாமானைக் கையில் எடுத்துக்கொண்டு மீண்டும் வெளியே வந்து மீனாக்ஷி, சுமுகியிருந்த அறைக்கதவைச் சாத்திவிட்டாள்.

''சுமுகியை நான் நன்றாய்க் கவனித்துப் பார்த்துக் கொண்டது நலமேயாகும். ஏனெனில், சுமுகியைத் தவிர மற்ற எந்த ஸ்திரீ அவள் இருக்கும் அறைக்குள் போனாலும், அல்லது அவ்வறைக்குள்ளிருந்து வெளியே வந்தாலும் தடைசெய்யவேண்டாமென்று நியாயாதிபதி சொல்லி இருக்கிறார்'' என்று காவலன் மொழிந்தான்.

''ஓ! அப்படியா? வயது முதிர்ந்த அந்த நியாயாதிபதி அன்பிலும் தயாளத்திலும் முதிர்ந்தவராயிருப்பது எனக்கு மகிழ்ச்சியை விளைவிக்கிறது. சரி; என் எஜமானியைப் பார்த்துக் கொண்டாயா? உனக்குத் திருப்தியாய் விட்டதா?'' என்று மீனாக்ஷி கேட்டாள்.

''ஆ! நீங்கள் என்ன இவ்விதம் கேட்கிறீர்களே! ஆஹா! என்ன அழகு! என்ன அழகு! எனக்கு நாக்கில் ஜலம் ஊறுகிறதே! பெண்களுடைய அழகு கண்

களைத்தான் கவருகிறது! இவளுடைய அழகு கண்ணையும் நாவையும் ஒருங்கே கவர்கின்றதே! இவளைப் பார்த்தால் பூதகியை நாம் பார்க்கவேண்டியதில்லை. இவள் உடம்பு செம்பொன்போல் சிவப்பாயிருக்கிறது; தலை மயிர் கருநாவற் பழம்போல் கருமையாயிருக்கிறது! பூதகியின் சரீரம் கரும்பொன்போல் கருமையாயிருக்கிறது; கூந்தல் இலந்தைக் கனிபோல் சிவப்பாயிருக்கிறது! இவ்வளவுதான் இருவருக்குமுள்ள வித்தியாசம்!" என்று காவலன் புகன்றான்.

"ஆம்; நீ சொல்லுவது முற்றும் பொருத்தமே! அவர்கள் இருவரும் அவ்விதம் இருப்பதினால்தான், கருநிறமுடையவளுக்குப் 'பூதத்தின் மகள்' என்று பொருள் படும்படி பூதகி எனவும், சிவப்பாயிருப்பவளுக்குத் 'தெய்வத்தின் மகள்' என்று பொருள் படும்படி தேவகி எனவும் அவர்களுடைய பெற்றோர்கள் பெயரிட்டார்களாம்" என்று காமாட்சி பெருமூச்செறிந்து கூறினாள்.

"என்ன! தேவகி என்பது உங்கள் எஜமானி பெயர்தானே! தெய்வத்தின் புத்திரியாகப் பாவிக்கப்பட்ட அவளா, பூதங்களும் பேய்களும் பிசாசுகளுங்கூட சிறிது அச்சத்துடன் புரிகின்ற கொலைத்தொழிலை மனந்துணிந்து செய்தாள்? ஆ! என்ன ஆச்சரியம்! அழகிய சரீரமுடைய பெண்கள் பெரும்பாலும் எண்ணத்தில் கொடியவர்களாயும், நடத்தையில் மிகக் கெட்டவர்களாயும் இருப்பார்கள் என்றும், அவர்களுடைய தோலழகைக் கண்டு மயங்கிவிடக் கூடாதென்றும் ஞானிகள் சொன்னது உண்மைதான்போலும்!" என்று காவலன் அதிசயத்தோடு கூவினான்.

"தேவகி என்பது என் எஜமானி பெயர்தான். அவளுக்குச் சுமுகி என்று மற்றொரு பெயரும் உண்டு

வீணாக அவளைத் தூஷிக்காதே. நீ இங்கேதானே இருப்பாய்; உண்மை உனக்குத் தெரியாமலா போகப்போகிறது? அப்போது என் எஜமானி நல்லவளா, கெட்டவளா என்பதை நீயே தெரிந்து கொள்ளுவாய்!" என்று காமாக்ஷி சொன்னாள்.

"இல்லை; நான் இங்கே இருக்கமாட்டேன். இன்னும் ஒரு மணிநேரம் கழித்து எனக்குப் பதிலாய் இன்னொரு காவற்காரன் வருவான். அவன் வந்தவுடன் நான் போய் விடுவேன்" என்று காவலன் சொன்னான்.

"அப்படியா? ஆனால் என் எஜமானியைப் பற்றியும் அவளுடைய சரீர அமைப்பு, நிறம் முதலிய அடையாளங்களைப் பற்றியும், இனி வரும் காவலனிடம் நீயே விவரமாகக் கூறிவிடு! ஏனெனில், ஒவ்வொரு காவற்காரனுக்கும் கதவைத் திறந்து என் எஜமானியைக் காட்டிக்கொண்டிருப்பது நன்றாயிராது. அவ்விதம் செய்வது அவளை அவமானப் படுத்துவதுபோலாகும்" என்று மீனாக்ஷி சொன்னாள்.

"ஆம்; வாஸ்தவந்தான்! நான் அவ்விதமே செய்கிறேன்" என்று காவலன் பதில் புகன்றான்.

பிறகு மீனாக்ஷி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு தன்னுடைய அறைக்குச் சென்றாள். சிறிதுநேரம் கழித்து அவள் சில சாமான்களோடு தன் அறையிலிருந்து வெளியேவந்து சுமுகி இருந்த அறைக்குப் போனாள். அவ்விதம் சென்றபோது கதவைச் சாத்திக்கொண்டே சென்றாள்.

Z1739

அதிகாரம் — 58

இரண்டாம் காவலன்

சுமார் ஒருமணி நேரம் கழிந்தது; முதற் காவலன் விடுதலை பெற்றுக்கொண்டு சென்றான். அவனுக்குப் பதிலாய் வேறொரு காவலன் வந்து, அவன் புறப்பட்டுச் செல்லுவதற்குச் சில நிமிஷத்திற்கு முன்பே, அவனுடைய வேலையை ஒப்புக்கொண்டான். இந்த இரண்டாவது காவற்காரன் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் மீனாக்ஷி பழையபடியும் சுமுகியிருந்த அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். ஆனால் வெளியே வந்தவுடன் கதவைச் சாத்திவிட்டாள்.

"அம்மா! நமஸ்காரம்!" என்று இரண்டாவது காவற்காரனும் முதற் காவலனைப்போலவே மீனாக்ஷியை நோக்கிப் பணிவுடன் கூறினான்.

"ஆ! க்ருந்தீபா, நீயா இங்கு காவலுக்கு வந்திருக்கிறாய்? கடைசியாக உன்னை நான் மைதானத்தில் சில வாரங்களுக்கு முன்பு பூதகியின் கூடாரத்தில் பார்த்தேனன்றோ? அதன் பிறகு உன்னை நான் காணவில்லையே?" என்று மீனாக்ஷி கேட்டாள்.

"ஆமாம்; அதற்கு அப்புறம் நான் சுற்றுப்புறத்திலுள்ள கிராமங்களுக்கு, நிகும்பருடைய கட்டளைப்படி, வேலை பார்க்கப் போய்விட்டேன். உங்களைச் சந்தித்ததற்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் சந்திக்க நேர்ந்ததே என்று நான் சிறிது விசனிக்கிறேன். பூதகிக்குச் சகோதரி ஒருத்தி இருக்கிறாள் என்று நான் இதுவரை கேள்விப்

பட்டதே இல்லை!'' என்று காவலன் அதிசயத்தோடு கூறினான்.

''என்ன சங்கதி? உனக்கு முன்பு இங்கே காவலிருந்தவன் ஏதாவது இரகசியம் ஒதினானே?'' என்று மீனாக்ஷி சிரித்துக்கொண்டே வினவினாள்.

''ஆம்; அவன் சிறிது நேரம் என்னோடு பேசிக்கொண்டிருந்தான். அம்மா! எங்களுடைய தொழிலோ காவல் புரியும் தொழில்! ஆதலால், கைதிகள் தப்பித்துக்கொண்டு ஓடி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது எங்களுடைய கடமை! கைதியினுடைய உயரம், நிறம், அங்க அடையாளம் முதலியவைகளை ஒருவாறு அறிந்துகொண்டால் கைதி ஓடிவிட்டாலும், பிறகு கண்டுபிடிக்கலாம்! கைதியைப்பற்றி ஒன்றுமே தெரியாதிருந்தால், நாங்கள் காவல் புரிவதால் என்ன பிரயோசனம்? அதனால் தான் சுமுகிஷயப்பற்றிச் சிற்சில கேள்விள் நான் முதற் காவலனைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்'' என்று காந்தீபன் என்னும் பெயருடைய இரண்டாவது காவலன் கூறினான்.

''ஆம்; வாஸ்தவமே! உனக்கு முன்பு இருந்த காவலன் இன்று பூதகி இங்கே வரப்போகிறாள் என்றும், அதற்காகவே சுமுகியைப் பிடித்துக்கொண்டு முன்னமேயே போயிருக்க வேண்டிய நியாயாதிபதி சிறிது நேரம் தாமதித்திருக்கிறார் என்றும், சொன்னாயே?'' என்று மீனாக்ஷி உசாவினாள்.

''ஆம்; சொன்னேன்!'' என்றான் காவலன்.

''அப்படியா? பூதகி இப்போது தன் சகோதரியோடு இங்கே, — இந்த அறைக்குள் பேசிக்கொண்டிருக்கிறாள்'' என்று மீனாக்ஷி உரைத்தாள்.

"என்ன! பூதகி இங்கே இருக்கிறாளா?" என்று காந்தீபன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"ஆம்; இந்த அறைக்குள் இப்போது இருக்கிறாள், அவள் தன் சகோதரியோடு பேசிக்கொண்டிருக்கிறாள்" என்று மீனாக்ஷி வற்புறுத்துரைத்தாள்.

"அவள் இங்கே வந்திருப்பதாக என்னிடம் ஒருவரும் சொல்லவில்லையே? ஆனால், முதற் காவலனை விடுவிப்பதற்காக நான் வந்தபோது, கீழே சிலர் பூதகி இன்னும் சிறிது நேரத்திற்குள் இங்கே வரப்போகிறாள் என்றும், அவளைப் பார்ப்பதற்காகவே குற்றவாளியாகிய அவள் சகோதரி சுமுகி இங்கே, நியாயாதிபதியின் சம்மதத்தின்மேல் தங்கியிருக்கிறாள் என்றும் சொன்னார்கள்" எனக் காந்தீபன் கூறினான்.

"ஆம்; நியாயாதிபதியின் நற்குணத்திற்கும், அனுதாபத்திற்கும் நாம் நன்றி செலுத்தவேண்டும். எதிர் பார்த்ததற்கு முன்பாகவே, பூதகி இங்கு வந்துவிட்டதால், இனி அவள் சகோதரி அதிக நேரம் இருக்கமாட்டாள். சிறிது நேரத்திற்குள் அவள் அதிகாரிகளினால் கைதியாக்கப்பட்டு, அவர்களைப் பின் தொடர்வாள்" என்று மீனாக்ஷி பெருமூச் செறிந்து கூறினாள்.

"இந்த நேரத்தில், — இப்போது, — இந்த இடத்தில் பூதகி இருக்கிறாள் என்பது உண்மைதானா?" என்று மறுபடியும் காந்தீபன் சந்தேகங் கலந்த அதிகாரத்துடன் கேட்டான்.

"நான் ஏற்கனவே சொல்லியும், ஏன் மறுபடியும் கேட்கிறாய்?" என்றாள் மீனாக்ஷி.

"அவள் வந்ததைப்பற்றி நான் கேள்விப்படவுமில்லை, — அவளை நான் பார்க்கவுமில்லை. இஃது ஆச்

சரியமாகவன்றே இருக்கிறது. ஒரு சமயம் நான் குதிரைக்குத் தீனிவைக்க லாயத்திற்குப் போயிருந்தபோது அவள் வந்திருப்பினும் இருக்கலாம்'' என்று காந்தீபன் தானாகவே சொல்லிக்கொண்டான்.

''இருக்கலாம்; ஆனால் எனக்கு ஒரு விஷயம் ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. அஃதாவது, — உனக்கு முன்பு இங்கே காவலிருந்த காவலன், பூதகி வந்ததை நேரில் பார்த்துக்கொண்டிருந்தும், அவள் அறைக்குள் நுழைந்தபோது மரியாதைக் குறிப்பாகக் கும்பிட்டும், அவள் வந்ததைப்பற்றி ஒரு வார்த்தைகூட உன்னிடம் சொல்லாமற்போனதுதான்'' என்று மீனாக்ஷி ஆச்சரியத்தோடு மொழிந்தாள்.

''ஒரு சமயம் அவன் சொல்லியிருந்தாலும் மிருப்பான்; நான் வேறு ஏதாவது ஒரு விஷயத்தில் கவனம் செலுத்தியிருப்பேன். அதனால் அவன் சொன்னதை நான் கவனிக்காமல் இருந்துவிட்டேன் போலும்!'' என்று தன்னுடைய அஜாக்கிரதையைத் தானே புலப்படுத்தும் வகையில் காந்தீபன் பதில் சொன்னான்.

''ஆமாம்; அவ்விதந்தான் இருக்கும்!'' என்று மீனாக்ஷி கூறி, அவனுடைய சந்தேகத்தை ஊர்ச்சிதப்படுத்தினாள்.

''பூதகியும் சுமுகியும் மிகுந்த துயரத்துடனும் அனுதாபத்தோடும் பேசிக்கொண்டிருக்கிறார்களோ? சுமுகியின் செயலைப்பற்றிப் பூதகி என்ன சொல்லுகிறாள்?'' என்று காந்தீபன் கேட்டான்.

''ஐயோ! அதை ஏன் கேட்கிறாய்? சகோதரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு அழுகிறார்கள். அவர்கள் முன்னிலையில் நின்றாலே, என்னை அறியாமல் எனக்குத் துயரமுண்டாகிறது.

சுமுகி, இப்போது தனக்கு நேர்ந்திருக்கும் ஆபத்திலிருந்து, தப்புவதற்குச் சிறிதும் வழியில்லை. ஏனெனில், பூதகி எவ்வளவுதான் உன் எஜமானராகிய நிகும்பரின் அன்பையும் அபிமானத்தையும் பெற்றிருந்தபோதிலும், அவரை நியாயவழியிலிருந்து திருப்புவதற்கு அவளால் முடியாது,—மற்ற எவராலுமே முடியாது. பூதகியை அவர் நேசிக்கிறார் என்பது உண்மையே,—ஆனால் நியாயத்தை அவர் இன்னும் அதிகமாய் நேசிக்கிறார். இந்த உண்மையை நான் பலர் மூலமாய் ஏற்கனவே நன்கறிந்திருக்கிறேன். ஆதலால், அவர் சுமுகியை மன்னிப்பார் என்று எவ்விதம் நினைக்க முடியும்?" என்று மீனாக்ஷி பரிவுடன் உரைத்தாள்.

"ஆம்: நீங்கள் சொல்லுவது முற்றும் உண்மையே. சூரிய சந்திரர் திசைமாறினும், பூமி நிலை பிறழினும், நிகும்பருடைய நியாயம் மாறாது,—அவருடைய நடுவு நிலைமை நிலைபிறழாது" என்று காந்தீபன் கூறினான்.

"ஆனாலும் சமய சந்தர்ப்பம் ஒன்று இருக்கிறதன்றோ? நியாயவானையும் பட்சபாத மற்றவராயும் இருத்தல் போலவே தயாள முடையவராயும், இரக்க முள்ளவராயும் நிகும்பர் இருக்கலாமன்றோ?"

"இருக்கலாம்; ஆனால் இருக்கும்படி கடவுள்தான் செய்யவேண்டும். உங்கள் எஜமானி அழகிற் சிறந்தவளாயும் சிறுபருவத்தினளாயும் இருக்கின்றாள். இப்படிப்பட்டவள் தூக்குமேடையில் உயிர் துறப்பதென்றால், யாருக்குத்தான் சம்மதமிருக்கும்!" என்று சொன்னான் காந்தீபன்.

"ஐயோ, அவளுக்கு எப்படிப்பட்ட நிலைமை வந்திருக்கிறது! அதை நினைக்கும்போதே என் மனம் நடுங்குகிறது" என்று சொன்னாள் மீனாக்ஷி.

"ஆம்; சுமுகியின் பரிதாப நிலைமை எனக்கே வருத்தத்தை விளைவிக்கிற தென்றால் உங்களுக்கு எப்படியிருக்கும்? பூதகி அவளுக்கு மூத்தவளா, இளைய வளா?" என்று காந்தீபன் வினவினான்.

"அவர்கள் இருவரும் ஒரே காலத்தில் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தார்கள்" என்று மீனாக்ஷி கூறினாள்.

"என்ன! இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தவர்களா? அப்படியிருந்தும் அவர்களுக்குள் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது!" என்று காந்தீபன் ஆச்சரியத்தோடு கூவினான்.

"அவர்களுக்குள் வித்தியாசம் இருக்கிறது என்பதை நீ எவ்விதம் அறிவாய்? நீ சுமுகியைப் பார்த்ததில்லை என்று சொன்னாயே?" என்று மீனாக்ஷி உசாவினாள்.

"ஓ! பார்க்காவிட்டால் என்ன? முதலில் இருந்த காவலன் எனக்கு எல்லா விவரமும் சொல்லியிருக்கிறான். சுமுகி, பூதகியைப்போலவே இருப்பாளாம், ஆனால் நிறத்தில் மாத்திரம் வித்தியாசமாம்!" என்றான் காந்தீபன்.

"ஆம்; வாஸ்தவந்தான்! பூதகி எவ்வளவு கறுப்பாயிருக்கிறாளோ அவ்வளவு சிவப்பாய்ச் சுமுகி இருக்கிறாள். பூதகியின் தலைமயிர் சிவப்பு; சுமுகியின் கூந்தல் கறுப்பு" என்று காமாக்ஷி கூறினாள்.

இவ்விதமாக இவர்கள் இருவரும் வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது, அறையின் கதவைத்திறந்து கொண்டு காமாக்ஷி வெளியே வந்து மீனாக்ஷியை நோக்கி "என்ன, அக்கா! இங்கே பேசிக்கொண்டிருக்கிறாயே?

பூதகியம்மாள் போகவேண்டுமாம்; உன்னைக் கூப்பிடு கிறார்கள்'' என்று சொன்னாள்.

''ஓ! அப்படியா? இதோ வந்து விட்டேன். நான் அவர்களை வீணைத் தாமதிக்கும்படி செய்யேன்'' என்று சொல்லிக்கொண்டே மீனாக்ஷி உள்ளே சென் றாள். காமாக்ஷியும் அவள் பின் சென்றாள். காந்தி பன் மிகுந்த ஜாக்கிரதையுடன், விழித்த கண் இமை யாமல், காவல் புரிந்து கொண்டிருந்தான். சுமார் கால்மணிநேரம் சென்றது. மறுபடியும் கதவைத் திறந்துகொண்டு மீனாக்ஷியும் காமாக்ஷியும் வெளியே வந்தார்கள். அவர்களுக்குப் பின்னே பூதகிவந்தாள்.

ஆம், — பூதகிதான்! முதல்முதல் நிகும்பனுடைய கூடாரத்தில சிவகன் இவளைச் சந்தித்தபோது இவள் எவ்விதமான உடை உடுத்திருந்தாளோ அதே உடை தான் இப்போதும் உடுத்திருந்தாள். இவளுடைய தேகம் கறுப்பாயிருந்தபோதிலும் தோல் பளபளப்பா யும் வழுவழுப்பாயு மிருந்தது. கன்னங்கள் கண்ணாடி போல் பிரகாசித்துக்கொண் டிருந்தன. உதடுகள் கொவ்வைப் பழம்போல் சிவந்திருந்தன. நெற்றியோ உன்னதாமன அழகும், விரிவும், மிருதுவும் பொருந்தி மிகுந்த புத்திக் கூர்மையைக் காட்டிற்று. வெளிறிய நீலநிறப் பட்டுப்புடைவையை அவள் உடுத்தியிருந்த மாதிரியும், ரோஜாப்பூ நிறமான பட்டு இரவிக்கையை அவள் நன்றாக இறுகப் பிணித்துக் கட்டியிருந்த விதமும் அவளுடைய் அழகை மிகுவித்துக் காட்டின. அவள் ஆபரணங்கள் அதிகமாய் அணிந்திருக்கவில்லை. அவ்விதம் அணிகலன்கள் அவள்மீது காணப்படாமலிருந்தது அவளுடைய அழகை அதிகப்படுத்தியதே யொழிய குறைக்கவில்லை. விசாலமாயும், பிரகாசமாயு

மிருந்த அவளுடைய கண்மணிகளுக்குமுன், நவமணிகளுள் எம்மணியும் ஒளி மழுங்குமாதலால், அவள் இரத்தினங்களாலாய ஆபரணங்களே அணியவில்லை. அதிகம் கூறுவானேன்? 'அழகு' என்கின்ற ஒரு பொருள் இருந்தால், அது பூதகியிடந்தான் இருக்கவேண்டும் என்று கூறுதலே போதுமானது. ஆண்மக்களே வசீகரப்படித்தவும், பெண்மக்களைப் பொருமைப் பித்தேறி மனமுடையச் செய்யவும் வல்லது பூதகியின் அழகு! அதிலும், இச்சமயம் அவள் துயரத்தில் அழுந்தி யிருந்தபடியால், சாதாரணமாய் அழகிற் சிறந்த பெண்கள் துயரத்தினால் அழுது கண்களும் முகமும் சிவந்திருக்கும் சமயத்தில் அதிக அழகுடன் தோன்றுதல்போல, மிகுந்த அழகுடன் விளங்கினாள்.

"பெண்களே! நான் போய் வருகிறேன். இப்போது நான் நேரே குந்தி நகரம் போகிறேன். என்னுடைய சகோதரியும் உங்களுடைய எஜமானியுமாகிய சுமுகியை மன்னிக்க வேண்டுமென நிகும்பனைப் பிரார்த்தித்து அவருடைய உத்தரவை வாங்கிவருவதற்காக நான் செல்லுகிறேன். அவர் என்ன சொல்லுவாரோ, நான் அறியேன். இருந்தபோதிலும், அவருடைய காலில் விழுந்தாவது, நான் என் சகோதரியைக் காப்பாற்ற முயல்கிறேன். அதற்குமேல் நடப்பது நடக்கட்டும். விதியை வெல்ல, — அஃதாவது கடவுளுடைய திருவுளச் சம்மதத்தை மாற்ற, — யாராலாகும்? நீங்கள் இருவரும் உள்ளே போய்ச் சுமுகிக்குத் தேறுதல் சொல்லிக்கொண்டிருங்கள். இப்போது அவள் பேச்சத்தினாலும் துயரத்தினாலும் மனமுடைந்து போயிருக்கின்றாளாதலால், அவளைத் தனியாக இருக்கும்படி விடலாகாது. நீங்கள் அவளைவிட்டு அரைக் கணமும் பிரிய

வேண்டாம், ஜாக்கிரதை!'' என்று பூதகி மீனாக்ஷியையும் காமாக்ஷியையும் நோக்கிச் சொன்னாள்.

''சரி; அம்மா! தங்களுடைய விருப்பப்படியே நடந்து கொள்ளுகிறோம். நீங்கள் எந்த விதத்திலும் காரியத்தை முடித்துக்கொண்டு வந்து சேருங்கள்'' என்று மீனாக்ஷி சொன்னாள்.

''கடவுள் தங்களுக்கு உதவி புரிவாராக!'' என்று காமாட்சி ஆசி கூறினாள்.

''நிகும்பருடைய நன்றியறிதலுள்ள வேலைக்காரனே! உன்னுடைய நற்குணத்தைப்பற்றி இந்தப் பெண்களுள் ஒருத்தி என்னிடம் மிகப் புகழ்ந்து கூறியிருக்கிறாள். உன்னைப் பற்றி நான் நிகும்பரிடம் உயர்ந்த அபிப்பிராயமே தெரிவிப்பேன். சமயம் வரும்போது உன்னை மறந்துவிடமாட்டேன் என்றும், உனக்கு என்னாலியன்ற உபகாரம் செய்ய நான் சிறிதும் பின் வாங்கேன் என்றும் நீ நிச்சயமாய் நம்பு'' என்று பிறகு பூதகி, காந்தீபனை நோக்கிக் கூறினாள்.

''அம்மா, சந்தோஷம்! நீங்கள் எந்தக் காரியத்தை நினைத்துக் குந்தி நகரம் செல்லுகிறீர்களோ அந்தக் காரியத்தைக் கடவுள் விரைவில் முடித்துவைப்பாராக! இப்போது சூழ்ந்திருக்கின்ற அபாயங்களிலிருந்து உங்கள் சகோதரி விடுதலை யடையவேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்'' என்று காந்தீபன் அனுதாபத்தோடு புகன்றான்.

''ஓ! என்னுடைய சகோதரி எல்லாத் துன்பங்களிலிருந்தும் மிக விரைவில் விடுதலை யடைவாள். அதைப்பற்றி நீ சிறிதும் கவலைப்படவேண்டாம், — சந்தேகப்படவேண்டாம்!'' என்று பூதகி சொன்னாள்.

இவ்விதம் சொல்லிவிட்டுப் பூதகி மாடியிலிருந்து கீழிறங்கினாள். மீனாக்ஷியும் காமாக்ஷியும் சுழுகி இருந்த அறைக்குள் நுழைந்தார்கள். அவ்வறையின் கதவு சாத்தப்பட்டது. காந்திபன் மீண்டும் தன்னுடைய வேலையில் கவனம் செலுத்தினான்.

அதிகாரம் — 59

சத்திரத்தின் வெளிப்புறம்

இவ்விதமான நிகழ்ச்சிகள் சத்திரத்தின் மேன்மாடியில் நிகழ்ந்திருப்ப, வெளியே வேறு சம்பவங்கள் நிகழ்ந்தன. நியாயாதிபதியும், அவரோடு வந்த போர்வீரர்களும் சாப்பிட்டுவிட்டு இளைப்பாறினார்கள். பிறகு நியாயாதிபதி சிவகனையும், கண்ணகியையும் பார்த்து உரையாடுவதற்காக மேன்மாடிக்குச் சென்றார். உடனே புறப்பட வேண்டுமென்றும், கொலைக் குற்றத்தைப்பற்றி விசாரணை செய்யவேண்டியிருத்தலால் சற்றுநேரம் தங்கியிருக்க வேண்டுமென்றும் நியாயாதிபதி சிவகனையும் கண்ணகியையும் ஏற்கனவே கேட்டுக்கொண்டிருந்தார். ஆதலால் அவர்கள் இருவரும் சத்திரத்தை விட்டுப் புறப்படாமல் நியாயாதிபதியின் வரவை எதிர் பார்த்தவர்களாகவே மேன் மாடியில் காத்திருந்தார்கள். அங்கே சென்று நியாயாதிபதி அவர்களைச் சந்தித்தார்.

"பிரயாணிகளே! உங்களை நான் இவ்விடத்தில் தங்கும்படி செய்ததற்காக விசனிக்கிறேன். இங்கே நடந்த படுகொலை அவ்விதம் செய்யும்படி என்னைக் கட்டாயப் படுத்திற்று. அது சம்பந்தமாய் இரண்டொரு

கேள்விகள் கேட்க நான் விரும்புகிறேன்'' என்று நியாயாதிபதி அவர்கள் இருவரையும் நோக்கிக் கூறினர்.

''ஐயா; தாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு எங்களுக்குத் தெரிந்தவரையில் பதில் சொல்ல நாங்கள் சித்தமாயிருக்கிறோம். இங்கே நடந்த படுகொலை எங்களுக்கு ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் ஒருங்கே விளைவித்திருக்கிறது'' என்று சீவகன் உரைத்தான்.

''தங்களுடைய பெயர் சீவகர் என்பதுதானே? நீங்கள் தானே கொங்கு தேசாதிபதியின் சேனாதிபதி?'' என்று நியாயாதிபதி சீவகனைக் கேட்டார்.

''ஆம்!'' என்று சீவகன் கூறினன்.

''தங்களோடிருக்கும் போர்வீரர் யார்? அவருடைய பெயர் யாது?'' என்று நியாயாதிபதி சீவகனை உசாவினர்.

''என்னுடைய நண்பர் யார் என்றும், அவருடைய பெயர் யாதென்றும் உண்மையில் நானே அறியேன். அவர் எக்காரணம் பற்றியோ தன்னை இன்னாரென்று காட்டிக்கொள்ளாமல் இருந்து வருகின்றார். ஆனாலும் கடந்த இரவு நடந்த படுகொலைக்கும் அவருக்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லையாதலால் அவரைப்பற்றி நாம் ஏன் விசாரிக்கவேண்டும்?'' என்று சீவகன் கூறினன்.

''சீவகரே! எப்போது ஒரு மனிதன் தன்னை யாரென்று ஒரு நியாயாதிபதியிடம் கூறுவதற்கு மறுக்கின்றானோ, அப்போதே அவன்மீது சந்தேகப்படும்படி நேரிடும். ஆதலால், இரகசியமாய் என்னிடம் தனித்து அவர் தன்னுடைய பெயரைக் கூறட்டும்.

நான் அந்த இரகசியத்தை வெளிவிடாமல் வைத்திருப் பேன்'' என்று நியாயாதிபதி சொன்னார்.

''நான் எவ்விதம் அவரை வற்புறுத்தக்கூடும்? என்னிடத்திலேயே அவர் தன் பெயரைக் கூறுவதற்கு மறுத்தார். நான் அவரைக் கூறும்படி வற்புறுத்த வில்லை. மேலும், சத்திரத்தில் தங்கியிருக்கும் பிரயாணி களைக் கட்டாயப்படுத்தி அவர்களுடைய இரகசியங் களை அகாரணமாய் அறிய முயல்வது நியாயாதிபதிக்கு ஏற்றதாமோ?'' என்று சிவகன் உசாவினான்.

''என்ன! சிவகரே, நீர் கேட்பது மிக விந்தையா யிருக்கிறதே? சத்திரத்தில் ஒரு மனிதன் கொலை செய் யப்பட்டுக் கிடக்கிறான். அதிலும், உங்களோடு சேர்ந்துவந்த ஒரு பெண் அவனைக் கொன்றிருக்கிறாள். ஆதலால், உங்களை விசாரிப்பதற்கு எனக்கதிகாரமில்லை எனக் கூறுவது சிறிதும் பொருத்தமன்று,'' என்று நியாயாதிபதி சொன்னார்.

''நியாயாதிபதியே! தாங்கள் என் வருந்துகிறீர் கள்? சிவகரைக் கோபித்துக் கொள்வதால் என்ன பிர யோஜனம்? இங்கே நடந்த படுகொலையைப்பற்றி எனக்கு ஏதுமே தெரியாது. பிங்கலனைச் சுழுகி கொன்றதற்குக் காரணமும் எனக்கு விளங்கவில்லை'' என்று கண்ணகி கூறினாள்.

''அழகிய போர் வீரரே! உம்முடைய குரலைக் கொண்டு நீர் அதி பாலியர் என்றும், குயிலினுமினிய குரலினர் என்றும் நான் தெரிந்துகொண்டேன். ஆனாலும், உம்முடைய பெயரை நான் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியமாகிறது. என்னிடத் தில் இரகசியமாக உம்முடைய பெயரைச் சொல்லும்.

நான் எக்காரணம்பற்றியும் அந்த இரகசியத்தை வெளி விடமாட்டேன்'' என்று நியாயாதிபதி சொன்னர்.

"அப்படியே ஆகட்டும்!'' என்று இரும்புக் கவச மணிந்திருந்த கண்ணகி கூறி, நியாயாதிபதியை நெருங் கிச்சென்று அவருடைய காதிற்குள் ஏதோ இரகசியமாய் ஓதினள். நியாயாதிபதியின் முகத்தில் ஒருவிதமான ஆச்சரியக் குறிப்புத் தோன்றிற்று. தன்னிடத்தில் சொல் லக்கூடாதென்று மறைத்து வைத்திருந்த ஓர் இரகசியத் தைக் கண்ணகி நியாயாதிபதியிடம் கூறியதைப் பார்த்த வுடன் சிவகனுக்குப் பேராச்சரியம் உண்டாயிற்று.

இச்சமயத்தில், சத்திரத்தின் சொந்தக்காரர் நியா யாதிபதியிடம் வந்து ஏதோ இரகசியமாக அவருடைய காதில் ஓதினர். உடனே, நியாயாதிபதி சிவகனையும், கண்ணகியையும் நோக்கிப் "பிரயாணிகளே! உங்களை நான் இவ்விதம் காக்க வைத்ததற்காக என்னை மன் னியுங்கள்'' என்று கூறிவிட்டு அவ்வறையிலிருந்து நீங்கிக் கீழிறங்கினர். சத்திரத்தின் சொந்தக்காரரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்.

நியாயாதிபதி சென்ற மாதிரியைக் கூர்ந்து கவ னித்த கண்ணகி, அவர் சென்ற பின்பு, சிவகனை நோக்கி, "நண்பரே! எனக்கு ஏதாவது அபாயம் நேரிடுமென்று நான் நினைக்கிறேன். நிகும்பனுடைய தூதர்கள் என்னைக் கண்டு பிடித்து விட்டார்கள்போல் தோன்றுகிறது. குந்தி நகரத்து அரண்மனையில் சிறை வைக்கப்பட்டிருந்த மூன்று பிரபுக்களையும் நானே விடுதலைசெய்தேன் என்பது அவர்களுக்குத் தெரிந்து விட்டது போலும். அவ்விதம் தெரிந்திருந்தால் நான் பெரிய அபாயத்தில் அகப்பட்டுக்கொண்டேன் என் பது நிச்சயந்தான்'' என்று அச்சத்துடன் கூறினள்.

"உமக்கு என்ன ஆபத்து நேர்ந்த போதிலும், நண்பரே, என் உயிரைக் கொடுத்தாவது நான் காப்பாற்றுவேன். ஆதலால் நீர் சிறிதும் அஞ்சவேண்டியதில்லை, என்னை நம்பும்" என்று சீவகன் சூளுரைத்துக் கண்ணகியைத் தேற்றினான்.

இச்சமயத்தில் அறைக் கதவு வேகமாய்த் திறக்கப்பட்டது. நியாயாதிபதியும், வேறு இராணுவ வீரர்கள் சிலரும் அறையினுள் நுழைந்தார்கள்.

"இவரைத்தானே இப்போது நீ பிடித்துக் கைதி செய்ய வேண்டுமெனச் சொல்லுகிறாய்?" என்று நியாயாதிபதி கண்ணகியைத் தன் கையினாற் சுட்டிக்காட்டி ஓர் இராணுவ வீரனை வினவினார்.

"ஆம்!" என்று அந்த இராணுவ வீரன் பதில் சொல்லுவதற்குள், இரும்புக் கவசமணிந்திருந்த கண்ணகி தன்னுடைய கத்தியை மிகுந்த ஆத்திரத்துடன் உருவிக் கையிற் பிடித்தாள். சீவகனுடைய கையிலும் வாளாயுதம் பிரகாசித்தது.

"பிரயாணிகளே! வீண் கலகம்செய்து உங்களுடைய வாளாயுதங்களை இரத்தத்தில் நனைக்காதீர்கள். சீவகரே! உம்முடைய உயர்ந்த அந்தஸ்தை உத்தேசித்து, நான் உம்மோடு இருக்கும் மற்றொரு வீரரைச் சிறிதும் தண்டிக்காமலும், அவமானப் படுத்தாமலும் கைதியாகப் பிடித்துச் செல்லுகிறேன். அவர் கைதியாய்ப் பிடிக்கப்பட்டார் என்பதை இரகசியமாகவும் வைத்துக்கொள்ளுகிறேன்" என்று நியாயாதிபதி சொன்னார்.

"ஆம்; நீங்கள் கூறுவது உண்மையே. என்னால் இந்த இடத்தில் பலர் இரத்தம் சிந்தவேண்டாம். நீங்

கள் என்னைக் கைதியாக்குவதற்கு முன்பு, நானே வலிய உங்களிடம் கைதியாகின்றேன்'' என்று கண்ணகி தைரியத்தோடு கூறினாள்.

''ஆனாலும், எதற்காக என்னைடிருக்கும் வாலிபரை நீங்கள் கைதியாக்கவேண்டும்? அவர் புரிந்த குற்றம் யாது? விவரம் சொல்லாமல், திடீரென்று பிரவேசித்து, அவரைக் கைதிசெய்வது நியாயமன்றே?'' என்று சீவகன் வினவினான். அப்போதும், அவனுடைய கையில் வாளாயுதம் பளபளவென்று மின்னிக் கொண்டுதானிருந்தது.

''அப்படியானால், சீவகரே, நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேளுங்கள். குந்தி நகரத்து அரண்மனையில் சிறைவைக்கப்பட்டிருந்த மூன்று பிரபுக்களை, யாரோ ஒருவர் விடுதலை செய்திருக்கிறார். தவிர, அவ்வரண்மனையின் ஆயுதச்சாலையிலிருந்து ஓர் இருப்புக் கவசம் காணாமற் போயிருக்கிறது. அந்தக் கவசத்தை யார் எடுத்தார்களோ, அவர்களே தான் அந்தப் பிரபுக்கள் மூவரையும், விடுதலை செய்திருக்க வேண்டுமென ஊகிக்க இடமிருக்கிறது. அவ்வரண்மனையில் காவலிருந்த காவலனைக்கண்டு அந்த மனிதன் பேசியிருக்கிறான். ஆதலால், அக் காவலன் அம்மனிதனுடைய அங்க அடையாளங்களையும், அவன் அணிந்திருந்த இருப்புக் கவசத்தின் மாதிரியையும் விவரமாய் நிகும்பருக்கு எடுத்துக் கூறினான். நிகும்பர் கோபாவேசம் கொண்டவராய் ஊர்கள்தோறும் ஆட்களனுப்பி இரும்புக் கவசம் அணிந்திருக்கும் எவரையாவது கண்டால், அவரை உடனே பிடித்துக் கைதிசெய்யும்படி கட்டளையிட்டிருக்கிறார். அவர்களுள் ஒருவன் இங்கே இப்போது வந்திருக்கிறான். அவன் மூலமாய் நான் இவ்

விவரங்களை அறிந்தேன். உம்மோடிருக்கும் வாலிபர் இரும்புக் கவசம் அணிந்திருக்கிறபடியால் அவர்தான் அந்த மூன்று பிராபுக்களையும் விடுதலை செய்திருக்க வேண்டும். ஆதலால், அவரை நான் இப்போது பிடித்துக் கைதி செய்கிறேன். என்னை நீர் தடுக்கலாகாது,—தடுப்பதற்கு உமக்கு அதிகாரமுமில்லை" என்று நியாயாதிபதி சொன்னார்.

"என்னைத் தாண்டிச் சென்றபிறகே, உம்மால் இந்த வாலிபனைக் கைதியாக்க முடியும்" என்று சீவகன் சொல்லிக்கொண்டே கண்ணகிக்கு முன்பு தான் நின்று கொண்டான்.

"என்னைத் தடுப்பதற்கு நீர் யார்? நான் என் னுடைய கடமையைச் செய்கிறேன்" என்று நியாயாதிபதி கோபத்தோடு கூறினார்.

"அப்படியா? உம்மைத் தடுப்பதற்கு எனக்கு அதிகார மிருக்கிறது" என்று கூறிச் சீவகன் தன்னுடைய கத்தியைத் தூக்கிப்பிடித்தான். அப்போது நியாயாதிபதியுடைய கண்களும், மற்றொரு இராணுவ வீரன் கண்களும் சீவகனுடைய கைவிரலில் ஒளிர்ந்து கொண்டிருந்த கணையாழியை நோக்கின. அவர்கள் இருவரும் ஸ்தம்பித்து நின்றார்கள்.

"இப்போது நாம் என்ன செய்கிறது?" என்று இராணுவ வீரன் இரகசியமாய் நியாயாதிபதியைக் கேட்டான்.

"என்ன செய்கிறதாவது!" என்று நியாயாதிபதி ஆச்சரியத்துடன் கூவி, "மற்ற எல்லா உத்தரவுகளைக் காட்டிலும் சீவகர் அணிந்திருக்கும் மோதிரத்தினுடைய உத்தரவுதான் நமக்குப்பெரிது. ஆதலால் அவர்

சொல்லுகிறபடி நாம் செய்யவேண்டுவதுதான்'' என்று மீண்டும் தொடர்ந்து மொழிந்தார்.

''என்னுடைய அபிப்பிராயமும் அதுவே. இரும்புக் கவசம் அணிந்திருக்கும் வாலிபனை நாம் கைதி செய்தல் கூடாது'' என்று இராணுவ வீரன் இணங்கிப் பேசினான்.

''சிவகரே! இரும்புக் கவசம் அணிந்துள்ள இந்த வாலிபரைக் கைதி செய்யக் கூடாது என்று தாங்கள் கட்டளை பிடுகிறீர்களா, என்ன? நிகும்பருக்கு இவர் பெருந் தீங்கு இழைத்தவராவரே?'' என்று நியாயாதிபதி உசாவினர்.

''ஆம்; கூடாது என்றுதான் நான் சொல்லுகிறேன். நீங்கள் அவரைப் பிடித்தால் இறுதிவரையில் யுத்தம் செய்கிறது என்று தீர்மானித்திருந்த நான் வேறு எவ்விதம் சொல்லுவேன்?'' என்று சிவகன் கழறினர்.

''தாங்கள் நன்றாய் ஆலோசித்துச் சொல்லுகிறீர்களா?'' என்று நியாயாதிபதி கேட்டார்.

''ஓ! தீர ஆலோசித்து விட்டேன். ஒரு முறை கொண்ட அபிப்பிராயத்தை நான் மறுபடி மாற்றும் வழக்கமில்லை'' என்று சிவகன் சொன்னான்.

''சரி; எல்லாப் பொறுப்புகளையும் நான் தங்கள் பால் விட்டு விட்டேன். இனி, நீங்கள் பிரயாணப்படலாம். ஏனெனில், தங்களுடைய கை விரலிலிருக்கும் மோதிரம் எத்தகைய காரியங்களையும் செய்ய முடியாமல் எங்களைத் தடுத்து விட்டது. ஆதலால், நீங்கள் ஏன் வீணாக் காத்திருக்கவேண்டும்?'' என்று நியாயாதிபதி சிவகனை நோக்கிக் கூறிவிட்டு அப்புறம்

செல்லுவதற்காக இரண்டொரு அடிகள் எடுத்து வைத்தார். அச்சமயத்தில் ஒரு வேலைக்காரன் அவரிடம் வந்து "பூதகியம்மாள் தன் சகோதரியைக் கண்டு பேசிவிட்டுப்போய்விட்டார்கள். ஆதலால், இனி நாம் சுமுகியை அழைத்துச் செல்லலாம்" என்று சொன்னான்.

"என்ன! பூதகியா?" என்று சிவகன் ஆச்சரியத்தோடு உசாவினான். அப்போது அவன் முகத்தில் உண்டான மாறுதலையும், கண்களிற் காணப்பட்ட பிரகாசத்தையும் யாரே வருணிக்க வல்லார்? "பூதகி இங்கே வந்தாளா? உண்மைதானா?" என்று மீண்டும் அவன் அதிசயத்தோடு வினவினான்.

"ஆம்; உண்மைதான்! அந்த அம்மையார் இங்கே வந்து விட்டுப்போய் இன்னும் பத்து நிமிஷங்கள்கூட ஆகவில்லை" என்று வேலைக்காரன் பதில் பகர்ந்தான்.

"ஐயா, நான் குற்றவாளியாகிய சுமுகியைப் பார்க்கவேண்டும்; அவளோடு சிறிது நேரம் தனித்துப் பேசவேண்டும். தாங்கள் இதற்கு உத்தரவு கொடுக்க வேண்டும். தவிர, என்னைப் பார்ப்பதற்கு அவளுக்கு விருப்பந்தானா என்பதையும் தாங்கள் தயைசெய்து அறிந்து சொல்லவேண்டும். ஏனெனில், அவளுடைய விருப்பத்தைத் தெரிந்துகொண்டு பிறகு அவளைப் பார்ப்பதுதான் நலம் என்று எனக்குத் தோன்றுகிறது" எனச் சிவகன் நியாயாதிபதியிடம் கூறினான்.

"சரி; அப்படியே செய்கிறேன். நானே முதலில் சுமுகி யிருக்கும் அறைக்குச் சென்று, அவளை நேரிலேயே கண்டு, உங்களைப் பார்ப்பதற்கு அவள் இப்போது விரும்புகிறாளா என்பதைத் தெரிந்து வருகிறேன். அவள் இணங்கினால், நீங்கள் அவளைப் போய்ப்

பார்த்து அவளுடன் சம்பாஷிக்கலாம்" என்று நியாயாதிபதி சொல்லிவிட்டுச் சென்றார். மற்றொரு இராணுவ வீரர் மாத்திரம் சிவகனும், கண்ணகியும் இருந்த அறையில் இருந்தார்.

பூதகி வந்துவிட்டுப்போனாள் என்னும் செய்தியைக் கேட்டவுடன், சிவகன் மனத்தில் ஒருவகையான ஆனந்தமும், வருத்தமும் கலந்து தோன்றின. இரும்புக் கவச மணிந்திருந்த கண்ணகி சிவகனைக் கூர்ந்து கவனித்தாள். அவனுடைய முகத்தில் ஒருவகையான துயரம், பொறுமையோடு கலந்து தோன்றிற்று. ஒருவரை யொருவர் இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பார்வையில் எவ்வளவோ பொருள்கள் அடங்கியிருந்தன.

இச்சமயத்தில் நியாயாதிபதி மீனாக்ஷியை ஒரு கரத்திலும் காமாக்ஷியை மற்றொரு கரத்திலும் பிடித்து இழுத்துக்கொண்டு மிருந்த கோபத்துடன் சிவகனிருந்த அறைக்குள் நுழைந்தார். ஆனாலும் அந்த இரண்டு பெண்களுடைய முகத்திலும் வெற்றிக் குறியால் ஏற்பட்ட சந்தோஷம் புலப்பட்டுத் தோன்றியது. அவர்கள் தங்களுடைய நிலைமையைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படவில்லை.

"என்ன! இவர்களை என் பிடித்து வந்தீர்கள்?" என்று இராணுவ வீரன் நியாயாதிபதியை வினவினான். சிவகனோ உண்மை தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தான்.

"இவர்கள் இருவரையும் பிடித்துக் கைதிசெய்!— சுமுகி ஓடிப்போய்விட்டாள்!— படுகொலை புரிந்த பாதகியாகிய அவள் நம் எல்லோரையும் ஏமாற்றிவிட்டு

எவ்விதமாகவோ தப்பிப்போய்விட்டாள். இவர்களிருவரும் அவளுக்கு உதவியாயிருந்திருக்கிறார்கள்!" என்று நியாயாதிபதி மிகுந்த கோபத்துடன் கூறினர்.

அதிகாரம் — 60

மீனாக்ஷியும் காமாக்ஷியும்

"சுமுகி ஓடிப்போய்விட்டாள்! அவள் நியாயாதிபதியையும் மற்றுமுள்ள போர் வீரர்களையும் ஏமாற்றிவிட்டாள்!" என்னும் செய்தி சத்திரத்திலிருந்த எல்லோருக்கும் பேராச்சரியத்தை விளைவித்தது. ஜனங்கள் அதிசயக் குறிப்பும் ஆச்சரியக் குறிப்பும் ஒருங்கு கொண்டவர்களாய்ப் பற்பல விதமாய்ப் பேசிக்கொண்டார்கள். கண்ணகி கொண்ட ஆச்சரியத்திற்கு ஓர் எல்லையில்லை. சிவகணை வரைகடந்த ஆச்சரியத்தில் மட்டுமன்று; ஆழ்ந்த ஆலோசனையிலும் அழுந்தினள். ஏனெனில், இம்மாதிரியான செய்தி வரக்கூடுமென்று அவள் ஏற்கனவே எதிர்பார்த்தாள்.

"குற்றவாளி எவ்விதம் இக்கட்டிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டுபோனாள் என்னும் விஷயம் நன்றாய் விசாரிக்கப்படவேண்டும். அவளுடைய தோழியர்களாகிய இந்த இரண்டு பெண்களும் அவளுக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்பது நிச்சயம். இவர்கள் உண்மையைக் கூறுவிடில் இவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும்" என்று நியாயாதிபதி, தன் பக்கத்திலிருந்த இராணுவ வீரரை நோக்கிக் கோபத்துடன் கூறினர்.

"அஃதிருக்கட்டும்; ஓடிப்போன குற்றவாளியைப் பிடிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்தீர்களா?" என்று இராணுவவீரன் நியாயாதிபதியைக் கேட்டான்.

"இல்லை; குற்றவாளி திடீரென்று மறைந்துவிட்டதானது, என் மூளையைக் கலக்கிவிட்டது. எனக்கு ஏதுமே தோன்றவில்லை. சிறிதும் எதிர்பாராத ஒரு சம்பவம் திடீரென்று நிகழ்ந்தால், மனிதர்கள் எவ்விதம் அறிவிழந்து ஸ்தம்பித்து நிற்பார்களோ அவ்விதமே நானும் நின்றேன்" என்று நியாயாதிபதி கூறினர்.

"சரி; அப்படியானால் நான் கீழே சென்று நம் முடைய போர் வீரர்களிற் சிலரை நாலாபுறமும் அனுப்பி அவளைக் கண்டுபிடித்துக் கொண்டுவரச் செய்கிறேன்" என்று இராணுவ வீரன் சொன்னான்.

"சரி; அப்படியே செய்! முதலில், நீ கீழே சென்றவுடன், குற்றவாளியிருந்த அறை வாயிலிற் காவல் புரிந்துகொண்டிருந்த இரண்டு காவலர்களையும் இங்கே வரச் சொல். அவர்களை நான் விசாரிக்கவேண்டும். குற்றவாளி ஓடிப்போனதற்கு அவர்களும் உடந்தையாயிருந்தார்களோ எனக் கேட்கவேண்டும்" என்று நியாயாதிபதி சொன்னார்.

"நல்லது; அவர்களை வரச் சொல்லுகிறேன்" என்று இராணுவ வீரன் சொல்லிவிட்டுக் கீழே சென்றான். சிறிது நேரம் வரையில் அறை முழுதும் அமைதியுற்றிருந்தது.

"பெண்களே! நீங்கள் உங்கள் எஜமானி எவ்விதம் தப்பித்துச் சென்றாள் என்பதைச் சொல்லமாட்டீர்களா? இவ்விதம் நீங்கள் மௌனம் சாதிப்பதால், உங்களுடைய குற்றம் அதிகமாகிறதென்பதையும் உங்

களுக்கு விதிக்கப்படும் தண்டனை அதிகமாகும் என்ப தையும் நீங்கள் அறிந்துகொள்ளவில்லையோ!'' என்று நியாயாதிபதி, இராணுவ வீரன் கீழே சென்ற பிறகு, மீனாக்ஷியையும் காமாக்ஷியையும் நோக்கிக் கூறினார்.

''தங்களுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியக் கூடா தென்னும் எண்ணத்தினால் நாங்கள் இவ்விதம் மௌன மாதிக்கவில்லை'' என்று மீனாக்ஷி கூறினாள்.

''அல்லது, இப்படுகொலையை அலட்சியமாகவா வது, நியாயமாகவாவது கருதி நாங்கள் பேசாதிருக் கின்றோம் என்று தாங்கள் நினைக்க வேண்டாம்'' என்று காமாக்ஷி மொழிந்தாள்.

''அப்படியானால் உங்கள் எஜமானி பிங்கலனைக் கொன்றதற்குக் காரணம் யாதென்பதை நீங்கள் அறி வீர்களோ?'' என்று நியாயாதிபதி அவ்விரண்டு பெண் களையும் நோக்கிக் கேட்டார்.

''காரணம் யாதென்பதை நாங்கள் அறியோம். ஆனால் எங்கள் எஜமானியினுடைய குணாதிசயங்களை நாங்கள் நன்கறிவோம். அவள் ஜீவகாருண்ணிய ஒழுக் கமும், தயாளகுணமும் நிரம்ப வாய்ந்தவள். ஓரறி வுயிர்க்கும் உறுதியாரோபமும் இயல்புடையவள். அப் படிப்பட்டவள் இக்கொடிய செயலைப் புரிந்ததற்கு ஏதாவது தகுந்த காரணம் இருத்தல் வேண்டும். பிங் கலன் ஏதோ பெருந்தீங்கு அவளுக்கு இழைத்திருக் கிறான். அதனாற்றான், அவள் அவனைக் கொன்றிருக் கிறாள்'' என்று மீனாக்ஷி புகன்றாள்.

இச்சமயத்தில், சத்திரத்தின் வெளிப்புறத்தில் காவ லிருந்த குதிரைவீரர்கள் இருவரும், சுமுகி தங்கியிருந்த

அறைவாயிலில் காவல்புரிந்த காவலர் இருவரும் நியாயாதிபதி மூன்னிலையில் பணிவுடன் வந்து நின்றார்கள்.

நியாயாதிபதி அவர்களை விசாரிக்கலாயினர். சத்திரத்தின் வெளிப்புறத்திருந்த குதிரை வீரர்கள் தங்கட்கு ஏதுமே தெரியாதெனக் கூறிவிட்டார்கள். ஆகவே, அவர்களைப் போகும்படி நியாயாதிபதி பணித்துவிட்டு, சுமுகியிருந்த அறைவாயிலிற் காவல் புரிந்த காவலர்களை விசாரிக்கலானார்.

தேவகி பூதகி என்னும் இரண்டு சகோதரிகளைப் பற்றி மீனாக்ஷி தன்னிடம் பிரஸ்தாபித்தாள் என்றும், தன்னுடைய எஜமானியின் உருவத்தை நன்றாய்ப் பார்க்கும்படி அவள் வேண்டுமென்றே கதவைத்திறந்து காட்டினாள் என்றும், தான் காவல் புரிந்து கொண்டிருந்த போது பூதகி அறையினுள் நுழையவில்லை என்றும், ஒருசமயம் மீனாக்ஷியோடு தான் வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது தனக்குத் தெரியாமலே பூதகி அறையினுள் சென்றாளா அல்லது இல்லையா என்பதைப் பற்றி நிச்சயமாய்க் கூற முடியாதென்றும் முதற்காவலன் சொன்னான். மீனாக்ஷி தன்னிடம் தேவகி பூதகி என்னும் சகோதரிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தாள் என்றும், அவ்விதம் பேசிக்கொண்டிருந்தபோது பூதகி அறைக்குள் இருக்கிறாள் என்று அவள் தன்னிடம் சொன்னாளென்றும், தவிர பூதகி அறைக்குள் பிரவேசித்ததை முதற்காவலன் பார்த்துக்கொண்டிருந்தும் அச்செய்தியைத் தன்னிடம் சொல்லாமல் அவன் இருந்ததற்காக ஆச்சரியப்பட்டாள் என்றும், தான் காவல் புரிந்துகொண்டிருந்தபோது சுமுகி வெளியே செல்லவில்லை என்றும் இரண்டாம் காவலனாகிய காந்தீபன் கூறினான்.

பிறகு, சத்திரத்தின் சொந்தக்காரரும் அவருடைய மனைவியும் விசாரிக்கப்பட்டார்கள். மாளிகையின் பின்புறமுள்ள மாடிவழியாய்ப் பூதகி இறங்கிச் சென்றதைத் தான் தற்செயலாய்ப் பார்க்க நேர்ந்ததென்றும், மூன்றொரு முறை கிரும்பனுடன் அவள் இருந்ததை, தான் பார்த்திருந்தபடியால் அவளை இன்னாரென்று அறிந்துகொள்ளத் தனக்கு ஏதுவுண்டாயிற் றென்றும், அவளைக் கண்டவுடன் தான் மரியாதைக் குறிப்பாகக் கைகூப்பவே அவள் புன் சிரிப்புடன் தலையசைத்து விட்டு மாளிகையின் பின்புறமுள்ள பெரிய தோட்டத்தின் வழியாய் வெளியே சென்றுவிட்டாள் என்றும், இவைகளைத் தவிர வேறு ஒன்றும் தனக்குத் தெரியாதென்றும் சத்திரத்தின் சொந்தக்காரர் சொன்னார். இவ்விஷயங்களைத் தன்னுடைய கணவன் மூலமாய்த் தான் ஏற்கனவே அறிந்துகொண்டதாகவும், பூதகி ஒருவருக்கும் தெரியாமல் மாளிகைக்குள் பிரவேசித்ததும் பிறகு கொல்லைப்புறத்தின் வழியாய் வெளியே சென்றதும் தனக்குப் பேராச்சரியத்தை விளைவித்தன வென்றும் சத்திரத்தின் சொந்தக்காரி கூறினாள்.

"இவ்வளவு தூரம் விசாரணை செய்தும் பலன் ஒன்றும் இல்லையே! முதலில் நாம் எவ்வளவு அறியாமையில் அழுந்தியிருந்தோமோ, அவ்வளவு அறியாமையில் இப்போதும் அழுந்தியிருக்கிறோம்" என்று சத்திரத்தின் சொந்தக்காரர் நியாயாதிபதியை நோக்கிக் கூறினார்.

"ஆம்; இப்படிகொலையைப் பற்றிய உண்மையை அறிந்துகொள்ள நம்மால் முடியவில்லை. இந்த இரண்டு காவலர்களும் சுமுகியிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு, அவளுக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்" என நியாயாதிபதி கூறினார்.

"மீனாக்ஷி! நான் குற்ற மற்றவன் என்பதையும், எனக்கு ஏதுமே தெரியா தென்பதையும் நீ அறிவா யன்றோ?" என்று காந்திபன் பதைபதைத்துக் கூறினன்.

"நானும் அவ்விதந்தான் என்பதற்கு நீயே சாட்சி" என்று முதற் காவலன் கூவினன்.

"ஐயா, நியாயாதிபதியே! இந்த இரண்டு காவ லர்களும் எத்தகைய குற்றமும் புரியவில்லை. அவர்கள் லஞ்சம் வாங்கவுமில்லை; எங்கள் எஜமானிக்கு உதவி செய்யவுமில்லை! அவர்களோடு நான் புரிந்த சம்பா ஷணை வேண்டுமென்றே முன்யோசனையுடன் என்னால் கருதிச் செய்யப்பட்டதாகும். என் எஜமானியைத் தப்பு விப்பதற்காக நானே அவ்விதம் செய்தேன். ஆதலால் குற்றம் புரிந்தவள் நானே! அவர்கள்மீது நீங்கள் சிறி தும் சந்தேகங் கொள்ளவேண்டாம்," என்று மீனாக்ஷி மிகுந்த தைரியத்தோடு கூறினள்.

"சகோதரியே! நீ மாத்திரமன்று; நானும் குற்ற வாளி என்பதை நியாயாதிபதி அறிந்து கொள்ளட் டும்! ஏனெனில், உன்னோடு நானும் சேர்ந்துகொண்டு சூழ்ச்சி செய்தேனன்றோ?" என்றாள் கோமாக்ஷி.

இவ்விதம் பேசியபோது அந்த இரண்டு பெண்க ளுடைய கண்களி லிருந்தும், நீர்த்துளிகள் பனித்துளி கள்போல் உதிர்ந்து அவர்கள் கன்னங்கள் வழியாய் ஓடின.

"ஐயா, இந்தப் பரிதாபகரமான காட்சியைப் பாருங்கள். இந்த அரிவையர் இருவரும் ஏது மறியாத சிறுமிகள். இவர்கள் புரிந்த குற்றம் தங்கள் எஜமானி யிடம் மிகுந்த அன்பும் விசுவாசமும் பாராட்டியது தான். அதற்காக இவர்களைத் தண்டிக்க உமக்கு மனம்

வருமா?'' என்று சிவகன் மிகுந்த பச்சாத்தாபம் கொண்டவன்போல் நியாயாதிபதியிடம் பேசினான்.

''சிவகரே, இவர்களைப் பார்த்தால் என் மனம் அழல்வாய்ப்பட்ட மெழுகுபோல் உருகுகின்றது. ஆனாலும் நான் என்ன செய்யலாம். இவர்கள் புரிந்த குற்றம் மகா கொடியது.

''அஃதாவது, கொலைக்குற்றம் புரிந்தவள் ஓடிப்போவதற்கு இவர்கள் உடந்தையாயிருந்திருக்கிறார்கள் நாளை நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவனாயிருக்கிறேன். என் செய்யலாம்'' என்று நியாயாதிபதி மிகுந்த பரிவுடன் கூறினார்.

இச்சமயத்தில் சிவகன் தன் விரலில் அணிந்திருந்த மோதிரத்தை நியாயாதிபதி முன்பு காட்டாமற் காட்டினான். அந்த மோதிரத்தைக் கண்டதும் நியாயாதிபதி ஸ்தம்பித்து நின்றார். சிவகன் சொல்லுகிறபடி செய்ய வேண்டுவது தம்முடைய கடமை என்பதை அறிந்து கொண்டார்.

''மாட்சிமை தங்கிய பிரபுவே!'' என்று சிவகனை — அவனுடைய விரலில் நிகும்பனுடைய மூத்திரைக் கனையாழி நட்சத்திரம்போல ஒளிர்வதைக் கண்டவுடன் நியாயாதிபதி மரியாதையுடன் — விளித்து ''நீங்கள் இப்பெண்கள் சம்பந்தமாய் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களோ?'' என்று அன்புடன் உசாவினார்.

''ஆம்; இந்தப் பெண்கள் இருவரும் அறியாமையாற் புரிந்த குற்றத்தை நீங்கள் மன்னித்திடுதல் வேண்டுமென்பது என் விருப்பம்'' என்று சிவகன் சொன்னான்.

''சரி; தாங்கள் இவ்வளவுதூரம் இப்பெண்களுக்காகப் பரிந்து பேசுவதால் நான் அவர்களை மன்னித்து

விடுகிறேன். ஆனாலும் அவர்கள் அபராதமாக இரண்டு பவுன் செலுத்த வேண்டும்'' என்று நியாயாதிபதி கூறினார்.

''நல்லது ; அவ்விதமே ஆகட்டும்! அவர்களுக்காக நான் நான்கு பவுன் கொடுக்கிறேன்'' என்று சிவகன் கூறி, தன் சட்டைப் பையிலிருந்து நான்கு பவுன்களை எடுத்து நியாயாதிபதியிடம் கொடுத்தான்.

நியாயாதிபதி அவைகளைப் பெற்றுக்கொண்டு அவ்விடத்திலிருந்து நீங்கினார். சத்திரத்தின் சொந்தக்காரரும் அவருடைய மனைவியும், காவலர்களும் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள். சிவகன், கண்ணகி, மீனாக்ஷி, காமாக்ஷி, இவர்கள் நால்வரும் மாத்திரம் ஓர் அறையினுள் சிறிதுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

''பெண்களே! இப்போது நீங்கள் எங்கே போவதாய் உத்தேசித்திருக்கிறீர்கள்? உங்களுடைய எஜமானி உங்களுக்கு என்ன கட்டளையிட்டுச் சென்றாள்?'' என்று சிவகன் மீனாக்ஷியையும், காமாக்ஷியையும் நோக்கிக் கேட்டான்.

''தங்களோடு நாங்களும் வரவேண்டியவர்களே! எங்களுடைய எஜமானி எங்களுக்கு அவ்விதந்தான் உத்தரவு செய்துவிட்டுப் போனாள். இன்னும் இருபத்து நான்குமணி நேரத்திற்குள் எங்களுக்கு ஏதாவது செய்தி வரும்; தங்களுக்கும் ஏதாவது சமாசாரம் வரக்கூடும்'' என்று மீனாக்ஷி பதில் பகர்ந்தாள்.

''அப்படியானால், நாம் பிரயாணப் படவேண்டியது அவசியமாகும். நீங்கள் பிரயாணத்திற்குத் தயாராயிருங்கள்'' என்று சிவகன் சொன்னான்.

பிறகு நால்வரும் சாப்பிட்டுவிட்டுச் சத்திரத்தின் சொந்தக்காரரிடம் விடை பெற்றுக்கொண்டு பிரயாணத்தைத் தொடர்ந்து செலுத்தலானார்கள். பிங்கலனுடைய மரணத்தால் பிரயாணம் நெடுநேரம் தடைப்பட்டு விட்டபடியால், அந்தக் காலதாமதத்தை ஈடு செய்வதற்காக நால்வரும் தங்கள் குதிரைகளை மிகுந்த வேகத்துடன் ஓட்டலானார்கள். இவர்கள் புறப்பட்டபோது பகல் மூன்றுமணி இருக்கும். இரவு ஒன்பது மணி வரையில் பிரயாணம் செய்துவிட்டுப் பிறகு வழியிலிருந்த மற்றொரு சத்திரத்தில் அன்றிரவு தங்கினார்கள்.

முதலிற் றங்கிய சத்திரத்தில் சேர்ந்த படுகொலையால் மனமும் பிரயாணத்தினால் உடம்பும் சிவகனுக்குப் பெரிதும் அயர்வுற் றிருந்தனவாயினும், அன்றிரவு முழுதும் அவனுக்கு நித்திரை வரவே இல்லை. சுமுகியினுடைய செயல்கள் கெட்ட ஆவேசங்களைப் போல் அவன் மனக் கண்ணுக்குத் தோன்றிக் கொண்டே இருந்தன. தவிர, கடந்த சில தினங்களுக்குள் நிகழ்ந்த பல அதிசயமான சம்பவங்கள் அவன் நினைவுக்கு வந்தன. பூதகி, தான் பாண்டிநாட்டுக்குச் செல்லுவதாக முன்பு சிவகனிடம் கூறியதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அவ்விதம் சொல்லிச் சென்றவள் திடீரென்று சத்திரத்திற்குவந்து சுமுகியுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு மறைந்து போனது சிவகனுக்குப் பேராச்சரியத்தையும் சந்தேகத்தையும் விளைவித்தது. தன்னிடம் உண்மையைக் கூறுமல் அவள் இருந்ததற்குக் காரணம் யாதென் அவன் சிந்தித்தான். அவளைச் சத்திரத்தில் சந்திக்கக் கூடும் என்று சுமுகியும் அவனிடம் கூறவில்லை. பூதகியிடமிருந்து எவ்விதமான செய்தியும் தனக்கு எட்டவில்லை என்றும், அவள் எந்

கிருக்கிறாள் என்றும் தனக்குத் தெரியாதென்றும் சுமுகி சிவகனிடம் முதலிற் கூறியிருந்தாள். இவ்விஷயமும் அவனுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. சிவகன் இத் தகைய பல எண்ணங்களில் ஆழ்ந்தவனாய்ப் படித்துக் கொண்டிருக்க சமயத்தில் யாரோ தன் பக்கத்தில் வந்து தன்னைத் தொடுவதாக உணர்ந்தான். திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான், — பூதகி தன் பக்கத்தில் நிற்பதைக் கண்டான்!

அதிகாரம் - 61

கருநிற மங்கை

ஆம், — வாஸ்தவந்தான்! அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கு வெளிச்சத்திலில், தன் பக்கத்தில் நிற்பவள் பூதகிதான் என்பதைச் சிவகன் சிறிதும் சந்தேகமற அறிந்து கொண்டான்.

அச்சமயத்தில் அவள் பேரெழிலுடன் விளங்கினதாகச் சிவகனுடைய மனோபாவக உணர்ச்சிக்குப் புலப்பட்டது. அவன் அவளைக் கண்டவுடன் ஏதும் தோன்றுமல் சிறிதுநேரம் ஸ்தம்பித்திருந்தான். உண்மையில் அவள் பேரழகு அவனை அவளுக்கு அடிமையாக்கி விட்டது.

அவள் பிறை நுதலுக்கு மேலே, தலைமுழுதும் சுருண்டு சுருண்டு காணப்பட்ட செங்கிறக் கூந்தலைப் பிறையணி இறைவன்றன் செஞ்சடைக்கு ஒப்பிடலாம். பால்போல் வெளுத்த அவள் வெள்விழிக்கு நடுவே கருவிழிகள் சேலெனப் பிறழ்ந்து கொண்டிருந்த அழகினைப்

பாற்கடலிற் பள்ளிகொண்ட திருமாலின் அசைவுக்கு ஒப்பிடலாம். ஆடவர் மதிக்கும் அவள் முகத்தை மதி முகத்திற்கே ஒப்பிடலாம். முதல் முதல் நிகும்ப னுடைய கூடாரத்தில் சிவகன் அவளைச் சந்தித்தபோது அவள் எவ்விதமான உடை அணிந்திருந்தாளோ அவ் விதமான உடையே இப்போதும் அணிந்திருந்தாள். அவள் முகத்தில் புன் சிரிப்பும் வசீகரமும் தவழ்ந்து கொண்டிருந்தன.

ஆ! பூதகியின் அழகிய திருவுருவத்தை முற்றும் வர்ணிக்க வேண்டுமென நாம் விரும்பும்போது, அவள் கண்களில் தோன்றிய பிரகாசத்தை வாசகர்களுக்கு அப்படியே அமைத்துக் காட்டவேண்டு மென நாம் முயலும்போது, நம்முடைய மனோபாவக உணர்ச்சி மழுங்குகிறது; மூளை கலங்குகிறது; அறிவு தடுமாறு கிறது! இவைகளை எல்லாம் ஒருவாறு சரியான நிலை மையில் அமைத்துக்கொண்டு எழுதலாம் என்று நினைத் தாலோ, பாஷையில் போதுமான சொற்கள் இல்லா மையால், சூரியனைப் பிடிப்பதற்காகப் பறந்து மேலே செல்லும் கழுகு தன் முயற்சி கைகூடாமல் கதிரவனின் வெஞ்சுடரால் தகிக்கப்பட்டுக் கரிந்து கீழே விழுதல் போல, நமது எழுதுகோல் நழுவிக் கீழே விழுகின்றது; இத்தகைய பேரழகும் பெருவனப்புமுடைய பூதகி, சிவகன் சிறிதும் எதிர்பாராதவிதமாய், நடுராத்திரி யில் அவன் படுக்கை யறைக்குள் திடீரென்று பிரவே சித்து அவன் பக்கத்தில் நின்றால், அவனுக்குப் பேராச் சரிய முண்டாகாதா? ஆதலால், அவன் இவ்விதம் ஸ்தம்பித்து நின்றது ஓர் ஆச்சரியமன்று.

"என்னுடைய நண்பரே! — தோழரே! — தலை வரே! — இரட்சகரே! தயை செய்து என்னை இன்னொரு

முறை அன்புடன் நோக்கலாகாதா? என்னோடு ஒரு வார்த்தையாவது பேசலாகாதா?" என்று சிறிது நேரங் கழித்துப் பூதகி சீவகனை நோக்கி மிகுந்த அன்புடன் வினவி, அவனுடைய கைகளை எடுத்துத் தன் கண்களில் வைத்துக் கொண்டாள்.

"ஆ! பூதகியாகிய நீயா என் முன் நிற்கின்றாய்? நிச்சயமாய் நீதானா? அல்லது நான் ஏதாவது கனவு காண்கின்றேனா? என்னுடைய கண்கள் என்னை ஏமாற்று கின்றனவோ? இல்லை; இல்லை! உண்மையிலேயே பூத கியாகிய நீ என் முன் நிற்கின்றாய்! பூதகியே,— அழகும் அன்பும் இனிது நிறைந்த பூதகியே! நீ எப் படி இவ்விடத்திற்கு வந்தாய்? ஏன் வந்தாய்? உன்னை நான் பார்க்கக்கூடாதென்று எமன் கூறினானே? அந்த நிபந்தனைக்கு மாறாக நீ ஏன் வந்தாய்? அந்த நிபந் தனையை அவன் ரத்து செய்து விட்டானா? உன்னுடைய சொந்த தேசமாகிய பாண்டி நாட்டுக்குப் போவதாக நீ என்னிடம் கூறினாயே? அவ்வித மிருக்க நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று சீவகன் பூதகியைக் கேட் டான்.

"அன்பரே! நீர் விவரமாய் ஒன்றன்பின் ஒன்றாய்க் கேட்கும் வினாக்களுக்குப் பதில் சொல்லுவதற்குப் போதிய அவகாசம் வேண்டும். அவ்வினாக்களுக்குப் பதில் கூறுவதற்கு முன்பு நான் ஒன்று சொல்ல விரும்பு கிறேன். ஆஃதாவது இந்த நடுராத்திரியில் திடீரென்று பிரசவித்து உம்மைத் தூக்கத்தினின்றும் எழுப்பிய தற்காக என்னை நீர் மன்னித்தல் வேண்டும் என்பது தான்" என்று பூதகி மிகுந்த பணிவுடன் புகன்றாள்.

"பூதகியே! இவ்விதமாக நீயும் கேட்கலாமோ? நான் எதிர் பாராதிருந்தும் நீ திடீரென்று வந்து உன்னு

டையதிவ்விய தரிசனத்தால் எனக்குப் பெரும் மகிழ்ச்சியை விளைவித்ததால் நானன்றே உனக்கு நன்றி செலுத்தவேண்டும்! ஆ! உன்னுடைய திவ்விய தரிசனம் என் ஆன்மாவினுக்குள் இன்பமாகிய அமிழ்தத்தை மழைபோல் வருஷித்திருக்கிறது என்பதை நீ அறியாயா?" என்று சிவகன் உற்சாகத்தோடு பேசினான்.

"அப்படியானால், இதற்கு முன்பு ஒருமுறை சந்தித்தபோது என்னைப்பற்றி எவ்விதமான அபிப்பிராயம் கொண்டிருந்தீரோ, அவ்விதமான அபிப்பிராயமே இப்போதும் கொண்டிருக்கிறீர் என்பதிற் சந்தேகமில்லை. அன்றிரவு சொன்னதெல்லாம் உம்முடைய ஞாபகத்தில் இருக்கிறதா? நட்பைக் காட்டிலும் பலமான உணர்ச்சியும், சகோதர வாஞ்சையைக் காட்டிலும் அதிகமான அன்பும் பாராட்டுவதாக வாக்குத்தத்தம் செய்தீரே, ஞாபகமிருக்கிறதா?" என்று பூதகி உசாவினாள்.

"ஓ! ஞாபகமிருக்கிறது! என்னுடைய வாயிலிருந்து வந்த வார்த்தைகளில் ஒன்றைக்கூட நான் மறக்கவில்லை! இணையற்ற அழகும் தடுக்கமுடியாத வசீகரத்தன்மையும் வாய்ந்தவளாக நீ இருப்பதால் அவைகளில் ஈடுபட்டு நான் பற்பல விதமாய்ப் பிதற்றியிருக்கிறேன். அவைகளை மீண்டும் எடுத்துக்கூற நான் விரும்பவில்லை" என்று சிவகன் சொன்னான்.

"அப்படியானால் என்மீது உண்மையிலேயே நீர் காதல் கொண்டிருக்கின்றீரா, என்ன?" என்று சிறிது நேரங்கழித்துப் பூதகி வினவினாள். அவ்விதம் வினவிய போது அவள் தன் குரலைத் தாழ்த்திக்கொண்டு மூணு மூணுவென்று வினவினாள். ஆதலால் அச்சமயத்தில் அவளுடைய குரல் மிருதுவாயும், பருக்கைக் கற்களில்

மெதுவாக ஓடும் ஆற்றொழியைப்போல் இன்பகரமாயும் இருந்தது. அவளுடைய பார்வையோ சிவகன்மீது அழுந்தியிருந்தது.

"இவ்விதம் நீ சந்தேகிக்கலாமா? இதற்குமுன் எப்போதாவது நீ சந்தேகித்திருக்கிறாயா?" என்று சிவகன், பூதகியின் அழகில் மயங்கினவனுய்த் தான் பேசுவது யாதென அறியாமற் பேசினன்.

"இல்லை, — என்னை நீர் காதலிக்கின்றீர், — அஃதாவது என்னுடைய கருநிற உடம்பையும் செந்நிறக் கூந்தலையும் நீர் பெரிதும் விரும்புகின்றீர்,—என்பதில் நான் சந்தேகம் கொள்ளவில்லை" என்று பூதகி கூறி சிறிது நேரம் அசைவற்றுப் பிரதிமைபோல் நின்றாள். சிவகனும் அவளை விழித்த கண் இமையாமல் நோக்கினன்.

"ஆம்; நீர் என்னை, — நான் கரிய நிறமுடையவளா யிருந்தும், செம்பட்டை மயிருடையவளா யிருந்தும்,— காதலிக்கின்றீர்! ஆ! காதலின் குருட்டுத்தன்மை எவ்வளவு விந்தையாயும் விசித்திரமாயும் இருக்கிறது! தம்முடைய காதல் என்னை இன்புறுத்துகின்றது. ஆனும்——" என்று பேசிக்கொண்டு வந்தபோதே மேற்கொண்டு ஏதும் பேசுவதற்கு முடியாமல் பூதகி தயங்கினாள். அவளுடைய கண்களிலிருந்து நீர் ஊற்றிலிருந்து பெருகுவதைப்போல் பெருகிற்று.

"ஆ! பூதகியே! நீ ஏதோ வருத்தத்தினால் துன்புறுகிறாய்? அந்த வருத்தம் யாதென்பதை மறைக்க முயலாமல் என்னிடம் கூறு!" என்று சிவகன் ஆற்றுதல் கூறி அவளைத் தன்னருகில் இழுத்து அணைத்துக்கொண்டான்.

"இல்லை; இல்லை! வருத்தம் ஒன்றுமில்லை!" என்று பூதகி கூறி சீவகனுடைய பிடியைத் நிறுத்திக்கொண்டு அப்புறம் வந்து நின்றாள். ஆனாலும் முன்னையிலும் அதிகமாக அவள் இப்போது அழலானாள்.

"அன்பிற் சிறந்த பூதகியே! அழாதே,—அழாதே! உன்னை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்,—அழாதே!" என்று சீவகன் பரிவுடன்கூறி அவளுடைய கன்னங்களையும் உதடுகளையும் மாறி மாறி முத்தமிட்டான்.

"ஆ! நான் வருந்தாமல் என் செய்வேன்? அழாமல் என் செய்வேன்!" என்று பூதகி ஆறுமையுடன் கூறி "சீவகரே! என்னுடைய ஆன்மாவைக் கவிந்து கொண்டிருக்கிற துயரம் என்னும் மேகத்தின் இடையிலே உம்முடைய காதலாகிய நட்சத்திரம் நம்பிக்கையாகிய ஒளியை வீசிக்கொண்டிருக்கிறபடியால் நான் ஒருவாறு உயிர்பிழைத்திருக்கிறேன். இன்றேல் இதுவரையில் இறந்துபோயிருப்பேன்" என்று மீண்டும் தொடர்ந்து மொழிந்தாள்.

"ஓ! நீ சொல்லுவதை நான் அறிந்துகொண்டேன். உன்னுடைய சகோதரி தேவகி செய்த கொலைத்தொழிலினால் உன் மனம் பிளவுபட்டுவிட்டது. அவளுக்காகத்தான் நீ வருந்துகின்றாய்!" என்று சீவகன் சொன்னான்.

"ஆம்; வாஸ்தவந்தான். அவள் என்னுடைய சகோதரியானதால் அவளுடைய சதிச்செயல் என்னைப் பற்றியும் இழிவாக நினைக்கும்படி உம்மைத்தூண்டிவிடும். இயல்பாகவே என்மீது உமக்கேற்பட்டிருந்த காதலும் மதிப்பும் குறைந்துவிடும். இவ்விஷயத்தை

நினைக்கும்போது என்மனம் பெரிதும் வருந்துகிறது'' என்று பூதகி சொன்னாள்.

''பூதகியே! நீ அவ்விதம் நினைக்கவேண்டாம். உன்னை எப்போதும் போலவே நான் நேசிக்கிறேன்; காதலிக்கிறேன். அன்பே! நீ எனக்கு உரியவளே; நான் உனக்கு உரியவனே! இதிற் சந்தேகம் சிறிதும் இல்லை'' என்று சிவகன் மனமுருகிப் பேசினான்.

''நீர் சொல்லுவது யாதென எனக்கு விளங்க வில்லையே?'' என்று பூதகி கேட்டாள்.

''நான் சொல்லுவது விளங்கவில்லையா? நான் உன்னைக் காதலிக்கிறேன். நீயும் அவ்விதமே என்னைக் காதலிக்கின்றாய் என்று நம்புகிறேன். உன்னை நான் காதலித்தபடியினால் எமனோடு அன்று செய்த யுத்தத்தில் நான் தோல்வியடைய நேரிட்டது! அதைக்கூட நீ கவனிக்கவில்லையா? நல்லது, பூதகியே! எமனுடைய கட்டளையை மீறி நீ இங்கே எவ்விதம் வந்தாய்?'' என்று சிவகன் கேட்டான்.

''எமனோடு கோரமானயுத்தம் புரிந்த அன்றிரவு நான் சத்திரத்தில் உம்மைச் சந்திக்க வில்லையா? மேலான ஒரு பொருளின் சக்தியினால் நான் வந்தேன் என்று அப்போது உமக்கு நான் எடுத்துக் கூறவில்லையா? மோக்ஷகர்த்தாவான கடவுளுடைய சக்தி நரக கர்த்தாவான எமனுடைய சக்தியைக் காட்டினும் எத்தனையோ மடங்கு பெரிது என்பதை நான் உமக்கு எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? எமன் ஆழ்ந்த ஆலோசனையோடு பலநூற்றாண்டுகள் முயன்று கட்டும்திய மாளிகையை, எல்லாம் வல்ல இறைவன் ஒரு கணத்தில் இடித்துத் தகர்த்து விடுகிறார் என்பதை நீர் அறியீரா? எமனுடைய சூழ்ச்சியும் கொடுமையும் கடவுள்

முன்னிலையில் செல்லாவென்பதற்கு மார்க்கண்டனுடைய சரித்திரம் சாட்சி பகரவில்லையா? அத்தகைய கடவுளுடைய அருளினால் எமனுக்கு நீர் செய்து கொடுத்திருந்த நான்கு நிபந்தனைகளுள் இரண்டு ரத்துசெய்யப்பட்டன" என்று பூதகி சிவகனை நோக்கிக் கூறினாள்.

"அந்த இரண்டு நிபந்தனைகள் யாவை?" என்று சிவகன் இடைமறித்துக் கேட்டான்.

"சுமுகியை அழைத்துக்கொண்டு கொங்கு தேசத்திற்குப் போகவேண்டும்; என்னை நீர் பார்க்கக்கூடாது. இந்த இரண்டு நிபந்தனைகளையும் இனி நீர் அனுஷ்டிக்க வேண்டியதில்லை. ஆதலால், சுமுகியை அழைத்துக் கொண்டு இனி நீர் கொங்கு தேசத்திற்குப் போகவேண்டிய அவசியமும் இல்லை; என்னை நீர் பார்ப்பதினால் பாதகமும் இல்லை. அதனாற்றான் இப்போது நான் இங்கே பயமின்றி வந்தேன்" என்று பூதகி விடைபகர்ந்தாள்.

"இந்த நிபந்தனைகளை ரத்துசெய்து கொள்ளுவதற்கு நீ வேறுநிபந்தனை ஏதாவது செய்து கொடுத்திருக்கவேண்டுமே?" என்று சிவகன் கேட்டான்.

"ஆம்; செய்து கொடுத்திருக்கிறேன், அந்த நிபந்தனையாவது இதற்கு முன்பு எந்தப் பெண் மணியையும் காதலித்திராத ஒரு சைவப் போர் வீரனை நான் மணஞ் செய்து கொள்ள வேண்டும் என்பது தான்" என்று பூதகி பதில் பகர்ந்தாள்.

"பூதகியே! நான் உன்னைத்தவிர வேறுஎந்தப் பெண்மணியையும் காதலித்ததில்லை; நானும் சைவப் போர்வீரன்தான்" என்று சிவகன் குறிப்பாகக் கூறினான்.

சிறிது நேரம் வரையில் இருவரும் மௌனமா யிருந்தார்கள்.

"பூதகியே! நீ எனக்கு மனைவியாக மாட்டாயா? தயைசெய்து சொல்லு!" என்று சீவகன் மீண்டும் அன் போடு கேட்டான்.

"என்ன? நான் தங்கள் மனைவியர்க வேண்டுமா?" என்று பூதகி ஒருவகையான நாணத்துடன் கேட்டாள்.

"ஆம்; உன்னை நான் விவாகஞ் செய்து கொள்ள விரும்புகின்றேன். இந்தக் கேள்விக்கு நீ பதில் சொல் லுவதற்கு முன்பு நிகும்பன் என்னைப்பற்றி விசேஷமாக உன்னிடம் ஏதாவது கூறியிருக்கின்றாரா என்று அறிய விரும்புகின்றேன்" என்று சீவகன் சொன்னான்.

"ஓ! உம்மைப்பற்றி அவர் எவ்வளவோ பாராட்டி என்னிடம் பலமுறை பேசி யிருக்கின்றார்" என்று பூதகி பதில் பகர்ந்தாள்.

"அப்படியா? சரி; எல்லாம் நான் விரும்புகிற படியே இருக்கிறது. பூதகியே, உன்னை நான் மிகுந்த ஆவலோடு நேசிக்கின்றேன். ஏனெனில், நீ என்னை என் பொருட்டே காதலிக்கின்றாய் என்பதை நான் நன் கறிந்துகொண்டேன்" என்று சீவகன் கூறினான்.

"இந்த உலகத்திலேயே மிகுந்த ஏழ்மையான நிலை மையிலிருக்கும் ஒரு பிச்சைக்காரனைவிடத் தாழ்ந்தவ ராக நீர் இருந்தபோதிலும் அப்போதும் இப்போது காதலிப்பது போலவே காதலிப்பேன். நீர் ஒரு மகா ராஜனாக விருந்தால் அப்போதும் இப்போது காதலிப் பதுபோல் காதலிப்பேனே தவிர அதிகமாகக் காத லிக்க மாட்டேன்" என்று பூதகி ஆர்வத்தோடு கூறினாள்.

"பூதகியே! என் மனைவியாக இருப்பதற்கு நீ விரும்புகின்றாயா?" என்று சிவகன் மீண்டும் வினவினன்.

"சிவகரே! உம்முடைய மனைவியாவதற்கு நான் முற்றும் சம்மதிக்கின்றேன். ஆனாலும் நீர் தீர ஆலோசித்துக்கொண்டு பிறகு சொல்லும். ஏனெனில், நீரோ கொங்கு தேசாதிபதியின் பிரதம மந்திரியாயும் சேனாதிபதியாயும் இருக்கின்றீர். நானோ பாண்டி நாட்டிலுள்ள ஒரு சாதாரணப் பெண்! உம்முடைய அந்தஸ்திற்கும் பெருமைக்கும் நான் தகுதியுடையவளா என்பதை ஆலோசித்துப் பாரும்! நம்முடைய விவாகத்தை உலகத்தார் அங்கீகரிப்பார்களா என்பதையும் தெரிந்து கொள்ளும்!" என்று பூதகி கூறினள்.

"அன்பே! இவ்விதமான சந்தேகங்கள் உனக்கு வேண்டாம். உலகத்தாருடைய நன்கு மதிப்பை நான் பொருட்படுத்தேன். நீயே எனக்கு வேண்டும். ஆதலால் உன்னை நான் மணப்பேன்" என்று சிவகன வற்புறுத்திக் கூறினன்.

"சந்தோஷம்! அன்பரே! நான் என்னுடைய தோழிகளான மீனாட்சியையும் காமாட்சியையும் அவர்கள் இருக்கும் அறைக்குச் சென்று காணவேண்டும். ஆதலால் நான் போய் வருகிறேன். காலையில் நீர் பிரயாணப் படும்போது நானும் உம்மோடு வருகிறேன்" என்று பூதகி சிவகனிடம் சொல்லிவிட்டு, அவ்வறையிலிருந்து நீங்கினள்.

அதே சமயத்தில் அறையில் எரிந்துகொண்டிருந்த விளக்கு அணைந்தது. சிவகன் இருளில் ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

அதிகாரம் - 62.

கண்ணகி

காலை நான்குமணி இருக்கும். சூரியன் உதிப்ப தற்கு முன்பு வானத்தில் தோன்றும் வெள்ளியினால் உலகத்துப் பொருள்கள் மூடுபனியின் இடையிலே தோன்றும் வஸ்துக்களைப்போல், இலேசாக மனிதர் கள் கண்களுக்குப் புலப்படும் சமயமாயிருந்தது. அச் சமயத்தில் கண்ணகி தன்னுடைய அறையில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். அவள் மீது மிருது வான கை படவே அவள் திடுக்கிட்டு விழித்து எழுந்து படுக்கையில் உட்கார்ந்தாள்; தன் முன்னிலையில் அழகிய பெண்ணுரு ஒன்று நிற்பதைக் கண்டாள்; பேய் பிசாசு முதலிய துஷ்ட ஆவேசங்களுள் ஒன்றுக அஃது இருக்குமோ என்று சந்தேகித்துச் சிறிது அஞ்சினாள்; ஆனல் கூர்ந்து கவனித்த பிறகு தன் முன்னிலையில் நிற்பவள் அழகிற் சிறந்தவளும் பிங்கலனைக் கொன்றவளுமான சுமுகி என்பதை இனிதறிந்து கொண்டாள்.

"பெண்ணே! பேசாமல் அமைதியாயிரு; அச்சத் தினலாவது ஆச்சரியத்தினலாவது இரையாதே" என்று சுமுகி கண்ணகியை நோக்கிக் கூறிவிட்டு அறையை ஒரு முறை சுற்றிப்பார்த்துச் சுவரில் மாட்டப்பட்டிருந்த இரும்புக் கவசத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டவளாய் மீண்டும் சுமுகியை நோக்கி "பெண்ணே! நீ அணிந் திருந்த இரும்புக் கவசம் இதோ சுவரில் மாட்டப்பட் டிருக்கிறதே? நான் நினைத்தபடியே இருந்தது" என்று உரைத்தாள்.

''அம்மா, நீ நினைத்தபடி என்ன இருந்தது? விளக்கமாகச்சொல்'' என்று கண்ணகி தைரியத்தோடு உசாவினாள்.

''சிவகரோடு பிரயாணம் செய்து கொண்டு போகும் பெயர்தெரியாத இராஜ்ஜுவ வீரன் நீயாகவே இருக்கவேண்டுமென்று நான் நினைத்தேன்; நான் நினைத்தபடியே இருந்தது. பெண்ணே! நான் சொல்வதைக் கவனமாய்க்கேள். நீ ஆற்றில் விழுந்து மிதந்து கொண்டு வந்தபோது சிவகரால் எடுக்கப்பட்டு என்னுடைய சேடிகள் மூலமாய் என் கூடாரத்திற்குக் கொண்டு வரப்பட்டாய். பிறகு அங்கிருந்து குந்தி நகரத்து அரண்மனைக்கு உன்னை அழைத்துப்போய் நான் உனக்குச் சிகிச்சை செய்தேன். என்னுடைய போஷணையில் நீ சிலதினங்கள் இருந்தாயே? அப்போது உன்னை நான் அன்போடும் ஆதரவோடும் நடத்தினேனே? அல்லது அலட்சியமாய் நடத்தினேனே? தயை செய்து சொல்'' என்று சுழுகி கேட்டாள்.

''அம்மா! நீ என்னிடமிருந்த அன்புடனும் தயாளத்துடனுமே நடத்தினாய். அவ்விதம் நடத்திய நன்றியை நான் மறந்து விட்டேன் என்று நீ என்னைக் கோபிக்கப் போகின்றாயோ?'' என்று கண்ணகி சந்தேகத்தோடு கேட்டாள்.

''அவ்விதம் நான் கோபித்துக் கொண்டால், அது தகுதியுள்ளதாகாதா? உன்னிடம் பூரணமான நம்பிக்கைவைத்து உன்னை அரண்மனைக்குள் அழைத்துப் போய்ச் சிகிச்சை செய்தேனே தவிர வேறில்லை. ஆனால் நீயோ நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டாய்'' என்று சுழுகி வருத்தத்தோடு கூறினாள்.

"அம்மா! சிறைப்படித்தப் பட்டிருந்த மூன்று பிரபுக்களையும் நான் விடுவித்ததைப்பற்றி நீ பேசுகின்றாய் போலும். அரண்மனைக்குள் வந்த பிறகு நான் பிரபுக்களை விடுவிக்க எண்ணினேன் என்று நீ நினைக்க வேண்டாம். அரண்மனைக்குள் அவர்கள் அடைக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை நான் ஏற்கனவே அறி வேன். அவர்களை விடுவிப்பதற்கு நான் முன்னமே தீர் மானித்திருந்தேன். ஏனெனில் அந்தப் பிரபுக்களுள் ஒருவர் என் வளர்ப்புத் தந்தையின் எஜமானன்; அவர் என்மீது மிகுந்த அன்பு பாராட்டி வந்தார்; அவரை விடுவிக்க வேண்டுவது என் கடமையாயிற்று; அவரோடு மற்ற இருவரும் விடுதலை யடைந்தார்களே தவிர வேறில்லை. அம்மா! என் கடமையை நான் செய் தேனே, அல்லது உபகாரம் புரிந்த உனக்கு அபகாரம் செய்யவேண்டு மென்னும் கெட்ட எண்ணத்தினால் செய்தேனே என்பதை நீயே யோசித்துத் தெரிந்து கொள்" என்று கண்ணகி கூறினாள்.

"பெண்ணே! நீ விவரம் கூறியபின்பு நீ குற்றமற்ற வள் என்பதையும் தைரியமும் நன்மைமறவாப் பெருங் குணமும் உடையவள் என்பதை நான் இனிதறிந்து கொண்டேன். பரோபகார சிந்தையும் தயாள குண மும் உன்னிடம் இயல்பாகவே அமைந்திருக்கின்றன என்பதையும் நான் தெரிந்து கொண்டேன். எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும், — அஃதாவது நான் சொல்லுகிறபடி நடந்து கொள்ள வேண்டும்! உன்னால் முடியுமா?" என்று சுமுகி கண்ணகியை நயமாய்க் கேட்டாள்.

"அம்மா! உன் விருப்பத்தைச் சொல்; நீ சொல் லுகிறபடி நான் நடந்துகொள்ளுகிறேன். உன் விஷ

யத்தில் எனக்கு அனுதாபம் இல்லை என்று நீ நினைக்க வேண்டாம். நீ புரிந்த கொலைத் தொழிலினால் உன் மீது எனக்கு அருவருப்பு இருந்தால் இவ்வளவு சிநேக பாவத்தோடு நான் வார்த்தையாடுவேனா? உள்ளபடியே உன்மீது எனக்கு அருவருப்பு சிறிதுமில்லை; அனுதாபமே உண்டாகிறது" என்று கண்ணகி மனவெழுச்சியோடு பேசினாள்.

"அப்படியானால், நான் கொலைகாரியாயிருந்த போதிலும், குற்றவாளியல்ல வென்பதை நீ நம்புகின்றாயா?" என்று சுமுகி உசாவினாள்.

"ஓ! நம்புகின்றேன்! பிங்கலன் உனக்குக் கொடிய தீமை இழைத்திருக்கவேண்டும்; அல்லது உன்னுடைய உயிருக்கே கேடு சூழ்ந்தவனாயிருக்கவேண்டும். அதினால் முன் மனித சுபாவத்தையும் மீறி, உன்னுடைய பெண்டன்மையையுங் கடந்து நீ அவனைக் கொலைபுரிந்தாய். இந்த உண்மைகள் எல்லாம் எனக்கு விளங்காமல் இல்லை. ஆனாலும், உன்னை அரசாங்கத்தார் தேடிக் கொண்டிருக்கும்போது, நீ இந்த இடத்துக்கு வரலாமா? உன்னை நீயே அபாயத்திற் குள்ளாக்கிக் கொள்ளுகின்றாயே? உன்னை யாராவது பார்த்து விட்டால் உனக்குத் துன்பம் நேருமே?" என்று கண்ணகி இரங்கிக்கூறினாள்.

"என்னைப்பற்றி நீ சிறிதும் அஞ்ச வேண்டாம், — கவலைப்பட வேண்டாம்! என்னைச் சூழ்ந்து கொண்டிருப்பது சாதாரண சக்தியன்று; என்னைக் காப்பாற்றி வருவது மனித சக்தியினும் மேலான தெய்வ சக்தி! நான் இந்தச் சத்திரத்திற்கு உன்னைப் பார்ப்பதற்காகவே வந்தேன். ஆதலால் நான் இங்கே வந்து போனதை நீ ஒருவரிடமும் சொல்லாதே, — இரகசியமாகவே வைத்துக் கொள்" என்று சுமுகி இயம்பினாள்.

"ஓ! அப்படியே செய்கிறேன்! என் தலை போன போதிலும் இந்த இரகசியத்தை நான் காப்பாற்று வேன். நீ என்னிடம் ஏதோ உதவி வேண்டினாயே? அந்த உதவி யாது? ஆலோசியாமல் சொல்" என்று கண்ணகி கேட்டாள்.

"நான் சொன்னால் அந்த உதவியை அவசியம் புரிவதாக எனக்கு வாக்குத் தத்தம் செய்து கொடுப்பாயா? சொன்ன பிறகு ஆலோசிக்கவாவது தயங்கவாவது கூடாது!" என்று சுமுகி புகன்றாள்.

"பெண்ணே! அவ்விதமான சந்தேகம் உனக்குச் சிறிதும் வேண்டாம். இறைவன் சாட்சியாக நான் கூறுகின்றேன்; உன்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி நடக்க நான் சித்தமாயிருக்கிறேன்" என்று கண்ணகி சூளுரைத்தாள்.

"நீ சிவகரை விட்டுப் பிரிந்து போகவேண்டும்; இந்த நிமிஷமே, — இன்று காலையிலேயே நீ அவரை விடுத்து அப்புறப் படவேண்டும். இதுவே என் வேண்டுகோள்" என்று சுமுகி உரைத்தாள்.

"அம்மா! நான் உனக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதலால் உன் வேண்டுகோட்படி நடக்க நான் சித்தமாயிருக்கிறேன். நீ சிறிதும் கவலையுறவேண்டாம். கடவுள் சாட்சியாய்ச் சொல்லுகிறேன், — இன்று காலையிலேயே நான் சிவகரை விட்டுப் பிரிந்து போய் விடுகிறேன்" என்று கண்ணகி கூறினாள்.

"கண்ணகியே! சந்தோஷம்; உன்னுடைய தன்மறுப்புக்கும் தைரியத்திற்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனாலும், நான் இப்

போது சொல்லுவதை ஞாபகத்தில் வைத்துக்கொள். நான் இங்கே வந்து போனதைப்பற்றி ஒருவரிடமும்,— சிவகரிடத்திலும் கூட, — பிரஸ்தாபிக்கக் கூடாது. இவ்விஷயம் பரம இரகசியமாகவே இருக்க வேண்டும். தவிர, எக் காரணத்தினால் சிவகரை விட்டு நீ பிரிந்து போகின்றாய் என்பதை அவரிடம் சொல்லக் கூடாது" என்று சுமுகி கூறினாள்.

"அம்மா! நீ சொல்லுகிற எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நான் நடப்பேன். ஆதலால் நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம்" என்று மீண்டும் கண்ணகி வற்புறுத்திக் கூறினாள்.

"கண்ணகியே! என் மனமார்ந்த வந்தனத்தையும் நன்றியறிதலையும் இன்னொரு முறை நான் உனக்குச் செலுத்துகின்றேன். நான் போய் வருகின்றேன்" என்று சுமுகி கூறிவிட்டு, கண்ணகி யிருந்த அறையிலிருந்து நீங்கினாள்.

சுமுகி சென்ற பிறகு கண்ணகி மனமுடைந்தவளாய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டே படுக்கையிலிருந்து எழுந்தாள். ஊக்கமும் உற்சாகமும் அவளை விட்டு நீங்கின. சந்தோஷகரமான அவள் மனம் இப்போது கவலையினால் சூழப்பட்டது. முன்பு இருந்த தைரியமும் பலமும் இப்போது அவளுக்கில்லை. வேண்டா வெறுப்புடன் அவள் தன் தேகத்தை சுத்தி செய்து கொண்டு, இரும்புக் கவசத்தை முன்போல் அணிந்துகொண்டாள். தான் காதலித்த போர்வீரன் பக்கத்தில் இரும்புக் கவசத்தோடு நின்றுகொண்டு சௌரியத்துடன் போர்புரிந்த கண்ணகி, இப்போது அந்த வீரனைவிட்டுப் பிரிந்துபோக நேர்ந்ததை நினைந்து துயருற்றாள். அவள் ஏன் இவ்விதம் மனங் கலங்க

வேண்டுமென்று சிலர் நினைக்கலாம். கேசரிக் கோட்டையைச் சமீபித்தவுடன் சிவகனை விட்டுப் பிரிந்து, அவள் தன்னுடைய காட்டுக்குச் சென்று மேகனைக் காண வேண்டியவள். அவ்விதமாகவே சிவகனும் கண்ணகியும் ஆதியில் பேசிக்கொண்டார்கள். இன்னும் பன்னிரண்டு மணிநேரம் பிரயாணம் செய்தால் அவர்கள் கேசரிக் கோட்டையை அடைந்து விடுவார்கள். இன்னும் பன்னிரண்டு மணி நேரங் கழித்துச் சிவகனை விட்டுக் கண்ணகி பிரியவேண்டியவள் தானே? அப்படிப்பட்டவள் இப்போதே, — பன்னிரண்டு மணி நேரம் முன்னதாகவே, — பிரிந்து விடுவதால் என்ன பாதகம் நேரக்கூடும்? ஒன்றுமில்லையே! இவ்விதமாகச் சிலர் வினவக்கூடும்.

ஆம்; இவையெல்லாம் உண்மையே! ஆனாலும் காதலுடைய சக்தியையும் மகிமையையும் உணர்ந்திருப்பவர்கள், கண்ணகி அந்தப் பன்னிரண்டு மணிநேர சாவகாசமாவது தன் காதலனுகிய சிவகனோடு சந்தோஷமாய்ப் பிரயாணம் செய்யக்கூடிய பாக்கியத்தைச் சந்தர்ப்பம் இடையிலே புகுந்து பாழ் படுத்திவிட்டதற்காகத் துக்கித்ததை இயற்கை விரோதமென்றுவது, பெண் சுபாவத்திற்கு ஏற்றதன்று என்றுவது நினைக்க மாட்டார்கள்.

கண்ணகி இரும்புக் கவசத்தை அணிந்து கொண்டவுடன் தன் அறையிலிருந்து வெளியே சிவகனைச் சந்திப்பதற்காகச் சென்றுள். இச்சமயத்தில் பொழுதும் நன்றுய் விடிந்து விட்டது. சிவகன் முன்னமேயே எழுந்து சத்திரத்தின் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தான். கண்ணகி அவனைச் சந்திப்பதற்காகச் சென்றுள்.

"நண்பரே, சௌக்கியமா? இந்த இரும்புக் கவசத்தை இடைவிடாது பலநாள் அணிந்து கொண்டிருப்பதால் உமக்குக் களைப்பு உண்டாகி யிருக்குமென நினைக்கின்றேன். ஆனாலும் அதனை அறவே களைந்தெறிந்து விட்டுச் சுகமாய் இருக்கக்கூடிய காலம் நெருங்கி விட்டதுபற்றி நான் மன மகிழ்கின்றேன்" என்று சிவகன் கண்ணகியைக் கண்டவுடன் கூறினான்.

"அந்தக் காலம் இப்போதே வந்துவிட்டது. நான் உம்மிடம் விடை பெற்றுக்கொண்டு போகவே வந்தேன். இதுவே நம்முடைய கடைசி சந்திப்பாகும்" என்று கண்ணகி உரைத்தாள்.

"கடைசி சந்திப்பா! நான் நெடுங்காலமாய் விரும்பிய, — எனக்குக் கிடைப்பதற்கு அருமை என நான் நினைத்திருந்த கண்பனை இவ்வளவு சிக்கிரத்தில் திடீரென்று பிரிந்து போகும்படி செய்தது யாது?" என்று சிவகன் வருத்தத்தோடு கேட்டான்.

"சிவகரே! உம்மைவிட்டு நான் இவ்விதம் திடீரென்று பிரிவதற்குக் காரணம் யாதென நீர் என்னைக் கேட்கவேண்டாம். அந்தக் காரணத்தை அறிந்து கொள்ளவும் தாம் முயல வேண்டாம். நாம் முதலில் எண்ணியிருந்ததற்குச் சில மணிநேரம் முன்னதாகப் பிரிகின்றோமே தவிர வேறில்லை" என்று கண்ணகி கூறினாள்.

"இவ்விதம் பிரிந்து போவதற்கு நான் சிறிதும் இணங்கேன். உம்மை இன்னொன்று நான் அறியாவிட்டாலும் உடன் பிறந்த சகோதரனைப்போல் உம்மை நேசிக்கின்றேன்" என்று சிவகன் வருந்தி உரைத்தான்.

"பிரிந்து போவதைத் தவிர வேறுவழி இல்லை" என்று கண்ணகி வற்புறுத்திக் கூறினாள்.

"நல்லது; நண்பரே, உம்மை நான் வற்புறுத்த வில்லை. நீர் எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக் கின்றீர். அவைகளுக்குக் கைம்மாறு இயற்ற நான் அசக்தனாயிருக்கின்றேன். ஆனாலும், என்னுடைய நன் றியறிதலைக் காண்பிப்பதற்கு ஓர் அறிகுறியாக நீர் ஏதா வது விரும்பிக்கேளும். நான் போதிய அளவு செல்வ முடையவன். ஆதலால் என்னால் இயன்ற உதவியை நான் செய்யக்கூடும்" என்று சிவகன் சொன்னான்.

"சிவகரே! எனக்கு வேறு உதவி வேண்டுவதில்லை. நான் ஏறிக்கொண்டு வந்த குதிரையை எனக்கே இனா மாக அளிப்பீராயின் பேருபகாரமாக விருக்கும். அதனை நான் தம்முடைய ஞாபகார்த்தமாக வைத்துக் கொள்ளுவேன்" என்று கண்ணகி சொன்னாள்.

"எப்போது நீர் அந்தக் குதிரையின் மீது ஏறி னீரோ அப்போதே அது உமக்குச் சொந்தம் என்று நான் முன்னரே பாவித்து விட்டேன். ஆதலால் அதை நீரே எடுத்துக் கொள்ளும். இன்னும் வேறு உதவி ஏதாவது வேண்டுமா?" என்று சிவகன் உசாவினான்.

"எனக்கு வேறு உதவி வேண்டுவதில்லை" என்று கண்ணகி வாய் குழறக் கண்ணீர் ததும்பக் கூறினாள்.

"நண்பரே! உம்முடைய மனத்தில் ஏதோ வருத் தம் இருக்கிறதாகத் தெரிகிறது. அவ்வருத்தம் யாதென் பதை என்னிடம் சொல்லலாகாதா?" என்று சிவகன் பரிவுடன் கேட்டான்.

இச்சமயத்தில் பூதகி தன்னுடைய தோழிகளாகிய மீனாட்சியையும் காமாட்சியையும் அழைத்துக்கொண்டு

சீவகனும் கண்ணகியும் நின்று பேசிக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தாள்.

"இந்தப் பெண் சுமுகியின் சகோதரிதானே?" என்று கண்ணகி பூதகியைச் சுட்டிக் காட்டி சீவகனைக் கேட்டாள்.

"ஆம்; சுமுகியின் சகோதரியாகிய பூதகி இவள் தான்" என்று சீவகன் விடை அளித்து "இப்போது எங்கள் இருவர் முன்னிலையில் நீர் யார் என்பதையும் உம்முடைய பெயர் யாதென்பதையும் சொல்லக் கூடாதா?" என்று வினவினன்.

"முடியாது; முடியாது!" என்று கண்ணகி உரத்துக்கூவி அருகே நின்ற குதிரைமீது ஏறி உட்கார்ந்தாள். உடனே குதிரை நாற்கால் பாய்ச்சலில் விரைந்து சென்றது.

அதிகாரம் — 63

சவப் பெட்டி

சீவகனும், பூதகியும், அவளுடைய இரண்டு தோழிகளும் பிரயாணம் செய்துகொண்டு போகிறார்கள். அவர்களை இப்போது நாம் பின்தொடர்ந்து செல்ல வேண்டும். சுமுகியினால் பிங்கலன் கொலை செய்யப்பட்ட சத்திரத்தில் அக்கொலைக்குப் பிறகு நடந்த சில முக்கியமான சம்பவங்களை கவனித்துவிட்டுப் பிறகு சீவகனையும் பூதகியையும் பின் தொடர்ந்து செல்லுவோம்.

காலை எட்டுமணி இருக்கும், — இவ்வதிகாரத்திற்கு முந்திய அதிகாரத்தில் சொல்லப்பட்ட நிகழ்ச்சி

கள் என்று காலையில் நடந்தனவோ அன்று காலையில், — சத்திரத்தின் சொந்தக்காரரும் அவருடைய மனைவியும் முதல்நாள் இரவு தங்களுடைய சத்திரத்தில் நிகழ்ந்த கொலையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் ஒரு மனிதன் குதிரைமீது சவாரி செய்துகொண்டேவந்து, சத்திரத்தை நெருங்கியவுடன் குதிரையை நிறுத்திக் கீழிறங்கினான்.

பாஞ்சால தேசத்தின் தலைநகராகிய குந்திநகரத்திலிருந்து வந்தவனாக அவன் காணப்பட்டான். அவனுடைய உடம்பு வியர்த்திருந்ததைக் கொண்டும், குதிரையின்வாயில் நுரை ஏராளமாய்த் தள்ளியிருந்ததைக் கொண்டும் ஏதோ அவசரகாரியமாய் அவன் குதிரையை மிகுந்த வேகத்துடன் செலுத்தி வந்திருக்கிறான் என்பதை எவரும் இனிதறிந்துகொள்ளுவார்கள். அவனணிந்திருந்த காற் சல்லடமும் கைச் சட்டையும் வியர்வையினால் நனைந்திருந்தது. அவனுடைய காலாசுகளும் (காலாசு=மேஜோடு) வியர்வையினால் நனைந்து புழுதி படிந்திருந்தன. அவன் தன்னுடைய முன்கைகளில் விரற் கவசம் (விரற்கவசம்=க்ளோவ்ஸ்) அணிந்திருந்தான். அவனணிந்திருந்த உடை கரிய நிறமுடையதாயிருந்தது. அவன் நடுத்தரமான வயதுடையவன். அவனுடைய தோற்றமும் உடையும் யாருடைய மரணத்திற்காகவோ அவன் துக்கம் பாராட்டி வருகின்றான் என்பதை இனிது சூசிப்பித்தன. அவன், குதிரையை விட்டுக் கீழிறங்கின வுடன் சத்திரத்தின் சொந்தக்காரரிடம் சென்று "ஐயா, இன்னும் சிறிது நேரத்திற்குள் அங்கே பலர் வருவார்கள். அவர்கள் எல்லோரும் இங்கே தங்கி மத்தியான போஜனம் செய்து கொண்டு பிறகு போகவேண்டும். அவர்கள் ஒரு பிரேதத்தைச்

சமீபத்தி லிருக்கும் ஓர் ஊருக்குக் கொண்டுபோய் அடக்கம் செய்யவேண்டியவர்கள். பிரேதம் பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டு வருகிறது. அதனோடு அவர் களும் வந்துகொண்டிருக்கிறார்கள். நீர் என்ன சொல் லுகிறீர்? எல்லோருக்கும் சாப்பாடு போடுவதற்கு உம் மால் முடியுமா?" என்று கேட்டான்.

"முடியாமல் என்ன? சுமார் எத்தனைபேர் வரு வார்கள்?" என்று சத்திரத்தின் சொந்தக்காரர் கேட்டார்.

"சற்றேறக் குறைய இருபத்து நான்கு மனிதர்கள் வருவார்கள். இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் அவர்கள் பிரேதப் பெட்டியுடன் இங்கே வந்துவிடுவார் கள்" என்று வந்த மனிதன் விடை அளித்தான்.

"இன்னும் இரண்டு மணி நேரந்தானே? அதற்குள் இருபத்து நான்கு பேர்களுக்குச் சமையல் செய்வ தென்றால் சாத்தியமாகாது. அதிலும், நீங்கள் எல் லோரும் பெரிய மனிதர்களாயிருப்பதால் சிறிது விசே ஷமாகப் பாகம் செய்ய வேண்டியிருக்கும். ஆதலால் சிறிது நேரம் காத்திருக்கத்தான் வேண்டும். பகல் பன்னிரண்டு மணிக்கு சாப்பாடு போட்டு விடுகிறேன்" என்று சத்திரத்தின் சொந்தக்காரர் சொன்னார்.

"ஆம்; என்னுடைய எஜமான்மார்களும் அவர்க ளோடு வருகிறவர்களும் உயர்ந்த அந்தஸ்தும் சிறந்த மதிப்பும் உடைய பிரபுக்கள். சிற்சில காரணங்களை உத்தேசித்து அவர்கள் தற்சமயம், தங்களை இன்ன தென்று பிறர் அறிந்து கொள்ளாம லிருக்கும்படி, மாறு வேடம் பூண்டிருக்கின்றார்கள். ஆனாலும் அதைப் பற்றி நீர் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. சாப்

பாடு முதல் தரமானதா யிருக்கவேண்டியது; தாராள மாய்ப் பணம் கொடுக்கின்றோம். இதோ இருக்கும் பணத்தை முன்பணமாக வைத்துக் கொள்ளும்" என்று வந்த மனிதன் கூறி ஐந்நூறு பொன் நாணயங்களைச் சத்திரத்தின் சொந்தக்காரரிடம் கொடுத்தான்.

பவுன் காசுகளைக் கண்டவுடன் சத்திரத்தின் சொந்தக்காரருக்கு வரை கடந்த சந்தோஷமுண்டாகி விட்டது. அவர் தம்முடைய தொழிலைப் பற்றி பல வாறு புகழ்ந்து பேசினார் "ஐயா; சாப்பாட்டைப் பற்றி நான் வாயினால் விசேஷித்துச் சொல்வதில் பயனில்லை. சாப்பிட்டுப் பார்த்த பின்பு நீங்களே சொல்லுவீர்கள். சாப்பாடு நன்றாயிருந்தால் பணம் கொடுங்கள்; இல்லாவிட்டால் எனக்குப் பணமே வேண்டாம். பணம் இன்று வரும்; நாளை போம்; பெயர் மாத்திரந்தான் நிலைத்திருக்கும்" என்று அவர் கூறிவிட்டுப் பக்கத்திலிருந்த தம் மனைவியையும் அழைத்துக் கொண்டு சமையல் வேலையைக் கவனிப்பதற்காகச் சமையலறைக்குச் சென்றார்.

இரண்டு மணி நேரம் கடந்துவிட்டது; பிரேத ஊர்வலமும் சத்திரத்தை நெருங்கி வந்தது. ஊர் வலத்தில் வந்தவர்கள் எல்லோரும் குதிரைமீது ஆரோகணித்தவர்களாகவே இருந்தார்கள். அக் கூட்டத்தின் முன் புறத்தில் முதலில் ஒரு ஸ்திரீ அச்வத்தில் ஏறிய படி வந்துகொண் டிருந்தாள். அவளுடைய உடம்பு முழுவதும் கறுப்பு அங்கியினால் மூடப்பட்டிருந்தது; முகத்திலும் முகமூடி அணிந்திருந்தாளாதலால் அவள் யார் என்பதை அறிந்து கொள்ளப் பிறரால் முடியவில்லை. அவள் வலக் கைப் புறத்தில் இரண்டு இராணுவ வீரர்கள் இரும்புக் கவசம் அணிந்தபடியே

வந்துகொண் டிருந்தார்கள். இடக் கைப் புறத்தில் ஒரு சைவ சந்நியாசி வந்துகொண் டிருந்தார். அவருடைய உடையினல் அவர் சந்நியாசி என்பது நன்கு விளங்கின்தாயினும், அவருடைய முகமும் மெல்லிய சல்லாத் துணியினல் மறைக்கப்பட்டிருந்த படியால் அவரை இன்னுரென்று அறிந்து கொள்ள முடியவில்லை. இந்த நால்வரும் ஊர்வலத்தின் முன் வரிசையில் வந்தார்கள். இவர்களுக்குப் பிறகு நான்கு அழகிய பெண்கள் ஒரே விதமான ஆடை தரித்துக் கொண்டு இரண்டாவது வரிசையில் வந்தார்கள். மூன்றுவது வரிசையில் நான்கு அழகிய வாலிபர்கள் இருந்தார்கள். இவர்களுக்குப் பிறகு நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட ஒரு வண்டி வந்தது. அந்த வண்டியில் சவப் பெட்டி வைக்கப்பட் டிருந்தது. வண்டியின் மேல்புறத்தில் இருவர் உட்கார்ந்து குதிரைகளை ஓட்டினர்கள். இருவர் வண்டியின் இரு பக்கத்திலும், — பக்கத்திற்கு ஒருவராய், — காவலர்களைப்போல் நின்றுகொண் டிருந்தார்கள். இந்த இருவரும் ஊமையர்கள். இந்த வண்டிக்குப் பிறகு எட்டு இராணுவ வீரர்கள் உருவிய கத்தியைக் கையிற் பிடித்தபடியே நடந்து வந்தார்கள். இவ்விதம் ஊர்வலம் ஐந்து வரிசையில் இருபத்து நான்கு பெயர்களைக் கொண்டதா யிருந்தது.

சத்திரத்திற்கு வந்து சேர்ந்தவுடன், அவரவர்கள் தங்கள் தங்களுக்கு ஏற்படுத்தப்பட் டிருந்த ஜாகைக்குச் சென்றார்கள். அவரவர்களுடைய கௌரவத்திற்கும் அந்தஸ்திற்கும் தகுந்தபடி தனித்தனியே பல அறைகள் விடப்பட் டிருந்தன. ஊர்வலத்தின் முன் வரிசையில் நடுவே வந்த ஸ்திரீயை சைவ சந்நியாசி அழைத்துக் கொண்டுபோய் ஓர் அறையில் விட்டுவிட்டு

மிகுந்த மரியாதையுடன் விடை பெற்றுக்கொண்டு சென்றார். அவளோடு, இரண்டாவது வரிசையில் வந்த நான்கு பெண்மணிகளும் தங்கி யிருந்தார்கள். அந்த ஸ்திரீ அவ் வரையிற் கிடந்த ஒரு பஞ்சணையின் மீது அயர்ந்து சாய்ந்தாள்.

"அம்மா, உங்களுக்கு ஏதாவது வேண்டுமா?" என்று சத்திரத்தின் சொந்தக்காரருடைய மனைவி தோழிப்பெண்களுள் ஒருத்தியைக் கேட்டாள்.

"அம்மா; இப்போது எங்களுக்கு ஒன்றும் வேண்டாம். வழிநடந்து வந்ததால் எங்கள் எஜமானி மிகவும் களைத்துப்போயிருக்கிறாள். ஆதலால் சிறிது நேரம் படுத்து உறங்க விரும்புகின்றாள். சாப்பாடு தயாரானவுடன், இங்கேயே கொண்டு வந்துவிடுங்கள். நாங்களும் எங்கள் எஜமானியும் இந்த அறையிலேயே போஜனம் செய்து கொள்ளுகிறோம்" என்று தோழிப் பெண்களுள் மூத்தவள் சொன்னாள்.

இவர்கள் இருவரும் இவ்விதம் வார்த்தை யாடிக் கொண்டிருந்தபோது எஜமானியான ஸ்திரீ பஞ்சணையில் ஆழ்ந்த ஆலோசனையில் ஆழ்ந்திருந்தாள். அவளுடைய தோற்றம் அவள் ஏதோ கவலையினால் சூழப்பட்டிருக்கிறாள் என்பதையும், அவள் தன்னுடைய சுயேச்சையோடு நடக்கவில்லை என்பதையும், பிறருடைய கட்டாயத்திற்கு உட்பட்டு நடக்கிறாள் என்பதையும் இனிது சூசிப்பித்தன. இந்த உண்மைகளைச் சத்திரகாரரின் மனைவி அறிந்துகொள்ளாமலில்லை. ஆனாலும் அவ்விஷயமாய் வற்புறுத்திக் கேட்க இஷ்டமில்லாதவளாய், அவள் போய்விட்டாள். சைவ சந்நியாசியும் இரும்புக் கவசமணிந்த இரண்டு போர்வீரர்களும் ஓர் அறையில்

தங்கினர்கள். மற்றவர்கள் வேறு வேறு அறைகளில் தங்கலானர்கள்.

சைவ சந்நியாசியோடிருந்த இரண்டு இராணுவ வீரர்கள் உண்மையில் இராணுவ வீரர்கள் அல்லர் என்பதையும், அவர்கள் மூறையே பாஞ்சால தேசப் பிரபுவாகிய சுசிமுகரும் கேசரிக் கோட்டையின் சொந்தக்காரரான வீரவர்மரு மாவர் என்பதையும் நம் வாசகர்கள் யூகித்தறிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறோம். சைவ சந்நியாசி, சதாநந்த சாமியார் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.

"மாட்சிமை தங்கிய அரசியரைப் பத்திரமாய் அறைக்கு அழைத்துச்சென்று, வேண்டும் சௌகரியங்களைச் செய்துவிட்டு வந்தீரா?" என்று வீரவர்மர் சதானந்த சாமியாரைக் கேட்டார்.

"அறை வாயிற்படி வரையில் நான் அவளை அழைத்துக்கொண்டுபோய் விட்டு வந்தேன். அவளுடைய நடத்தையையும் தோற்றத்தையும் கவனித்தேன். அவள் நம்மை விட்டுத் தப்பிப்போகமாட்டாள்" என்று சதானந்த சாமியார் விடை இறுத்தார்.

"நம்மிடத்தில் அவளுக்கு அதிகமான பகைமை இருக்கிறது. இல்லாவிட்டால் வெள்ளை மாளிகையில் தங்கியிருப்பதில் அவள் அவ்வளவு அருவருப்பும் அசம்மதமும் காட்டியிருக்கமாட்டாள்" என்று சுசிமுகர் கூறினர்.

"வீண் வார்த்தைகளைப்பேசி நாம் காலத்தைப் போக்கவேண்டாம். அவளோ நம்முடைய கையில் அகப்பட்டிருக்கிறாள். கூட்டிலகப்பட்ட பறவையைப் போலும் வலையிலகப்பட்ட மானைப்போலும் அவள்

இருக்கின்றாள். நம்மை மீறி அவளால் ஒன்றும் செய்ய முடியாது. பாஞ்சால தேசத்தின் சிம்மாசனத்தில் அவளை நாம் ஏற்றிவிட்டோமானால், — அந்த முயற்சி நமக்குக் கைகூடி விடுமானால், — ஒரு சூத்திரப் பாவை யைப்போல் அப்பாவை நல்லாளை நாம் ஆட்டுவிக்க லாம். அவளைக்கொண்டும், அவளுடைய செங்கோலைக் கொண்டும் நாம் நம்முடைய நோக்கங்களையும் விருப் பங்களையும் நிறைவேற்றிக்கொள்ளலாம்" என்று சதா னந்த சாமியார் எடுத்துரைத்தார்.

"நாம் எல்லா விஷயங்களையும் முற்ற ஆராய்ந்து முன்யோசனையுடனும் மிகுந்த தந்திரத்துடனும் செய் திருக்கின்றோம் என்பது உண்மையே! ஆனாலும், அவள் ஒருமுறை நம்மிடமிருந்து தப்பித்துக்கொண்டு போய் விடுவாளானால், பிறகு நம்முடைய முயற்சிகளும் நம்பிக்கைகளும் பகற்கனவாய் முடிந்து விடும், ஜாக் கிரதை!" என்று சுசிமுகர் கூறினர்.

"தோழிப் பெண்களுக்கு நான் போதுமானபடி எச்சரித் திருக்கின்றேன். அவர்கள் நால்வரும் நம்பிக் கையும், நன்றி யறிதலு முள்ளவர்கள் தவிர, கேசரிக் கோட்டை மாளிகைக்குள் அரசியைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் வரையில் பிறரோடு அவள் பேசாதபடி நான் பார்த்துக்கொள்வேன்" என்றார் சதானந்த சாமியார்.

"கேசரிக் கோட்டைக்குள் அவளை நாம் கொண்டு போய் வைத்த பிறகு, பாஞ்சால தேசத்துக் கொடி யைப் போட்டு நிகும்பனோடு யுத்தம் புரியவேண்டியது தானே? நிகும்பனையும் அவனுடைய பரிவாரங்களாகிய சாக்கியர்களையும் அடியோடு நாம் அழித்துவிட வேண் டும்" என்று சுசிமுகர் சொன்னார்.

"ஆம்; அவ்விதந்தான் செய்யவேண்டும். தேசத்திலுள்ள பிரபுக்களையும், ஜமீன்தார்களையும் நாம் ஒன்று சேரும்படி செய்ய வேண்டும். அவசியம் நேர்ந்தால் நானே பயிரங்கத்தில் புறச்சமயிகளான சாக்கியர்களையும் அவர்களுடைய தலைவனுகிய நிகும்பனையும் அழிக்க வேண்டுமென்று ஜனங்களுக்கு எடுத்துப் போதிக்கிறேன். நிகும்பனுடைய கட்சிக்கும் நமக்கும் யுத்தம் நேர்ந்தாலும் நமக்கே இலகுவில் வெற்றி கிடைக்குமென நான் நம்புகிறேன்" என்று சதானந்த சாமியார் வற்புறுத்திக் கூறினர்.

"அவ்விதமான நம்பிக்கை வைத்து மோசம் போகாதீர். நம்முடைய கட்சி வெற்றி பெறும் என்பதிலும் கமலினி அரசி சிம்மாசனம் ஏறுவாள் என்பதிலும் எனக்குச் சந்தேகம் சிறிதுமில்லை. ஆனல், நம்முடைய வெற்றி இலகுவிலே சித்திக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. நெடுநாள் போர் புரிந்து, ஏராளமான இரத்தத்தைச் சிந்தினல் மாத்திரமே நமக்கு வெற்றி கிடைக்கும். ஏனெனில் நிகும்பன் சாமானியனல்லன்" என்று சுசிமுகர் சொன்னர்.

"நீர் சொல்லுவதைவிடச் சதானந்த சாமியார் கூறுவதுதான் பொருத்த முடையதென்று எனக்குத் தோன்றுகிறது. வெற்றி நமக்குச் சுலபமாகவே கிடைக்கும். ஏனெனில், பூலோக வசிய மாத்திரையாகிய பணம் ஏராளமாய் நம்மிடம் இருக்கிறது. கமலினிக்குச் சொந்தமான பொக்கிஷம் நம் வசத்தில் இருக்கும்போது நாம் எதற்காக ஆலோசிக்கவேண்டும். ஏராளமான பணத்தைக் கொடுத்தால் ஏராளமான போர்வீரர்கள் நம்முடைய கட்சியைச் சேருகிறார்கள். பணத்தினல் சாதிக்கப்பட முடியாத காரியம் உலகத்

தில் இருக்கிறதா?" என்று வீரவர்மர் கிளர்ச்சியோடு பேசினார்.

"ஒழிவு நேரத்தில் விநோதமாய் வார்த்தையாடிக் கொண்டிருப்பதற்குத் தகுந்த பேச்சை இப்போது பேசி நாம் காலத்தை வீணே கழிக்கவேண்டாம். நல்லது; வீரவர்மரே, உம்முடைய குமாரன் மதங்கன் கேசரிக் கோட்டையில் இருப்பானே?" என்று சதானந்தர் வீரவர்மரைக் கேட்டார்.

"ஓ! அவன் கேசரிக்கோட்டையிலேயே இருப்பான். எக்காரணம் பற்றியும் அதை விட்டுப்போகமாட்டான். ஏனெனில், நிகும்பனுடைய ஆட்கள் ஒரு கால் கேசரிக்கோட்டையை முற்றுகை போட்டாலும் போடுவார்கள் என்றும், அவ்விதம் செய்தால் எதிர்த்து நிற்கவேண்டும் என்றும் நான் மதங்கனுக்குக் கண்டிப்பான உத்தரவு செய்திருக்கிறேன்" என்று வீரவர்மர் சொன்னார்.

"கேசரிக்கோட்டையைப் பிடிப்பதற்கு நிகும்பனுடைய கட்சியார் ஏதாவது முயற்சி செய்திருக்கிறார்களோ?" என்று சுசிமுகர் வினவினர்.

"எனக்குத் தெரிந்தவரையில் அவ்விதமான முயற்சி ஏதும் அவர்கள் செய்திருப்பதாகத் தெரியவில்லை," என்று வீரவர்மர் விடையளித்தார்.

"அரசியைக் கேசரிக்கோட்டையில் வரவேற்று உபசரிக்க வேண்டியபொறுப்பை மகாபலர் ஏற்றுக் கொண்டது மிகநலமே. அவர், மதங்கனிடம் சங்கதியைக்கூறி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே முன்னதாகச் சென்றார். அவர் ஏறிச் சென்ற குதிரை மிகவேகமாய்ச் செல்லக்கூடியதாகையால் இதுவரையில்

அவர் கேசரிக்கோட்டை போய்ச் சேர்ந்திருக்கக் கூடும் என்று நான் நம்புகிறேன்'' என்று சுசிமுகர் சொன்னார்.

''அந்த ஒரு காரியத்தை முன்னிட்டு மாத்திரம் மகாபலர் முன்னதாகச் சென்றார் என்று நீர் நினைக்க வேண்டாம். மதங்கனிடம் நாம் வருகிறோம் என்னும் செய்தியை அறிவித்து விட்டு அவருடைய ஊருக்குச் சென்று அவருடைய மாளிகையைத் தற்காத்துக்கொள்ளவே அவர் முன்னதாகச் சென்றிருக்கின்றார். ஏனெனில், கைதியாயிருந்த பிரபுக்களுள் மகாபலரும் ஒருவராவர். பிரபுக்கள் சிறையிலிருந்து தப்பித்துக் கொண்டதை நிகும்பன் அறிந்தவுடன் மிகுந்த உக்கிரகத்தோடு அவருடைய மாளிகையை எதிர்ப்பான் என்பதை மகாபலர் நன்கறிவார்'' என்று சதானந்த சாமியார் சொன்னார்.

''ஆம், ஆம்; நீங்கள் சொல்லுவது உண்மையே, இருந்தபோதிலும் மகாபலர் இதுவரையில் என்னுடைய மாளிகைக்குச் சென்று மதங்கனிடம் சங்கதியைச் சொல்லியிருப்பார் என்றே நான் நம்புகிறேன். ஏனெனில் அவருடைய மாறுவேடத்தைக் கண்டுபிடிக்க எவராலுமே முடியாது. ஆனால் நாமோ இன்னும் இரண்டுநாள் பிரயாணம் செய்யவேண்டுமே?'' என்று வீரவர்மர் சிறிது அச்சத்துடன் கேட்டார்.

''ஆம்; உண்மைதான்! ஆனாலும் நாம் செய்திருக்கிற ஏற்பாடு மிகச் சிறந்த தொன்றாகும். பிரேதத்தை அடக்கம் செய்யப் போகிறவர்களைப்போல் நாம் ஆரவாரஞ் செய்துகொண்டு போகிறபடியால் எதிரிகள் நம்மைச் சந்தேகிக்கவாவது, நம்முடைய சூழ்ச்சியைக் கண்டு பிடிக்கவாவது முடியாது. நாம் எவ்விதமான அபாயத்திலும் அகப்பட்டுக் கொள்ளாமல் இருப்ப

தற்கும், பொக்கிஷம் பத்திரமாய்க் கேசரிக் கோட்டை போய்ச் சேருவதற்கும் நாம் செய்திருக்கும் இந்த ஏற்பாடுதான் தகுதியானது. ஆதலால் சிறிதும் நாம் அஞ்சவேண்டுவதில்லை'' என்று சதானந்த சாமியார் சாற்றினார்.

''ஆம்; ஆம்! சந்நிதானம் செய்த ஏற்பாடு பெரிதும் பாராட்டற் பாலதுதான்; அதிற் சந்தேகமே இல்லை. இதுவரையில் நம்முடைய ஏற்பாடுகள் நமக்குச் சாதகத்தையே செய்து வந்திருக்கின்றன. சிவகன் என்பவன் அன்றிரவு வெள்ளை மாளிகையில் கலவரம் செய்யாமலிருந்திருப்பானானால் நம்முடைய நோக்கங்கள் இன்னும் எவ்வளவோ சுலபமாய்க் கைகூடும்'' என்று வீரவர்மர் கூறினார்.

''பிரபுவே! ஜாக்கிரதையாக நாம் பேசவேண்டும். 'பகலில் பக்கம் பார்த்து பேசு' என்பது பழமொழி. நம்முடைய சம்பாஷணையை யாராவது கேட்டுக்கொண்டிருந்தால், மோசம் வந்து விடும்'' என்று சந்நியாசி கூறினார்.

''வீரவர்மர் வெள்ளை மாளிகையில் அன்றிரவு நிகழ்ந்த சம்பவத்தைச் சொன்னவுடன், சந்நிதானத்தின் கை இப்போது எவ்விதம் இருக்கிறது என்று கேட்கவேண்டும் என்னும் ஆவல் எனக்கு உண்டாகிறது'' என்று சுசிமுகர் விநயமாய்ச் சதானந்த சாமியாரை நோக்கிக் கூறினார்.

''சிவகனுடைய கத்தியினால் என் கையில் ஏற்பட்ட காயம் மிகப்பலமான காயந்தான். ஆனாலும், இப்போது சிறிது குணமாயிருக்கிறது; கையைச் சரியாய் நீட்டவும் முடக்கவும் மாத்திரம் இன்னும் முடியவில்லை. என்னுடைய கட்டாரி, சிவகனை வதைக்காமல் போனது

பற்றி நான் வருந்துகிறேன். ஆனாலுமென்ன ? பழைய படியும் அவனைக் கண்டுபிடித்து கன்னியின் முத்தத் திற்கும் வெண்கலச் சிலைக்கும் கொடுக்காமற் போனால் என்பேர் சதானந்த சாமியாரா ?'' என்று சந்நியாசி சௌரியத்தோடு பேசினார்.

''வெள்ளை மாளிகையில் உண்டான கலகம் மகா பலருக்குக் கவலையை உண்டாக்கியது; அவர் சந்தேகங் கொண்டார் என்பதையும் அவருடைய முகக்குறியால் நான் அறிந்தேன். கண்ணகன் என்னும் வாலிபனு டைய செயல், மகாபலருக்கு ஆச்சரியத்தை — நமக்கு விளைவித்தது போலவே — விளைவித்தது என்பதையும் நான் அறிந்து கொண்டேன். அரண்மனையில் சிறை யிருந்த மூவரையும் கண்ணகன் என்னும் அந்த வாலி பன் விடுவித்தான்; மறுபடியும் வெள்ளை மாளிகையில் மூவரையும் ஒரே அறையில் அடைத்துப் பூட்டிவிட் டான். இத்தகைய செயல் யாருக்குத்தான் சந்தே கத்தை உண்டாக்காது. சீவகனுக்கும் அவனுக்கும் நட்புரிமை இருக்கக் கூடுமென்றும், சீவகனை உத்தே சித்து அவன் அவ்விதம் செய்தான் என்றும் சந்தி தானம் சொன்னதைக்கூட மகாபலர் நம்பவில்லை; வேறு காரணம் இருக்கவேண்டு மென்று அவர் அபிப்பிராயப் பட்டார்'' என்று வீரவர்மர் சொன்னார்.

''அதிலுல்தான் மகாபலர், தாம் தப்பித்துக் கொண்டால் போதுமென நினைத்து, கமலினி அரசியின் வரவை முன்னதாக மதங்கனுக்கு அறிவிக்கும் வேலையை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு முன்னடியே போவ தற்கு இசைந்தார். அவ்விதம் அவர் முன்னதாகப் போனது நமக்கு நலந்தானே?'' என்று சுசிமுகர் உரைத்தார்.

"ஆம்; நலந்தான்! அதிஷ்டற்ருன் அவர் போவ தற்கு விரும்பியவுடன், நாம் ஏதும் தடைசொல்லா மல் உடனே சம்மதித்தோம். வெள்ளை மாளிகையில் நிகழ்ந்த சம்பவம் அவருக்கு அம்மாளிகையைப்பற் றிச் சந்தேகத்தைக் கொடுத்திருக்கும். அவர் நம் மோடு இருப்பாராஞல், அவருடைய சந்தேகம் இன் னும் அதிகமாகுமன்ருே? அதற்கு இடமில்லாமல் நாம் செய்து விட்டோம்" என்று வீரவர்மர் சுசிமுகரை நோக்கிக் கூறிவிட்டுப் பிறகு சதானந்த சாமியாரை நோக்கி, "சுவாமிகளே! கண்ணகன் என்னும் அந்த வாலிபனைக் குறித்துச் சில இரகசியங்கள் இருக்கின்றன என்றும், அவைகளைச் சாவகாசமாய் இருக்கும்போது சொல்லக் கூடுமென்றும் சொன்னீர்களே? இப்போது கூறுங்கள்," என்று கேட்டார்.

"அவ்விஷயத்தைச் சொல்லுவதற்குச் சமயம் இதுவன்று. அதோ சத்திரத்தின் சொந்தக்காரர் சாப் பாடு கொண்டு வருகிறூர். ஆதலால் இன்னெரு சமயம் சொல்லுகிறேன்" என்று சதானந்த சாமியார் விடை அளித்தார்.

"ஆமாம்; சந்நிதானம் சொல்லுவது நியாயந் தான்" என்று சுசிமுகர் இணங்கிப் பேசினர்.

இதற்குள் சத்திரத்தின் சொந்தக்காரரும் அவரு டைய மனைவியும் சாப்பாடு கொண்டுவந்து விட்டார் கள். சந்நியாசிக்கும், சுசிமுகருக்கும், வீரவர்மருக்கும் அந்த அறையிலேயே தனித்தனி இலைபோட்டுப் பரி மாறினர்கள். சத்திரக்காரர் செய்திருந்த சமையலை விட அவருடைய உபசார வார்த்தைகளும், பேச்சின் சாமர்த்தியமும் அதிக ருசியா யிருந்தன. ஆகவே, மூவரும் வயிறு நிரம்பும்படி சாப்பிட்டார்கள். சாப்

பாடு முடிந்து, சத்திரக்காரரும் அவருடைய மனைவியும் அப்புறப் பட்டவுடன் மூவரும் மீண்டும் சம்பாஷிக்கத் தொடங்கினர்கள்.

அதிகாரம் — 64

சந்நியாசி சம்பாஷணை

"சுவாமிகளே! காம் சற்று முன்பு அன்றிரவு வெள்ளை மாளிகையில் நிகழ்ந்த சம்பவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம் மன்றே? அதன் மூலமாய் எனக்கு இப்போது ஒரு புதிய சந்தேகம் உண்டாகிறது. அஃதாவது, — நம்முடைய இரகசியக் கூட்டத்தில் ஒரு வேலைக்காரனாயிருந்த பிங்கலன் என்பவனும், வெள்ளை மாளிகையிலிருந்து தப்பித்துக் கொண்டு சீவகனோடு வெளிப்பட்டு விட்டானன்றே? அவன் வெள்ளை மாளிகையைப் பற்றிய இரகசியங்களைச் சீவகனிடம் சொல்லியிருப்பானே என்னும் சந்தேகந்தான்" என்று வீரவர்மர் சதானந்தரிடம் கூறினர்.

"பிங்கலன் அவ்விதம் செய்திருக்க மாட்டான் என்றே நான் நம்புகிறேன். ஏனெனில், அவன் செய்து கொடுத்திருக்கும் சத்தியம் சாமானிய மானதன்று. வெள்ளை மாளிகையை விட்டு அப்புறப்பட வேண்டும் என்னும் விருப்பம் அவனுக்கு இருந்திருக்கலாம்; அதற்காக அவன் சீவகனுக்கும் கண்ணகனுக்கும் உதவி செய்திருக்கலாம்; அவ்வளவே ஒழிய வேறில்லை. எப்படிப்பட்ட மனிதனிடமுடையவனும், வெள்ளை மாளிகையில் சேரும்போது செய்து கொடுக்கும் சத்தியத்தை நினைத்தால் உடல் நடுங்குவான். ஆதலால்,

பிங்கலன் சத்தியத்தை மீறி இரகசியத்தை வெளியிட்டிருப்பான் என்று நீர் சிறிதும் நினைக்க வேண்டாம்" என்று சந்தியாசி மொழிந்தார்.

"ஒருகால் சொல்லி யிருந்தானால் —" என்றார் வீரவர்மர்.

"அவ்விதம் சொல்லி யிருந்தால் நாம் உள்ளபடியே பெரிதும் அஞ்ச வேண்டியதுதான். ஏனெனில், சீவகன் நிகும்பனோடு சிநேக பாவமாகவே இருந்து வருகிறான். அவன் நிகும்பனிடம் வெள்ளை மாளிகையைப் பற்றிய இரகசியங்களைக் கூறுவான். நிகும்பன் வெள்ளை மாளிகையையும், பதுமினி மாளிகையையும் உடனே இடித்துத் தகர்த்துத் தன்வசப் படுத்திக்கொள்ள முயல்வான்" என்று சதானந்தர் இணங்கிப் பேசினார்.

"பிங்கலன் சொல்லாவிட்டாலும், சீவகனுக்கு வெள்ளை மாளிகையைப் பற்றிச் சந்தேக மூண்டாயிருக்க வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். வெள்ளை ஸ்திரீயினுடைய முன்யோசனையற்ற நடத்தை சீவகனுக்கு ஏற்கனவே சந்தேகத்தைக் கொடுத்திருக்க வேண்டும். தவிர, சீவகன் தன்னுடைய வேலைக்காரர்களாகிய காடனையும் நாகனையும் வெள்ளை ஸ்திரீ ஏதோ செய்து விட்டாள் என்றும், அதனற்றான் அவர்கள் காணப்படவில்லை என்றும் குறை கூறி யிருக்கின்றான். ஆகவே வெள்ளை ஸ்திரீயினுடைய ஒழுக்கம் கெட்டதென்றும் அவள் கொலைகாரியாக இருப்பினும் இருக்கலாம் என்றும் சீவகன் கருதக் கூடுமென நாம் ஏன் நினைக்கக் கூடாது?" என்று சுசிமுகர் சொன்னார்.

"பிரபுவே, தங்களுடைய இன்னுயிர்க் காதலியாகிய பதுமினி அம்மாளைப் பற்றி நீங்கள் இவ்வளவு தூஷணையாயும், ஆத்திரமாயும் பேசுகின்றீர்களே?"

என்று சதானந்த சாமியார் சுசிமுகரைக் கேட்டார்; கேட்டுவிட்டு வீரவர்மரையும் சுசிமுகரையும் கூர்ந்து கவனித்தார்.

"பதுமினி அம்மாளைப் பற்றிச் சீவகன் எவ்விதம் அபிப்பிராயப்படுவான் என்பதை நான் சொன்னேனே தவிர வேறில்லை. அவன் குந்தி நகரத்தை விட்டுப் போய் விட்டான் என்று சந்நிதானம் சொல்லுகிறது. அவன் தன்னுடைய இரண்டு வேலைக்காரர்களையும் கண்டு பிடிப் பதற்காகவே வெள்ளை மாளிகைக்கு வந்தான். அவர் களைக் கண்டு பிடிக்காமலும், அவர்களுடைய கதி யாதா யிற்று என்பதை அறிந்துகொள்ளாமலும் திடீரென்று புறப்பட்டுப் போனது எனக்கு ஆச்சரியத்தை விளை விக்கிறது. சுவாமிகளே! சீவகன் குந்தி நகரத்திலிருந்து புறப்பட்டுப் போய்விட்டான் என்பதை நீங்கள் நிச்ச யமாய் அறிவீர்களா?" என்று சுசிமுகர் வினவினார்.

"ஓ! நிச்சயமாயறிவேன். கனகராயருடைய விடுதியில் நான் ஒரு வேலைக்காரனை, சீவகனுடைய நட வடிக்கைகளைக் கவனிப்பதற்காக, நியமித்திருந்தேன். அவன் மூலமாய் இவ்வுண்மையை அறிந்தேன். சீவக னுக்கு வெள்ளை மாளிகையைப்பற்றிய இரகசியங்கள் தெரிந்திருந்தபோதிலும், நிகும்பனிடம் அவன் ஏதும் சொல்லமாட்டான். ஏனெனில், அரசியாகிய கமலினி வெள்ளை மாளிகையில் இருக்கிறாள் என்பதை அவன் அறிவான்; ஆதலால் அந்த மாளிகையின் இரகசியங்களை வெளிவிடுவது, கமலினி அரசியை நிகும்பனிடம் காட் டிக் கொடுப்பதற்கு இணையாகும் என்று நினைப்பான்" என்று சதானந்த சாமியார் சொன்னார்.

"ஒரு சமயம் தன்னுடைய வேலைக்காரர்கள் அடைந்த கதியைத் தெரிந்துகொண்டு, அவர்களைக்

கண்டு பிடிப்பதற்காகச் சிவகன் சென்றிருப்பானே?" என்று வீரவர்மர் சந்தேகத்தோடு உசாவினர்.

"இருந்தாலும் இருக்கலாம்; ஆனாலும் அவனுக்கு வழி தெரியாது. ஆகலால் கண்டு பிடிக்கமாட்டான்" என்று சதானந்தர் கூறினர்.

"அவன் எந்த மார்க்கமாய் எங்கே சென்றான் என்பதை நாம் எவ்விதமாவது கண்டுபிடிக்கவேண்டும்" என்று வீரவர்மர் சொன்னார்.

"சிவகன் இந்த வழியாகத்தான் சென்றிருக்க வேண்டும். அவ்விதம் சென்றிருப்பானால், இந்தச் சத்திரத்தில் தங்கிப் போஜனம் செய்துகொண்டுதான் போயிருப்பான். இந்தச் சத்திரத்தின் சொந்தக் காரரை விசாரித்தால் நமக்கு உண்மை புலப்படும்" என்று சுசிமுகர் உரைத்தார்.

"ஆம்; நீர் சொன்னதுதான் சரியான யோசனை!" என்று சதானந்த சாமியார் சுசிமுகரை நோக்கிக் கூறிவிட்டு "ஆம்; கண்ணகியைப்பற்றியும் அறிந்துகொள்ளலாம்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார்: ஏனெனில், சிவானந்த ஆச்சிக்கும் தமக்கும் நிகழ்ந்த சம்பாஷணை முழுவதையும் கண்ணகி மறைந்திருந்து கேட்டுக்கொண்டிருந்தாள் என்று சந்தியாசி கருதினர். ஆனால் அச்சம்பாஷணையில் இரண்டொரு வார்த்தைகளே கண்ணகி காதில் விழுந்தன என்பதை வாசகர்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறார்கள்.

"சுவாமிகளே! நீங்களாக ஏதோ பேசிக்கொள்ளுகிறீர்களே? என்ன சங்கதி?" என்று வீரவர்மர் கேட்டார்.

"ஒன்றுமில்லை; இப்போதே நான் சென்று சத்திரத்தின் சொந்தக்காரரை விசாரிக்கிறேன்" என்று சதா

னந்த சாமியார் சொல்லிவிட்டு அவ்வறையிலிருந்து நீங்கிச் சத்திரத்தின் சொந்தக்காரரிடம் சென்றார்.

"சுவாமிகளே! வரவேண்டும், சாப்பாடு நன்றாயிருந்ததா? தங்களுக்கு ஏதாவது வேண்டுமா?" என்று சத்திரத்தின் சொந்தக்காரர் சதானந்த சாமியாரைக் கண்டவுடன் அன்புடனும் மரியாதையுடனும் கேட்டார்.

"சாப்பாடு நளபாகமாயிருந்தது; இப்படிப்பட்ட சாப்பாடு எத்தகைய சாப்பாட்டு விடுதியிலும் கிடைக்காது. எனக்கு ஒன்றும் வேண்டாம் தங்களுக்குக் கணக்குப் பார்த்துப் பாக்கிப்பணத்தைக் கொடுப்பதற்காகவே வந்தேன். தங்களுக்குப் போதிய வருவாய் கிடைத்துக்கொண்டிருக்கிறதா?" என்று சாமியார் வினவினார்.

"கடந்த இரண்டொருவாரமாய் வருவாய் அதிகமில்லை. ஆனால் நேற்று மூன்றினம் சிலர் இங்கே தங்குவதற்காக வந்தார்கள். அவர்களால் வருவாய் அதிகம் கிடைத்தது. ஆனால், அவர்கள் வந்து தங்கியிருந்த சிறிது நேரத்திற்குள், துயரத்தையும் ஆச்சரியத்தையும் விளைவிக்கக்கூடிய சில சம்பவங்கள் நிகழ்ந்தன. அந்நிகழ்ச்சிகளால் நாங்கள் கவலை பெரிதும் அடைந்திருக்கின்றோம்" என்று சத்திரத்தின் சொந்தக்காரர் துயருற்று உரைத்தார்.

"அத்தகைய சம்பவங்கள் யாவை? தாங்கள் சொல்லுவது என்னுடைய ஆச்சரியத்தைக் கிளறிவிட்டு, விவரமாய் அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆவலை எழுப்பி விடுகின்றதே?" என்று சதானந்தர் புகன்றார்.

"தாங்கள் கேட்பதைப் பார்த்தால், சமாசாரம் இன்னும் சூந்தி நகரத்திற்கு எட்டவில்லைபோல் தோன்

றுகிறதே?" என்று சத்திரத்தின் சொந்தக்காரர் ஆச்சரியத்துடன் கேட்டார்.

"என்ன சமாசாரம்? நீர் சொல்லுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே? விவரமாய்ச் சொல்லும்" என்று ஆவலுடன் சதானந்த சாமியார் கேட்டார்.

"நேற்று முன்தினம் இரவு இந்தக் கட்டிடத்தில் நிகழ்ந்த படுகொலையைப்பற்றிய சங்கதி!" என்று சத்திரக்காரர் சொன்னார்.

"என்ன! படுகொலையா! உம்முடைய சத்திரத்திலா? கொலையுண்டது யார்; கொலைபுரிந்தது யார்?" என்று சந்நியாசி பதைபதைத்துக் கேட்டார்.

"சுவாமிகளே! கொலையுண்டவன் ஒரு வாலிபன், கொலைபுரிந்தவள் ஓர் அழகியபெண்மணி!" என்று சத்திரக்காரர் பதில் பகர்ந்தார்.

"அந்தப் பெண்ணைப் பிடித்து வைத்திருக்கிறீர்களா?" என்று சாமியார் கேட்டார்.

"இல்லை; அவள் தப்பித்துக் கொண்டு போய்விட்டாள். ஆ! அவள் தப்பிப்போனதுதான் மிகவும் ஆச்சரியமானது" என்றார் சத்திரத்தின் சொந்தக்காரர்.

"அவள் எவ்விதம் தப்பித்துச்சென்றாள்?" என்று சந்நியாசி வினவினார்.

"சுவாமிகளே! விஷயத்தை முதலிலிருந்து சொல்ல வேண்டும். அப்போதுதான் உங்களுக்கு உண்மை விளங்கும். நேற்று முன்தினம் மாலை ஆறுமணி சுமாருக்கு இங்கே சிலர் வந்தார்கள். அவர்களுள் ஒருவன் அழகிற்சிறந்த போர்வீரனுக்குக் காணப்பட்டான்; மற்றொருவன் இரும்புக்கவசம் அணிந்து கொண்டும், முக-

த்தை முகமூடியால் மறைத்துக் கொண்டு மிருந்தான் ; இன்னொருவன் சாதாரணமான வேலைக்காரன் போல் தோன்றினான் ; இவர்களைத்தவிர ஓர் அழகிய பெண்மணியும் அவளுடைய தோழிகள் இருவரும் இவர்களோடு வந்தார்கள்'' என்று சத்திரத்தின் சொந்தக்காரர் சொல்லிக் கொண்டுவந்த போதே "ஒரு வாலிபன் மாத்திரம் இரும்புக்கவசம் அணிந்து கொண்டும் முகத்தை முகமூடியால் மறைத்துக் கொண்டு மிருக்கக் காரணம் என்ன ?'' என்று சந்நியாசி இடைமறித்து உசாவினார்.

''அவன் குந்திநகரத்து அரண்மனையில் சிறைசெய்யப்பட்டிருந்த மூன்று பிரபுக்களை விடுதலை செய்துவிட்டு மாறுவேடம்பூண்டு தப்பித்து வந்திருக்கிறான் என்று பிறகு அறிந்தோம்'' என்று சத்திரத்தின் சொந்தக்காரர் பதில் புகன்றார்.

''ஓ ! அப்படியா ? அழகிற் சிறந்த போர்வீரன் ஒருவன் வந்ததாய்க் கூறினீரே ? அவனுடைய பெயர் யாது ? தெரியுமா'' என்று சந்நியாசி வினவினார்.

''சீவகன்'' என்று சத்திரகாரர் இயம்பினர்.

''அவ்விதந்தான் இருக்க வேண்டுமென நான் நினைத்தேன். கொலையுண்ட வேலைக்காரன் பெயர் என்ன ? அவன் சீவகனோடு வந்தவன்தானே ?'' என்று உசாவினார் சந்நியாசி.

''ஆம், சீவகனைச் சேர்ந்தவன்தான். அவன் பெயர் பிங்கலனும்'' என்று சத்திரக்காரர் நவின்றார்.

''ஆ ! சிவமே; இஃது ஆச்சரியம் ! — ஆச்சரியம் !'' என்று சந்நியாசி வாய்விட்டு உரக்கக் கூவினர்.

''சுவாமிகளே ! கொலையுண்ட வாலிபனைத் தாங்கள் அறிவீர்களோ ?'' என்று சத்திரக்காரர் கேட்டார்

"ஆம்; அந்த வாலிபன் எனக்கு அறிமுகமான வன்தான்! பாவம்! அநியாயமாய் இறந்து போனான். அவனைக்கொன்றவள் ஓர் அழகிய பெண் என்று கூறினீரே? அவளுடைய பெயர்யாது?" என்று சதானந்தர் கேட்டார்.

"அவளுடைய பெயர் சுமுகி; அவள் பிரசித்தி பெற்ற பூதகியின் சகோதரியாம்" என்று சத்திரக்காரர் விடை இறுத்தார்.

"சுமுகி! பூதகியின் சகோதரி!" என்று சாமியார் தனக்குள் சொல்லிக்கொண்டு "அவள் சிவகேனுடு பிரயாணம் செய்தாள்; கொலைசெய்து விட்டுத் தப்பித்துக்கொண்டாள்! ஆ! என்ன ஆச்சரியம்!" என்று சத்திரக்காரரை நோக்கி வியந்து கூறினர்.

"ஆம்; உண்மைதான்! நல்லது; சுவாமிகளே! உங்கள் முகத்தில் காணப்படும் மாறுதல்களை நோக்கும்போது அவர்கள் உங்களுக்கு வேண்டியவர்களோ என்று சந்தேகிக்க இடமுண்டாகிறது" என்று சத்திரக்காரர் சொன்னார்.

"இல்லை; அவ்விதம் சந்தேகிக்கவேண்டாம். அவர்களை நான் இரண்டொருமுறை பார்த்திருக்கிறேன். அவ்வளவே ஒழிய வேறில்லை. ஐயா, சுமுகி என்பவள் பிங்கலனை ஏன் கொன்றாள்? அவள் எவ்விதம் தப்பித்துச் சென்றாள்? எல்லா விஷயங்களையும் எனக்குச் சாங்கோபாங்கமாய் எடுத்துரையும்" என்று சதானந்த சாமியார் சத்திரத்தின் சொந்தக்காரரை வேண்டினர். சத்திரக்காரரும் அன்று நடந்த சம்பவங்களை விவரமாய்க் கூறினர்.

சதானந்தருடைய வேண்டுகோளுக்கு இணங்கிச் சத்திரத்தின் சொந்தக்காரர் எல்லா விவரங்களையும்,

முன்பு நியாயாதிபதியிடம் வாக்கு மூலம் கொடுத்தது போலவே, எடுத்துக்கூறினர். அந்த விவரங்கள் இக் கதையின் அறுபதாம் அதிகாரத்தில் நன்கு பொறிக் கப்பட்டிருக்கின்ற வாதலால், மீண்டும் சுண்டுக் கூறாது விட்டோம். சத்திரக்காரர் எல்லா விவரங்களையும் சொன்னபிறகு "ஆ! அந்த இரண்டு சகோதரிகளைப் பற்றிய விஷயம் எனக்கு இனி ஆச்சரியத்தை விளைவியாது. இப்போது எனக்கு உண்மை விளங்கிவிட்டது. தேவகியே, உன்னுடைய சூழ்ச்சி புகழ்ச்சிக்குரியதே!" என்று சதானந்தர் தமக்குள்ளேயே சொல்லிக்கொண்டு இருக்கையிலிருந்து எழுந்தார்.

"சுவாமிகளே! இன்னொரு சம்பவம் நிகழ்ந்தது; அதனைக் கூறுதற்கு நான் மறந்து போனேன். இரும்புக்கவசம் அணிந்திருந்த வாலிபன் குற்றவாளியாகப் பிடிக்கப்பட்டான்" என்று சத்திரக்காரர் கூறினர்.

"அப்படியானால் அவன் இப்போது கைதியாக இருக்கின்றனனா என்ன?" என்று சந்நியாசி ஆவலோடு கேட்டார்.

"இல்லை; குந்தி நகரத்து அரண்மனையில் கைது செய்யப்பட்டிருந்த மூன்று பிரபுக்களை விடுவித்த குற்றத்திற்காக அந்த வாலிபனைப் பிடித்தார்கள். ஆனால், நியாயாதிபதி விசாரித்துச் சிறுதொகையான அபராதம் மாத்திரம் விதித்தார். அந்த அபராதத்தையும் சிவகன் அவனுக்காகச் செலுத்தினர். பிறகு அந்த வாலிபன் சிவகனோடு பிரயாணமானான்" என்று சத்திரத்தின் சொந்தக்காரர் சொன்னார்.

"அந்த வாலிபன் யார் என்பதைச் சிவகன் அறிவனோ?" என்று சதானந்தர் கேட்டார்.

"சிவகனுக்குத் தெரியாதென்றே நான் நினைக்கி றேன். ஏனெனில், தன்னைப் பற்றி நியாயாதிபதியிடம் ஏதோ கூறிய அந்த வாலிபன் சிவகனிடம் ஏதுமே கூற மறுத்து விட்டான்" என்று சக்திரத்தின் சொந்தக் காரர் பதில் அளித்தார்.

"சரி; நேரமாகிறது! நாங்கள் எங்களுடைய பிர யாணத்தைத் தொடர்ந்து செல்லவேண்டும். ஆதலால், உமக்கு இன்னும் எவ்வளவு பணம் சேரவேண்டும் என் பதைத தெரிவியும்" என்று சதானந்தர் கேட்டார்.

சக்திரக்காரர் தமக்குச் சேரவேண்டிய பணம் இவ் வளவென்று தெரிவிக்கவே, அத்தொகையை அவரிடம் கொடுத்துவிட்டு சதானந்தசாமியார், வீரவர்மரையும் சுசிமுகரையும் சந்திப்பதற்குச் சென்றார்.

"சுவாமிகளே! தாங்கள் சென்று நெடுநேரமா யிற்றே? இவ்வளவு நேரம் தங்களுடைய கவனத்தைக் கவர்ந்திருந்த சம்பாஷணை எத்தகையதென அறிவ தற்கு நாங்கள் விரும்புகின்றோம்" என்று சுசிமுகர் சொன்னார்.

சதானந்த சாமியார் அவருடைய கேள்விக்குப் பதில் சொல்லுவதற்குள், சத்திரக்காரர் இவர்கள் மூவ ரும் இருந்த அறைக்கு வந்தார். அவரைக் கண்ட வுடன் சாமியார் ஆச்சரியம் பெரிதுங்கொண்டவராய் "ஐயா, எங்கே வந்தீர்கள்? இன்னும் தங்களுக்கு ஏதா வது பணம் சேரவேண்டுமா? அல்லது வேறு விசே ஷம் ஏதேனும் உண்டா?" என்று வினவினார்.

"எனக்குப் பணம் இனிச்சேர வேண்டியதில்லை. அச்சத்தினை விளக்கக் கூடிய ஒரு செய்தி இப்போது வந்திருக்கிறது. பாஞ்சால தேசத்தின் அரசாங்கத்

திற்கு விரோதமாய் நிகும்பனுடைய கட்சியார் யுத்தம் செய்வதற்குச் சித்தமாய் விட்டார்களாம். போர்ப் பறை குந்தி நகரத்திலும், சுற்றுப்புற ஊர்களிலும் சாற் றப்பட்டிருக்கிறதாம். குந்தி நகரத்திலிருந்து வந்த தூதன் ஒருவன் இவ்விஷயத்தை இப்போது எனக்குத் தெரிவித்தான்" என்று சத்திரக்காரர் மிகுந்த கவலை யுடனும் அச்சத்துடனும் கூறினர்.

"என்ன! நிகும்பன் தன்னுடைய முயற்சியை இவ்வளவு தூரம் கொண்டுவந்து விட்டானா, என்ன?" என்று சந்நியாசி ஆச்சரியத்தோடு கேட்டார்.

"சுவாமிகளே! இரைந்து பேசாதீர்கள்! ஏனெ னில், என்னிடம் வேலைபார்ப்பவர்களுள் சிலர் திருத் தக் கட்சியைச் சேர்ந்தவர்களா யிருக்கிறார்கள்; அவர் கள் நிகும்பனுக்கு உதவி செய்யவும் கருதி யிருக்கிறார் கள். அவர்களுள் யாராவது நாம் பேசிக்கொள்வதைக் கேட்டு விடுவார்களானால் நமக்கு அபாயம் விளையும்" என்று சத்திரக்காரர் மிக மெல்லிய குரலிற் கூறினர்.

"குந்தி நகரத்திலிருந் திங்கு வந்துள்ள தூதன் என்ன சொன்னான்?" என்று சதானந்தர் மெதுவாய்க் கேட்டார்.

நிகும்பன் குந்தி நகரத்தில் படைகளைத் திரட்டி அணிவகுத்துப் பரிட்சை பார்த்தானும். இச்சம்பவம் நேற்று நிகழ்ந்ததாம். நேற்றே யுத்தம் தொடங்கு வதாக அறிவித்து விட்டானும்" என்று சத்திரக்காரர் சொன்னர்.

"ஓ! அப்படியானால் தேசம் முழுவதும் பெருங் குழப்பம் உண்டாகும். ஏனெனில், இந்த யுத்தம் பிர புக்கள் கட்சிக்கும் பொதுஜனங்கள் கட்சிக்கும், ஏகாதி

பத்தியத்திற்கும் ஜைநிபத்தியத்திற்கும் நேர்ந்துள்ள யுத்தமாயிருப்பதோடு சைவ மதத்திற்கும் சாக்கிய மதத்திற்கும் நேர்ந்துள்ள யுத்தமாயும் இருக்கிறது. ஆதலால், இலேசிலே முடிவு பெறாது. மதப்போர் தேசத்திற்குப் பெருங் கேடு விளைவிக்கும் என்பதை நாம் சரித்திரங்கள் மூலமாய் அறிந்திருக்கிறோம்" என்று சதானந்தர் கூறி, மீண்டும் சத்திரக்காரரை நோக்கி "ஐயா, சுழுகியோடு இரண்டு தோழிப் பெண்கள் இருந்தார்கள் என்று கூறினீரே? அவர்களுடைய கதி யாதாயிற்று?" என்று வினவினர்.

"அவர்கள் இருவரும் சிவகணேஷ் தெற்கு நோக்கிப் பிரயாணம் செய்தார்கள்" என்று சத்திரக்காரர் பதில் பகர்ந்தார்.

"அப்படியா! சரி; நான் கேள்விப்படும் ஒவ்வொரு விஷயமும் நான் கொண்ட சந்தேகம் பிழையன்று என்பதைப் பலப்படுத்துகிறது" என்று சந்நியாசி உரக்கக் கூறி மீண்டும் தம் வாய்க்குள்ளேயே "சுழுகியே! உன்னுடைய சூழ்ச்சிகள் எனக்கு விளங்கிவிட்டன. நிகும்பனுடைய பாதுகாப்பில் நீ இருந்தபோதிலும், பெண்களுக்கு இயல்பாக இருக்கும் சாகசம் முழுவதையும் நீ காட்டி நடித்துவந்த போதிலும் உன்னை நான் விடப் போகிறதில்லை. பழிக்குப்பழி வாங்காவிட்டால் நான் சதானந்த சாமியாராவேனா?" என்று சொல்லிச் சபதம் செய்துகொண்டார்.

"ஐயா, நாங்கள் பிரயாணப்படவேண்டும்; குதிரைகளைக் கொண்டுவரும்படி சொல்லவேண்டும்; எங்களுடைய ஆட்களை எல்லாம் பிரயாணத்திற்குத் தயாராயிருக்கும்படி சொல்லுங்கள்" என்று சுசிமுகர் சத்திரக்காரரிடம் சொன்னர்.

"இன்னும் ஐந்து நிமிஷத்திற்குள் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிக்கிறேன்" என்று சத்திரக்காரர் கூறிவிட்டு அவ்விடமிருந்து நீங்கினர்.

அவர் சென்றபிறகு சுகிமுகர் சதானந்தரை நோக்கி "சுவாமிகளே! சத்திரக்காரருடன் நீங்கள் பேசிக்கொண்டிருந்ததினால் என்ன என்ன உண்மைகள் தெரியலாயின?" என்று உசாவினர்.

"அவர் சொன்ன விஷயங்களை முற்றும் கூறுவதற்கு அவகாசம் இல்லை; சுருக்கமாய் இரண்டொரு விஷயங்கள் சொல்லுகிறேன். முதலாவதாக, சிவகனைப் பற்றி நாம் சிறிதும் அஞ்சவேண்டுவதில்லை; அவனால் எத்தகைய இன்னலும் நமக்கு நேராது; அவன் இப்பக்கத்தில் இல்லை. இரண்டாவதாக, சிவகன் நேற்று மூன்றினம் இரவு இங்கே வந்து தங்கியிருந்துவிட்டு நேற்றுப்பகல் இரண்டு மணி சுமாருக்கு இந்தச் சத்திரத்திலிருந்து புறப்பட்டுத் தெற்கு ரஸ்தாவழியாய்ப் போயிருக்கிறான்; அவனை நாம் பின்தொடர்ந்து பிடித்து விடலாம். மூன்றாவதாக, சுமுகி என்னும் பெண் ஒருத்தியினால் நம்முடைய நோக்கங்கள் நிறைவேறுமற்போயின. அவளை நீங்கள் அறிந்திருப்பினும் இருக்கலாம். அல்லது அவளைப் பற்றிக் கேள்வியுற்றுவது இருப்பீர்கள்; அவள் கூடிய சீக்கிரத்தில் வெண்கலச்சிலைக்கும் கன்னியின் மூத்தத்திற்கும் பாத்திரமாவாள். நான்காவதாகப், பாஞ்சாலதேசத்திலுள்ள பிரபுக்களையும் அவர்களுடைய அகம்பாவத்தையும் அடியோடு வேரறுத்துத் தன்னுடைய ஜைத்ரபத்தியக் கொடியை நாட்டுவதாக நிகும்பன் கங்கணங் கட்டிக்கொண்டு யுத்தத்திற்கு ஆரம்பித்து விட்டான். இவ்வளவுதான். இன்று நாம்

அறிந்துகொண்ட முக்கியமான விஷயங்களாகும்'' என்று சதானந்தர் எடுத்துரைத்தார்.

''இச்சமயத்தில் சத்திரக்காரர் சிற்றுண்டியும் பாலும் கொண்டுவந்து மூவருக்கும் கொடுத்தார்.

''ஸ்திரீகளுக்கு சிற்றுண்ணி அளிக்கப்பட்டதா?'' என்று சதானந்தர் வினவினர்.

''ஓ! அவர்கள் எல்லோரும் சாப்பிட்டுவிட்டார்கள். பிரயாணத்திற்கும் தயாராயிருக்கிறார்கள்'' என்று சத்திரக்காரர் பதிலளித்துவிட்டு வெளியே சென்றார்.

''சுவாமிகளே! நீங்கள் இவ்வளவு சங்கதிகளையும் சொற்ப நேரத்திற்குள் எவ்விதம் அறிந்துகொண்டீர்கள்'' என்று வீரவர்மர் வினவினர்.

''விவரமாய்ப் பேசுவதற்கு, நேரம் இது வன்று. குதிரைகள் தயாரா இருக்கின்றன; நாம் புறப்படவேண்டும்'' என்று சாமியார் சொன்னார்.

''ஆமாம்; நிகும்பன் யுத்தபேரிகை அடித்திருக்கிறான் என்னும் செய்தி நம் காதில் விழுந்தபிறகும் நாம் இங்கே தாமதித்தல் சரியன்று. எவ்வளவிற் கெவ்வளவு சீக்கிரமாய் நாம் கேசரிக் கோட்டை போய்ச் சேருகிறோமோ அவ்வளவிற் கவ்வளவு நல்லது'' என்று சுசிமுகர் கூறினார்.

''ஆமாம்; நீர் சொல்லுவது சரிதான்'' என்று வீரவர்மரும் இணங்கிப் பேசினார்.

''நிகும்பனைப்பற்றி உங்களுக்கு இவ்வளவு அச்சம் இருக்குமென்று நான் நினைக்கவில்லையே?'' என்று சந்நியாசி ஏளனமாய்க்கூறி ''பிரபுக்களே! உங்களுடைய விருப்பத்தை நான் ஏன் கெடுக்கவேண்டும்; இப்

போதே புறப்படுங்கள்" என்று சதானந்தர் சொன்னார்.

சிறிது நேரத்திற்குள் எல்லோரும் புறப்பட்டார்கள். முன்போலவே சவப்பெட்டி, நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியின்மேல் வைக்கப்பட்டது. ஸ்திரீகளும் புருஷர்களும் முன்போலவே பந்திபந்தியாய் நின்றார்கள். சதானந்த சாமியார் உத்தரவு கொடுத்தவுடன் பிரேத ஊர்வலம் மெதுவாகச் சத்திரத்திலிருந்து செல்ல ஆரம்பித்தது. அக்கூட்டத்தார் செல்லுவதைச் சத்திரக்காரரும் அவருடைய மனைவியும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்திற்குள் சவப்பெட்டி அடங்கிய வண்டியும், அதனோடு சென்ற பரிவாரமும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தன.

அதிகாரம் — 65

சைனிய பரிசோதனை

ஆம்,—உண்மைதான்! நிகும்பன் பாஞ்சால தேசத்துப் பிரபுக்களுக்கும் அரசாங்கத்திற்கும் விரோதமாய் யுத்தம் தொடங்கிவிட்டான் என்றும், அவன் தன்னுடைய சைனியங்களைக் குந்தி நகரத்தில் பரிசீலனை செய்தான் என்றும் சத்திரத்தின் சொந்தக்காரர் கேள்வியுற்றது உண்மைதான்!

குந்தி நகரத்துக்குப் புறத்தே, அகன்றதொரு பச்சைக்கம்பளம் விரித்திருப்பதுபோல் காணப்பட்ட, பசும்புற்றரையில் நிகும்பன் தன் படை வீரர்களை வரிசையாக நிறுத்திப் பரிசீலனை செய்த மாட்சியை ஒரு சிறிது எடுத்துரைப்போம்.

வசந்த காலத்து மாலை நேரம்; தென்றற் காற்று மெல்லென வீசிற்று; புட்குரலொலிகள் இனிமையாய்க் கேட்டன; வயற்கரையிலுள்ள வாய்க்கால்களில் நீரினைத் தேக்குவதற்காக உழவர்கள் படலிட்டார்களேனும், அதினின்றும் குதித்து வழியும் புனலோசையும், ஆங்காரைத் தங்கள் தங்கள் வயல்களிற் பாய்ச்சுவதற்காக மிராசுதாரர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டதனு லெழுந்த பேரிரைச்சலும் காருங் கருங்கடலும் சேர்ந்து முழங்குவதை ஒத்தன. மாலைக் கதிரவன், பொன்னிற மதியம்போல் மேற்றிசையில் மறைந்து, அடர்ந்த மரங்களுக்கு இடையிலே விட்டு விட்டுக் காணப்படும் சிறுவெளிகளின் வழியாய் மறைந்து நின்று நிகும்பனின் சைனியங்களைக் காண விரும்பியவனைப்போல் வசீகரமாய்த் தோன்றினன். இத்தகைய அழகிய மாலைக்காலத்தில், சற்றேறக் குறைய இருபதினாயிரம் போர் வீரர்கள் மைதானத்தில் கூடியிருந்தால், அக்காட்சி அற்புதக்காட்சியா யிராமல் வேறு எவ்விதமிருக்கும்?

போர்வீரர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான உடையணிந்திருந்தார்கள். அவர்கள் தங்களுடைய தலையில் நீலநிறப் பட்டினாலாய தலைப்பாகை சூடியிருந்தார்கள்; அப்பாகையின் மத்தியில் வெள்ளியினால் அம்புபோல் செய்யப்பட்ட தகடு செருகப்பட்டிருந்தது; தகட்டின் முன்புறத்தில் 'சாக்கியன் புகழ் பெருகுவதாக' என்று பொறிக்கப்பட்டிருந்தது. உடம்போடு ஒட்டியிருக்கும்படியான மேற்சட்டை,— தூய்மையான செந்நிற முடையது,— அவர்கள் தரித்திருந்தார்கள். இடுப்பிலிருந்து முழந்தாள் வரையிலும் வெண்பட்டாலாகிய காற்சல்லடங்களை இறுக அணிந்

திருந்தார்கள். முழந்தாள் முதல் உள்ளங்கால் முடிய மறைந்திருக்கும்படி கரியநிறக் காலாசுகள் இட்டிருந் தார்கள். இடுப்பில் கச்சை வரிந்துகட்டி யிருந்தார் கள். அவர்களுடைய கைவிரல்களையும் உள்ளங்கை, புறங்கைகளையும் மறைத்துக்கொண்டிருந்த விரலாசு கள் முன்கை வரையில் வந்திருந்தன. இடுப்பின் வலப் புறத்தில் கீண்டுவளைந்த கத்திகள் கண்கள் கூசும்படி பிரகாசித்துக்கொண்டிருந்தன. இடக்கையில் வில் லும் வலக்கையில் அம்பும் பிடித்தவர்களாய் அவர்கள் நின்றார்கள். தோளின் பின்புறத்தில் அம்பறாத் தூணி கள் தொங்கின; அவைகளில் அம்புகள் ஏராளமாய்ச் செருகப்பட்டிருந்தன. இப்போர்வீரர்களுள் சிலர் குதிரைகள் மீது ஆரோகணித்தபடியும், வேறு சிலர் யானைகள் மீது ஏறியபடியும் வரிசையாக நின்றார்கள். ஏனையோர் காலாட்படைகளைச் சேர்ந்தவர்களாவார் கள். இவர்களை அணிவகுத்து நிகும்பன் நிறுத்தினன்; உடனே சங்கம் முழங்கின; முரசொலித்தன; பேரி கை இடித்தன. 'சாக்கியம்' என்று எழுதப்பட்டிருந்த கொடி உயரத் தூக்கப்பட்டது. இவ்வீரர்கள் படைக் கலம் பயில்வதைக் கண்ணுறுவதற்கு நகரத்து ஜனங் கள் ஏராளமாய்க் கூடியிருந்தார்கள். இப்பெருஞ் சேனையின் மத்தியில் நிகும்பன் கம்பீரமாய் நின்று கொண்டு படைக்கலம் பயிற்றுவித்த மாதிரியையும், இராணுவவீரர்கள் எல்லோரும் அவனுடைய கட்ட ளைக்குக் கீழ்ப்படிந்து போரியற்றிய மாதிரியையும் பொது ஜனங்கள் கண்டு வியந்தார்கள். சற்றேறக் குறைய இரண்டு மணிநேரம் சைனியங்கள் போர் செய் தன. யுத்தவீரர்கள் நன்றாய்ப் பழகியிருக்கிறார்கள் என்றும், அவர்கள் போர்க்களத்தில் எதிரிகளோடு சாமர்த்தியமாயும் தைரியமாயும் யுத்தம் செய்வார்

கள் என்றும் நிகும்பன் இனிதறிந்து கொண்டான்; யுத்தத்தில் தனக்கு வெற்றிகிடைக்கும் என்னும் நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டது. உடனே படைக்கலம் பயில்வதை நிறுத்திவிட்டு யுத்தவீரர்களையும் வேடிக்கை பார்க்க வந்திருந்த பொது ஜனங்களையும் அமைதியாக இருக்கும்படி செய்து அவர்களை நோக்கிப் பின் வருமாறு நிகும்பன் பேசலானான்:

"என் அரிய சகோதரர்களே! அருமைச் சிநேகிதர்களே! சாக்கிய புத்திரர்களே! நீங்கள் என்னுடைய மனத்தை நன்றியறிதலோடு கூடிய பெருமகிழ்ச்சியினாலும், உற்சாகத்தோடு கூடிய உள்ளக்கிளர்ச்சியினாலும் நிரப்பி யிருக்கிறீர்கள். நான் இங்கே வந்த போது இடி முழக்கம் போன்ற கரகோஷத்துடன் நீங்கள் என்னை வரவேற்று உபசரித்து மரியாதை செய்தீர்கள். அஃது ஒன்றே உங்களுடைய ஆன்ம உணர்வும் என்னுடைய ஆன்ம உணர்வும் ஒன்றுபட்டிருக்கின்றன என்பதை அறிவிப்பதற்குப் போதிய சான்றாகும். என்னுடைய இருதயம் உங்களுடைய இருதயத்திற்கு இணங்க அடித்துக் கொண்டிருக்கிறது. இதனால் உங்களுடைய எண்ணமும் என்னுடைய எண்ணமும் ஒன்றே என்பது இனிது புலனாகவில்லையா? பெரிய காரியங்களைச் சாதிப்பதற்கும் ஆச்சரியகரமான மாறுதல்களை உண்டாக்குவதற்கும் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிற ஆயுதம் நீங்களே ஆவீர்கள்! மூடியணிந்த அரசர்களின் கொடிய ஒழுக்கங்களும், செல்வம்பெருத்த பிரபுக்களின் அருவருப்பான செயல்களும், சுயநலம் கருதிய மதபோதகர்களின் முறை பிழம்ந்த நடத்தைகளும் நம்முடைய ஜனசமூகத்திற்குப் பலவகையான இன்னலியற்றிப் பொது ஜனங்களுடைய

சுகத்தையும் சுதந்தரத்தையும் பாழ்படுத்தி விட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆதலால், அவர்களுடைய அகங்காரத்தையும் மமதையையும் அடியோடு ஒழித்து, ஜனசமூகத்தினை உன்னத நிலைமைக்குக் கொண்டுவர வேண்டியது உங்களுடைய கடமையேயாகும். அந்தக் கடமையைக் கத்தியினாலும் வாளாயுதத்தினாலும் நிறைவேற்ற முடியுமேயன்றி, வேறு வகையால் நிறைவேற்ற முடியாது என்பதை உங்களுக்கு நான் சொல்ல வேண்டுவதில்லை. துன்பத்தின் மேல் துன்பம் வந்து சூழ்வதைக் கோடிக்கணக்கான ஜனங்கள் உணர்ந்திருக்கிறார்கள், — அனுபவித்திருக்கிறார்கள்! கஷ்டத்தின் மேல் கஷ்டம் நேருவதை இலட்சக்கணக்கான மனிதர்கள் அறிந்திருக்கிறார்கள், — பார்த்திருக்கிறார்கள்! இவ்வளவு துன்பங்களையும் கஷ்டங்களையும் பொது ஜனங்கள் அனுபவிப்பதற்குக் காரணம் யாது? கோல்முறை பிறழ்ந்த அரசும், கருணையற்றசெல்வமும், சத்தியமற்ற மதபோதனைகளுமே காரணம்! எண்ணிறந்த போர்வீரர்களை யுத்தகளத்தில் மடியச்செய்து, — மனித இரத்தத்தைச் சமுத்திரம் போல் யுத்தகளத்தில் பெருக்கச்செய்து — தேசங்களையும் சிம்மாசனங்களையும் தங்களுக்கு உரிமையாக்கிக் கொள்ளும் அரசர்கள், பொதுஜனங்களுடைய உதவியினாலேயே அப்பெரும்பதவி தங்களுக்குக்கிடைத்ததென்பதைச் சிறிதாவது உணருகிறார்களா? பொதுஜனங்களாகிய நீங்கள் இரத்தம் சிந்தாவிட்டால் அரசனுக்கு இராச்சியமேது? சிம்மாசனம் ஏது? நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி உழைக்கும் நீங்கள் பணம் கொடுக்காவிட்டால் அரசனுக்குச் செல்வமேது? சுகபோகங்கள் ஏது? தாங்கள் செல்வத்திற் சிறந்த பிரபுக்களாயிருக்கிற ஒரு காரணத்தை வைத்துக்கொண்டு, ஏழை எளியவர்களைத்

தங்களுடைய அடிமைகளைப்போல்பாவித்து அவர்களைக் கொடுமையாய் நடத்தியும். உலகத்திலுள்ள எல்லா வகையான சுகபோகங்களும் தங்களுக்கே உரியன என்னும் பிறழ்ந்த உணர்ச்சியிலல் ஏனைய ஜனங்கள் சுக மனுபவித்தால் அவர்களுக்குப் பலவகையான துன்பங்கள் புரிந்தும், துன்புறுகிறவர்களைக் கண்டு சிறிதும் மனமிரங்காமல் மகிழ்ச்சியுற்றும், 'செருக்கு' என்னும் படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் தனவந்தர்களுக்கு நீங்கள் உதவி செய்யாவிட்டால், அவர்கள் கதி யாதாகும்? அவர்களுடைய செல்வமும் செருக்கும் பாழடைந்து போகாவோ? உங்களாற்றானே அவர்களுக்குக் கௌரவமும் அதிகாரமும் ஏற்படுகின்றன. இவ்வுண்மையை உணர்ந்து பிரபுக்கள் உங்களிடம் அன்புரிமையோடும் தயாளகுணத்தோடும் நடந்து கொள்ளுகிறார்களா? இல்லையே! மதபோதகர்களாகிய சன்னியாசிகளுக்கும், சமய பாதுகாவல்களாகிய மடாதிபதிகளுக்கும் நீங்கள் வரைகடந்த மதிப்பும் மரியாதையும் செலுத்திவருகிறீர்கள். அவர்களுக்கு ஏராளமான காணிக்கை செலுத்துகிறீர்கள். அவர்களுடைய வார்த்தையை வேதவாக்காக மதித்து நடக்கிறீர்கள். ஏராளமான நிலங்களையும், சொத்துக்களையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் அவர்களுடைய ஒழுக்கமும் செயலும் எவ்விதமிருக்கின்றன? உங்களுடைய ஆன்மாவைப் பரிசுத்தப்படுத்துவது, உங்களுடைய அறிவை விருத்தி செய்யுவது, உலகத்தில் சமயஞானத்தைப் பரப்புவதற்காவது அவர்கள் ஏதாவது முயற்சி செய்கிறார்களா? இல்லையே! தங்கள் வசத்தில் பொது ஜனங்களால் விடப்பட்ட ஏராளமான தருமசொத்துக்களை மூறை பிறழ்ந்த வகையில் விரயஞ்செய்து பழியையும் பாவத்தையும் தேடிக் கொள்ளுகிறார்கள். கூற்றினுங்கொடிய

விலைமாதர்களுக்குக் கொடுத்தும், சூதிலும் கொலையிலும் கள்ளிலும் சாராயத்திலும் ஏராளமாய்ச் செலவிட்டும் இந்த மடாதிபதிகள் தருமசொத்துக்களை அழிக்கிறார்கள். இவர்களுடைய சந்நியாசகோலம் குலமாதர்களின் கற்பை வலிந்து கெடுப்பதற்குப் பயன்படுகிறதே தவிர வேறில்லை. தங்களுடைய தீய ஒழுக்கங்களும், கொடிய எண்ணங்களும் பயிரங்கத்திற்கு வராதிருக்க வேண்டி, பலவகையான உற்சவாதிகளை நடத்தி, அவைகளை முன்னிட்டு வரும் அதிகாரிகளுக்கும் பிறருக்கும் சம்மானமாகிய லஞ்சத்தைக் கொடுக்கிறார்கள். இம்மாதிரியான முறை பிறழ்ந்த செலவுக்கு நீங்கள் கொடுத்த தருமசொத்துக்கள் பயன்படுகின்றனவே தவிர வேறில்லை! இவர்கள்தானே மடாதிபதிகள்! இவர்கள் தானே மதபோதகர்கள்! இவர்களுடைய தீய ஒழுக்கங்களை நிறுத்தவேண்டுவது உங்களுடைய கடமையன்றோ? சகோதரர்களே! நீங்களே நன்றாய் ஆலோசித்துப் பாருங்கள்! இவர்களை எல்லாம் அடக்கி, நம்முடைய சுதந்தரத்தையும் தற்பெருமையையும் நிலைநாட்ட வேண்டுமானால், நாம் கையில் வாளெடுத்துக்கொண்டு அமர்க்களத்திற்குச் செல்லவேண்டுவதுதானே? வேறு வழி இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

"பொறுமையாக நாம் இருக்கவேண்டுமென்று நீங்கள் ஒருகால் நினைப்பீர்கள், 'பொறுத்தார் பூமியாள்வார்' என்னும் பழமொழி உண்மைதான். ஆனாலும், பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. அந்த எல்லையைக் கடந்து பொறுமை செல்லுமானால், அது பெருங்குற்றமேயாகும். இச்சமயத்தில், — தேசத்தின் நிலைமை இவ்வளவு தூரம் சீர்கெட்டுப் போனபிறகு, — பொறுமையை நாம் கைகொள்ளுவோமானால், 'பொறுமை'

என்னும் அப் பதம் 'பலவீனம்' என்னும் பொருளை நம் முடைய விரோதிகளுக்குக் கொடுக்குமே தவிர வேறில்லை. தேசத்தில், வலிமை யுடையவர்களென்றும், செல்வம் படைத்தவர்கள் என்றும், அதிகாரம் வாய்ந்த வர்கள் என்றும், பெரிய மனிதர்கள் என்றும் கருதப் படுகிற மாக்கள் உங்களைத் தங்களுடைய காலின் கீழிட்டு நசுக்கி, உங்களுடைய செல்வங்களைக் கொள்ளை யிட்டு, உங்களுடைய சுதந்தரத்தை வேரோடு களைந்து தங்களுடைய பேராசையைப் பூர்த்திசெய்துகொள்ளு கிறார்கள். அவ்விதம் பிருக்கும்போது உங்களுடைய உரிமையையும் சுதந்தரத்தையும் ஸ்தாபித்துக்கொள்ள நீங்கள் முன்வராவிட்டால், உலகத்திலுள்ள ஏழை எளி யவர்களுடைய சாபங்கள் உங்களைத்தான் பீடிக்கும். ஏனெனில், கடவுளுடைய சட்டமும், இயற்கையின் சுபாவமும், மனிதனுடைய பகுத்தறிவும், அரசர்களும் பிரபுக்களும் மடாதிபதிகளும் மதபோதகர்களும் ஏற் படுத்தியுள்ள சட்டங்கள் நியாயமற்றவை என்பதை இனி தறிந்து அவைகளோடு போராடுகின்றன. இவர் களுடைய சட்டங்களால், பலர் சிலருடைய அடிமைக ளாகிறார்கள்; இந்தச் சிலரும் மனித சமூகத்திற்கே பேரவமானத்தையும் இழிவையும் விளைவிக்கக்கூடிய அவ்வளவு கொடியவர்களா யிருக்கிறார்கள். எல்லா அதி காரங்களையும் எல்லாச் சுதந்தரங்களையும் இச் சிலரே வகித்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் — தேசத்தி லுள்ள பெரும் பகுதியான விளை நிலங்களைத் தங்களுக் குள்ளேயே பங்கிட்டுக் கொள்வதோடு அமையாது, — தங்களுடைய ஜீவிய தசைக்குப் பிறகு தங்களுடைய புத்திரர்களுக்கும் அவர்கள் காலத்திற்குப் பிறகு அவர் களுடைய புத்திரர்களுக்குமாக இப்படியே பரம்பரை வாரிசு பாத்தியமும் ஏற்படுத்தி விடுகிறார்கள். இதனால்,

அவர்களுடைய செல்வம் நாளடைவில் பெருகவும், கோடிக்கணக்கான ஏனைய ஜனங்கள் உண்ண உணவின்றியும் இருக்க இடமின்றியும் வருந்தவும் நேருகிறதன்றோ? இவர்களும் இவர்களுடைய சந்ததியார்களும் தங்களுடைய செல்வத்தையும் செல்வாக்கையும் தற்காத்துக் கொள்ளுவதற்காகக் கத்தியை உபயோகித்து வந்திருக்கிறார்கள். ஆதலால் இப்போது நீங்கள் கத்தியின் வலிமை கொண்டே இவர்களை அடக்கவேண்டும். நூற்றாண்டுகளாக இருந்துவரும் இக்கொடிய வழக்கத்தை அறவே களைய வேண்டியது உங்களுடைய கடமையாகும். உங்களுடைய முன்னோர்கள் தங்களுடைய அறியாமையினால் அடிமைகளைப்போல் இருந்தால், அவர்களைப்போல் நீங்களும் இருக்கவேண்டுமென்பது என்ன நியாயம்? ஒரு தலை முறையில் இருப்பவர்கள் இன்னொரு தலைமுறையில் வருகிறவர்களைக் கட்டுப்படுத்துக் கூடுமா? பூமி, அதில் வசிக்கும் எல்லோருக்கும் சொந்தமானது. ஆதலால், உலகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் நிலத்தில் உற்பத்தியாகும் விளைபொருள்களை அனுபவிப்பதற்கு உரியவனேயாவான். எத்தனையோ ஏழைகள் உண்பதற்கு உணவின்றிப் பசியாலும் பட்டினியாலும் வருந்துகிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் போதுமான உணவு கிடைக்கும்படி நிலங்களில் தானியங்களை ஏராளமாய்ப் பயிர் செய்யவேண்டியது இன்றியமையாததா? அல்லது பிரபுக்கள் சிலர் மதுபானம் செய்வதற்கு உதவும் பொருட்டுத் திராட்சைச் செடிகளை வைத்து வளர்ப்பது முக்கியமானதா? நீங்களே நன்றாய் யோசித்துப் பாருங்கள். பலருடைய வறுமைநோய் தீருவதற்கு முன்பு எவனையும் அளவுக்கு அதிகமான செல்வத்திற்கு அதிபதியாகும்படி விடக்கூடாது! எவர்கள் கஷ்டப்பட்டு உழைக்

கிறார்களோ அவர்கள் தாமே பலனை முதலில் அனுபவிக்க வேண்டும். கஷ்டப்பட்டு வேலை செய்கிறவர்கள் ஒரு பலனையும் அனுபவியாமல் இருப்பதும், சோம்பேறி களாய்க் காலங்கழிக்கும் பிரபுக்கள் முழுப்பலனையும் அனுபவித்து வருவதும் என்ன நியாயம்? முதலில் எல் லோருக்கும் போதிய அளவு செல்வம் இருக்கிறதா என்பதை அறிந்து கொண்டன்றோ பிறகு சிலரை அள வுக்கு அதிகமான செல்வத்திற்கு உரியவர்களாய்ச் செய்யவேண்டும். இந்த உலகமும் அதிலுள்ள எல்லாப் பொருள்களும் மனிதர்களுக்குப் பொதுவானவை என்று கருதியே கடவுள் அவைகளைப் படைத்தார். ஆதலால் எல்லோரும் சமமான சுதந்தரமும் செல் வாக்கும் உடையவர்களாயிருக்கவேண்டும். மனிதர்கள் எல்லோரும் இவ்வுலகத்தில் சமமான சுதந்தரமும், போதிய பொருள் வலிமையும் உடையவர்களாயிருக்க வேண்டும். சிலர், பிரபுக்களா யிருப்பானேன்? பலர், தரித்திரர்களா யிருப்பானேன்? கடவுளுடைய சட்டம் இதுதானா? கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் மனித சமூகத்தில் எவர் பெரியர்? எவர் சிறியர்? இறைவன் முன்னிலையில் 'பணக்காரன்,' 'ஏழை,' என்கிற வித்தியா சம் ஏது? உலகின் புறக்கண்டு நாம் இன்புறவேண்டும். இதுதான் சாக்கியருடைய போதனை,—அவருடைய கொள்கை!" என்று நிகும்பன் கம்பீரத்தோடு பேசினான்.

இச்சமயத்தில் இராணுவ வீரர்களும் பொது ஜனங் களும் நிகும்பன் பேசியது பெரிதும் பாராட்டற்பா லது என்பதை அறிவிப்பதற்கு அறிகுறியாக இடை விடாது கரகோஷம் செய்து ஆரவாரித்தார்கள். சிறிது இளைப்பாறியவுடன் சாக்கியர் தலைவன் மீண்டும் பேசு வதற்கு ஆரம்பித்தான்.

"அன்பர்களே! சாக்கிய புத்திரர்களே! என்னுடைய கொள்கைகளுக்கும் எண்ணங்களுக்கும் இணங்கவே உங்களுடைய கொள்கைகளும் எண்ணங்களும் இருக்கின்றன என்பதை உங்களுடைய கரகோஷம் மீண்டும் ஒரு முறை எனக்கு அறிவித்திருக்கிறது. நான் இப்போது சொல்லிய எல்லா விஷயங்களையும் நீங்கள் முற்றும் ஆமோதிக்கிறீர்கள் என்றும், நான் சொல்லுகிறபடி நடப்பதற்குச் சித்தமாயிருக்கிறீர்கள் என்றும் நான் நினைக்கிறேன்,— நம்புகிறேன்! எனதுயிருக்குயிரான சைனியங்களே! பாருங்கள், நாம் வேலை செய்யவேண்டிய காலம் வந்து விட்டது! இனி நாம் தாமதிக்கவாவது, ஆலசியம் செய்யவாவது கூடாது! இப்போதே,— இந்த நிமிஷத்திலேயே,— நாம் நம் முடைய கடமையைச் செலுத்தத் தொடங்கவேண்டும். சாக்கியரைக் கொலை செய்தார்கள்,— ஆனாலும் நம் முடைய குருவாகிய அவர் இறந்து போகவில்லை! அவருடைய உடல் அழிந்ததேயன்றி ஆன்மா அழியவில்லை! தம்மைக் கொலைபுரிந்தவர்களைப் பழிக்குப்பழிவாங்கும் படியான வன்மையையும் தைரியத்தையும் மேலுலகத்திலிருந்துகொண்டு அவர் நமக்கு அளித்துவருகிறார். எவ்வளவு தூரம் பொறுமை காட்டவேண்டுமோ அவ்வளவு தூரம் நான் ஏற்கெனவே காட்டிவிட்டேன். ஆனால் பாஞ்சால தேசத்தில் பிரபுக்களும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் செய்யும் கொடுமை அளவு கடந்ததாயிருக்கிறது. ஆதலால், இப்போது நான் உங்களுடைய உதவியைக் கொண்டு அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் செய்ய வேண்டுமென்று கருதி கையில் வாளெடுத்துவிட்டேன். இன்று முதல் யுத்தம் தொடங்கப்பட்டிருக்கிறதென்பதை எதிரிகளும் பிறரும் அறிதல்வேண்டி நகர் முழுவதும் போர்ப்பறை

சாற்றும்படி நீரின் உத்தரவு செய்ததையும் நீங்கள் அறி வீர்கள். அன்பார்ந்த நேயர்களே! எனதரிய சகோ தரர்களே! சாக்கியர் தோன்றல்களே! இப்போது நாம் தொடங்கியிருக்கும் யுத்தம் நம்முடைய சொந்த நன் மையையாவது, லாபத்தையாவது கருதித் தொடங்கப் பட்டதன் றென்பதையும், பொதுஜனங்களுடைய நன் மையைக் கோரியே, — ஜனசமூகத்தின் முன்னேற்றத் தைக் கருதியே, — ஏழை எளியவர்களின் துக்க நிவா ரணத்தை நாடியே,—தொடங்கப்பட்ட தென்பதையும், நான் உங்களுக்கு வற்புறுத்திச் சத்தியமாக,— உண்மை யாக,— கடவுள் சாட்சியாகக் கூறுகின்றேன்! இரண்டு காரணங்களை முன்னிட்டு நாம் இந்த யுத்தத்தை ஆரம் பித்திருக்கின்றோம். ஒரு காரணம்: உண்மையான மதத்தை நிலைநாட்டவேண்டுமென்பது. மற்றொரு கார ணம்: நியாயமான அரசுரிமையை ஏற்படுத்த வேண்டு மென்பது. நம்முடைய இந்த இரண்டு நோக்கங்களும் நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவா ராக!'' என்று நிகும்பன் பேசி முடித்தான். பிறகு கூட் டம் கலைந்தது; இராணுவ வீரர்களும் பொது ஜனங்க ளும் தங்கள் தங்களுடைய இருப்பிடத்திற்குச் சென் றார்கள். நிகும்பனும் மனக்கிளர்ச்சியுடன் அரண்மனை போய்ச் சேர்ந்தான்.

அதிகாரம் — 66

பதுமினியும் நிகும்பனும்

சைனிய பரிசோதனை நடந்த பிறகு அரண்மனைக்குச் சென்ற நிகும்பன் வறிதே இருக்கவில்லை. தனிமையாக ஓர் அறையில் உட்கார்ந்துகொண்டு எந்த விதமாய்

யுத்தம் செய்யவேண்டும் என்பதைப்பற்றியும், யாராரை எவ்வெவ்விடங்களில் எவ்வெச் சமயத்தில் எதிர்க்க வேண்டும் என்பதைப்பற்றியும் ஆழ்ந்து ஆலோசித்துக் கொண்டிருந்தான். பாஞ்சால தேசத்தின் படம் ஒன்று மேஜையின்மீது விரிக்கப்பட்டிருந்தது. அந்தப் படத்தில் குந்தி நகரத்திலும், மற்ற சுற்றுப்புற நாடுகளிலுமுள்ள பிரபல கட்டிடங்களின் விவரங்கள் எழுதப் பட்டிருந்தன. அவைகளை நிகும்பன் கவனத்தோடு படித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது அவன் பின்வருமாறு தானே பேசிக்கொண்டான்.

"நல்லது, இந்த யுத்தம் எனக்கு வெற்றியைத் தரவேண்டுமென்றே நான் நம்புகிறேன். கொங்கு தேசம் இந்த யுத்தத்தில் சம்பந்தப்படாமல் நடுவு நிலைமையை ஒரு வருஷகாலம் வகிப்பதாக வாக்குறுதி செய்திருக்கிறது. இது ஒரு பெரிய சாதகந்தான். மற்ற நாடுகள் அவ்வளவு பலமுடையன அல்ல. ஆதலால், இந்த ஒரு வருஷ காலத்திற்குள் எவ்வளவோ காரியங்களைச் சாதிப்பதற்கு என்னால் முடியும். ஆனாலும், ஆ! விலாசவதியே! உன்னுடைய நினைவு அடிக்கடி என் மனதிற் றோன்றி என்னுடைய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கெடுத்துவிடுகின்றது! அந்தோ! உன்னை நினைக்கும்போது—!"

இவ்விதம் தானே பேசிக்கொள்ளுவதும், பெருமூச்சு விடுவதும், தேசபடத்தைப் பார்ப்பதும், மீண்டும் ஏதாவது பேசுவதுமாக நிகும்பன் இருந்தான். தேசபடத்தை உற்றுப்பார்த்துக்கொண்டே "ஆ! இதோ இருக்கிறது சுசிமுகர் மாளிகை! அதோ இருக்கிறது வெள்ளை மாளிகை! இங்கே இருக்கிறது பதுமினி மாளிகை! நல்லது; பதுமினி என்பவள் தருமம் செய்

வதில் மிகச்சிறந்தவள் என்றும், ஏராளமான செல்வம் படைத்தவள் என்றும் நான் கேள்வியுற்றிருக்கிறேன். இவளுக்குச் சொந்தமானதும் இவளுடைய பெயரா லேயே அழைக்கப் படுவதுமாகிய மாளிகையைப்பற்றி என்னுடைய குறிப்புப் புத்தகத்தில் என்ன எழுதப் பட்டிருக்கிறது என்று பார்க்கிறேன்" என்று நிகும்பன் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு குறிப்புப் புத்த கத்தை எடுத்துப்பார்த்தான். அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது: —

"பதுமினிமாளிகை: இஃது இப்பெயருடைய சீமா ட்டிக்குரியது; பலமான மாளிகை; சிலவருஷங்களுக்கு முன்பு பழுது பார்க்கப்பட்டது; இந்த மாளிகைக்குக் கீழே பல சுரங்கங்களும் நிலவறைகளும் இருக்கின்றன என்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள்; இந்த மாளி கையில் வாலிபர்கள் பலர் பதுமினியின் போஷணையில் இருக்கின்றார்கள்; இவர்களுக்குத் தலைவர். ஒரு சந்நி யாசி: இந்த மாளிகையின் சுற்றுப் புறங்களில் சில சம யங்களில் ஆயுதபாணிகளான மனிதர்கள் சிலர் சுற்றித் திரிகிறார்கள் என்றும், அவர்கள் காவற்பு அங்கு தரித் திருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது; இந்த மாளிகையைப்பற்றிப் பல வதந்திகள் உலாவுகின்றன."

"பதுமினி எவ்வளவு பரோபகார சிந்தையுடைய வளா யிருந்தபோதிலும் அவளுடைய மாளிகையின் அமைப்பு பலவகையான சந்தேகங்களுக்கு இடங் கொ டுக்கிறது. ஆகையினால் நாளைக் காலையில் சுற்றேறக் குறைய இருநூறு வீரர்களைக்கொண்டு இந்த மாளி கையை முற்றுகை போட்டு, மாளிகையின் பல பாகங் களையும் பரிசோதனை செய்யும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். அதே சமயத்தில் சுசிமுகருடைய மாளிகை

யையும் சோதிக்க வேண்டும். இதுதான் நான் செய்ய வேண்டிய முதல் வேலை'' என்று நிகும்பன் தனக்குள் ளேயே சொல்லிக்கொண்டான்.

இச்சமயத்தில் வேலைக்காரன் ஒருவன் நிகும்ப னிடம் வந்து ''தலைவரே! யாரோ ஒரு ஸ்திரீ தங்களை நேரில் உடனே பார்ப்பதற்காக வந்திருக்கிறாள். அவள் தன்னுடைய வரவை உங்களிடம் தெரிவிக்கச் சொன் னாள்'' என்று சொன்னான்.

''நான் சில முக்கியமான விஷயங்களைக் கவனித் துக்கொண்டிருப்பதால், என்னுடைய அந்தரங்க மந்தி ரியைக் கண்டு அவரிடம் சங்கதியைத் தெரிவித்து விட் டுப் போகும்படி நீ அந்த ஸ்திரீக்குச் சொல்லு'' என்று நிகும்பன் சொன்னான்.

''நான் ஏற்கனவே அந்த ஸ்திரீயிடம் தாங்கள் இப்போது சொன்னபடியே தெரிவித்தேன். அவள் தங்களிடமே நேரில் சொல்லவேண்டுமென்றும், மற்றவர்களிடம் சொல்ல முடியாதென்றும் பிடிவாத மாய்க் கூறுகிறாள்'' என்று வேலைக்காரன் உரைத்தான்.

''அப்படியானால் அவளை இங்கே வரும்படியாகச் சொல்'' என்று நிகும்பன் உத்தரவு செய்தான். அவ் விதமே வேலைக்காரன் போய் அந்த ஸ்திரீயை அழைத் துவந்து நிகும்பனிடம் விடுத்துச் சென்றான்.

''மகாவீரராகிய நிகும்பரே! தங்களிடம் ஒரு காரியத்தை முன்னிட்டு நான் வந்தேன். ஆனாலும் என்னுடைய பிரார்த்தனை யாதென்பதை எவ்விதம் தெரிவிக்கிறதென்று எனக்கு விளங்கவில்லை. நீங் களோ, தயாளத்திலும் பரோபகார சிந்தையிலும் நிகரற்றவர்கள். ஆதலால், என் விஷயத்தில் நீங்கள்

சிறிது இரக்கங் காட்டவேண்டும். என்னை இதுவரையில் நீங்கள் நேரில் பார்த்திராவிட்டாலும், என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். என்னுடைய பெயர் பதுமினி!'' என்று நிகும்பனைக் கண்டவுடன் அந்த ஸ்திரீ பணிவுடன் சொன்னாள். அவளுடைய பேரழகும் இனியபேச்சும் நிகும்பனுடைய மனத்தை ஒரு வாறு முதலிலேயே வசப்படுத்திவிட்டன. ஆனாலும் 'பதுமினி' என்னும் பெயரைக் கேட்டவுடன் நிகும்பன் பேராச்சரிய முற்றவனுய்த் தன்னுடைய இருக்கையில் மனக்கிளர்ச்சியுடன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"ஓ! அப்படியா? நீங்கள் தானு பதுமினி அம்மாள்? அம்மா, உங்களைப்பற்றித்தான் இப்போது நான் நினைத்துக் கொண்டிருந்தேன்" என்று நிகும்பன் கூறினான்.

"என்ன! என்னைப் பற்றியா நீங்கள் நினைத்தீர்கள்? ஓ! அப்படியானுல் நான் பாக்கியவதிதான்" என்று பதுமினி நிகும்பனை நோக்கிக் கூறிவிட்டு, "சரி; தேவகி இரகசியங்களை வெளிவிடாமல் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறாள் என்றே நினைக்கிறேன். ஆதலால், இவருக்கு உண்மை தெரியாது" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

"ஆம்; அம்மா, உங்களைப்பற்றியே நினைத்தேன். உண்மையை உங்களிடம் மறைப்பானேன்? நாளைக் காலையில் என்னுடைய போர்வீரர்களை உங்களுடைய மாளிகைக்கு அனுப்பி, மாளிகையின் சாவிகளை எல்லாம் வாங்கிவரும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று இப்போதுதான் நினைத்தேன்" என்று நிகும்பன் கூறினான்.

"என்னுடைய மாளிகையின் சாவிகளா? அவைகள் உங்களுக்கு எதற்காக?" என்று பதுமினி திடுக்கிட்டு உசாவினாள்.

"அம்மா, நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். என்னுடைய வேண்டுகோளுக்கு, — கட்டளைக்கு, — நீங்கள் இணங்கி நடப்பீர்களானால், எவ்விதமான தீமையும் தங்களுக்கு நேராது. என்னுடைய சைனியங்களில் சிலரை உங்கள் மாளிகையில் தங்கியிருக்கும்படி நீங்கள் இடந்தரல் வேண்டும். பெரிய பிரபுக்களுடைய மாளிகைகளின் சாவிகளே எல்லாம் நாங்கள் கேட்டு வாங்கப்போகின்றோம். எங்களுடைய வேண்டுகோளுக்கும் கட்டளைக்கும் கீழ்ப்படிந்து எங்களுக்குச் சாதகமாய் அவர்கள் இருப்பார்களா அல்லது எங்களுக்கு விரோதமாய்க் கிளம்புவார்களா என்பதை சோதிப்பதற்கு இவ்விதம் செய்ய உத்தேசித்திருக்கின்றோமே தவிர வேறில்லை" என்று நிகும்பன் பதில் புகன்றான்.

"சாக்கியர் தலைவரே! நீங்கள் போர்ப்பறை மூலமாய் யுத்தம் ஆரம்பம் செய்யப்படும் என்று அறிவித்த வுடனேயே பிரபுக்களுடைய மாளிகைகளும் பொதுக் கட்டிடங்களும் உங்களால் எதிர்க்கப்படும் என்பதை நான் இனி தறிந்துகொண்டேன். மற்றப் பிரபுக்களுடைய மாளிகைகளை முற்றுகைபோட்டு அவைகளைத் தங்கள் வசப்படுத்திக்கொள்ள நீங்கள் ஏற்பாடு செய்திருத்தல்போல என்னுடைய மாளிகைகள் விஷயத்தில் செய்யக்கூடாது என்று தங்களை வேண்டிக்கொள்ளுவதற்காகவே நான் வந்தேன்" என்று பதுமினி உரைத்தாள்.

''அம்மா, நீங்களோ பெண்பாலா யிருக்கின்றீர் கள். அவ்வித மிருந்தும் உங்களுடைய வேண்டுகோளை மறுக்க் வேண்டியதா யிருக்கிறது. அதுபற்றி நான் பெரிதும் மனங்கவல்கின்றேன். இந்தச் சமயத்தில்,— யுத்தமும் குழப்பமுமாயிருக்கும் இந்தச் சமயத்தில்,— தங்களுடைய இவ் வேண்டுகோளை நான் மறுத்துவிட் டது பெரிதும் பொருத்தமேயாம். ஆதலால், என் னைத் தயாள குணமற்றவன் என்றுவது, லோபி, என்று வது நீங்கள் கருதீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் சைவமதத்தில் மிகுந்த பற்றுள்ளவர்கள் என்றும், அடிப்பட்ட இராஜபக்தர்களுள் நீங்களும் சேர்ந்தவர் கள் என்றும் நான் அறிகிறேன். தவிர, மிகப்பல மாகக் கட்டப்பட்ட கோட்டைபோன்ற மாளிகைதங் களுக்கு இருக்கிறதென்றும், அதில் அநேக சரங்கங் கள் அமைந்திருக்கின்றன என்றும், உங்கள் மாளி கைக்குச் சுற்றுப் புறங்களில் ஆயுதபாணிகளான போர் வீரர்கள் சிலர், கொடிய ஆவேசங்களைப்போல, இராக் காலங்களில் சுற்றித் திரிகிறார்கள் என்றும் நான் கேள் விப்படுகிறேன். ஆதலால், உங்கள் பெயர்கொண்ட மாளிகையை உடனே லசப்படுத்த நான் ஏற்பாடு செய்திருப்பது நியாயமே யாகும்'' என்று நிகும்பன் சொன்னான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் பதுமினியின் முகம் வெளுப்படைந்தது; அவளுடைய உடம்பு நடுங் கிற்று; கண்களில் அச்சக் குறிப்பு தோன்றிற்று; பேச வதற்கு முடியாமல் வாய் குழறிற்று. அவளிடத்துண் டான இவ்வளவு மாறுதல்களையும் நிகும்பன் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

"நிகும்பரே! நீங்கள் செய்வதற்குக் கருதியிருக்கும் செயல் இதுவரையில் பரோபகாரமாய் நான் செய்துவந்திருக்கும் தருமங்களை அழித்துவிடும். எனக்குச் சந்தோஷத்தையும் பெருமையையும் அளித்துவரும் தருமம் பாழ்படுவது நலமாகுமா? அநாதையான எத்தனையோ வாலிபர்கள் என்னுடைய மாளிகையில் என்னுடைய போஷணையில் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய கதி யாதாகும்?" என்று பதுமினி கெஞ்சினாள்.

"என்னுடைய இராணுவ வீரர்கள் நான் சொல்லும் கட்டளைக்கு மீறி ஒரு சிறிதும் வழுவி நடவார்கள். உங்களுடைய தர்ம கைங்கரியத்திற்கு எத்தகைய ஏதமும் ஏற்படாதபடி அவர்கள் பார்த்துக்கொள்ளுவார்கள். மாளிகையில் எப்போதும்போல் வாலிபர்கள் இருந்து வரலாம். நான் அனுப்பும் இருநூறு போர் வீரர்களும் மாளிகையில் காவலாக இருப்பார்களே தவிர வேறு ஒன்றும் செய்யார்கள்" என்று நிகும்பன் கூறினான்.

"நிகும்பரே! அத்தகைய காவல் என்னுடைய மாளிகைக்குக் கூடாதென்பதுதானே என்னுடைய வேண்டுகோள். அவ்விதம் காவல் வைப்பது என்னுடைய மதிப்பையும் கௌரவத்தையும் கெடுத்து விடும்" என்று ஒருவகையான அச்சத்துடன் பதுமினி உரைத்தாள்.

"அம்மா, நீங்கள் பேசுகிற மாதிரியிலிருந்து உங்களுடைய மனத்தில் ஏதோ கவற்சி ஏற்பட்டிருப்பதுபோல் தோன்றுகிறது. என்னிடம் நீங்கள் ஏதாவது உதவி பெறவேண்டுமானால், முதலில் நீங்கள் விஷ

யத்தை ஒளியாமற் சொல்ல வேண்டும். மனத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு வாயினால் ஒன்றைப் பேசுவ தாற் பயனில்லை'' என்று நிகும்பன் புகன்றான்.

''தலைவரே! நீங்கள் சொல்லுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. உங்களுக்கு என்ன வேண்டும்? நீங்கள் இப்போது தொடங்கி யிருக்கும் காரியத்திற்கு நான் எந்த விதத்திலும் இடையூறு செய்யமாட்டேன் என்ப தற்குப் போதிய அத்தாட்சிதானே வேண்டும்?'' என்று பதுமினி கேட்டாள்.

இவ்விதம் பதுமினி கேட்டவுடன் அவள்மீது நிகும்பனுக்குப் பெரிதும் அருவருப்பே முதலில் உண் டாயிற்று. ஏனெனில் தன்னுடைய சுயநலத்தைக் காப் பாற்றிக் கொள்வதற்காக அவள் தன்னுடைய சைவ மதப் பற்றையும் இராஜ விசுவாசக் கொள்கையையும் ஒழித்து விடுவதற்குத் தயாரா யிருக்கிறாள் என்பது அவளுடைய பேச்சினால் விளங்கிற்று. பரநலம் கரு தும் நிகும்பனுக்கு அந்த அருவருப்பை விலக்கியதா? ஆனாலும் அந்த அருவருப்பை அவன் புலப்படக் காட் டாமல் தன்னுடைய நோக்கம் நிறைவேறுவதற்குப் பதுமினி எவ்வளவு தூரம் பயன்படக் கூடியவள் என் பதையே அவன் அவள் மனத்தைத் துருவி ஆராய்ந் தறிதற்கு முயன்றான்.

''அம்மா; நீங்கள் உங்களுடைய மதத்தையும் கொள்கையையும் விடுத்து எங்களுடைய மதத்தையும் கொள்கையையும் தழுவிக்கொள்ள விரும்புகிறீர்கள் போல் தோன்றுகிறது. அப்படியானால் நீங்கள் எங்க ளுக்குச் செய்யக் கூடிய உதவி யாது?'' என்று நிகும் பன் கேட்டான்.

"ஆம்; நான் அவ்விதந்தான் விரும்புகிறேன்! நான் உங்களுக்குச் செய்யக் கூடிய உதவி, எவராலுமே செய்வதற் கியலாத பேருதவி யாகும். அந்த உதவியை நான் செய்தால் பதிலுக்கு நீங்கள் சில உதவிகள் செய்யவேண்டும், — அஃதாவது : நான் சொல்லுகிற நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்" என்று பதுமினி சொன்னாள்.

"நல்லது; அவ்விதமே; — நீங்கள் சொல்லும் ஏற்பாடுகள் நியாயமானவைகளாயும் என்னால் செய்யக் கூடியவைகளாயும் இருந்தால், — நடக்கிறேன். உங்களுடைய நிபந்தனைகள் யாவை? நீங்கள் எனக்குப் புரியும் உதவி யாது?" என்று நிகும்பன் கேட்டான்.

"நிகும்பரே! முதலாவது : என்னுடைய மாளிகையில் போர் வீரர்களைக் காவல் வைக்கவாவது, என் மாளிகையில் வசித்துவரும் வாலிபர்கள் விஷயத்தில் தலையிடவாவது கூடாது. இரண்டாவது : எனக்குச் சொந்தமான நிலங்களையும் கட்டிடங்களையும் என்னிடத்திலேயே விட்டு விடவேண்டும்; அவைகளைத் தாம் கைப்பற்றிக் கொள்ளவாவது அழிக்கவாவது கூடாது. மூன்றாவது : இதுவரையில் நான் செய்துள்ள சூழ்ச்சிகளையும் குற்றங்களையும் பொருட்படுத்தாமல் என்னை மன்னித்திடுதல் வேண்டும். நான்காவது : நான் சொல்லுகிற பிரபு எவ்வளவு குற்றங்கள் புரிந்திருந்த போதிலும், அவரையும் மன்னித்திடுதல் வேண்டும்; அவருடைய பெயரை நான் பிறகு கூறுவேன். இந்த நான்கு நிபந்தனைகளுக்கும் நீங்கள் இணங்கவேண்டும்" என்று பதுமினி உரைத்தாள்.

"அம்மா, உங்களுடைய நிபந்தனைகள் மிகக் கடுமையானவைகளாக இருக்கின்றன. தாங்கள் செய்வ

தாகச் சொல்லும் உதவியும் அவைகளுக்குத் தகுந்த தாக இருந்தால்மாத்திரமே நான் இணங்கக்கூடும். நீங்கள் புரியும் உதவி யாது?" என்று நிகும்பன் மீண்டும் கேட்டான்.

"நான் செய்யக்கூடிய உதவி இதுதான் : அரசியாகிய கமலினியையும் அவளுடைய பொக்கிஷத்தையும் தங்களிடம் ஒப்பித்து விடுகிறேன்" என்று பதுமினி பதில் புகன்றாள்.

"அப்படியானால், உங்கள் மாளிகையிலுள்ள சுரங்கங்களும் நிலவறைகளும் நற்காரியத்திற்குத்தான் பயன் பட்டிருக்கின்றன" என்று நிகும்பன் ஆச்சரியத்தோடு கூறினான்.

"நிகும்பரே! கடவுள் சாட்சியாய்ச் சொல்லுகிறேன்; கமலினியும் அவளுடைய பொக்கிஷமும் என்னுடைய மாளிகையில் இல்லவே இல்லை. வேண்டுமானால், நீங்கள் என்னுடைய இரண்டு மாளிகைகளையும் சோதித்துப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று பதுமினி வற்புறுத்துரைத்தாள்.

"அம்மா! நல்லது; உங்களுடைய நிபந்தனைகளுக்கு நான் இணங்குகிறேன். நீங்கள் கமலினியையும் அவளுடைய பொக்கிஷத்தையும் என்னிடம் எப்போது சேர்ப்பீர்கள்?" என்று நிகும்பன் உசாவினான்.

"வீரர்கள் தலைவரே! நான் கூறிய நான்கு நிபந்தனைகளையும் விவரமாய்க் கண்டு அவைகளின்படி நடப்பதாய் எனக்கு நீங்கள் ஓர் உடன்படிக்கைப் பத்திரம் எழுதித் தரல்வேண்டும். அவ்விதம் எழுதித் தந்தால் இன்றை எட்டாம் நாள் கமலினியை அவளுடைய பொக்கிஷத்தோடு உங்களிடம் அவசியம் சேர்ப்பிக்கின்றேன்" என்று பதுமினி நவின்றாள்.

"நல்லது : அவ்விதமே செய்கிறேன்!" என்று நிகும்பன் கூறி, உடனே அவள் விரும்பியவாறு உடன் படிக்கைப் பத்திரம் எழுதி, அதில் தன் கையெழுத்திட்டு அதனைப் பதுமினியிடம் கொடுத்தான்.

"நிகும்பரே! இப்போது நான் ஒப்புக்கொண்டிருக்கும் வேலை எத்தகைய தென்றால், என்னுடைய உயிரையே எமனுக்கு விலைப்படுத்தி அவனுக்கு அடிமைப்படுவது போன்றது. ஆதலால் இவ்வளவு நிபந்தனைகளோ தவிர வேறில்லை. இன்றை எட்டாம் நாள் கமலினி உங்கள் வசத்திலிருப்பாள்; அவளுடைய பொக்கிஷமும் உங்களிடம் வந்துவிடும். இந்த எட்டுத் தினங்கள் வரையிலும் நீங்கள் என்னுடைய மாளிகைகளுக்குப் போர்வீரர்களை அனுப்பிக் காவல் புரியும்படி செய்தல் கூடாது. நான் போய் வருகிறேன்" என்று உடன்படிக்கைப் பத்திரத்தை வாங்கிக்கொண்ட பிறகு பதுமினி நிகும்பனிடம் கூறி அவனிடம் விடை பெற்றுக் கொண்டு சென்றாள்.

நிகும்பன் மீண்டும் தன்னுடைய அறையில் தனியாயிருந்தான்; யுத்தசம்பந்தமாய்ச் செய்யவேண்டிய ஏற்பாடுகளை அவன் ஆழ்ந்து ஆலோசித்துக்கொண்டிருந்தான் என்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை. இரவு இரண்டு மணி அடித்தது. ஒரு வேலைக்காரன் நிகும்பனுடைய அறையில் நுழைந்தான்.

அந்த வேலைக்காரன், பிங்கலன் கொலையுண்டதைப் பற்றி விசாரணை புரிந்த நியாயாதிபதியிடமிருந்து வந்தவனாவான். நிகும்பனிடம் கொடுக்கும்படி அந்த நியாயாதிபதி ஒரு கடிதம் அவன் மூலமாய் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தை நிகும்பன் வாங்கிப் பிரித்து வாசித்தான். பிங்கலனைச் சுழுகி கொலைபுரிந்த விஷய

மும், அக்கொலை சம்பந்தமாய் நேர்ந்த விசாரணையும், சுமுகி விடுவிக்கப்பட்டதற்குக் காரணமும், இரும்புக் கவசம் மணிந்திருந்த வாலிபன் மீது, அவன் சிறையி லிருந்த மூன்று பிரபுக்களை விடுவித்தான் என்று, குற்றம் சாட்டப்பட்ட சங்கதியும், அவன் விடுதலையடைந்த தற்குக் காரணமும் அந்தக் கடிதத்தில் சுருக்கமாக எழு தப்பட்டிருந்தன. சீவகன் என்பான் நிகும்பனுடைய சொந்த முத்திரைக் கணையாழியைக் காட்டியபடியால் சுமுகியையும் இரும்புக் கவசமணிந்திருந்த வாலிபனை யும் விடுதலை செய்ய நேர்ந்தது என்பதை நியாயாதி பதி அக்கடிதத்தில் குறிப்பிட மறந்துவிடவில்லை. கடி தத்தைப் பார்த்தவுடன் நிகும்பன் ஏதும் தோன்றாமல் சிறிது நேரம் பிரமித்திருந்தான். பிறகு ஒரு கடிதம் எழுதிவைத்துக்கொண்டு குதிரைவீரன் ஒருவனைக் கூப் பிட்டு "நீ மிகுந்த வேகத்துடன் குதிரையைத் தெற்கு ரஸ்தாவழியாய் ஓட்டிக்கொண்டு போகவேண்டும். சீவ கன் என்பவனும் அவனோடு வேறு சிலரும் செல்லுவார் கள். அக்கூட்டத்தில் நம்முடைய பூதகியும் இருப் பாள். அவளை உடனே சிறைப்படுத்தி என்னிடம் கொண்டுவரவேண்டும். அவளை அனுப்புவதற்குச் சீவ கன் ஆட்சேபித்தால், இக்கடிதத்தை அவனிடம் கொடு" என்று கூறி, எழுதிவைத்திருந்த கடிதத்தை அவனிடம் கொடுத்துவிட்டு நிகும்பன் சயனத்திற்குச் சென்றான்.

அதிகாரம் — 67

பிரயாணத்தின் தொடர்ச்சி

ஓர் அம்பு வில்லிலிருந்து எவ்வளவு வேகமாய்ச் செல்லுமோ அதைவிட அதிக வேகமாய்க் கண்ணகி, சிவகனால் அளிக்கப்பட்ட குதிரைமீது ஏறிக்கொண்டு சென்றபோது சிவகனும் பூதகியும் சத்திரத்தின் தோட்டத்தில் நின்றுகொண்டிருந்தார்கள் என்பதை வாசகர்கள் அறிவார்கள்.

ஆம்,—மூளையில் எவ்வளவு சடுதியில் எண்ணங்கள் உதிக்கின்றனவோ அவ்வளவு சடுதியில் கண்ணகி அவர்களை விட்டுப்பிரிந்து மறைந்து போனாள். அவள், தன்னுடைய பெயரையாவது, தான் பெண்பால் என்பதையாவது, தான் திடீரென்று புறப்பட்டுப் போவதற்குக் காரணம் இன்னதென்றுவது, தான் போக உத்தேசித்திருக்கும் இடம் இது வென்றுவது சிவகனிடம் கூறாமல், — அவனுக்கு ஓர் உபசார வார்த்தை கூட உரையாமல், — திடீரென்று புறப்பட்டு விட்டாள். ஆனாலும், அவள் பெண்பால் என்பதையும், அவள் சிவகனைப் பெரிதும் காதலித்திருக்கின்றாள் என்பதையும், இனிதறிந்துள்ள வாசகர்களுக்கு அவள் அவ்விதம் திடீரென மறைந்ததற்குக் காரணம் யாதென்பது ஒருவாறு புலப்பட்டிருத்தல் வேண்டும். சிவகனிடம் தான் இன்னாரென்பதை அறிவித்துவிட வேண்டுமென்றே கண்ணகி விரும்பினாள். ஆனாலும், கன்னிப் பெண்களுக்கு இயல்பாகவுள்ள நாணமும், பெண்பால்களுக்கு இயற்கையாக இருக்கும் தற்பெருமையும் கண்ணகியிடம் பெரிதும் அமைந்திருந்தனவாதலால், அவள் தனக்கு இடை

யூரும்ப் தோன்றியிருக்கும் பூதகியின் முன்னிலையில் சிவகனிடம் தன்னை இன்னொன்று அறிவிப்பது கூடாது என்று கருதினாள். இரும்புக் கவசம் அணிந்து தன்னுடு நட்புரிமை பூண்டிருந்தது பெண்பால் என்பதையும், அதிலும் முதன் முதல் காட்டில் சந்தித்த கண்ணகிதான் என்பதையும் சிவகன் ஒரு சிறிதும் அறியாததலால், அவள் திடீரென்று மறைந்தது அவனுக்குப் பேராச்சரியத்தையும் பெரும் துயரத்தையும் ஒருங்கே விளைவித்தது.

"சிவகரே! உங்களுடைய நண்பராகிய போர்வீரர் திடீரென்று இவ்விதம் புறப்பட்டுப் போனதற்குக் காரணம் யாது? அவர் எங்கே சென்றார்?" என்று பூதகி, கண்ணகி சென்ற திசையையே இமை கொட்டாமல் நோக்கிக்கொண்டு நின்ற சிவகனைக் கேட்டாள்.

"எனக்குத் தெரியாது,— என்னுடைய சிந்தையே கலங்கிப் போயிருக்கிறது! அந்த வாலிபன் சம்பந்தமான ஒவ்வொரு விஷயமும் ஆச்சரியப்படக் கூடிய பெரும் மாயமாகவே இருக்கிறது. அவன் தன் மனத்தில் ஏதோ பெரும் துயரத்தை அடக்கிக் கொண்டிருக்கிறான் என்று நான் நினைக்கிறேன். அல்லது சில சமயங்களில் அவனுக்குச் சித்தபிரமை ஏற்படக் கூடுமோவென்று அஞ்சுகிறேன். அவன் கண்ணகி என்னும் ஒரு பெண்மணியைப்பற்றி என்னிடம் ஒரு முறை பிரஸ்தாபித்திருக்கிறான். அப்போது அவன் கண்ணகி என்னும் அப்பெண்மணியைக் காதலிக்கின்றான் என்று நான் குறிப்பாலறிந்துகொண்டேன். அக் கண்ணகி என்பாளை நீ அறியாய்,— ஆனால் உன் சகோதரியான சுமுகி அறிவாள்" என்று சிவகன் கூறினான்.

"ஐயோ பாவம்!" என்று பூதகி இரங்கிக் கூறினாள்.

"இன்னொரு சமயம் நான் அந்த வாலிபனைச் சந்திக்கும்படி நேரிட்டால், அப்போது அவனுடைய பெயர் மூதலியவைகளைத் தெரிந்துகொள்வேன்" என்று சீவகன் சொன்னான். இவ்விதம் பேசிக்கொண்டே சீவகனும் பூதகியும் சத்திரத்திற்குள் சென்றார்கள்.

சத்திரத்திற்குள் சென்றவர்கள் போஜனம் செய்து விட்டுப் பிரயாணத்திற்கு ஆயத்தமானார்கள். பூதகி, பிரயாணம் செய்வதற்கென்றே விசேஷ அலங்காரம் செய்துகொண்டாள். சீவகன் ஒரு குதிரைமீது ஏறி உட்கார்ந்துகொண்டான். காமாட்சியும் மீனாட்சியும் தங்கள் தங்கள் குதிரையில் ஏறிக்கொண்டார்கள்; பூதகியும் தன்னுடைய இணையற்ற புருஷியின்மீது ஏறி மிகக் கம்பீரமாய் உட்கார்ந்தாள். நால்வரும் பிரயாணம் செய்யத் தொடங்கினார்கள்.

ஆ! இச்சமயம் பூதகி எவ்வளவு அழகுடன் விளங்கினாளென்பதை யாவரே வர்ணிக்கக் கூடும். மிக விலையுயர்ந்த பட்டுப் புடைவை, — பச்சை நிறமுடையது, — அவள் உடுத்தியிருந்தாள். அப் புடைவையைக் காற் சல்லடம்போல் அவள் இரண்டு கால்களிலும் தளராமல் சுற்றிக் கட்டி, இடுப்பில் பொன் ஒட்டியாணம் அணிந்திருந்தாள். மிகத் தூய்மையான வெண்பட்டினால் தைக்கப்பட்ட இரவிக்கை அணிந்திருந்தாள். முழந்தாள் வரையிலும் கரிய நிறமுடைய கம்பளியினால் செய்யப்பட்ட காலாசுத் தரித்திருந்தாள். அவள் கழுத்தில் முத்துச் சரமும் பவழ மாலையும் அசைந்து கொண்டிருந்தன. அவளுடைய கூந்தல் அவிழ்ந்த படியே காற்றில் பறந்துகொண்டிருந்தது. இரண்டு

கால்களையும் குதிரையின் வலப்புறத்தில் தொங்கவிட்ட படியே ஒரு கையில் சவுக்கும் மற்றொரு கையில் குதிரையின் கடிவாள வாரும் பிடித்துக் கொண்டு பூதகி சவாரி செய்த காட்சியானது மிக அற்புதக் காட்சியே யாகும். அதிகம் கூறுவானேன்? அந்த மார்க்கத்தில் சூஸ்திரப் புரியின்மீது ஊர்ந்து செல்லும் ஒரு தெய்வ மாதைப்போல் அவள் விளங்கினாளே தவிர வேறில்லை.

இனி, அவளுடைய இயற்கை அழகோ கையினால் எழுதுவதற்கும், வாயினால் உரைப்பதற்கும், மனத்தினால் பாவிப்பதற்கும் எளாவாறு மிகச் சிறந்து விளங்கிற்று. அவளுடைய நிறம் கருமேகம்போல் கரியதாயிருந்த போதிலும், அவளது தேக காந்தி அம் மேகத்தினிடையே தோன்றும் மின்னலை ஒத்திருந்தது. அவளுடன் சிற்றிடை நடக்கத்தால் பூங்கொடியை ஒத்திருந்தது. அவளுடைய சரீரமோ மலரைப்போல் மென்மையாயிருந்தது. அவளது சாயலோ மயிலைப்போல் இருந்தது. அவளுடைய கூந்தல் இறைவன் செஞ்சடையை நிகர்த்திருந்தது. பிறைநுதலும், விற்புருவமும், பவள வாயும், தளிர் மேனியும், வேய்த் தோளும் கனதனமும் ஆடவர் மனத்தை மயக்கும் இயல்பினவாயிருந்தன.

இதற்கு முன்பு சீவகன் பூதகியைப் பன்முறை பார்த்திருக்கின்றான் என்பது உண்மையே யாயினும் இச்சமயம் அவள் தோன்றிய மாதிரி இவ்வளவு அழகுடன் இதற்கு முன்பு தோன்றினாளில்லை என்றே கருதினான். தேனை வயிறு நிரம்பக் குடித்த வண்டு எவ்விதம் மயங்கிக் கிடக்குமோ அவ்விதம் சீவகன் பூதகியின் அழகில் மயங்கி ஏதுந் தோன்றாதவனாய் அவளை இமை

கொட்டாமல் பார்த்தபடியே தன் குதிரையை அவளுடைய குதிரைக்குப் பக்கத்தில் செலுத்திக் கொண்டு போனான். மீனாட்சி, காமாட்சி இவர்களுடைய குதிரைகள் இவர்களைப் பின் பற்றிச் சென்றன.

சிவகாமி பூதகியின் தோற்றத்தில் சுற்றப்பட்டவனுப்ப பலவகையான இன்பகர மனோபாவனைகள் செய்து கொண்டே குதிரையைச் செலுத்தினான். அவளை நோக்கும் ஒவ்வொரு முறையிலும் புதிய அழகும் வசீகரத் தன்மையும் அவளிடம் வளர்ந்துகொண்டு வருகின்றன என்று அவன் நினைத்தான். பூதகியாகிய இந்த மாயப் பெண் தன்னுடைய காதலனைச் சுற்றிலும் வருவித்த இன்ப மழை அவ்வளவு வரைகடந்ததாயும், அதில் நனைந்து தன்னை முற்றும் மறந்தவனுய்ச் சிவகன் அடைந்த மகிழ்ச்சி அவ்வளவு அளவு கடந்ததாயும் இருந்தன. அவன் தன்னுடைய வண்மையையும் அதிகாரத்தையும், கண்ணியத்தையும், கௌரவத்தையும், மதிப்பையும், செல்வாக்கையும் இவள் பொருட்டு அறவே அர்ப்பணம் செய்துவிட்டு, மனிதசஞ்சாரமற்ற காடுகளில் கவலை சிறிதுமின்றிக் காய் கனி கிழங்குகளைப் புசித்துக் கொண்டு பூதகியோடு இன்புற்றிருத்தல் மிகச்சிறந்த தென்று உன்னினான்,— அவ்விதம் செய்வதற்கே அவாவினான். பூதகியை விவாகம் செய்துகொண்ட பின்பு தன்னுடைய வாழ்நாள் எவ்வளவு இன்பகரமாயும் தன்னுடைய ஆன்மவிளக்கம் எவ்வளவு பிரகாசமாயும் இருக்கு மென்பதைப்பற்றி அவன் மனஞ் சென்றவரையிலும் மனோபாவனை செய்து மகிழ்ந்தான். தன்னல் காதலிக்கப்பட்ட ஒரு பெண்ணைத் தான் அடையப் போவதாக அறிந்தவுடன் ஒரு வாலிபனுக்கு உண்டாகும் மகிழ்ச்சி அவளை அடைந்தபிறகு உண்டாகும்

மகிழ்ச்சியைக் காட்டினும் எத்தனையோ மடங்கு சிறந்த தாயும் பெரியதாயும் இருக்கும் என்பதை நாம் அனுபவத்தில் அறிந்திருக்கிறோம். ஆதலால், சீவகன் இவ்வாறு மனோபாவக இன்பசாகரத்தில் ஆழ்ந்து மகிழ்ந்தது ஓர் ஆச்சரியமன்று.

இப்போது சீவகனும் அவனுடைய இரண்டு குதிரைச் சேவகர்களும், பூதகியும் அவளுடைய இரண்டு தோழிகளும் செய்யும் பிரயாணம் மூன்றாம்நாட் காலைப் பிரயாணம் என்பதை வாசகர்கள் நினைவில் வைக்க வேண்டும். இந்த மூன்று தினங்களுக்குள் ஆச்சரியகரமான எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சில மணிநேரம் வரையில் இச்சிறு கூட்டத்தார் தங்கள் பிரயாணத்தை அமைதியோடும் உல்லாசத்தோடும் செலுத்தலானார்கள். பல கிராமங்களையும் காடுகளையும் கடந்து, தென்றிசை நோக்கிச் செல்லும் பெரிய ரஸ்தா வழியாய் அவர்கள் சென்றார்கள். ஓர் இடத்தில் ரஸ்தா இரண்டு பிரிவாகப் பிரிந்து சென்றது.

"பூதகியே! வலப்புறமாகப் போகும் இந்தச் சாலை கேசரிக் கோட்டைக்குப் போகிறது. இடப்புறமாகப் போகும் பாதை சிறிது நீண்டதாகும். இரண்டு ரஸ்தாக்கள் வழியாயும் நாம் கொங்கு நாட்டுக்குப் போகலாம். எந்த ரஸ்தாவழியாய்ச் செல்ல நினைக்கிறாய்?" என்று சீவகன் கேட்டான்.

"காதலரே! இடப்புறமாய்ச் செல்லும் ரஸ்தா வழியாகவே நாம்செல்லுவோம். அந்த வழியாய்ப் போனால் இடிந்துபோய்ப் பாழாய்க்கிடக்கும் பழைய காலத்துக் கோட்டை ஒன்றை நாம் காணக்கூடும். அந்தக் கோட்டையில் சிறிதுநேரம்தங்கி இளைப்பாறி, அக்கோட்டை

யின் அதிசயங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டுப் பிறகு நாம் பிரயாணத்தைத் தொடர்ந்து செய்யலாம்'' என்று பூதகி கூறினாள்.

சிவகனும் அதற்கு இணங்கினான். பாழ்பட்ட அந்தக் கோட்டையை அடைந்தவுடன், சிவகனும் பூதகியும் தங்களோடு வந்த மற்ற நால்வரையும் வெளியே சிறிது தூரத்தில் நிறுத்திவிட்டுத் தனியே கோட்டைக்குள் சென்றார்கள்.

அதிகாரம் — 68

பாழடைந்த பழங்கோட்டை

சிவகனும் பூதகியும் நுழைந்த கோட்டை மிகப் பெரிதான தொன்றே யாகும். கோட்டையின் வெளிச் சுவர் சற்றேறக் குறைய மூக்கால் மைல் சுற்றளவுள்ளதாயும், நாலா புறங்களிலும் விசாலமான வாயில்கள் பல உடையதாயும் இருந்தது. நடுவே இருந்த கோட்டையோ மிக விசாலமுடையதாயும், பலம் பொருந்தியதாயும், பல மாடிகள் உடையதாயும் விளங்கிற்று. சிவகனும் பூதகியும் சென்ற சமயத்தில் அஃது இடிந்து பாழ்பட்டுக் கிடந்ததாயினும், அச் சிறந்த கோட்டைக்கு உரியவர்கள் வசித்து வந்த காலத்தில் எவ்வளவு கம்பீரத்துடனும் பொலிவுடனும் அஃது இருந்திருக்க வேண்டுமென்பதைச் சிவகன் அறிந்து கொள்ளாமற் போகவில்லை. அதனுடைய தோற்றம் ஒரு காலத்தில் அது வகித்திருந்த பெருமையை இனிது புலப்படுத்தியது. 'காலம்' என்னும் கம்பியனுலாவது அல்லது நெருப்பு, காற்று முதலிய பூதங்களினுலாவது இயல்

பாக ளாடைவில் அக் கோட்டை அழிந்து போனது என்று எண்ணுவதற்குரிய அடையாளங்கள் எவையும் காணப் படவில்லை, — வேண்டுமென்றே பகைவர்கள் அதனை அழித்து உருக் குலைத்து விட்டார்கள் என்று கருதுவதற் குரிய பல அறிகுறிகள் காணப்பட்டன. இக் கோட்டை கட்டப்பட்டு சுமார் நான்கு நூற் றாண்டுகளுக்கு மேலான போதிலும், காலத்தினால் அழிக்கப்படக் கூடியது என்று நினைக்கும் விதமாய் அதனுடைய அமைப்பு இல்லை, — கருங் கல்லினாலும் இரும்பினாலுமே அது கட்டப்பட் டிருந்தது. மனிதர் களுடைய கையினாலேயே அது பாழடைந்தது என் பதை எவரும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடும், நெருப்பினால் பொசுக்கப்பட்டுக் கரிந்து போயிருந்த சுவர்களும், பீரங்கியினால் துளைக்கப்பட்டும் பலம் பொருந்திய ஆயுதங்களினால் தகர்க்கப்பட்டும் அரை குறையாய் நின்ற கதவுகளும், இடிந்தும் சரிந்தும் நின்ற மாடிகளும், பூமியிலே புதைந்து கிடந்த வெளி யிற் சேர்ந்திய பலவகையான ஆயுதங்களும் பிற சாமான்களும் மனிதர்களாலேயே அக் கோட்டை இத் தகைய பரிதாபகரமான நிலைமை அடைந்தது என் பதை இனிது சூசிப்பித்தன. உடைந்தும், முறிந்தும், சிதர்ந்தும், தகர்ந்தும் காணப்பட்ட விலையுயர்ந்த அரிய சாமான்கள் பலவும் அக் கோட்டையை எதிரிகள் எவ்வளவு உக்கிரத்தோடு எதிர்த்திருக்கிறார்கள் என்ப தையும், எவ்வளவு பலமாய் அக் கோட்டை முற்றுகை போடப்பட்ட தென்பதையும், எவ்வளவு பயங்கரமான யுத்தம் அக்கோட்டையில் நடந்திருக்கிற தென்பதை யும், எதிரிகள் இரக்கம் சிறிது மில்லாதவர்களாய் எவ் வளவு கொடுமையுடன் அக் கோட்டையையும் அதி லிருந்த அரிய பண்டங்களையும் நாசப்படுத்தி யிருக்

கிறார்கள் என்பதையும் இனிது புலப்படுத்தின. கோட்டையினுடைய நான்கு சுவர்களும் இடிந்தும் கரிந்தும் காணப்பட்டன; சாளரங்களின் கண்ணடிகள் நெருப்பில் உருகி நிலத்தில் பாளம் பாளமாய்க் கிடந்தன; கோட்டையின் நான்கு புறங்களிலும் மிக உயரமாகக் கட்டப்பட்டிருந்த கோரிகள் மாத்திரம் இடிந்து விழாமல் அப்படியே நின்றுகொண்டிருந்தன. பரிதாபகரமும் பயங்கரமுமான இக் காட்சியைப் பார்த்துக் கொண்டே சிவகனும் பூதகியும், — ஒருவர் தோள்மேல் ஒருவர் கை போட்டுக்கொண்டு, — மெதுவாக ஓர் ஒற்றையடிப் பாதையில் நடந்து சென்றார்கள்.

ஆனால் பூதகியின் நிலைமை ஒருவிதமான மாறுதல் அடைந்தது. முதன்முதல் அந்தக் கோட்டைக்குள் அடி யெடுத்து வைத்த வுடனேயே இன்னதென்று சொல்ல முடியாத ஒருவகையான அச்சம் அவள் மனத்தில் தோன்றிற்று. இரண்டு மூன்று முறை நடந்து செல்வதற்கே அஞ்சினவள் போல் அவள் தயங்கி நின்றாள், — சில சமயங்களில் முன்னால் எடுத்து வைத்த காலைப் பின்னால் இழுத்துக் கொண்டாள். சிவகன் எந்த வழியாய்ச் செல்லலாம் என்று கேட்டபோது இந்த வழியாகச் செல்லலாம் எனத் தான் சொன்னது பிழை யென்பதை இப்போது உணர்ந்து அதற்காக வருந்தினவளைப் போல் பூதகி காணப்பட்டாள். பல வருஷங்களாய் ஜனங்கள் வசியாமல் பாழடைந்து கிடக்கும் மாளிகைகளில் பேய்களும் பிசாசுகளும் இருக்குமென்று பொதுவாகவே ஜனங்கள், — அதிலும் முக்கியமாய் ஸ்திரீகள், — நினைப்பதுண்டு. அத்தகைய நினைவு பூதகியை அச்சுறுத்திற்றோ வென்று அவளுடைய முக வேறுபாட்டையும் மன வேறுபாட்

டையும் குறிப்பாலறிந்த சிவகன் சந்தேகித்து, "அன்பே, நீ ஏதோ ஒரு வகையாய் இருக்கின்றாயே? என்ன காரணம்? உனக்கு உடம்பு சௌக்கிய மில்லையா, என்ன?" என்று கனிவோடு உசாவினன்.

"இல்லை; எனக்கு உடம்பு எப்போதும் போல் சுகமாகவே இருக்கிறது. நானும் எப்போதும்போல் உற்சாகமாகவே இருக்கின்றேன்" என்று பூதகி விடை இறுத்தாள்.

கவலை சிறிதும் அற்றவள்ப்போலும், அச்சம் சிறிதும் இல்லாதவளைப் போலும் காட்டிக் கொள்ளுவதற்காக அவள் மிக முயன்று சந்தோஷமாய் வார்த்தையாடினாள். ஆனாலும் அவள் மனத்தில் அச்சமும் கவலையும் குடிகொண்டிருந்தன.

ஆனாலும், சிவகன் அவள் அச்சத்தினாலும் கவலையினாலும் வருந்துகின்றாள் என்பதைச் சிறிதும் அறியானாயினன். ஏனெனில், வெளித் தோற்றத்திற்குக் கவலையற்றவளைப்போல் பூதகி நடித்ததோடு தான் எப்போதும் போல் உற்சாகத்துடன் இருப்பதாகவும் சிவகனிடம் கூறினளன்றே? அவளுடைய வார்த்தை உண்மை என்றே அவன் நம்பினன். அவளுடைய கண்களின் பிரகாசமும், உதடுகளின் புன் சிரிப்பும், பகட்டான பேச்சும் சிவகனை ஏமாற்றிவிட்டன. நீர் நிறைந்த ஆற்றின் மேற்பரப்பில் சூரியனுடைய ஒளி பாய்ந்து, பார்க்க முடியாத விதமாய் மனிதனுடைய கண்களைக் கூசும்படி செய்துவிட்டால், ஆற்றின் அடிவாரத்திற் கிடக்கும் பொருள்களைக் காண்பதற்கு அவனால் முடியுமா? அஃதேபோல் பூதகியின் வெளித் தோற்றத்தில் மயங்கிய சிவகன் அவளுடைய உள்ளத்தினைவை அறியாமற் போனன்.

சிவகனும் பூதகியும் கோட்டையிலுள்ள ஒவ்வோர் அறையையும் பார்வையிட்ட பின்பு, மாடிகளின் மீது ஏறி ஒவ்வொரு மாடியையும் பார்க்கலானார்கள். மிக விலையுயர்ந்த உண்கலங்களும், ஈற்காலிகளும், மேஜைகளும், கட்டில்களும் உடைந்து மடிந்து உருமாறிக் கிடப்பதையும், அநேக இடங்களில் மனிதர்களுடைய எலும்புகள் சிதர்ந்து கிடப்பதையும், அரிய விஷயங்கள் அடங்கிய ஏட்டுச் சுவடிகள் செல்லுக்கு இரையாகி மட்கி மடிந்து கிடப்பதையும் கண்டார்கள். இவைகளை எல்லாம் பார்த்தபோது சிவகனுடைய மனம் அனலிடைப்பட்ட மெழுகுபோல் உருகிற்று. இறுதியில் சுமார் நான்கு தென்னைமரமுயர மிருக்கக் கூடிய கோரியின்மீது ஏறிப்பார்க்க வேண்டுமென்று சிவகன் விரும்பினன். பூதகியும் அவனுடைய விருப்பத்திற்கு இணங்கினள்.

கோரியானது மிக உயரமாக இருந்தபோதிலும், அதன் மீது ஏறிச் செல்வதற்குப் படிகள் இல்லை. இயல்பாகவே உண்டான மலைகளும், செங்குத்தான பாறைகளும் எவ்விதமிருக்குமோ அவ்விதமே அஃது இருந்தது. மலைகள் மீது ஏறிச் செல்லுவதற்கு ஒற்றையடிப் பாதைகள் இருப்பதுபோல் அதற்கும் இருந்தன. இந்தப் பாதைகளைத் தவிர மற்ற இடங்களில் புல்லும் புதரும் செடியும்கொடியும் அடர்ந்திருந்தன. ஆதலால் இக் கோரியின்மீது ஏறிச் செல்லல் சிறிது சிரமமேயாகும். ஆனாலும், சிவகன் பூதகியினுடைய கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு மிகுந்த ஜாக்கிரதையுடன் மெதுவாக ஏறிச்சென்றான். இடையிடையே தங்கி ஆங்காங்கு காணப்படும் காட்சிகளை அவர்கள் பார்த்துக்கொண்டு இறுதியில் கோரியின் உச்சிக்குப் போய்விட்டார்கள்.

கோரியின் உச்சியில் புல்லுமில்லை புதருமில்லை; செடியுமில்லை கொடியுமில்லை! பல அறைகளுடைய சிறு மாளிகை ஒன்று உச்சியில் கட்டப்பட்டிருந்தது. அந்த மாளிகை மிகுந்த வேலைப்பாடு உடையதாயும், பெரும் பாலும் சலவைக்கற்களினாலும், சந்தன மரங்களினாலும் கட்டப்பட்டதாயும், கோடை காலத்தில் வாசம் செய்வதற்கு ஏற்றதாயும் இருந்தது. அந்த மாளிகையைக் கண்டவுடன் சீவகனுக்குப் பேரானந்தம் பொங்கிற்று. பூதகி அதனைக் கண்டு சந்தோஷப் படவுமில்லை; சீவகனைப் போல் வியந்து பேசவுமில்லை. மாளிகையின் மேல் தளத்திற்குப் பூதகியையும் அழைத்துக்கொண்டு சென்ற சீவகன் அங்கிருந்தபடியே நான்கு புறங்களையும் சுற்றிப் பார்த்தான்.

"பூதகியே, அதோ பார்! சிறிது தூரத்தில் இன்னொரு கோட்டை தெரிகிறது" என்று சீவகன் தன் விரலினால் சுட்டிக் காட்டிப் பூதகியிடம் கூறினான்.

"அதை நான் முன்னமே பார்த்தேன்" என்று பூதகி கூறினாள். அப்போது அவளுடைய பேச்சில் ஒரு விதமான நடுக்கம் தோன்றிற்று. தன் மனத்தில் எழுந்த ஏதோ ஓர் உணர்ச்சியை அடக்குவதற்கோ அல்லது மறைப்பதற்கோ முயன்றவள்போல் அவள் காணப்பட்டாள்.

"அன்பே, இதோ பார்த்தாயா? இந்தப் புறத்தில் மற்றொரு கோட்டை தெரிகிறது" என்று சீவகன் வேறொரு கோட்டையைத் தன் கையால் சுட்டிக்காட்டிப் பூதகியிடம் புகன்றான்.

"ஆம்; அந்த இரண்டாவது கோட்டையையும் நான் ஏற்கனவே கண்ணுற்றேன்" என்று பூதகி கூறிப் பெருமூச் செறிந்தாள்.

"என்ன அதிசயம்! மூன்று கோட்டைகள் ஒன்றுக்கொன்று சமீபத்தில் இருக்கின்றன. இவைகள் ஒன்றுக்கொன்று சில மைல் தூரத்திற்குள்ளேயே இருக்கவேண்டுமென நான் நினைக்கின்றேன். ஆனாலும், அந்த இரண்டு கோட்டைகளும் இந்தக் கோட்டையைப் போல் பாழ்பட்டும், ஜனசஞ்சார மற்றும் இராவென்று எனக்குத்தோன்றுகிறது" என்று சிவகன் உரைத்தான்.

"நண்பரே, இந்தக் கோட்டையைப் போலவே தாங்கள் சுட்டிக் காட்டிய அந்த இரண்டு கோட்டைகளும் எதிரிகளால் தாக்கப்பட்டு அழிந்துபோயின. இப்போது அவைகள் இடிந்துபோய்ப் பாழாய்க் கிடக்கின்றன" என்று துயரத்தோடு பூதகி சிவகனிடங் கூறினாள்.

"ஒன்றுக் கொன்று சமீபமாயிருக்கும் மூன்று கோட்டைகள்! ஆ! அவை எல்லாம் பாழாய்க்கிடக்கின்றன. என்ன அதிசயம்! பரிதாபகரமான இத்தகைய நிலைமையை அவைகள் அடைவதற்கு என்ன பயங்கரமான சம்பவம் நேர்ந்தது? எனதன்பிற்குரிய பூதகியே! இந்த மூன்று கோட்டைகளைப்பற்றிய சரித்திரம் உனக்குத் தெரியுமா? ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் விளைவிக்கும்படியான விசேஷ சம்பவங்கள் இந்தக் கோட்டைகளில் நிகழ்ந்திருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்" என்று சிவகன் சொன்னான்.

"சிவகரே, சிவகரே! நாம் இங்கே இருக்க வேண்டாம்! இந்தக் கோட்டையைவிட்டு அப்புறப்பட்டு விடுவோம்" என்று பூதகி வாய்குழற மெய் நடுங்கக் கூறினாள்.

"அன்பே, உன் உடம்பு ஏன் இவ்விதம் நடுங்குகிறது? உன்னை வருந்தும்படி செய்தது யாது?" என்று சிவகன் அன்போடு உசாவினான்.

"அன்பரே, உண்மையிலேயே நான் வருந்துகின்றேன். பழைய ஞாபகங்கள் என்னை வருத்துகின்றன. இந்த இடத்திற்கு நாம் வந்திருக்கவே கூடாது. இப்பக்கம் வரும்படி தங்களை நான் வற்புறுத்தியதற்காக இப்போது வருந்துகின்றேன்" என்று பூதகி மீண்டும் உரைகுழற உடல் நடுங்க உரைத்தாள்.

"ஓ! அப்படியானால் இந்தக் கோட்டைக்கும் உனக்கும் சம்பந்த மூண்டுபோல் தோன்றுகிறதே. விபரமாய்த் தெரிவி" என்று சிவகன் சொல்லிக்கொண்டிருந்தபோதே பூதகி களையடைந்தவளாய் மூர்ச்சித்தாள். அவளைத் தூக்கித் தன் மடியின்மீது வைத்துக் கொண்டு சிவகன் மூர்ச்சை தெளிவித்தான். இச்சமயத்தில் யாரோ வருவது போன்ற காலடி ஓசை சிவகனுக்கும் பூதகிக்கும் கேட்டது. அவர்கள் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

அதிகாரம் — 69

பாழ்பட்ட மூன்று கோட்டைகள்.

ஒரு வயோதிகன், — அதிகமான வயதினால் மூதுகில் கூனும், தோலில் திரையும், தலையில் நரையுமுடையவன், — மார்பு வரையில் வெள்ளை வெளேரென்று தொங்கிய நீண்டதாடியை இடக்கையினால் பிடித்து உருவிக்கொண்டும், வலக்கையில் ஒருதடியை ஊன்றிக்கொண்டும், அடித்தொண்டையால் அடிக்கடி இருமிக்கொண்டும் மெதுவாகத் தங்களை நோக்கி வருவதைச் சிவகனும் பூதகியும் கண்டார்கள். அந்த வயோதிகனுடைய தோற்றத்தில் தேசாபிமானமும் கன்றியறிதலும் இனிது புலப்பட்

டன. எப்படிப் பட்டவர்களும் அவனைக் கண்டவுடன் ஒருவிதமான அச்சமும், சந்தோஷமும் ஒருங்கே கொண்டவர்களாய் அவனுக்கு மரியாதை செலுத்து வார்கள். அவ்விதமான வசீகரத் தன்மை மிக வயது முதிர்ந்த அப் பருவத்திலும் அவனுடைய தோற்றத் தில் அமைந்திருந்தது. அவனுக்கு வயது சற்றேறக் குறைய எண்பதுக்குமேல் இருக்கலாம். வயது முதிர்ச்சி யினல் வளைந்துபோன உடம்பைத் தன் கையிலிருந்த தடியின்மீது சாய்த்துக் கொண்டு அவன் நின்றபோ தினும், — பூதகியையும் சிவகனையும் மாசடைந்த தன் கண்களினல் கூர்ந்து கவனித்தா னெனினும், — அவனுடைய சரீரம் பலமுடையதாகவும் மனம் தைரிய முடையதாகவும் காணப்பட்டன. கிழிந்து போன பழைய வேஷ்டி ஒன்றை அவன் இடுப்பில் சுற்றியிருந் தான். அம்மாதிரியான வேஷ்டி ஒன்று அவன் தலை மீது சுற்றப்பட் டிருந்தது. கவலையினல் அவன் அதிக மாய்ப் பீடிக்கப்பட்டிருக்கிறன் என்பதையும், ஆனு லும் உபகார சிந்தையும், மிக அமைதியான குணமும், தளராத நெஞ்சமும் உடையவனுகவே அவன் இருக் கின்றன் என்பதையும் அவனுடைய கண்கள் இனிது விளக்கின.

இந்த வயோதிகனைக் கண்டவுடன் சிவகனும் பூத கியும் ஒருவரை யொருவர் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டார்கள். அவன் யார்? அவன் எங்கிருந்து வரு கிறன்? என்பவைகளை அறிந்து கொள்ள விரும்பியவர் களைப் போல் அப் பார்வைகள் இருந்தன. தாங்கள் வந்தவழியாக அவன் வரவில்லை என்பதை அவர்கள் நன் கறிவார்கள். ஒருகால் அந்த இடத்திலேயே வசிப்பவ னுக அவன் இருப்பனேவென்று அவர்கள் ஐயுற்றார்கள்.

"பெரியவரே! நீர் இந்த இடத்திற்ருன் வசிக்கின் றீரோ?" என்று சீவகன் அந்த வயோதிகனே நோக்கிக் கேட்டான்.

"ஆம்; எத்தனேயோ வருஷங்களாக நான் இந்தக் கோரியின் உச்சியில் வசித்து வருகிறேன். நல்லது; போர் வீரரே! உம்மோடிருக்கும் இப் பெண்ணுக்கு உடம்பு சுகமில்லே என்று நீங்கள் பேசிக்கொண்ட இரண்டொரு வார்த்தைகள் என் காதில் விழுந்ததைக் கொண்டு அறியலானேன். அவ்விதமானல் இங்கிருக் கும் என் சிறு குடிலில் நீங்கள் தங்கி யிருக்கலாம்; சிறிது ஆகாரமும் செய்துகொள்ளலாம். கனி வர்க் கங்களும், எத்தகைய வியாதியையும் நீக்கக் கூடிய சுத்தமான ஊற்று நீரும் இருக்கின்றன. ஐயா, இன் னும் தங்களுக்கு ஏதாவது உதவி வேண்டுமானலும் நான் செய்வதற்குத் தயாரா யிருக்கிறேன்" என்று வயோதிகன் உரைத்தான்.

"பெரியவரே! உம்முடைய அன்பார்ந்த உபசாரத் திற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்? உம்மு டைய பெருந்தன்மையும் பரோபகார சிந்தையும் பெரி தும் வியக்கற் பாலன" என்று சீவகன் கிளர்ச்சியோடு கிளந்தான்.

வயோதிகன் கூறியபடி அவனுடைய குடிலில் தங்கி யிருந்து செல்லுவதற்குப் பூதகிக்கு இஷ்டமானது என் பதை அறிய விரும்பினவனுய்ச் சீவகன் பூதகியின் முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

ஆனல், பூதகியினுடைய தோற்றம் சீவகனுக்குப் பேராச்சரியத்தையும் அச்சத்தையும் விளைவிக்கக் கூடிய விதமாய் மிக மாறுதலுற்றிருந்தது. சீவகனுக்

குப் பேசுவதற்குக் கூட நாளழிவில்லை. பூதகியோ, அந்த வயோதிகனை இமை கொட்டாமல் உறுத்துப் பார்த்துக்கொண்டே இருந்தாள். அவனையோ அல்லது அவனைப்போன்ற சரீர அமைதி வாய்ந்த வேறொரு மனிதனையோ பல வருஷங்களுக்கு முன் பூதகி பார்த்திருக்க வேண்டுமென்றும், தான் பார்த்த மனிதன் இந்த வயோதிகன்தானே என்பதை ஐயந்திரிபற தெரிந்துகொள்ளவே அவள் இவ்விதம் பார்த்தாள் என்றும் அவளைக் கூர்ந்து கவனித்த எவரும் அறிந்து கொள்ளுவார்கள். அவன் அங்கு வந்தது பூதகிக்கு அச்சத்தை விளைவித்தது என்பதை நாம் சொல்ல வேண்டுவதில்லை. தாமரைபோல் அலர்ந்து வசீகரமாய் எப்போதும் இருக்கும் அவள் முகம் இப்போது அச்சத்தினாலும் கவலையினாலும் மங்கலடைந்தது. எவ்விதமாவது அந்த இடத்திலிருந்து அப்புறப்பட்டால் போதுமென அவள் நினைத்தாள். அந்த வயோதிகனிடம் சீவகனைப் பேசும்படி விடுவதிலாவது அல்லது தானே அவனோடு வார்த்தையாடுவதிலாவது பூதகிக்கு இஷ்டம். சிறிதுமில்லை என்பது அவளுடைய தோற்றத்தினால் இனிது விளங்கிற்று.

"பூதகியே,—எனது தருமைக் காதலியே! நற்குணம் வாய்ந்த இந்தப் பெரிய மனிதர் உனக்கு அன்போடு உண்ண உணவும் படுக்கப் பாயும் தருவதாக இயம்புகின்றார். உன்னுடைய விருப்பம் யாது?" என்று சீவகன் பூதகியைக் கேட்டான்.

சந்தேகமும், ஆச்சரியமும், பயமும் ஒருங்கே கலந்து தோன்றிய உணர்ச்சியினால் அசைவற்று ஸ்தம்பித்திருந்த பூதகி திடீரென்று பேசத்தொடங்கி "சீவகரே! சீவகரே, இங்கே நாம் இருக்க வேண்டாம்,—

இவ்விடத்தைவிட்டு இப்போதே புறப்பட்டுவிடும்'' என்று கூறிக் கெஞ்சினாள்.

''பூதகியே, உனக்கு உடம்பு அசௌக்கியமாயிருக்கும்போது எவ்விதம் புறப்பட முடியும்? என்னிடத்தில் சொல்லக் கூடாதென்று மறைக்கிற சில உண்மைகளினால் நீ துன்புறுகின்றாய் என்பதை நான் அறியாமலில்லை. இந்தக் கோட்டைக்கும் உனக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாக நீ குறிப்பாலுணர்த்தினாயே? அதன் விவரம் என்ன?'' என்று சிவகன் கேட்டான்.

''இந்தக் கோட்டையைப்பற்றி,— இலவந்திகைக் கோட்டை என்று சொல்லப்படும் இக்கோட்டை முன்னொரு காலத்தில் வகித்திருந்த பெருமையையும் சிறப்பையும் பற்றி,— இந்தப் பெண் என்ன அறிவாள்!'' என்று வயோதிகன் வியப்புடன் கூறிப் பூதகியை நெருங்கி அவளை உற்றுநோக்கி ''பெண்ணே! இக்கோட்டையின் முற்கால நிலைமையைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? ஒன்றும் தெரியாதே! ஏனெனில், நீ வயதிற் சிறியவளாக இருக்கின்றாய்! ஒருகால் உனக்கு ஏதேனும் தெரிந்திருப்பினும் இருக்கலாம். ஏனெனில், உனக்கு இப்போது வயது பத்தொன்பது அல்லது இருபது இருக்கலாமென்று நினைக்கிறேன். ஆதலால் நீ உன்னுடைய குழந்தைப் பருவத்தில் இந்தக் கோட்டையைப் பற்றியும், இக்கோட்டைக்கு உரியவர்களைப் பற்றியும் ஏதேனும் அறிந்திருத்தல் கூடும்'' என்று சொன்னான்.

''பெரியவரே, நீர் யார்? உம்முடைய பெயர் யாது?'' என்று சிவகன் அந்த வயோதிகரைக் கேட்டான்.

"மகாவீரரே, என்னுடைய பெயர் பரந்தாமன்! இந்த இலவந்திகைக் கோட்டையின் சொந்தக்காரராகிய விண்ணெளியான் என்னும் பிரபுவிடம் நான் பல வருஷகாலம் ஏவலாளனு யிருந்தேன்" என்று அந்த வயோதிகன் கூறி, மேற்கொண்டு ஏதும்கூற முடியாதவனைப்போல் தயங்கினன்.

"பரந்தாமன், — விண்ணெளியானிடம் பல வருஷ காலம் ஏவலாளனு யிருந்தவன்!" என்று பூதகி தனக்குள்ளேயே கூறிப் பெருமூச் செறிந்தாள். இவள் இவ்விதம் கூறியது வயோதிகனுடைய காதில் விழவில்லையாயினும் சிவகன் காதில் விழுந்து விட்டது.

"பூதகியே! உன்னை வருத்துவது யாது? இந்த மானிகைக்குள் அடியெடுத்து வைத்ததுமுதல் உன்னிடம் பல மாறுதல்கள் காணப்படுகின்றன. உன்னுடைய பார்வை ஒருவிதமாய் இருக்கிறது. என்ன காரணம்? என்னிடம் சொல்லக் கூடாதா?" என்று சிவகன் இரகசியமாய்ப் பூதகியை மீண்டும் கேட்டான்.

"சிவகரே! இப்போது என்னை ஒன்றும் கேட்க வேண்டாம். இன்னும் சிறிதுநேரம் சென்றால் எனக்கு அமைதி ஏற்படும். என்னுடைய மூளை ஒழுங்கிற்கு வரும். ஆதலால் பிறகு சொல்லுகிறேன்" என்றாள் பூதகி.

இவ்விதம் பூதகி சொன்னவுடன், அவள் தனியே இருக்க விரும்புகிறாள் என்பதை இனிதறிந்துகொண்ட சிவகன், அவளைத் தனியே விடுத்து, வயோதிகனை பரந்தாமனுடன் சிறிதுதூரம் சென்றான். சிறிதுதூரம் சென்றவுடன் ஓர் இடத்தில் பரந்தாமன் நின்றுகொண்டு சிறிது தூரத்திற்கு அப்பால் தெரிந்த ஏனைய இரண்டு கோட்டைகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

"நற்குணம் வாய்ந்த பரந்தாமரே! என்னுடைய கவனத்தைக் கவர்ந்து ஏற்கனவே எனக்கு அதிசயத்தையும் ஆச்சரியத்தையும் விளைவித்திருக்கின்ற காட்சியை நீர் இப்போது கூர்ந்து பார்ப்பதாகத் தெரிகிறது. அதனைப் பற்றிய விவரம் அறிய விரும்புகிறேன்" என்று சிவகன் கூறினான்.

"வீரரே! நீங்கள் சொல்லுவது யாதென எனக்கு விளங்கவில்லை. எந்தக் காட்சியைப்பற்றி நீங்கள் சொல்லுகிறீர்கள்?" என்று பரந்தாமன் உசாவினான.

"அதோ தென் கிழக்குப் பக்கத்தில் இடிந்து கிடக்கும் கோட்டையைப் பற்றியும் அதனைப் போலவே இடிந்து, கிழக்குப்பாகத்தில் தோன்றும் கோட்டையைப் பற்றியும் நான் கேட்கின்றேன்" என்று சிவகன் உரைத்தான்.

"ஓ!. அக் கோட்டைகளைப்பற்றியா நீங்கள் கேட்கிறீர்கள்! அப்படியானால், நீங்கள் அயல்தேச வாசியாயிருக்க வேண்டும். இப்பக்கத்திற்கு இப்போதுதான் முதன்முதல் வந்திருக்கிறீர்கள் போலும்! ஆதலினாற்றான் இங்கே காணப்படும் மூன்று கோட்டைகளைப் பற்றிய விவரமும் வரலாறும் உங்களுக்குத் தெரியாமல் இருக்கின்றன" என்று பரந்தாமன் பகர்ந்தான்.

"ஆம்; நான் இத்தேசத்தான் அல்லேன்; வெளியூரானே! இப்போது முதன் முதல் இப்பக்கத்திற்கு வந்துள்ளேன்" என்று சிவகன் கூறினான்.

"நல்லது; இந்தக் கோட்டை இலவந்திகைக் கோட்டை என்று பெயர் பெறும் எனவும், இக்கோட்டையின் கடைசி வார்சாக இருந்தவர் விண்ணெளியான் என்னும் பெயருடைய பிரபு வெனவும் சொன்னே

னன்றே? அதோ தென்கிழக்கில் தோன்றும் அக் கோட்டை மணிபல்லவக் கோட்டை எனப்பெயர் பெறும். இதோ கிழக்குத் திக்கில் காணப்படும் கோட்டை ஜாம்புவன் கோட்டை என்று அழைக்கப்படும். இந்த மூன்று கோட்டைகளைவிடப் பலம் பொருந்திய கோட்டைகள் இந்தப் பாஞ்சால தேசத்திலேயே இல்லை. இந்த மூன்று கோட்டைகளின் சொந்தக்காரர்களான பிரபுக்களைவிட அதிகாரத்திலும் செல்வாக்கிலும் சிறந்த பிரபுக்களும் இந்தப் பாஞ்சால தேசத்தில் இருந்திலர். என்னுடைய எஜமானரான விண்ணெளியான் அழகிலும் ஆண்மையிலும் சிறந்தவர். போர்க்களத்தில் இடிபோல் முழங்கி அஞ்சாமல் யுத்தம் புரியும் ஆற்றல் மிக வாய்ந்தவர். கோடி சூரியர்கள் ஏக காலத்தில் உதித்தால் எவ்விதம் பிரகாசிப்பரோ அவ்விதமாக அவருடைய சரீரத்தின் அழகும் பொலிவும் இருக்கும். அதனாலேயே விண்ணெளியான் என்று அவர் பெயர்பெற்றார். யுத்தகளத்தில் இடிபோல் முழக்கமிடும் இயல்புடையவராதலால் அவருக்கு மேகமுழக்கன் என்னும் மற்றொரு பெயரும் உண்டு. அதோ, சிந்து நதிக்கரையில், இடி விழுந்து எரிந்துபோன பெரிய மரம் ஒன்று நிற்கிறது, பார்த்தீர்களா? அந்த இடத்தில் —" என்று பரந்தாமன் கூறி மேற்கொண்டு எதும் சொல்ல முடியாதவனைப் தயங்கினான்.

"ஆம்; அந்த மரம் கருகிப்போய் நிற்பதை நான் காண்கின்றேன். அந்த இடத்தில் என்ன விசேஷம்?" என்று சிவகன் ஆவலோடு கேட்டான்.

"ஐயோ! அங்கேதான், — அந்த மரத்தின் அடியிற்றான் கொலை செய்யப்பட்ட சாமியார் —" என்று பரந்தாமன் தன் கண்களில் நீர்ததும்பக் கூறிக்கொண்டு

வந்தபோது, சிறிது தூரத்தில் உட்கார்ந்திருந்த பூதகி, "போதும், — போதும்! பெரியவரே! உம்முடைய வாயை மூடும்" என்று உரத்துக் கூவிவிட்டுச் சிவகனை நோக்கி "சிவகரே! என்னிடத்தில் உமக்குத் தினைத் துணையாவது மதிப்பிருந்தால், — என்னுடைய கேவல லாபத்தை உண்மையிலேயே நீர் விரும்பியவரா யிருந்தால், — இந்த நிமிஷத்திலேயே இவ்விடத்தை விட்டுப் புறப்படும்! அந்த வயோதிகனோடு வார்த்தையாட வேண்டாம்! அவனைத் தனியே விட்டுவிடும்" என்று வற்புறுத்துரைத்தாள்.

"பூதகியே! உன்னிஷ்டப்படியே நடக்கிறேன்! எழுந்திரு, புறப்படுவோம்!" என்று சிவகன் பூதகியை நோக்கிக் கூறிவிட்டுப் பரந்தாமனை நோக்கிப் "பெரியவரே! நாங்கள் போய் வருகிறோம்; எங்களுக்கு விடை கொடும்" என்று சொன்னன்.

"நல்லது; போய் வாருங்கள்! கோட்டையின் வெளிவாயில் வரையில் உங்களைக் கொண்டுவந்து விட்டு விட்டு நான் திரும்புகிறேன். வாருங்கள்" என்று பரந்தாமன் சொன்னன்.

உடனே சிவகனும், பூதகியும் கோரியின் உச்சியி லிருந்து கீழிறங்கினர்கள். பரந்தாமன் அவர்களுக்கு வழி காட்டிக்கொண்டே முன் சென்றன்.

கோரியின் அடிவாரத்திற்கு மூவரும் சென்றார்கள். அங்கே சென்றவுடன், அடிவாரத்திலிருந்த ஒரு பெரும் புதருக்குள்ளிருந்து ஐந்தாறு போர்வீரர்கள் திடீரென்று வெளிப்பட்டுப் பூதகியை எதிர்த்தார்கள். இந்த ஐந்தாறு வீரர்களுக்கும் தலைவராய் ஒரு சந்தியாசி இருந்தார். அந்தச் சந்தியாசி சதானந்தசாமியார் என்ப

தைப் பூதகி அறிந்துகொண்டாள். அப்போது அவளுக்கு உண்டான அச்சத்தையும் கோபத்தையும் நாம் எவ்வாறு எடுத்துரைப்போம்.

"பூதகி எனப்படும் பெரும் பாதகியே! இறந்து போ; நான் பழிக்குப்பழி வாங்கவே வந்தேன்" என்று சதானந்த சாமியார் கூறி, மிகுந்த வேகத்துடன் தன் கையிலிருந்த கட்டாரியினால் பூதகியின் மார்பில் குறிவைத்துக் குத்தினார்.

"வஞ்சனை நிறைந்த பாதகனே! இறக்கப் போவது நீயேயன்றி நானல்லேன். உன்னுடைய சௌரியமும் சாமர்த்தியமும் என்னிடம் செல்லமாட்டா" என்று பூதகி ஒரு பெண் சிங்கம்போல் கர்ச்சித்துக் கூறி, இடையிற் செருகியிருந்த தன்னுடைய கட்டாரியை உருவி, அதனால் சந்நியாசியின் குத்தைத் தடுத்து அவரைக் குத்தினாள்.

சந்நியாசியினுடைய கட்டாரி பூதகியின் நெஞ்சிற் பாயாவிட்டாலும், அவளுடையகையில் பாய்ந்து பெருங் காயத்தை உண்டாக்கி விட்டது; அவளுடைய கையிலிருந்து இரத்தம் ஆறுபோல் பெருகிற்று; அவளணிந்திருந்த உடை இரத்தத்தில் நனைந்தது. இச் சம்பவங்கள் எல்லாம் கண்ணிமைப் பொழுதிற்குள் நிகழ்ந்தன.

சீவகனுக்கோ ஏதும் தோன்றவில்லை. அவன் சிறிது நேரம் ஸ்தம்பித்து அசையாமல் நின்றான். பிறகு, தன் இடுப்பில் தொங்கிக்கொண்டிருந்த வாளாயுதத்தை அதன் உறையினின்றும் சரேலென்று உருவிக் கரத்திற் பிடித்தான்; சிம்மம்போல் கர்ச்சித்தான்; சதானந்த சாமியாரை நோக்கி வாளை வீசினான், ஆனால் சதானந்த சாமியாரைச் சேர்ந்த ஆறு போர் வீரர்களும் ஏக காலத்தில் சீவகனை எதிர்த்தபடியால்,

அவன் சிறிது அஞ்சினன். வயோதிகனை பரந்தாமனைச் சந்தியாசி ஒரே அடியில் கீழே வீழ்த்திவிட்டார். ஆனாலும், அவனுடைய சரீரம் வண்மையாயும் பலம் பொருந்தியதாயும் இருந்தபடியால், அவன் மீண்டும் எழுந்தான். கையிற் பலமான காயம் பட்டதால் மூர்ச்சித்திருந்த பூதகியைத் தன் மார்பில் அணைத்தபடியே மெதுவாக நடத்திக்கொண்டு கோரியின்மேல் பரந்தாமன் ஏறினன்.

"அவனைப் பிடித்துக்கொண்டு வாருங்கள்! விடாதீர்கள்,— விடாதீர்கள்!" என்று சதானந்தர் போர் வீரர்களை நோக்கி உரத்துக் கூவினர்.

அவருடன் வந்த போர்வீரர்கள் அறுவரும் பரந்தாமனையும் பூதகியையும் சூழ்ந்துகொண்டு அவர்களை அப்புறம் செல்லவொட்டாமற் றடுத்தார்கள். சிவகனை, பூதகிமேல் அவர்கள் பாயாதபடி எதிர் நின்று அவர்களைத் தடுத்தான். ஆனாலும் அவன் தனிமையாக இருந்தபடியால், அவர்களை வெல்ல அவனால் முடியவில்லை. இச் சமயத்தில் திடீரென்று ஒரு போர் வீரன் குதிரைமீது ஏறியபடியே அவ்விடத்திற்கு வந்து சிவகனுக்கு உதவியாக நின்றான். அவ்வீரன் யாரோ வெனின்,— இரும்புக் கவசமணிந்த கண்ணகியே!

அதிகாரம் — 70

இலவந்திகைக் கோட்டை

மேகனுடைய வளர்ப்புப் புத்திரியான கண்ணகி ஆண்மையிற் சிறந்த ஆடவனைப்போல் இரும்புக் கவசமணிந்து யுத்தத்திற்குரிய ஆயுதங்களைக் கரத்திலேந்திப்

புரவிமீதேறிக் காற்றினுங் கடுக அவ்விடத்திற்கு வந்தவுடன் சீவகனுக்குண்டான மனக்கிளர்ச்சியையும் மகிழ்ச்சியையும், ஏனையோருக் குண்டான அதிசயத்தையும் ஆச்சரியத்தையும் யாரே எடுத்துரைக்கவல்லார்?

இப்போது சீவகன் கண்ணகி இருவரும், பூதகியையும் பரந்தாமனையும் எதிரிகள் அணுகாதபடி மாறி மாறித் தடுத்து யுத்தம் புரிந்தார்கள்.

"பெயர் தெரியாத போர் வீரரே! இப்போது இரண்டாம் முறையாக நாம் ஒன்று சேர்ந்து யுத்தம் புரிகின்றோம். ஆனாலும், நாம் இருவர் இருக்கின்றோம்; நம்முடைய பகைவரோ எழுவரிருக்கின்றனர். இருந்த போதிலும் முன்முறை நாம் இருவராக இருந்து பலரை வெற்றிகொண்டதுபோல் இம்முறையும் வெற்றி கொள்வோமென்று நம்புகிறேன்" என்று சீவகன் சொன்னான்.

"இப்போதுதான் என்ன! நாம் தோல்வியுறுவோமா, — இல்லை; ஒருகாலுமில்லை!" என்று கண்ணகி உற்சாகத்தோடு கூறிப் புரவிமீதிருந்தபடியே, உறையிலிருந்த சுருள் கத்தியை உருவி, ஆகாயத்தில் வெள்ளியைப்போல் மின்னும்படி சுழற்றி, சதானந்த சாமியார் கையிலிருந்த கட்டாரியை நோக்கி வீசினாள். பூதகியின் இரத்தத்தில் தோய்ந்திருந்த அந்தக் கட்டாரி நெடுந் தூரத்திற்கு அப்பாற் சென்று விழுந்தது. சதானந்தர், மற்ற ஆறு வீரர்களையும் சீவகனையும் கண்ணகியையும் எதிர்க்கும்படி குறிப்பா லுணர்த்திவிட்டு அப்புறம் சென்றார். சிலநிமிஷங்கள் வரையில் சீவகனுடைய நிலைமையும் கண்ணகியினுடைய நிலைமையும் அபாயத்திற் குள்ளாகுமோ என்று ஐயுறும்படியாகவே இருந்தன. ஏனெனில், எதிரிகள் ஆறு பேரானதால், அவர்கள் இவர்களைச் சூழ்ந்து கொண்டு ஏக காலத்தில்

நாலா புறத்திலும் எதிர்த்தார்கள். இரு திறத்தாரும் செய்த யுத்தம் கண்ணுறுவதற்கே அச்சத்தை விளைக்கும்படியாய் அவ்வளவு பயங்கரமாயும் கொடூரமாயும் இருந்தது. எதிரிகளுடைய வெட்டும் குத்தும் சிவகன் மேல் விழாதபடி கண்ணகி அவனுக்கு முன்னால் நின்று கொண்டு மறைத்தாள். எதிரிகளுடைய ஆயுதங்கள் கண்ணகி அணிந்திருந்த இருப்புக் கவசத்தின்மேற் பட்டு மழுங்கியும் உடைந்தும் போயின. சிவகனுடைய வாளாயுதம் எதிரிகள் இருவருடைய தலைகளை அடியோடு வெட்டி அவர்களை அவனுடைய காலடியில் வீழ்த்திற்று. கண்ணகி மற்றொரு போர் வீரனை எதிர்த்து அவனுடைய வலக் காலையும் இடக் கையையும் தன்னுடைய சுருள் கத்தியினால் துண்டித்து விட்டாள். எஞ்சிய மூன்று வீரர்களும் மிகுந்த உக்கிரத்துடன் யுத்தம் புரிந்தார்கள். நம்பிக்கை அடியோடு ஒழிந்த போதும், ஓர் ஆபத்திலிருந்து தப்ப முடியாமல் தியங்கும்போதும் மனிதர்களுக்கு ஒருவிதமான தைரியம் அவர்களை அறியாமலே சிற்சில சமயங்களில் ஏற்படுவதுண்டு. அத்தகைய தைரியம் இந்தப் பேர்வீரர்களுக்கு இப்போது உண்டாகிவிட்டது.

இவர்கள் இவ்விதம் யுத்தம் புரிந்துகொண்டிருந்த சமயத்தில் பரந்தாமன் மெதுவாய்ப் பூதகியை அப்புறப்படுத்தி அவளைக் கோரியின்மீது அழைத்துக் கொண்டு போய் விட்டான். சதானந்த சாமியார் பூதகியையும் பரந்தாமனையும் பின் தொடர்ந்து பிடித்தல் வேண்டி கோரியின்மீது மிக விரைந்து ஏறினார். அவர் ஏறிச்சென்றதைச் சிவகன் பார்த்துவிட்டான். செய்வதுயாதென அவனுக்குப் புலப்படவில்லை. அவரைப் பின்தொடர்ந்து சென்று எதிர்க்கவிட்டால் பூதகி அவ

ரிடம் சிக்கிக்கொள்வாள். கோபத்தினால் அவர் பூதகியைக் கொன்றுவிட்டாலும் கொன்றுவிடுவார். அவரைப் பின்தொடர்ந்து சீவகன் சென்றாலோ, கண்ணகியை மூன்று போர்வீரர்களும் சேர்ந்து எதிர்ப்பார்கள். சீவகன் என் செய்வான் பாவம்! பூதகியைக் காப்பதற்குச்சென்றால், கண்ணகி அபாயத்திற்குள்ளாவாள்! கண்ணகியைக்காப்பதற்காக இருந்தால் பூதகி அபாயத்திற்குள்ளாவாள்! இருதலைக்கொள்ளி எறும்பு போல் சீவகன் தயங்கிக்கொண்டிருந்தபோது, கண்ணகி மிகக் கோரமான யுத்தம்புரிந்து வேறு இரண்டு போர்வீரர்களின் தலைகளைத் துணித்தெறிந்தாள். உயிரோடிருந்த மற்றொருவன் தன் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று கிணைத்துப் புறங்காட்டி ஓடிவிட்டான். சீவகன் அம்புபோல் பாய்ந்து கோரிமீது சென்றான். ஏற்கனவே சத்தானந்த சாமியார் பூதகியை நெருங்கிவிட்டார். ஆனால், சீவகன் சென்ற காலடி ஓசை கேட்டவுடன் திரும்பிப்பார்த்தார்; தன்னுடைய போர்வீரர்களில் ஐவர் அடிவாரத்தில் இறந்து கிடப்பதையும், ஒருவன் புறங்காட்டி ஓடுவதையும் கண்டார். உடனே அவருடைய தைரியம் அடியோடு ஒழிந்தது. கண்ணகி, இறந்துபோன போர்வீரர்களில் தனக்குத் தெரிந்தவர்கள் எவரேனும் உண்டோ என்பதை அறிய விரும்பினவளைப்போல் வீழ்ந்துகிடந்த பிணங்களைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தாள். அப்போது கண்ணகி மனத்தில் தோன்றிய எண்ணங்கள் பலவாகும்.

"ஆ! இவ்வுலகத்தின் இயல்பு இருந்தவாறு .என்னே, என்னே! மனிதர்கள் புரியும் தீச்செயல் இத்தனை உயிர்சேதத்தையும் இரத்தப்பெருக்கையும் விளைவிக்கின்றதே! இரத்தப்பெருக்கு என்னுடைய கையினாலா

ஏற்படவேண்டும்! இந்த மனிதர்களின் உயிர்கள் என்னுடைய ஆயுதத்தினால போகவேண்டும்! ஆனாலும் நான் புரிந்த கொலைகளும், என்னுடைய ஆயுதத்தினல் சிந்தப்பட்ட இரத்தமும் என்னைத் தற்காத்துக்கொள்ளுவது கருதியும், தருமத்தை ஸ்தாபித்துக் குற்றமற்றவர்களைக் காப்பதுகருதியும் ஏற்பட்டன. ஆதலால் நான் புரிந்த செயல் மறச்செயலாகாது; அறச்செயலேயாகும். தன்னைக்கொல்லவந்த பசுவையுங் கொல்லலாம் என்று தருமசாஸ்திரம் கூறுகிறது. அப்படியிருக்கும் போது இந்தக் கொடியவர்களை நான் ஏன் கொல்லலாகாது? நான் புரிந்தசெயல் பெண்பாலாகிய எனக்கு ஏற்றதன்று. ஆனாலும், நல்லோர்களைக் காக்கவே தீயோர்களை ஒறுத்தேன். ஆதலால், என் செயல் பாவச்செயலாகாது. ஒருகால் நான் புரிந்தது பாவமேயாயினும், என்னை மன்னிக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்'' என்று கண்ணகி தனக்குள் ளேயே சொல்லிக்கொண்டாள்.

தன்னுடைய போர்வீரர்கள் அடைந்த கதியைக் கண்ட சதானந்த சாமியார் எவ்விதமாவது தப்பித்துக் கொண்டு போனல் போதுமென நினைத்தார். ஆகவே, அவர் கோரியிலிருந்து கீழே திடீரென்று குதித்துப் புதர்களின் இடையிலே மறைந்து போனார். அவரைப் பின் தொடர்ந்து செல்லச் சிவகன் கருதினன். ஆனாலும், பூதகியின் கையில் பலமான காயம் பட்டிருந்தபடியால் அவளுக்கு வேண்டிய சிகிச்சைகள் புரியவேண்டுமே என்று நினைத்து அவரைப் பின் தொடர்ந்து செல்லாமல் இருந்து விட்டான்.

இதற்கிடையில், கோட்டைக்கு வெளியே தங்கியிருந்த சிவகனுடைய ஏவலாளர் இருவரும், பூதகியின்

தோழிகள் இருவரும், நெடுநேரமாகியும் கோட்டைக் குள் சென்ற சீவகனும் பூதகியும் திரும்பி வராமையைக் கண்டு பெரிதும் சந்தேகங் கொண்டவர்களாய் அவர் கள் இருவரையும் தேடிக்கொண்டு கோட்டைகுள் வந் தார்கள். கோட்டையின் பல பாகங்களிலும் அவர் களைத் தேடிவிட்டு இறுதியில் கோரியின் அடிவாரத் திற்கு வந்தார்கள். அங்கே ஐந்து மனிதர்கள் கொலை யுண்டு கிடப்பதையும், இரும்புக் கவச மணிந்த போர் வீரர் ஒருவர் இறந்து போனவர்களின் சமீபத்தில் கிற் பதையும் கண்டார்கள். சீவகனுக்கும் பூதகிக்கும் ஏதா வது ஆபத்து விளைந்திருக்குமோ வென அவர்கள் ஐயுற் றார்கள். கோரியின் அடிவாரத்தில் நடந்த யுத்தத்தின் விவரத்தைக் கண்ணகி அவர்களுக்கு எடுத்துரைத்துச் சீவகனும் பூதகியும் சுகமாயிருக்கிறார்கள் என்றும், ஆனால் பூதகிக்கு மாத்திரம் கையில் பலமான காயம் என்றும் கூறினள்.

"என்ன! பூதகியின் கையில் பலமான காயம்பட்ட தா?" என்று மீனாக்ஷியும் காமாக்ஷியும் ஏக காலத்தில் பதைபதைத்துக் கண்ணகியைக் கேட்டார்கள். இவ்வி தம் கேட்டுவிட்டு அவர்கள் இருவரும் ஒருவரையொரு வர் ஒருவகையான பார்வையுடன் பார்த்துக் கொண் டார்கள். அந்தப் பார்வையில் துயரமும் அச்சமும் கலந்து தோன்றின.

"பெண்களே! உங்களுடைய எஜமானிக்குப் பேராபத்து ஒன்றுமில்லை; ஆதலால் நீங்கள் அஞ்ச வேண்டாம்,— கவலையுற வேண்டாம். கையில் சிறு காயம் பட்டது. அதிலிருந்து இரத்தம் பெருகிற்று. இரத்தத்தைக் கண்டு பயந்து உங்கள் தலைவி மூர்ச்சை யாயினளே யொழிய வேறில்லை. நற்குணம் வாய்ந்த

வயோதிகர் ஒருவர் அவளை அழைத்துக் கொண்டு போயிருக்கிறார். அவர் அவளுக்கு வேண்டிய சிகிச்சை செய்து குணப்படுத்துவார்'' என்று கண்ணகி புகன்றாள்.

''ஐயா, எங்களுடைய எஜமானி எங்கே?'' என்று மீனாக்ஷி ஆவலோடு கேட்டாள்.

''வீரரே, எங்கள் தலைவியை எங்கே தூக்கிச் சென்றார்கள்?'' என்று காமாக்ஷி கவலையோடு உசாவினாள்.

''இதோ தெரியும் இந்த ஒற்றையடிப் பாதை வழியாக அந்த வயோதிகன் உங்கள் எஜமானியை நடத்தி அழைத்துக்கொண்டு போனான்'' என்று கண்ணகி பதில் பகர்ந்தாள்.

''ஐயா, உங்களுக்கு நாங்கள் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம்'' என்று மீனாக்ஷி உபசாரமாகக் கூறி விட்டுக் கோரிக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் விரைந்து ஏறினாள். காமாக்ஷியும் அவளைப் பின்தொடர்ந்து சென்றாள்.

''ஆ! இந்த வழி நெடுக இரத்தம் சிந்தியிருக்கிறது. ஐயோ! நமது தலைவியின்—'' என்றாள் காமாக்ஷி.

''நமது தலைவியை இன்னும் என்ன என்ன ஆபத்துகள் சூழ்ந்துகொண்டிருக்கின்றனவோ? அவளுக்குக் காயம்பட்டிருக்கின்றது — இரத்தம் அவள் கையிலிருந்து பெருகியிருக்கின்றது — அவள் இரத்த மயக்கத்தினால் அறிவிழந்து போனாள்'' என்று ஏதோ ஆலோசித்துக் கூறுபவளைப் போல் மீனாக்ஷி தயங்கித் தயங்கிப் பேசினாள்.

''சிவகர் இந்த வழியாகத்தான் சென்றார். சந்நியாசி கீழே குதித்துப் புதரில் மறைந்து ஓடியபோது,

சிவகர் இந்த வழியாய்ச் சென்றதை நான் பார்த்தேன்'' என்று காமாக்ஷி கூறினாள்.

''அப்படியானால் சிவகர் இப்போது நமது தலைவியின் பக்கத்தில் இருப்பார். அவள் கையிலிருந்து வெளிப்பட்டு வழிந்தோடிய இரத்தமானது அந்த பயங்கரமான உண்மையை இதுவரையில் சிவகனுக்கு வெளிப்படுத்தியிருக்குமோ?'' என்று காமாக்ஷி பதை பதைத்துக் கூவினாள்.

''கடவுளே, கடவுளே! எங்களைக் காப்பாற்றும்!'' என்று மீனாக்ஷி கூவி மீண்டும் காமாக்ஷியை நோக்கி இவ்விதம் பேச்சில் காலத்தைக் கழித்துக்கொண்டு நாம் எறும்பு ஊர்வதுபோல் ஊர்ந்து சென்றால் பயன் என்ன? வேகமாய் நட! தலைவியின் பக்கத்தினருகே நாம் இருக்கவேண்டும். விரைவிற் சென்று நமது கடமையை நாம் செய்ய வேண்டாமா?'' என்று உசாவினாள்.

உடனே, இந்த இரண்டு பெண்களும் மிகுந்த வேகத்துடன், கோரியின் உச்சியை அடையும் நோக்கத்தோடு, நடக்கலானார்கள்.

இப்போது நாம் பூதகியைக் கவனிப்போம்.

கையில் காயம் ஏற்பட்டு இரத்தம் பெருகியவுடன் பூதகி தன்னறிவிழந்து மயங்கி அப்படியே பரந்தாமன் மார்பின்மீது சரிந்து விட்டாள் அச் சமயத்தில் அவளுக்கு ஒருவிதமான களைப்பு,—இறந்து போகிறவர்களுக்கு, இறப்பதற்குச் சில நிமிஷங்கள் முன்பு உண்டாகும் களைப்பைப்போல்,—உண்டாயிற்று. அவளுடைய கண்கள் மாசடைந்து, எதிரிற் றோன்றிய பொருள்களை அவள் காண முடியாமல் செய்துவிட்டன. பரந்தாமன் அவளைத் தன்மீது அணைத்தபடியே

நடத்திக்கொண்டு போனான். இவ்விதம் நடந்தே அவர்கள் கோரியின்மீது பாதி தூரத்திற்கு மேல் ஏறிவிட்டார்கள். ஆனால் இந்த இடத்தில் தங்கும்படி நேர்ந்தது. ஏனெனில், ஊற்றிலிருந்து நீர் சுரப்பதுபோல் பூதகியின் கையிலிருந்து இரத்தம் வெளிப்பட்டுக் கொண்டே யிருந்தபடியால் ஏதாவது சிகிச்சை செய்து பிறகு அவளை அழைத்துப் போக வேண்டுமென்று பரந்தாமன் கருதினான். உடனே அவன் பூதகியைக் கீழே கிடத்தி, இரத்தத்தைத் துடைத்து விட்டு, தான் உடுத்தியிருந்த வஸ்திரத்தைக் கிழித்துக் காயத்தின் மேல் இறுகச் சுற்றினான். அவ்விதம் செய்தும் இரத்தம் வெளிப்படுவது நிற்கவில்லை. பூதகியோ ஸ்மரணையற்றுப் பிணம்போல் கிடந்தாள். அவளைத் தூக்கிக் கொண்டு பரந்தாமன் மீண்டும் நடக்கலானான்.

அவ்விதம் நடந்துசென்றவன், கோரிக்குக் கீழே என்ன நடக்கிறது என்பதை அறிய விரும்பியவனாய்க் கீழே குனிந்து நோக்கினான். அடிவாரத்தில் காணப்பட்ட பயங்கரமான காட்சியைக்கண்டு உடல் நடுங்கினான். சிவகனும் கண்ணகியாலும் வெட்டி வீழ்த்தப்பட்ட போர்வீரர்களுடைய சரீரங்கள் தலைவேறு உடல் வேறாய்க் கிடக்கின்றன என்பதைப் பரந்தாமன் கண்டுகொண்டானாதலால், அவன் உடல்நடுங்கியது ஓர் ஆச்சரியமன்று. பூதகியைச் சேர்ந்தவர்கள் எத்தகைய அபாயத்திற்கும் உள்ளாகவில்லை என்பதையும் சதானந்த சாமியாருடைய போர்வீரர்களே எமனுலகம் சென்றார்கள் என்பதையும் அறிந்தவுடன் பரந்தாமனுக்கு தைரியமும், சந்தோஷமும், உற்சாகமும் ஒருங்கே உண்டாயின. அவன் பூதகியைத் தூக்கிக்கொண்டே மீண்டும் மேலேறிக் கோரியின் உச்சியை அடைந்தான். அச்சமய

யத்தில் யாரோ மிக வேகமாய்த் தன்னைப் பின்தொடர்ந்து ஓடிவருவதுபோன்ற காலடியோசை அவன் காதில்விழுந்தது. அவன் மிகுந்த அச்சத்தோடு திரும்பிப் பார்த்தான். ஏனெனில் சதானந்த சாமியாருடைய ஆட்களில் எவரேனும் பூதகியைப் பிடித்துச்செல்வதற்காக ஓடி வருகின்றார்களோ என்று அவன் சந்தேகித்தான். ஆனால் சிவகனே தன் பின்னால் நிற்பதைக் கண்டான். அப்போது பரந்தாமனுக்குண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. சிவகன் மிகுந்த ஆவலோடு பூதகியைப் பரந்தாமனிடமிருந்து வாங்கித் தன் மார்போடு அணைத்துக்கொண்டான். பரந்தாமன் சிவகனைத் தன்னுடைய குடிசைக்குள் அழைத்துப்போய் அங்கே கிடந்த ஒரு கட்டிலின்மேல் பூதகியைப் படுக்க வைக்கும்படி சொன்னான். சிவகன் அவ்விதமே செய்தான். ஆனாலும் பூதகியின் தலை சிவகனுடைய தொடைமீதிருந்தது.

"வயோதிகரே! நீர் செய்த உதவிக்காக நான் பெரிதும் நன்றி பாராட்டுகின்றேன். சமயம் நேரும்போது உமக்குப் போதுமானபடி சம்மானம் செய்ய நான் மறவேன். காயத்தின் மீது துணி கட்டப் பட்டிருக்கிறது — இரத்தம் மேலும் மேலும் வெளிப்படுதல் நின்றிருக்கிறது — ஆனாலும் பிரக்ஞை இல்லாமல் சவம்போல் கிடக்கின்றாளே? இப்படியே கிடந்து ஒருகால் இறந்துபோவாளோ —" என்று சிவகன் பரந்தாமனை நோக்கிக் கூறினான். 'இறந்து போவாளோ' என்ற எண்ணம் உதித்தவுடன், ஆண்மையும் தைரியமும் பெரிதும் வாய்ந்த சிவகனுடைய மனத்திலும் அச்சம் தோன்றிற்று. அவனுடைய மெய் முழுவதும் நடுங்கிற்று.

"அவ்வித மெல்லாம் நேராது! நான் போய் ஜலம் கொண்டு வருகிறேன். தண்ணீரை முகத்தில் லடித்துச் சிறிது குடிக்கவும் கொடுத்தால் மூர்ச்சை தெளிந்து விடும்" என்று பரந்தாமன் கூறி, ஜலம் கொண்டுவருவதற்காக வெளியே சென்றான். சிவகாமி, தன் மடிமீது பிரக்ஞையற்றுப் படுத்திருந்த பூதகியை மிகுந்த கவலையோடு கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான்.

பூதகியின் கண்கள் மூடப்பட்டிருந்தன. அவளுடைய உதடுகள் சிறிதே விலகியிருந்தன. முத்தினைய பற்கள் நிலவுபோல் ஒளிர்ந்து கொண்டிருந்தன. அவள் உடம்பு சிறிதும் அசையவில்லை. கருநிற மூடைய சலவைக்கல்லில் அழகுறச் செதுக்கப்பட்ட ஒரு பதுமையைப் போல் அவள் அச்சமயம் விளங்கினாள். அவள் கிடந்த நிலைமை சிவகாமிக்கு அச்சத்தையும் கவலையையும் இறந்து விடுவாளோ வென்னும் ஐயத்தையும் விளைவித்த போதிலும், அந்தச் சமயத்திலும் அவளுடைய அழகைக் கண்டு வியவாதிருக்கச் சிறிதும் முடியவில்லை. அவளுடைய ஒவ்வோர் உறுப்பையும் சிவகாமி கூர்ந்து கவனித்து, ஒவ்வொன்றும் இருந்த நேர்மையையும் அமைதியையும் கண்டு மனமகிழ்ந்தாள். அவளது புருவங்களையும் கண்களையும் மூத்த மிட்டாள். சிறிது நேரங் கழிந்தபின் பூதகியின் சரீரம் சிறிது அசைந்தது. அப்போது சிவகாமிடைந்த சந்தோஷத்திற்கு ஓர் எல்லையே இல்லை.

"ஓ! என் கண்மணி உயிரோடிருக்கிறாள், — உயிரோடிருக்கிறாள்! அவள் பிழைத்துக் கொண்டாள்!" என்று சிவகாமி களிப்பின் மிகுதியால் வாய்விட்டுக் கூவினாள்.

இச்சமயத்தில் பரந்தாமன் தண்ணீரோடு வந்தான். அவளுடைய முகத்தில் அவன் ஜலத்தைத் தெளித்து சிறிது ஜலத்தை வாயில் ஊற்றி, ஒரு விசிறி கொண்டு விசிறினான். பூதகிக்குச் சிறிதுசிறிதாய்ப் பிரக்ஞை வந்தது. முதலில் அவளுடைய கால்கள் அசைந்தன; பிறகு கைகள் அசைந்தன; அதன் பின்னர்த் தலையும் அசைந்தது; இறுதியில் அவள் தன் சேற்கண்ணை மெதுவாய்த் திறந்து பார்த்தாள்; சிவகனை உற்று நோக்கினாள்; அவன் தன் பக்கத்திலிருப்பதறிந்து புன் சிரிப்புக் கொண்டாள்.

"என தருமைக் காதலியே, நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நம்முடைய விரோதிகள் யுத்தத்தில் தோல்வியுற்று மடிந்தார்கள். பாதகனுகிய சதானந்த சாமி ஓடிப்போய் விட்டான்" என்று சிவகன் அன்பு ததும்பப் பூதகியிடம் கூறினான்.

"அந்த வாலிபன் — பிரகாசம் பொருந்திய இரும்புக் கவசம் அணிந்திருந்தவன் — பெயர் தெரியாத உங்களுடைய நண்பன் —" என்று பூதகி மிக மெல்லிய குரலில் விட்டுவிட்டுப் பேசி "அவள் கதி — இல்லை, இல்லை,—அவன் கதி யாதாயிற்று?" என்று உசாவினாள்.

"அவன் சௌக்கியமா யிருக்கிறான், — அவனுக்கு எத்தகைய அபாயமும் இல்லை. பூதகியே, சற்று முன்பு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி நீ இப்போது நினைக்க வேண்டாம், — வீண் எண்ணங்களினால் உன் மனதைப் புண்படுத்திக் கொள்ளாதே!" என்று சிவகன் பரிவோடு கூறினான்.

பூதகி, இரும்புக் கவசம் அணிந்திருந்த கண்ணகியைக் குறித்துப் பேசியபோது, பெண்பாலிற் குறிப்

பிட்டதையும், ஆணும் பிறகு 'அவள்' என்றதை 'அவன்' என்று திருத்திக் கொண்டதையும் சிவகன் கவனித்தானேயினும், அவன் சிறிதும் சந்தேகம் கொள்ளவில்லை. ஏனெனில், இரும்புக் கவச மணிந்திருந்த கண்ணகியை ஆண் மகனென்றே சிவகன் நம்பியிருந்தான். ஆகலால் ஆணு பெண்ணு என்னும் சந்தேகம் அவனுக்கு நிகழவில்லை. பூதகி, மதிமயக்கத்தினால் உளறினாள் என்றும், ஆணும் பிறகு சுயபுத்தி வந்தவுடன் திருத்திக் கூறினாள் என்றுமே சிவகன் நினைத்தான்.

"இப்போது எனக்கு உடம்பு சிறிது குணமாயிருக்கிறது" என்று பூதகி அன்போடு மொழிந்தாள். அவள் தன்னுடைய கையில் காயம்பட்டு இரத்தம் பெருகிற்று என்பதைத் திடீரென்று நினைவு கூர்ந்தவளைப் போல், கையில் சுற்றப்பட்டிருந்த துணியைக் கூர்ந்து கவனித்தாள். அப்போது அச்சத்தினால் அவள் உடம்பு நடுங்கிற்று; பார்வை மாறிற்று; மொழி குழறிற்று.

"என் கையில் ஏற்பட்ட காயத்திற்குச் சிகிச்சை செய்து துணி சுற்றியது யார்?" என்று பரபரப்போடு பூதகி கேட்டாள்.

"அம்மா, நான்தான் சிகிச்சை செய்து துணி சுற்றினேன்; அடர்ந்த புதர் வழியாக உங்களைத் தூக்கிக் கொண்டு வந்தேன். அச் சமயத்தில் சிகிச்சை செய்தேனாதலால், என்னுடைய சிகிச்சை அரை குறையாகத்தானிருக்கும். ஏனெனில், நான் சிகிச்சை செய்த இடம் போதிய வெளிச்சமின்றி இருளடைந்திருந்தது என்று" பரந்தாமன் பதில் புகன்றான்.

பூதகி ஒருவகையான சந்தேகத்தோடு பரந்தாமனை உற்று நோக்கினாள். பிறகு சந்தேகம் தெளிந்தவ

ஸ்ப்போல் உற்சாகத்தோடு "நற்குணம் வாய்ந்த பரந்தாமரே! நீர் செய்த பேருதவிக்காக் நான் நன்றி பாராட்டுகிறேன்" என்று வயோதிகனை பரந்தாமனை நோக்கிக் கூறிவிட்டு தன்னருகிலிருந்த சிவகனை நோக்கி "அன்பரே, நீங்கள் செய்த பேருதவிக்கு எவ்விதமாய் நன்றி பாராட்டுகிற தென்று எனக்குத் தெரியவில்லை" என்று பூதகி அன்புடன் மொழிந்தாள்.

"பூதகியே, நன்றி பறிதலைப்பற்றியும், பெருமையைப் பற்றியும் நீ என்னிடம் பேசாதே! காதலைப் பற்றிப் பேசு" என்று மெல்லிய குரலிற் சிவகன் கூறினன்.

உண்மை யன்புடைய காதலர்களுக்குக் காதலைப் பற்றிய பேச்சைப்போல் மகிழ்ச்சி தரவல்லது ஒன்றுமில்லை; காதலைப் பற்றிய நினைவைப்போல் இன்பம் அளிக்க வல்லது ஒன்றுமில்லை. ஆதலால் சிவகன் பூதகியை நோக்கி இவ்விதம் கூறியது ஓர் ஆச்சரியமன்று.

"ஆம்; நண்பரே, உங்களை நான் முழுமனத்துடன், என் இருதயத்தின் அடிவாரத்திலிருந்து, காதலிக்கின்றேன். எந்தப் பெண்ணுமே இதுவரையில் எந்த ஆண்மகனையும் நான் தங்களைக் காதலிப்பதுபோல் காதலித்ததில்லை என்று சொல்லும்படி அவ்வளவு முதிர்ந்ததாயும் இணையற்றதாயும் என்னுடைய காதல் இருக்கின்றது" என்று பூதகி ஆர்வத்தோடுகூறி தன் நீலோற்பல விழிகளால் சிவகனை நோக்கினாள். அந்தப் பார்வையில் காதல் கனிந்து ஒழுகிற்று. அவள் கருவிழிகள் காதல் மழையை சிவகன்மீது சொரிய வருஷித்தன என்று சொல்லுதல் இழுக்காகாது.

பூதகி, சிவகன் மடிமீது சாய்ந்தபடியே ஐம்புலன்களையும் பரவசப் படுத்தும்படியான காதற் சொற்களைக்

கனிவோடு பேசிக்களித்திருந்த சமயத்தில்,— அவளுடைய அழகிலும் பேச்சிலும் ஈடுபட்டு மெய்மறந்து போனான்தத்தில் சிவகன் திளைத்துக்கொண்டிருந்த சமயத்தில்,— மீனாக்ஷியும் காமாக்ஷியும் வந்து சேர்ந்தார்கள். சிவகனும் பூதகியும் தங்களையும் தங்களைச் சுற்றியுள்ள பொருள்களையும், உலகத்தையும் அடியோடு மறந்து காதல் மயமாய் விளங்குவதைக் கண்டவுடன் மீனாக்ஷிக்கும் காமாக்ஷிக்கும் உண்டான ஆனந்தத்திற்கு வரையறை இல்லை. தங்கள் தலைவியின் கையில் தாலி சுற்றப்பட்டிருப்பதை அவர்கள் கண்டார்கள். ஒரு பெரிய சுமை தங்கள் இருதயத்திலிருந்து இறக்கப்பட்டவர்களைப்போல் அவர்கள் சந்தோஷமடைந்தார்கள். தண்ணீருக்குள் மூழ்கி இறந்துபோகும் தறுவாயில் இருக்கும் ஒருவனைத் திடீரென்று வெளியே இழுத்துக்கரையில் கொண்டுவந்து சேர்த்தால் அவனுக்கு அச்சமயம் உண்டாகும் ஆறுதலைப்போல் மீனாக்ஷியுடைய மனமும் காமாக்ஷியுடைய மனமும் ஆறுதல் அடைந்தன.

"அன்பிற்சிறந்த பூதகியே! உன்னுடைய சேடிகள் இருவரும் வந்துவிட்டார்கள். அவர்களுடைய மேம்பார்வையில் உன்னை நான் இனி வைத்துவிட்டுக் கீழே சென்று உன்னையும் என்னையும் காப்பாற்றிய அந்த வாலிபனை,— இரும்புக்கவசமணிந்து தீரத்தோடு யுத்தம்புரிந்த பெயர் தெரியாத அந்த வாலிபனை,— பார்த்துவருகிறேன்" என்று சிவகன் பூதகியைநோக்கிக் கூறினான்.

"சிவகரே, உம்மோடு நானும் வருகிறேன். எனக்கு இப்போது உடம்பு முற்றும் சௌக்கியமாகிவிட்டது" என்று பூதகி புகன்றாள்.

"அன்பே, இன்னும் இரண்டொரு மணிநேரமாவது நீ இளைப்பாறவேண்டும். சூரியன் அஸ்தமிப்பதற்கு இன்னும் இரண்டு மணி நேரம் செல்லும். நீயோ அச்சத்தினாலும், உன் கையில் ஏற்பட்ட படுகாயத்தினாலும் மனம் மருண்டிருக்கிறாய். ஆதலால், இந்தக் குடிசையிலேயே இரண்டொரு மணிநேரம் படுத்துக் களைப்பாறினால், நாம் அஸ்தமித்தவுடன் பிரயாணப் படலாம்; நிலவு நன்றாய் எறிக்குமாதலால் சூரியன் மறைந்தபிறகு நாம் பிரயாணம் செய்வதால் பாதகமில்லை. தவிர, உன்னுடைய சேடிகளிடம் காயத்தைக் காண்பித்து அவர்களைக்கொண்டு சரியான சிகிச்சை செய்யவேண்டுவதும் அவசியமாயிருக்கிறது" என்றான் சிவகன்.

"தலைவியே, சிவகர் சொல்லும் ஆலோசனைப்படி நடந்துகொள்ளுவதுதான் நலம் என்று நினைக்கிறேன். ஆதலால், அவர் சொல்லுவதைக்கேள்" என்று மீனாக்ஷி பூதகியைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

ஆனாலும், பூதகி சம்மதப்படாதவளைப்போல் தயங்கினாள். சிவகனை விடாமல் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டாள். அன்பும் சந்தேகமும் கலந்த பார்வையோடு அவனை நோக்கினாள்.

"இல்லை; இல்லை! சிவகரே, உம்மைவிட்டு நான் அரைக்கணமும் பிரிந்திருக்க மாட்டேன். நீரும் என்னை விட்டுப் பிரியக்கூடாது. தவிர, பரந்தாமன் இருக்கிறான்; கண்—" என்று திடீரென்று பேசிய பூதகி, மேற்கொண்டு பேசாமல் சோர்ந்து வீழ்ந்தாள்.

"ஓ! பூதகி பழையபடியும் மூர்ச்சையாகி விட்டாள்! காமாக்ஷியே, மீனாக்ஷியே! நீங்கள் இங்கே வாருங்கள்" என்று சிவகன் பதறிக் கூறினான்.

"இதோ வந்துவிட்டோம்" என்று மீனாக்ஷியும் காமாக்ஷியும் கூறிக்கொண்டே விரைந்துவந்து மூர்ச்சித்துக்கிடந்த பூதகியைத் தங்கள் கைகளில் ஏந்திக் கொண்டார்கள்.

"அதோ, எதிரில் தோன்றும் அறைக்கு உங்கள் எஜமானியைத் தூக்கிக்கொண்டு போங்கள். அந்த அறையில் படுக்கை வசதியாக இருக்கும்; உங்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் அந்த அறையில் இருக்கின்றன. இரத்தம் அதிகமாக வெளிப்பட்டதால் உண்டான மயக்கமேதவிர வேறில்லை. இன்றிரவு இங்கே தங்கியிருந்து நாளைக் காலையில் பிரயாணப் படுவீர்களானால் சுலபமாயிருக்கும். இராப்பொழுதுக்குள் களைப்பு நீங்கிப் புதிய பலமும் உற்சாகமும் உங்கள் எஜமானிக்கு உண்டாகிவிடும்" என்று பரந்தாமன் கூறினான்.

இவ்விதம் கூறி அவன் அவர்களைத் தான் கூறிய அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கே கிடந்த பஞ்சணையின்மீது அவர்கள் பிரக்ஞையற்றிருந்த பூதகியைப் படுக்கவைத்தார்கள். பரந்தாமன் அவ்வறையிலிருந்து நீங்கினான். பூதகியினுடைய சரீர நிலைமை எவ்விதமிருக்கிறதென்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள விரும்பியவனைப்போல் சீவகன் சிறிது நேரம் அறைக்குள்ளேயே தயங்கித் தயங்கி நின்றான். உயிருக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய விதமாய் அவளுடைய தேகஸ்திதி இல்லை என்றும், இராப்பொழுதுக்குள் அவள் குணமடைந்து விடுவாள் என்றும் மீனாக்ஷி சீவகனுக்கு எடுத்துக் கூறினாள். அதன் பிறகு சீவகனுக்குத் தைரியம் பிறந்தது, — கவலை ஒழிந்தது. பூதகியைக் கவனமாய்ப் பார்த்துக்கொள்ளும்படி சீவகன்

சேடியர்களுக்கு உத்தரவு செய்துவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே சென்றான்.

சிவகன், அவ்வறையிலிருந்து வெளியேவந்த அதே சமயத்தில், அவனுடைய வேலைக்காரர்களில் ஒருவன் கோரிமீது ஏறிவந்து அவனைச் சந்தித்தான். இரண்டு வேலைக்காரர்களுள் ஒருவனை மாத்திரம் கண்டவுடன் சிவகனுக்கு ஆச்சரியமுண்டாயிற்று.

"தலைவரே, பிரகாசம்பொருந்திய இரும்புக் கவசம் அணிந்துகொண்டிருந்த போர்வீரர் போய்விட்டார்; தாம் ஏதோ அவசரகாரியமாய்ப் போகவேண்டுமென்றும், ஆதலால் தங்களைக்கண்டு தங்களிடம் விடை பெற்றுக்கொண்டுபோக முடியவில்லை என்றும், இவ் விஷயத்தைத் தங்களிடம் தெரிவித்துவிடவேண்டுமென்றும் அவர் என்னிடம் சொன்னார். இதைத் தங்களிடம் தெரிவிக்கவே இங்கு நான் வந்தேன்" என்று வேலைக்காரன் சொன்னான்.

"என்ன! புறப்பட்டுப் போய்விட்டாரா!" என்று சிவகன் அதிசயத்தோடும் ஆச்சரியத்தோடும் கூவி உசாவினான்.

இரும்புக்கவசம்அணிந்திருந்த போர்வீரனுடைய செயல் சிவகனுக்கு ஆச்சரியத்தையும் வருத்தத்தையும் விளையாமலிருக்குமா? முன்பு சத்திரத்தில் தங்கியிருந்தபோதும், சிவகனிடம் விடைபெற்றுக் கொள்ளாமலே குதிரைமீது திடீரென்று ஏறிக்கொண்டு போய்விட்டான். இப்போதும் விடைபெற்றுக் கொள்ளாமல் போய்விட்டான். ஆகவே, அந்த வாலிபன் சிற்சில சமயங்களில் பயித்தியம் பிடித்தவனைப்போல் நடந்து கொள்வான்போலும் என்று சிவகன் நினைத்தான்.

அவனுடைய உண்மைக் கருத்தையும், திடீரென்று தோன்றுவதும் திடீரென்று மறைவதுமாக அவன் இருப்பதற்குக் காரணத்தையும் அறிந்துகொள்ளச் சிவகனால் முடியவில்லை. ஆனாலும், அவ்வாலிபன் அவ்விதம் சொல்லிக்கொள்ளாமல் போனதில் சிவகனுக்கு ஏற்பட்ட துயரம் கடலினும் பெரிதே!

"ஆம்; எஜமானே! அந்தப் போர்வீரர் போய்விட்டார்! தங்களிடம் தெரிவிக்கும்படி என்னிடம் சொல்லிவிட்டுத் தம்முடைய குதிரை நின்றுகொண்டிருந்த இடத்திற்குச் சென்று குதிரைமீது ஏறிக்கொண்டு போய்விட்டார். குதிரை நாற்கால் பாய்ச்சலில், அதோ தெரியும் அந்த ரஸ்தாவழியாய்ச் சென்றது" என்று வேலைக்காரன் கூறி, குதிரை சென்ற வழியையும் கோபுரமீது நின்றபடி கையினால் சுட்டிக் காட்டினான்.

"அந்த ரஸ்தா கேசரிக்கோட்டைக்குச் செல்லுகிறது" என்று பக்கத்தில் நின்ற பரந்தாமன் சொன்னான்.

"ஓ! அப்படியா!" என்று சிவகன் தலையசைத்தான்.

"ஆம்;" என்று பரந்தாமன் விடை பகர்ந்து மீண்டும் சிவகனை நோக்கி "மாட்சிமைதங்கிய போர்வீரரே! உங்களுக்கும், உங்களுடைய வேலைக்காரர்களுக்கும், அறையிலிருக்கும் மூன்று பெண்களுக்கும் போஜனம் சித்தப்படுத்திவிட்டேன். உங்களுடைய குதிரைகளுக்கும் தீனி தயாராயிருக்கிறது. உங்கள் எல்லோருக்கும் படுக்கைமாத்திரம் வசதியாகச் சித்தஞ்செய்து கொடுக்கமுடியாதவனாயிருக்கிறேன். அதுபற்றிப் பெரிதும் விசனிக்கிறேன்" என்று பணிவுடன் கூறினான்.

"கொங்கு தேசத்து யுத்த களத்தில் கரடுமுரடான தரையில் பல இராக் காலங்களைக் கழித்தவனும்

அத் தரையைப் பஞ்சு மெத்தைபோல் கருதி அதிற் படுத்துச் சுகமாய்த் தூங்கினவனுமான ஒருவன் முன்னிலையில் படுக்கை நல்லதாயில்லை என்பதைப் பற்றிக் கூறி, அதற்காக அவனிடமிருந்து மன்னிப்பை எதிர் பார்ப்பது எற்றுக்கு? எனக்கு ஓர் உருண்டை பிசைந்த தினைமாவும், சிறிது தேனும், ஒரு வட்டில் ஜலமும் போதுமானவை. படுப்பதற்குப் பசுமையான இந்த புற் றரையே போதுமானது. எனது முழங்கையைத் தவிர சிறந்த தலையணை எனக்கு வேண்டுவதில்லை'' என்று சிவ கன் புன் சிரிப்போடு பரந்தாமனிடம் கூறினான்.

''சந்தோஷம்; என்னால் எவ்வளவு சௌகரியம் தங்களுக்குச் செய்து கொடுக்க முடியுமோ அவ்வளவும் செய்து கொடுக்கத் தடையில்லை. வீரரே, முதலில் குதி ரைகள் கட்டுவதற்கு இடத்தைக் காண்பித்து வருகி றேன்'' என்று பரந்தாமன் உரைத்தான்.

''பெரியவரே, அவ்விதமே செய்யும்! நீர் திரும்பி வந்தபிறகு நான் உணவு உட்கொள்ளுகிறேன். பரந் தாமரே! தவிர, இக் கோட்டையைப் பற்றியும் இதற் குச் சமீபத்தில் காணப்படும் ஏனைய இரண்டு கோட் டைகளைப் பற்றியும் பரம்பரையாய் வழங்கப்படும் வர லாற்றினை நான் விவரமாய் உம்முடைய வாய் மூலமாய் அறிய விரும்புகிறேன். ஆதலால், காலதாமதம் செய் யாமல் விரைவில் திரும்பி வந்துவிடும். உம்முடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டே நான் இந்த இடத்தில் நிற்பேன்'' என்று சிவகன் கூறித் தன்னுடைய குதிரைக்காரனையும் அவரோடு போகும் படி பணித்தான்.

பரந்தாமனும் குதிரைக்காரனும் சென்றபிறகு சிவ கன், பூதகி படுத்திருந்த அறைக்குச் சென்று, அறைக்

கதவை மெதுவாய் வெளியில் நின்றுகொண்டே கையினால் தட்டினான். மீனாக்ஷி கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். அவள் கதவைத் திறப்பதிலும், மூடுவதிலும் காட்டிய ஜாக்கிரதையைக் கொண்டு பூதகி மூர்ச்சையிலிருந்து அயர்ந்து உறங்குகிறாள் என்பதைச் சிவகன் அறிந்துகொண்டான். மீனாக்ஷியைப் பூதகியின் தேகஸ்திதி எவ்விதமிருக்கிறதென்று விசாரித்தான். அவன் ஏற்கனவே நினைத்தபடி அவளுடைய பதிலும் இருந்தது.

"சிவகரே, பூதகிக்கு அபாயம் ஒன்றுமில்லை; மூர்ச்சை தீங்கிவிட்டது! அவள் தன் கண்களைத் திறந்து பார்த்தாள். எங்களோடு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தாள். சற்று முன்புதான் கண்ணுறங்கினாள்" என்று மீனாக்ஷி பதில் புகன்றாள்.

"சந்தோஷம்; ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள். அவள் நித்திரை தீங்கி விழித்தவுடன் சிறிது உணவு கொடுங்கள்; பருகுவதற்குப் பாலும் கொடுங்கள். பரந்தாமர் உணவும் பாலும் கொண்டு வருவார்" என்று சிவகன் சொல்லிவிட்டு அப்பாற்சென்றான். மீனாக்ஷி கதவை மெதுவாய்த் திறந்து மீண்டும் சாத்திக்கொண்டே அறைக்குள் சென்றாள். பூதகியைப் பற்றிய கவலை ஒழிந்தவனாய்ச் சந்தோஷத்துடன் சிவகன் மீண்டும் சென்று, முன்பு நின்றுகொண்டிருந்த இடத்தில் நின்றான். சந்திரன் தன் முழுக்கலைகளையும் வீசி நிலவைப் பால்போல் எங்கும் பரப்பிக்கொண்டிருந்தான்.

அந்த இடத்தில் நின்றுகொண்டு, சிறிது தூரத்தில் காணப்பட்ட மணிபல்லவக் கோட்டையையும், ஜாம்பு

வன் கோட்டையையும் சீவகன் கவனித்துக்கொண் டிருந்தான்.

"இந்த இரண்டு கோட்டைகளும் அழிந்துபோய்க் கிடப்பதற்குக் காரணம் என்ன? இந்தக் கோட்டை யும் பாழ்பட்டுப் போயிருக்கிறதே? இந்த மூன்று கோட்டைகளைப் பற்றியும் அச்சத்தையும் அதிசயத் தையும் விளைவிக்கக் கூடிய வரலாறு ஏதேனும் இருக் கத்தான் வேண்டும்" என்று சீவகன் தனக்குள் சிந்தித் துக்கொண்டிருந்தபோதே அவனுடைய கண்கள் சிந்து நதிக்கரையில் இடிவிழுந்து கரிந்துபோய் நின்ற பெரிய விருக்ஷத்தின் மீது சென்றன.

"இந்த மரத்தின் அடியில் கொலை செய்யப்பட்ட ஒரு சாமியாரின் சரீரம் புதைக்கப்பட் டிருப்பதாகப் பரந்தாமர் கூறினரே? அக் கொலை சம்பந்தமாய்க் கூறுவதற்கு அவர் ஆரம்பித்தபோது பூதகி தடுத் தாளே? எதற்காகத் தடுத்தாள்? அக் கொலைக்கும் அவளுக்கும் என்ன சம்பந்த மிருக்கக்கூடும்? இந்த இடத்தில் இருக்க வேண்டாமென்று அவள் வற்புறுத் தினளே? என்ன காரணம்? அவளுடைய உடம்பும் மனமும் இந்தக் கோட்டைக்குள் நுழைந்தது முதல் அச்சத்தினால் பலவகையான மாறுதல்களுக்கு உள்ளா யினவே? இந்தக் கோட்டைக்கும் பூதகிக்கும் ஏதோ சம்பந்த மிருக்கிறது! இல்லாவிட்டால் அவள் இவ்விதம் நடுங்க வேண்டுவதில்லை; — அஞ்ச வேண்டுவதில்லை" என்று மீண்டும் சீவகன் தனக்குள்ளேயே சிந்தித்துக் கொண்டான்.

அவ்விதம் சிந்தித்தபோது அவன் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அஃதாவது,— பரந்தாமனு

டைய வாயிலிருந்து இந்தக் கோட்டை சம்பந்தமான வரலாறு ஏதும் வெளிவரக்கூடாதென்று கருதியே பூதகி அவ்விடத்திலிருந்து உடனே புறப்படும்படி வற்புறுத்தினாள் என்பதுதான். இந்த எண்ணம் பலப்பட பலப்பட எந்த விதத்திலும் பரந்தாமன் மூலமாய் இவரம் அறிய வேண்டும் என்னும் ஆவல் சிவகனுக்கு அதிகப்பட்டது. அவன் பரந்தாமனுடைய வருகையை ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தான்.

பரந்தாமன் மீண்டும் சிவகன் நிற்கும் இடத்திற்கு வந்து அவனை போஜனம் செய்வதற்கு அழைத்துக் கொண்டு போனான். அப்போது குதிரைக்காரர்கள் இருவரும் வந்து விட்டார்கள். இவர்கள் எல்லோரும் போஜனம் செய்தார்கள். பிறகு பரந்தாமன் உணவு அருந்தினான். பூதகிக்கும் அவளுடைய இரண்டு தோழிகளுக்கும் உணவு அவர்களிருந்த அறைக்கே கொண்டு போகப்பட்டது. பரந்தாமன் தன்னுடைய வேலைகளை முடித்துக்கொண்டு சிவகனையும் அழைத்துக்கொண்டு முன்பு சிவகன் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு வந்தான். அப்போது மணி ஒன்பது இருக்கும்; பூரண சந்திரன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். பரந்தாமனும் சிவகனும் அங்கே கிடந்த ஒரு கற்பாறையில் உட்கார்ந்தார்கள். சிவகனுடைய வேண்டுகோளுக்கு இணங்கிப் பரந்தாமன் இலவந்திகைக் கோட்டையைப் பற்றிய சரித்திரத்தை விவரமாய்க் கூறத் தொடங்கினான்.

அதிகாரம் — 71

பரந்தாமன் கூறிய சரித்திரம்

"சிவகரே! பாஞ்சாலதேசத்தில் குறுநில மன்னர்களுக்கு உரிய கோட்டைகள் பல இருந்தவாயினும், அவற்றுள் மிகச் சிறந்தது இந்த இலவந்திகைக் கோட்டையாகும். இந்தக் கோட்டையின் சொந்தக்காரருக்கு இப் பாஞ்சாலதேசத்தின் பல பாகங்களிலும் நிறைந்த நீர்ப்பாய்ச்சலுடையனவும், பூரணமான விளைச்சலுடையனவுமான விளைபுலன்கள் ஏராளமாயிருந்தன. அவைகளைப்போல் சாகுபடி செய்வதற்கு ஏற்ற நிலங்கள் வேறெங்கும் இல்லை. அவருக்குச் சொந்தமான தோட்டங்களும் தோப்புகளும் இப்போது பாழ்பட்டு வெறுந் திடல்களாய்க் கிடக்கின்றன. முன்னொருகாலத்தில் அவைகள் கிடைத்தற்கரிய பழவகைகளை ஏராளமாய்ச் சுமந்துநிற்கும் மா, மாதுளை, வாழை, எலுமிச்சை முதலிய மரவகைகளையும், முகர்தற்குரிய நன்மணங் கமழும் மல்லிகை, மூல்லை, இருவாட்சி, சண்பகம் முதலிய புஷ்பச் செடிகளையும், தென்னை, கமுகு, பனை முதலிய வான்நோய் விருக்ஷங்களையும் நெருங்கக் கொண்டிருந்தன. சிந்துநதியிலிருந்து பிரியும் பல கால்வாய்களின் வழியே இத் தோட்டங்களுக்கும் தோப்புகளுக்கும் ஜலம் பாய்ந்தது. வெண்மையான பருக்கைக் கற்கள் அடிவாரத்தில் ஆழ்ந்து கிடப்ப, அவற்றின்மேல் தெளிந்த நீர் மொழுமொழுவென்று ஓடிக்கொண்டிருக்கும் அக் கால்வாய்களைப் பார்க்கும்போது பளிங்கை உருக்கி ஓடவிட்டிருப்பதுபோல் தோன்றும். இக் கால்

வாய்களின் ஓரங்களில் வெற்றிலைத் தோட்டங்கள் பல இருந்தன. வெற்றிலைக் கொடிகள் படர்வதற்காக மூங்கிற் பிளாச்சுகளால் ஆங்காங்குக் கட்டப்பட்டிருந்த படல்களும், அவைகளின்மீது வெற்றிலைக் கொடிகள் படர்ந்து இலைகள் தளிராயும் தளிராயும் படல்களின் உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் காணப்படும் காட்சியும், இத் தோட்டங்களின் இடையிடையே பயிர் செய்யப்பட்டிருக்கும் அகத்தியும் வாழையும் தேங்காயும் மாட்சியும் எத்தகையோர் மனத்தையும் வசீகரிக்கும் இயல்பினவாகும். சிந்துநதியிலிருந்து பிரியும் கால்வாய்களிலிருந்து ஜலம் பூந்தோட்டங்களுக்குப் பாய்வதைப் பார்த்தால், சிறு குழந்தைகள் ஓடி விளையாடுவதுபோல் இருக்கும். சிந்துநதி, பெரிய காடுகள் வழியாயும், மைதானங்கள் வழியாயும் பேரிரைச்சலுடன் பேரலைகளை வீசிக்கொண்டும், பெரும் கழல்களை சுழற்றிக்கொண்டும், வெண்மையான நுரைகளைத் தள்ளிக்கொண்டும், பெரியமரங்களை வேரோடு சாய்த்து இழுத்துக்கொண்டும் ஓடிவருவதைப் பார்த்தால், ஒரு பெரிய அரக்கன் மாயப்புரவிமீது மிகுந்த கோரத்துடன் சவாரி செய்வதுபோலிருக்கும். இப்போதும் இந்தக் கோட்டையைச் சுற்றியுள்ள நிலங்கள் செழிப்பாயும், வளம்பொருந்தியவையாயுமே இருக்கின்றன. ஆனாலும் முற்காலத்தில், — அஃதாவது இக்கோட்டையின் சொந்தக்காரர்களுக்கு உரிய வெற்றிக்கொடி இக்கோரியின்மீது பறந்துகொண்டிருந்த காலத்தில், — எவ்வளவு வளப்பமாயும் செழுமையாயும் இருந்தனவோ அவ்வளவு வளப்பமாயும் செழுமையாயும் இப்போது இல்லை. அக்காலத்தில் இம் மாளிகையிருந்த பெருமையையும், இம்மாளிகைக்குரியவர் வகித்திருந்த செல்வாக்கையும் யாரே எடுத்துரைக்க வல்லார்?

"இக்கோட்டையின் சொந்தக்காரர்களுள் கடைசியாக இருந்து அதிகாரம் செலுத்திய பிரபுவின்பெயர், நான் ஏற்கனவே சொன்னபடி, விண்ணெளியான். அவருக்கு 'மேகமுழக்கன்' என்னும் மற்றொரு பெயரும் உண்டு. அவருடைய தகப்பனார் அஞ்சாத நெஞ்சு படைத்தவரும், பிடிவாத மூடையவரும், மூன்கோப மூடையவருமாயிருந்தார். இவர், விவாகம் செய்துகொண்ட சிறிது காலத்திற்குள் இவருடைய மனைவி இறந்துபோனாள். அதுமுதல் இவர், எக்காரணம் பற்றியோ, பொதுவாய் ஸ்திரீகளிடம் வெறுப்பும் பகைமையும் பாராட்டி வந்தார். ஆகவே, சாந்தத்திலும் பொறுமையிலும் இயல்பாகவே சிறந்துவிளங்கும் பெண்மக்களுடைய கூட்டுறவு இவருக்கு ஒரு சிறிதும் இல்லாமற்போயிற்று. அதன்பயனாக இவர் நாளுக்கு நாள் மூரட்டுசுபாவமும் மூர்க்ககுணமும் வாய்ந்தவரானார். மனிதசுபாவம்குறைந்து மிருகசுபாவம் அதிகப்பட்டது. ஆனாலும் இவர், சிம்மத்தைப்போல் பலமும் வீரமும் தைரியமும் வாய்ந்தவர். தம்முடைய வேலைக்காரர்களை மற்றொரு பிரபு சிறிது கடிந்து பேசினாலும், அல்லது தமக்குக்கீழ்ப்பட்டிருக்கும் ஜனங்களை வேறொரு பிரபு சிறிது துன்புறுத்தினாலும் இவர் சிம்மம்போல் கர்ச்சித்துக்கொண்டு யுத்தத்திற்குப் போய்விடுவார். இதனால் கிராமவாசிகளும், குடியானவர்களும் இவரிடம் விசேஷமதிப்பு வைத்திருந்தார்கள். இவரை உள்ளன்போடு நேசியாவிட்டாலும் இவருடைய பராக்கிரமத்தைக் கண்டு வியந்து இவரைத் தங்களுடைய தலைவராகவும் எஜமானனாகவும் கருதினார்கள்.

இவருக்கு விவாகமாகிச் சிறிது காலத்திற்குள் இவருடைய மனைவி இறந்துபோனாள் என்று சொன்

னேனன்றே? ஆனால், அந்தச் சொற்ப காலத்திற்குள் இவருடைய மனைவி ஓர் ஆண் குழந்தையைப் பெற்று விட்டு இறந்து போனாள். மனைவி இறந்த பிறகு இவருக்குப் பொதுவாகவே ஸ்திரீகளிடம் வெறுப்பும் பகைமையும் உண்டாயின வென்று கூறினேனன்றே? ஆகவே, அக் குழந்தையை செவிலித்தாய் முதலியவர்களிடம் ஒப்புவித்து வளர்க்காமல், வேலைக்காரர்கள் மூலமாய் வளர்த்து வந்தார். அரண்மனையிலிருந்த செவிலித்தாய்மார்களையும், சேடியர்களையும் வெளியே துரத்திவிட்டார். ஆண் மக்களுடைய போஷணையிலும் பாதுகாப்பிலுமே குழந்தை இருந்து வந்தது. குழந்தை வளர்ந்து வாலிபப் பருவம் அடைந்தது. அந்த வாலிபனைத் தன்னுடைய சொந்த புத்திரன் என்று கூட நினையாமல், சிறையிலடைப்பதுபோல், கோட்டைக்குள்ளேயே வைத்து இவர் பலவாறு துன்புறுத்தி வந்தார். ஸ்திரீகளுடைய முகத்தை இந்த வாலிபன் பார்க்கக் கூடாது; அவர்களோடு பேசக் கூடாது; அவர்களைப்பற்றி நினைக்கவும் கூடாது! மல் யுத்தம், முஷ்டி யுத்தம், சிலம்பம், கழி முதலிய விளையாட்டுகளில் நன்றாய்ப் பழகும்படியும், தேகாப்பியாசத்திற் குரிய வேலைகளைச் செய்யும்படியும், யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதப் பயிற்சிகளை நன்றாய்க் கற்றுக்கொள்ளும்படியும் இவர் தன் புத்திரனை வற்புறுத்தி வந்தார். அவனும் அவ்விதமே செய்து வந்தான். இவ்விதமாக இருந்து வந்தபோது இவர் மாரடைப்பினால் திடீரென ஒருநாள் இறந்துபோனார்.

"தந்தை இறந்தபோது புத்திரனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு ஓர் எல்லையே இல்லை! இக்கோட்டையையும், ஜமீன் சொத்துக்களையும் மேம்பார்வை

பார்த்துவந்தவர் வயதின் முதிர்ந்தவர். இவர், இறந்து போன பிரபுவுக்கு முதன்மந்திரிபோல் இருந்து வந்தார். இவருடைய பெயர் மதிவல்லபன். இவரும், அரண்மனை வைத்தியரும், குலகுருவும், நானும் இறந்து போன பிரபுவின் புத்திரரிடம் சென்று "உம்முடைய தந்தை இறந்துபோனதால், இந்தக் கோட்டைக்கும் இக்கோட்டைக்குச் சொந்தமான தாவர சங்கமசொத்துக்களுக்கும் இனி நீரே தலைவராவீர்" என்று கூறி "இலவந்திகைக் கோட்டை ஜமீன்" என்னும் பட்டத்தையும் அவருக்குச் சூட்டினேம். அது முதல் 'விண்ணெளியான்' என்றும் 'மேகமுழக்கன்' என்றும் பெயர் பெற்ற இந்த வாலிபரே எங்களுக்கு எஜமானராயும், இக்கோட்டைக்குச் சொந்தக்காரராயுமானார். விண்ணெளியான் ஜமீன் பட்டத்தை வகித்தபோது அவருக்கு வயது பதினெட்டு அல்லது பத்தொன்பது இருக்கும். இடைவிடாது செய்த தேகப் பயிற்சியினால் இந்த வாலிபருடைய சரீரம் பலம் பொருந்தியதாயும், அழகான அவயவ அமைதியுடையதாயும், நோயற்றதாயும் இருந்தது. இவருடைய சரீரம் ஒளியைப்போல் பிரகாசமுடையதாயிருந்தபோதிலும், இவருடைய தலைமயிரும் கருவிழியும் இருளைப்போல் கருநிறமுடையவைகளாயிருந்தன. ஆனாலும், அந்த நல்லிருளில் ஆயிரம் விளக்குகள் பிரகாசித்தால் எவ்விதமாக அவ்விரவு இருக்குமோ அவ்விதமாக அவருடைய கருவிழிகளின் இயற்கைப் பிரகாசம் இருந்தது. அகன்ற மார்பும், மேலேறி விரிந்து திகழ்ந்த நெற்றியும், மயிரடர்ந்து வில்லைப்போல் வளைந்து தோன்றிய புருவமும், திரண்டிருண்டு பருத்துக் கல்லைப்போல் திண்ணென்றிருந்த புஜமும் அவருடைய அழகைப் பன்மடங்கு மிகுவித்துக் காட்டின. இவ்வளவு அழகுடை

யவராயும், புஜபலபராக்கிரம முடையவராயும், போர்த் தொழிலில் நன்கு பயின்றவராயும், தேகாப்பியாசம் மிகுதியும் செய்தவராயும் விண்ணெளியான் இருந்தா ரானதால், இவரும் தந்தையைப்போலவே, எதிரிகளை அடக்கி ஜயீனுக்குட்பட்ட குடிகளைப் பாதுகாத்து வரு வார் என்று ஜனங்கள் நினைத்திருந்தார்கள், — நம்பினார்கள். ஆனால், அவர்களுடைய நம்பிக்கை வீணாயிற்று. விண் ணெளியானுடைய செயல்கள், அவர் தந்தை இறந்த பிறகு, எவருமே எதிர்பாராத விதமாய்,—எல்லோருக் கும் ஆச்சரியத்தையும் அருவருப்பையும் விளைவிக்கக் கூடியவிதமாய்,—திடீரென்றுமாறின. அவர் வேடிக்கை களிலும் விநோதங்களிலும், ஆடல்களிலும் பாடல்களி லும்காலத்தைக்கழிக்கலானார். ஏராளமான விருந்தினர் களை வரவழைத்து அவர்களுக்கு விருந்தளித்து உப சரிப்பதிலும், அவர்களோடு சேர்ந்துகொண்டு தாமும் உண்டுங் குடித்துங் களித்துங் காலத்தினைப் போக்குவ தினும் அவருடைய மனம் பதிந்திருந்தது. காரணக் கரிய கூந்தலையும், பிறையெனப் பிறங்கும் நுதலினையும், சேலனைப் பிறழும் விழியினையும், வில்லென வளைந்த புருவத்தினையும், பவளம் நிகர்த்த இதழினையும், தாளம் நிகர்த்த பல்லினையும், அமுதம் பழித்த மொழியினை யும், பின்னிநிகர்த்த இடையினையுமுடைய மடவார்கள் இன்பமே பேரின்பமென்றும், இக் கோட்டையிலுள்ள அந்தப்புரமே அவ்வின்பத்திற்குரிய சுவர்க்கமென்றும் கருதி, விண்ணெளியான் தம் காலத்தை வறிதே கழி த்துவந்தார்.

"இவ்விதம் விண்ணெளியான் காமாந்தகாரத்தில் ழ்ந்திப் பரத்தையரின் மோக வலையிற் சிக்கி அவர் களுடைய சரணரவிந்தமே கதி என்று நம்பி அந்தப்

புரத்தில் சதா சர்வ காலமும் இருந்துவிட்டபடியால், ஜமீன் விஷயங்களைக் கவனிக்க அவரால் ஒரு சிறிதும் முடியவில்லை. மதிவல்லபனே அவருடைய பிரதிநிதியாக விருந்து எல்லாக் காரியங்களையும் கவனித்து வந்தான். அவன் வைத்ததே சட்டம்! அவன் பேராசையும் சுயநலமும் பெரிதும உடையவனுதலால், ஜமீன் சொத்துக்களைத் தன்னிஷ்டப்படி உபயோகித்து ஏராளமான பணம் தொகுத்து வந்தான். விவசாயிகளையும், குத்தகைக்காரர்களையும் பலவாறு துன்புறுத்தினன்; வரிகளை அதிகப்படுத்தினன்; தாராளமாய் லஞ்சம் வாங்கினன்; இன்னும் செய்யத் தகாத பல அக்கிரமச் செயல்களைச் செய்தான். இதனல் பொது ஜனங்களுக்கு அவன்மீது அருவருப்பும், அவனுடைய கொடிய செயல்களையும் தங்களுடைய துன்பங்களையும் கவனியாமலிருக்கும் விண்ணெளியான் மீது அதிருப்தியும் உண்டாயின. அவர்கள் தங்களுடைய தலைவனை விண்ணெளியான் கிராமத்தைப்பற்றியும் கிராமவாசிகளைப் பற்றியும் சிறிதும் கவனியாமல் காமுகனுய் இருந்து வருவதைப்பற்றிச் சமீபத்திலுள்ள ஏனைய பிரபுக்களிடம் முறையிட்டார்கள். இந்தப் பிரபுக்களோ, விண்ணெளியானுடைய நிலைமையை அறிந்துகொண்டு, அவனைச் சமயம்பார்த்து எதிர்த்து, அவனுடைய ஜமீனைத் தங்கள் வசப்படுத்தக் கருதி முயன்றார்கள் ஆகவே, அதிருப்தியும், குழப்பமும், சண்டையும், சச்சரவும், பஞ்சமும, நோயும் நாட்டிற்குள் பிரவேசித்துப் புகைந்துகொண்டே இருந்தன. இவ்விதமாக இரண்டு வருஷங்கள் கழிந்தன. அதோ, தென்கிழக்கில் ஒரு கோட்டை தெரிகிறதன்றே? அந்தக் கோட்டையின் பெயர் மணிபல்லவக் கோட்டை. அந்தக் கோட்டையின் சொந்தக்காரரான ஜமீன்தாரு

டைய பெயர் மணிபல்லவர். அவர் அக்காலத்தில் மிகுந்த பராக்கிரமசாலியாக விளங்கினார். விண்ணெளியானுடைய நிலைமையை நன்கறிந்த அவர், அந்த இரண்டு வருஷங்களும் கழிந்தவுடன், ஒரு நாள் திடீரென்று படையெடுத்துவந்து இந்தக் கோட்டையை முற்றுகை போட்டார். விண்ணெளியானுடைய தந்தை தன்னிடம் பலமுறைகளில் ஏமாற்றி ஏராளமான பணம் வாங்கினதாகவும், அந்தப்பணத்தை விண்ணெளியானிடமிருந்து வசூல் செய்யவே தாம் படையெடுத்து வந்திருப்பதாகவும், மணிபல்லவர் காரணங் கூறினார். விண்ணெளியானுடைய ஜனங்கள் மதிவல்லபனைத் தங்கள் தளகர்த்தனாகவைத்துக்கொண்டு, மணிபல்லவருடைய சேனையை எதிர்த்தார்கள். இரண்டு கட்சியாருக்கும் பலமான யுத்தம் நடந்தது. விண்ணெளியானுடைய அஜாக்கிரதையினல் யுத்தவீரர்கள் சரியான நிலைமையில் இல்லை; யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்களும் போதியபடி இல்லை. ஆகவே, அவனுடைய சைனியங்கள் தோல்வியுற்றன. மதிவல்லபன், மணிபல்லவருடைய சேனைகளுக்குப் பயந்து புறங்காட்டி ஓடி கோட்டைக்குள் சென்று ஒளிந்து கொண்டான். விஷயங்கள் இருக்கும் நிலைமையை விண்ணெளியானுக்குத் தெரியாமல் இன்னமும் மறைத்து வைத்திருப்பது சாத்தியமன்று என்பதை இனிதறிந்த மதிவல்லபன் அவரிடம் விஷயங்களைச் சொன்னன். உடனே விண்ணெளியான், குகையிலிருந்து வெளிப்படும் சிம்மத்தைப் போல், கர்ச்சித்துக்கொண்டு அந்தப் புரத்திலிருந்து வெளியே, மீண்டும் தன் சைன்யங்களைத் திரட்டிக்கொண்டு எதிரிகளோடு யுத்தத்திற்குத் தானே நேரிற் சென்றனன்.

"மதிவல்லபன் செய்துள்ள அக்கிரமங்கள் யாவும் இப்போது விண்ணெளியானுக்கு அங்கையிற் கனியென இனிது விளங்கின. யுத்தம் முடிந்த பிறகு அவனை விசாரித்துத் தண்டிக்கலாமென்று கருதி அவனைப் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்துவிட்டு விண்ணெளியான் யுத்தத்திற்குப் புறப்பட்டார். அவர் வயதிற் சிறிய வாலிபராயிருந்த போதிலும், இரும்புக் கவசமணிந்து வீராவேசத்துடன் இவுளி மீதிவர்ந்து போருக்குச் சென்றதைக் கண்டபோது எனக் குண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நானும் அவருடன் செல்வதற்கு விரும்பினேன். ஆனால், மதிவல்லபனுடைய வேலை எனக்குக் கொடுக்கப்பட்டபடியால், நான் அரண்மனையிலேயே இருக்கும்படி நேர்ந்தது. விண்ணெளியான் மிகுந்த சாமர்த்தியத்தோடும் தைரியத்தோடுமே யுத்தம் புரிந்தார். இரண்டு வருஷம் அவர் வறிதே காலத்தைக் கழித்தபோதிலும், அதனால் அவருடைய போர்த்தொழில் குன்றவாவது, ஆண்மை குறையவாவது இல்லை. இரண்டு கட்சி சேனைகளும் ஒன்றையொன்று எதிர்த்து அச்சத்தைப் பார்ப்போருக்கு விளக்கும்படியான விதமாய்ப் போரியற்றின. எண்ணிறந்த போர்வீரர்கள் யுத்தகளத்தில் மடிந்தார்கள். தலை போனவர்கள் சிலரும், கை அறுந்தவர்கள் சிலரும், கால் ஒடிந்தவர்கள் சிலருமாக யுத்த பூமியில் கிடந்த காட்சி பரிதாபமான காட்சியேயாகும். இரத்தம் யுத்தகளத்தில் பெருகி உறைந்திருந்ததைப் பார்த்தால் குங்குமச் சேறுபோல் இருக்கும். எதிரிகளுடைய சேனை பலம் பொருந்தியதாயும், அதிகமான போர்வீரர்களைக் கொண்டதாயும் இருந்தபடியால், எவ்வளவு சாமர்த்தியமாய் விண்ணெளியானுடைய சேனை யுத்தம் புரிந்தபோதிலும் பகைவரைப் புறங்காண

முடியவில்லை. விண்ணெளியானைத் திடீரென்று மணி பல்லவர் எதிர்த்து, அவரைக் குதிரையினின்றும் கீழே வீழ்த்தினர். எங்களுடைய சேனைகள் நாலாபுறமும் சிதறி ஓடின. இறுதியில் எங்கள் எஜமானன் தோல்வியுற்றார். அப்போது அவருக்குண்டான துயரத்திற்கு ஓர் எல்லையில்லை. அவர் பலவாறு புலம்பலாயினர் — 'ஓ! கடவுளே! கடவுளே! என்னுடைய கதி இவ்விதமாயிற்றே? நான் என் செய்வேன்! என்னுடைய சைனியங்கள் தோல்வியுற்ற பின்பும், — எதிரிகளால் நான் அவமானம் அடைந்த பிறகும், — உயிர் வாழ்கின்றேனே! இரண்டு வருஷங்களை வீணாய்க் கழித்தேன்! பரத்தையர் மோகவலையிற் சிக்கி அவர்களுடைய சல்லாபத்தில் மயங்கினேன்! ஜனங்களுடைய குறையையும் அவர்களுடைய துன்பத்தையும் கவனியாமல் இருந்தேன். ஜனங்களுடைய சாபந்தான் இவ்விதம் பலித்ததோ? எத்தனை பெரியோர்கள் என்னை நிந்தித்தார்களோ? என்னுடைய செயலுக்குத் தகுந்த பலன் இப்போது கிடைத்தது. என் குடும்பத்தின் பெருமையும் புகழும் குன்றிப் போயினவே? என் செய்வேன். என் செய்வேன்! இச்சமயத்தில் எனக்கு உதவி புரிந்து என் மானத்தைக் காப்பவர் ஒருவருமில்லையா? இச்சமயம் கேசரிக் கோட்டையின் சொந்தக்காரரான வீரவர்மர், — அவர் பயங்கரமான இரகசியக் கூட்டத்தின் தலைவராக இருந்தபோதிலும், — உதவி செய்வதாய் முன் வந்தாலும் அவர் சொல்லும் நிபந்தனைக்கு உட்பட்டு அவருடைய உதவியை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுவேனே!'

''இவ்விதம் எனது எஜமானரான விண்ணெளியான் தன்னையும் மறந்து பிரலாபித்துக் கொண்டிருந்த

சமயத்தில் பக்கத்துக் காட்டுக்குள்ளிருந்து ஒரு போர் வீரர் குதிரைமீது ஏறியபடியே திடீரென்று அவர் முன்னிலையில் தோன்றினர். அந்த வீரர் தன் சரீரம் முழுமையும் மறைந்திருக்கும்படியாய் பளபளவென்று மின்னும் இரும்பு அரணம் ஒன்றை மேலே வீசியிருந்தார். முகமூடியினால் அவருடைய முகம் மறைக்கப்பட்டிருந்தது ஆனாலும், அந்த வீரர் கேசரிக் கோட்டையின் சொந்தக்காரராகிய வீரவர்மரே என்பதை விண்ணெளியான் இனிதறிந்து கொண்டார். அவரைப் பற்றித் தான் நினைத்ததும், அதே சமயத்தில் தன் முன்னிலையில் அவர் திடீரெனத் தோன்றியதும் என் எஜமானனுக்குப் பெரு வியப்பையும் பேரச்சத்தையும் ஒருங்கே விளைவித்தன.

"'ஐயா, நான் உதவி செய்தால் என்னுடைய உதவியை மனமகிழ்ந்து ஏற்றுக் கொள்ளுவதாகச் சொல்லிக்கொண்டிருந்தீரே? நான் என்னுயிரன்ன உதவி புரியச் சித்தமாயிருக்கிறேன். என்ன சொல்லுகிறீர்? தாமதம் செய்யக்கூடாது. ஒரு நிமிஷம் தாமதித்தாலும் அந்த ஒரு நிமிஷம் உம்முடைய கஷ்டத்தை அதிகப்படுத்தும். ஆதலால் விரைவில் தெரியும்' என்று வீரவர்மர் என் எஜமானனைக் கேட்டார்.

"'பிரக்யாதி பெற்ற வீரவர்மரே! எனக்கு நேர்ந்துள்ள அவமானத்திலிருந்து என்னை விடுவித்து என்னை வெற்றிகொண்ட மணிபல்லவரை நான் வெற்றிகொள்ளும்படி எனக்கு உதவி செய்யும். அவ்விதம் செய்தால், நீர் சொல்லும் நிபந்தனைக்கு உட்படுவதோடு நன்றியறிதலுள்ள நண்பனாகவும் என்றும் இருந்து வருகிறேன்' என்று என் எஜமானன் பதில் உரைத்தார்.

"'நீர் என்னோடு நெடுங்காலமாய் விரோதம் பூண்டு என்னை அலட்சியமாயும் அவமதிப்பாயும் கருதி வந்திருக்கிறீர். ஆதலால், இப்போது உம்முடைய நட்புரிமை எனக்கு வேண்டுவதில்லை' என்று வீரவர்மர் சொன்னார்.

"'அப்படியானால் நீர் சொல்லும் நிபந்தனை தான் யாது? அதை விரைவில் தெரிவியும். கால தாமதம் செய்யக்கூடாது. அதோ மணிபல்லவர் சேனையைத் திரட்டிக்கொண்டு என் கோட்டையைப் பிடிப்பதற்காக விரைந்து செல்லுகிறார்' என்று என் எஜமானன் கவலையோடு கூறினார்.

"'நல்லது; அவ்விதமானால் நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேளும். நான் இப் பாஞ்சால தேசம் முழுமையும் வியாபித்திருக்கும் ஓர் இரகசிய சங்கத்தின் தலைவனாயிருக்கிறேன் என்னும் விஷயம் உமக்குத் தெரிந்திருக்கலாம். அச் சங்கத்தின் அதிகாரமும் செல்வாக்கும் அதிசயப்படும்படியான விதமாய்த் தேசத்தில் பரவியிருக்கின்றன என்பதை நான் உமக்குச் சொல்ல வேண்டியதில்லை. அச் சங்கத்திற்கு அநேகர் தங்களுக்குப் பிறக்கும் மூதற் குழந்தையை அர்ப்பணம் செய்து வந்திருக்கிறார்கள். அச் சங்கத்தைச் சேர்ந்த வெண்கலச் சிலைக்குத் தொண்டு செய்யும்படி உமக்குப் பிறக்கும் மூதற் குழந்தையை, — அஃது ஆணாயிருப்பினும் சரியே; பெண்ணாயிருப்பினும் சரியே, — அர்ப்பணம் செய்வதாய் நீர் சூளுரைத்துக் கொடுப்பீரானால், நான் இந்த நிமிஷத்திலேயே உம்துபகைவர் சேனையைத் தோல்வியுறும்படி செய்கிறேன்' என்று வீரவர்மர் கூறினார்.

"'சரி; அவ்விதமே நான் சத்தியம்செய்து கொடுக்கிறேன்' என்று என் எஜமானன் கூறிச் சூளுரைத்தார்.

"இவ்விதம் என் எஜமானன் சத்தியம் செய்து கொடுத்தவுடன், வீரவர்மர் மன மகிழ்ந்தவராய்த், தம் கை விரலை மடக்கி வாய்க்குள் வைத்து நெடுந்தூரம் கேட்கும்படி சீழ்க்கை அடித்தார். அவரெழுப்பிய சீழ்க்கை ஒலியைக் கேட்டவுடன், காட்டுக்குள் ஒளிந்திருந்த மள்ளர்கள் பலர் ஏககாலத்தில் நாலா புறத்திலிருந்தும் ஓடிவந்து வீரவர்மர் முன்னிலையில் பணிந்து நின்றார்கள். இவ்விதம் வந்து சேர்ந்த தன்னுடைய வீரர்களைப் போருக்குத் தயாராயிருக்கும்படி வீரவர்மர் ஆக்கியாபித்தார். உடனே துந்துமிக் கொம்பும், சங்கும், பறையும், காது செவிடுபடும்படி யுத்தகளத்தில் முழங்கின. விண்ணெளியான் தன்னுடைய அச்வத்தின் மீது வீராவேசத்தோடு ஆரோகணித்தார். வீரவர்மரோ தன்னுடைய பாய்பரிமேல் பாய்ந்தேறினர். நாலா புறமும் சிதறி ஓடிய எங்களுடைய போர்வீரர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்தார்கள். ஆகவே வீரவர்மருடைய சேனையும் எங்களுடைய சேனையும் ஒன்று சேர்ந்துகொண்டு மணிபல்லவருடைய சைனியங்களை எதிர்ப்பதற்குச் சென்றன. கண்மூடி கண் திறப்பதற்குள், கையில் வைத்துக்கொண்டு விசையோடு சுழற்றப்படும் கொள்ளிவட்டத்தைப் போலும், ஆகாயத்திலே சுழலும் காற்றடியைப் போலும் எங்களுடைய போர்வீரர்கள் மணிபல்லவருடைய மள்ளர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். இருதிறத்து வீரர்களும் வில் வளைத்தனர்; நாணேற்றினர்; வாளேந்தினர்; ஆழி சுழற்றினர்; அம்பெய்தனர்; கவணெறிந்தனர். போர், ராமராவண யுத்தம்போல், பயங்கரமாய் நெடுநேரம் நடந்தது. ஆனாலும், எங்களுடைய வீரர்கள் மிகுந்த வலிமையும், மணிபல்லவருடைய வீரர்கள் அஃகிய மதகையும் கொண்டவர்களாயிருந்தபடியால், வலிமையிற்

சூறைந்த இவர்களே எங்கள் வீரர்கள் இலகுவிலே வெற்றிகண்டார்கள். மழையைக் காற்று கல்லென இரைத்தெழுந்து சிதற அடிக்கும் தன்மைபோல, எதிரிகள் எய்த அம்பு மழையை விண்ணெளியாணும் வீரவர்மரும் தங்களுடைய கைவாளாற் றடுத்துச் சிதற அடித்தார்கள். மணிபல்லவருடைய சைனியங்கள், சிம்மக் கூட்டத்தைச்கண்ட யானைக் கூட்டங்களைப்போல், நாலா புறமும் சிதறி ஓடின. பாடி வீட்டிலிருந்த மணிபல்லவேரா, தம்முடைய சேனைகள் புறங்காட்டி ஓடுவதைக்கண்டு அவமானம் அடைந்தவராயும் மனம் நொந்தவராயும் தம்முடைய கோட்டையை நாடிச் சென்றார். அவர் கூடாரத்திலிருந்து நீங்கி கோட்டைக்குச் செல்லுகிறார் என்பதை அறிந்த வீரவர்மர் தம் சைனியத்தின் ஒரு பகுதியை மணிபல்லவக் கோட்டையை முற்றுகை போடும்படி அனுப்பினர். கூடாரத்திற்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த வாரிகளில் கட்டப்பட்டிருந்த மணிபல்லவருடைய யானைகளும் குதிரைகளும் விண்ணெளியான் வசமாயின. மணிபல்லவக் கோட்டையை முற்றுகை போடச் சென்ற வீரர்கள், கோட்டை மீது ஏறி அங்கே அம்புகள் எய்வதற்காகக் கட்டப்பட்டிருந்த எப்புழைகளே இடித்துத் தகர்த்தும், கோட்டைச் சிகரத்திலிருந்த இடிதாங்கிகளைப் பிடுங்கி எறிந்தும், அகழிகளே எல்லாம் தூர்த்தும், பாலங்களே எல்லாம் உடைத்தும் பெரியதோர் ஆரவாரஞ் செய்தார்களே அமையாமல் கோட்டையிலிருந்த விலையுயர்ந்த பொருள்களையும், ஆயுதங்களையும், பொக்கிஷத்தையும், உணவுப்பொருள்களையும் கொள்ளையடித்து மகிழ்ந்தார்கள். மணிபல்லவருடைய வீரர்களிற் பலர் சிறை பிடிக்கப்பட்டனர். இறுதியில் என்னுடைய எஜமானன் பூரணமான வெற்றி

யடைந்தார். இலவந்திகைக் கோட்டை எங்கள் வசத்திற்கு வந்தது. எங்களுக்கு நேர்ந்த நஷ்டங்களை மணிபல்லவர் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார். யுத்தம் முடிந்த பிறகு வீரவர்மர் என் எஜமானனிடம் விடை பெற்றுக்கொண்டு தம்முடைய சைனியங்களோடு கேசரிக் கோட்டை போய்ச் சேர்ந்தார். என் எஜமானன் வெற்றி யடைந்ததற்காக ஜனங்கள் சந்தோஷம் பாராட்டினார்கள். எங்களுடைய கிராமத்தில் மீண்டும் அமைதியும் சாந்தமும் குடிகொண்டன; குழப்பங்கள் அடங்கின; செல்வங்கள் பெருகின! முன்னிருந்த பெருமையோடும் புகழோடும் இலவந்திகைக் கோட்டை விளங்கி வந்தது. சிறைச்சாலையி லிருந்த மதிவல்லபனை விண்ணெளியான் விடுவித்து விட்டார்; ஆனல் அவரை உத்தியோகத்தினின்றும் நீக்கித் தம்முடைய நாட்டுக்குள்ளே இருக்கக் கூடாதென்று கட்டளையிட்டுத் துரத்திவிட்டார். மதிவல்லபனை ஆதரிப்பவர்கள் எங்கள் ஜமீனில் ஒருவருமிலை; எனினில் எல்லோரும், அவனுடைய துர்க்குணத்தையும் கொடிய செயலையும் நன்கறிந்தவர்கள். அவன் ஈட்டிய பொருள்களைப் பலரும் கவர்ந்து கொண்டார்கள். ஆகவே, ஒன்றுமில்லாத ஏழைப் பரதேசியைப்போல் அவன் இவ்வூரிலிருந்து அப்புறப்பட்டான். அவன் சென்றபோது நான்தான், மனமிரங்கி, சிறிது பொருள் கொடுத்து உதவினேன். அவனுடைய உத்தியோகம் எனக்குக் கொடுக்கப்பட்டது. அவ் வுத்தியோகத்தை வகித்து முன்போல் பொக்கிஷத்தை நிரப்பி, ஜமீனை ஓர் ஒழுங்கிற்குக் கொண்டுவருவதற்கு இரண்டு வருஷங்களுக்கு மேல் நான் சிரமப்பட்டேன்.

அதிகாரம் — 72

பரந்தாமன் சரித்திரத் தொடர்ச்சி

"இந்த இரண்டு வருஷகாலமும் விண்ணெளியா னுடைய நடத்தை பெரிதும் பாராட்டற்பாலதா யிருந் தது. அந்தப்புரத்தில் இருந்த பரத்தையர் பலரையும் வேசியர் பலரையும் அப்புறப் படுத்தினர்; அவர்களு டைய கூட்டுறவை அறவே ஒழித்தார்; உண்மை நட் பிற்குப் பாத்திரமற்றவர்கள் என்று தெரிந்த வாலிபர் பலருடைய சிநேகத்தையும் அடியோடு ஒழித்தார்; உண்மை நட்பிற்குரிய சிலரைத் தெரிந்தெடுத்து அவர்க ளோடு நட்புரிமை பூண்டார்; முன்பு வெள்ளறிவினால் தாம் செய்த பல தகாத செயல்களை நினைந்து மன முளைந்து வருந்தினர்; தம்மைத் தாமே சீர்திருத்திக் கொண்டார். ஒருகாலத்தில் பாவையர் பகரும் பல் லுரையைப் பழுக்கக் கேட்டு இன்புற்ற அவருடைய செவிகள், இப்போது குடிகளுடைய குறைபாட்டையும் என்னுடைய ஆலோசனையையும் கேட்டு மகிழலாயின. அவர் ஜமீன் நிலங்களைப் பார்வையிட்டார்; குத்தகைக் காரர்களுடைய வீடுகள்தோறும் சென்று அவர்களு டைய குறைபாட்டைக் கேட்டு, வேண்டும் ஏற்பாடுகள் புரிந்தார்: ஆயுதச் சாலையைப் பரிசோதித்தார்; சைனி யத்தைப் பலப்படுத்தினர்; ஜமீன் வரவு செலவு கணக்கு களைத் தாமே நேரிற் பரிசீலனை செய்தார்; விவசாய சம்பந்தமாய் பல திருத்தங்கள் இயற்றினர்; இன்னும் இம்மாதிரியான பல நற்காரியங்களில் காலத்தைச் செலவிட்டார். ஒழிந்த நேரங்களில் படைக்கலன் பயில்வார்; சைனியங்களுக்குப் படைக்கலன் பயிற்று

விப்பார்; வேட்டைக்குச் செல்லுவார்; ஞான சாஸ்திரங்களைப் படிப்பார். இவ்விதமாக இரண்டு வருஷங்கள் கழிந்தன.

"இரண்டு வருஷங்கள் கழிந்தபிறகு என் எஜமானனுடைய நண்பர்களும், வேலைக்காரர்களும் அவர் இன்னமும்விவாகம் செய்து கொள்ளுவதைப்பற்றிச் சிறிதும் ஆலோசியாமல் மௌனமாயும் கவலையற்றும் இருப்பதைக்குறித்து ஆச்சரியத்தோடும் துயரத்தோடும் பேசிக்கொண்ட பேச்சு முதன்முதலாக என் செவிக்கு எட்டிற்று. அப்போது என் எஜமானனுக்கு வயது இருபத்திரண்டு அல்லது இருபத்துமூன்று இருக்கலாம். அழகிற் சிறந்த காளையர்களுள் தலைசிறந்தவர். எத்தகைய மடவார்களையும் மயக்கும் மாண்பினர். பொது ஜனங்கள், என் எஜமானன்விவாகம் செய்து கொள்ளாததைப் பற்றி அடைந்த துயரை நான் ஒருகால் அவரிடம் தெரிவித்தேன்; அவர்களும் அவரிடம் நேரில் முறையிட்டுக் கொண்டார்கள். விவாகம் செய்து கொள்ளவேண்டிய அவசியத்தைப் பற்றி நான் பலவிதமாய் பலமுறைகளில் அவருக்கு எடுத்துரைத்தேன். ஆனாலும் என்னுடைய வார்த்தையை அவர் ஒருசிறிதும் கவனித்தாரிலர். கேசரிக்கோட்டையின் சொந்தக்காரராகிய வீரவர்மருக்குத் தாம் செய்து கொடுத்திருக்கும் பயங்கரமான சிபந்தனைக்கு அஞ்சியே அவர்விவாகம் செய்து கொள்ளுவதில் விருப்பமில்லாமல் இருந்தார்போலும். இந்த உண்மை எனக்கு அப்போது தெரியாது. தம்முடைய இயல்புக்கும் வனப்பிற்கும் ஏற்ற கன்னிகைகள் கிடைப்பது அரிது என்று கருதி அவர் விவாக விஷயமாய் முயற்சியாமல் இருக்கக்கூடும் என்று நினைத்தேன். உடனே எனக்கு ஒருயோசனை உதித்தது. இவ்விந்திய நாட்

டின் பல பாகங்களிலுமுள்ள ஜமீன்தார்கள், பிராசுதார்கள், பிரபுக்கள் முதலியவர்கள் வீட்டில் விவாகமாகாதிருக்கும் அழகிற் சிறந்த கன்னிகைகளின் உருவப் படங்களை எல்லாம் சேகரித்து, என்னுடைய மாளிகை இடைகழியில் வரிசையாக நாற்புறச் சுவர்களிலும் மாட்டியிருந்தேன். ஒருநாள் என் வீட்டில் ஒருவிசேஷம் நடந்தது. அந்த விசேஷத்தை, என் எஜமானனை என் வீட்டிற்கு வரும்படியாகச் செய்யவேண்டுமென்று நினைத்தே நடத்தினேன். நான் கேட்டுக் கொண்டபடி விண்ஸ்ளியான் என்மாளிகைக்கு அன்று விஜயஞ் செய்திருந்தார். போஜனம் முதலியவை முடிந்த பிறகு சந்தனதாம்பூலாதிகள் எடுத்துக் கொள்வதற்காக எல்லோரும் மாளிகையின் முன்புறத்தில் திண்ணைக்கும், வீட்டின் இரண்டாம் கட்டுக்கும் மத்தியிலுள்ள இடைகழியில் உட்கார்ந்தார்கள்; விண்ஸ்ளியானும் வீற்றிருந்தார். அப்போது ரேழியின் நாற்புறச் சுவர்களிலும் மாட்டப்பட்டிருந்த அழகிற் சிறந்த கன்னிகைகளின் படங்கள் அவருடைய கவனத்தைக் கவர்ந்தன. அவர் அப்படங்களை எல்லாம் கூர்ந்து கவனித்து வந்தார்.

"'பரந்தாமரே, இவ்வளவு சிறந்தபடங்கள் உம்முடைய மாளிகையில் இருக்குமென நான் கனவிலும் நினைத்ததில்லை. இப்படங்களைச் சேகரஞ் செய்வதற்கு நீர் மிக முயன்றிருத்தல் வேண்டுமென்றே நான் நினைக்கிறேன். இந்தப் படத்திலிருக்கும் உருவம் எந்தப் பெண்மணியினுடைய உருவம்? அந்தப் படத்திலிருக்கும் உருவம் எந்த வனிதையின் உருவம்?' என்று விண்ஸ்ளியான் வியந்து கூறி, ஒவ்வொரு படத்தையும் விரலாற் சுட்டிக்காட்டி என்னை உசாவினார். நானும் பதி

லளித்து வந்தேன். இறுதியில் ஒருபடம் அவருடைய கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

"'உண்மையிலேயே அப்படம் கைவண்மை பெற்ற ஓவியனால் வரையப் பெற்றதாகும். அந்த ஓவியனே அழகில் இணையற்ற கன்னிகையைப் பார்த்து வழுத்தினான். ஆகவே, அப்படத்திலமைந்த உருவம், விண்ணெளியாளுடைய கவனத்தைக் கவர்ந்தது ஓர் அதிசயமன்று. 'கரிந்து சுருண்டு அடர்ந்து நெளித்து பரந்து நீண்ட விரிகுழற் சுற்றையும், காமன் குனிவளர்சிலையைப் புறங்கண்ட நுதலும், கருங்கொடிப் புருவமும், கயலைப் பழித்த குவளைக் கண்ணும், அமிர்த கலை பாயும் நிமிர்ந்த நாசியும், கிள்ளைக் கிளவி கலமுற வாய்ந்த செந்துவர்வாயும், கொவ்வை இதழும், முல்லைப் பல்லும், வலம்புரிக் கழுத்தும், பச்சிளந்தோளும், நச்சுவார்க்கினிய கச்சுவார் தனமும், கரவுசரிவாயும்வழு வழுப்பாயுமுள்ள வேய்போலும் கரமும், காந்தள் நிகர்த்த அங்கையும், பிடியுளடங்குந் துடியிடையும், இன்னும் தன்நிகரில்லாப் பேரெழில் அமைந்த ஏனைய உறுப்புக்களும் செவ்விதின் வாய்ப்பப் பெற்ற அக்கன்னிகையை அப்படியே, — அக்கன்னிகை தான் உயிரோடு அப்படத்தில் நிற்கின்றாளோ வென ஐயுறும்படி, — வரைந்திருக்கும் ஓவியக்காரனின் பேராற்றலை நீங்களே வியந்து பாராட்டுவது பெரிதன்று ; அவளையே நேரிற் கண்டு மகிழவேண்டும். பத்தரை மாற்றுப் பசும் பொன்மேனியாளாகிய அவளைப் போல் எழிலுடைய வேறு பெண்களை இதலுயிற் பார்ப்பது அரிது' என்று நான் விண்ணெளியாளுக்கு எடுத்துரைத்தேன். படத்தின் அழகைக்கண்டு மயங்கிய அவர் மதியை என்னுடைய வர்ணனை இன்னும் அதிகமாய் மயக்கி

விட்டது. அக்கன்னிகையைப் பார்க்கவேண்டுமென்னும் விருப்பமும் அவருக்கு எழுந்தது.

"'பரந்தாமரே, இந்தப் படத்திலிருக்கும் உருவம் எந்தக் கன்னிகையினுடைய உருவம்? அவளைப் பற்றிய எல்லாவிவரங்களும் அறிய விரும்புகிறேன்' என்று விண்ணெளியான் கூறினார்.

"'தலைவரே, இந்தப்படத்தில் அமைந்திருக்கும் உருவம், நம்முடைய கோட்டைக்குச் சமீபமாக இருக்கும் ஒரு கன்னிகையின் உருவமாகும். நம்முடைய கோட்டைக்குக் கீழ்ப்புறத்தில் சில மைல் தூரங்களுக்கு அப்பால் இருக்கும் ஜாம்பவன் கோட்டையின் சொந்தக்காரராகிய மேகவண்ணனுக்கு நாலைந்து புத்திரிகள் இருக்கிறார்கள். அவர்களுள் இளையாளாகிய கோமதி என்பவளுடைய உருவந்தான் இப்படத்தில் எழுதப்பட்டிருக்கிறது' என்று நான் பதில் புகன்றேன்.

"'ஐயோ! இந்தப் பெண்மணி எவ்வளவு அழகாயிருக்கின்றாள்! ஆனாலும், அந்த அழகினால் பயனென்ன? இவளுடைய அழகு பாலைவனத்தில் எறிக்கும் நிலவு போலும், காட்டிலே மலரும் ரோஜாவைப் போலும் பயனின்றிதானே போகப் போகிறது! இவளை நான் காதலித்துப் பலனென்ன? இவளை மனைவியாகப் பெறவேண்டுமென நான் விரும்பித்தான் பலனென்ன? ஏனெனில், பரந்தாமரே. மேகவண்ணனுடைய ஏகபுத்திரன் சிறு பருவத்திலேயே மரணமற் போனானென்றும், அப்புத்திரன் அகாலமாக வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டதோடு தன்னுடைய புத்திரிகளைக் கடவுளுக்குத் தொண்டு செய்யும்படி கன்னிப் பெண்களாகவே கோவிலில் விட்டுவிடுகிறதென

வும் அவன் நேர்ந்து கொண்டான் என்றும் நீர் கேள்வியுற்றிருக்கலாமே? கடவுளுக்கு அடிமையாக அர்ப்பணம் செய்யப்பட்ட பெண்களை விவாகம் செய்ய யாராவது சம்மதிப்பார்களா?' என்று விண்ணெளியான் வினவினர்.

"'ஐமானனே, தாங்கள் கூறியது உண்மையே! பெண்களைக் கடவுளுக்கு ஆர்ப்பணம் செய்துவிட்டால், இறைவன் திருவுளம் இரங்கிக் காணுமற் போன புத்திரனை அகப்படும்படி செய்வார் என்றும், புத்திரிகளும் சதா சர்வகாலமும் ஆலயத்திலேயே இருந்து காணுமற்போன புத்திரன் அகப்பட வேண்டுமென்று கடவுளை நோக்கிப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள் என்றும், அவர்களுடைய பிரார்த்தனையின் பலனைப் புத்திரன் அகப்படக் கூடுமென்றும் மேகவண்ணன் கருதினதும் உண்மைதான், — கருதியபடி பெண்களைக் கோயிலில் அடிமைப் பெண்களாக விட்டுவிட்டதும் உண்மைதான். ஆனால், கோமதி என்னும் பெயருடைய கடைசிப் பெண், மேகவண்ணன் இவ்விதமான பிரார்த்தனை செய்துகொண்டு நாலைந்து வருஷங்கள் கழித்துப் பிறந்தவளாவாள். பிரார்த்தனை செய்து கொண்ட சமயத்தில் இருந்த புத்திரிகளை அவருடைய சபதம் கட்டுப்படுத்துமே ஒழிய அதற்குப் பிறகு பிறந்த புத்திரிகளைக் கட்டுப் படுத்தாது. ஆதலால், கோமதியை ஆலயத்தில் தொண்டு செய்ய மேகவண்ணன் விடவில்லை. அவள் விவாகம் செய்துகொள்ளுவதற்குத் தகுதியுடையவளே யாவாள். நீங்கள் விவாகம் செய்துகொள்ள விரும்புகிறீர்கள் என்று தெரிந்தால், மேகவண்ணன் மனமுவந்து தம் புத்திரியைக் கொடுப்பார். கோமதியோ, தாங்கள் கணவனாக

அமைவது தன் புண்ணிய வசமே என்று கருதி, உள்ளக் கிளர்ச்சியுடன் இசைவாள். . இதிற் சிறிதும் சந்தேகமே இல்லை. நான் அவரிடம் விவாக விஷயமாய்ப் பேசி முடிவு செய்யவா?' என்று கூறி வினவினேன். அவர், முடிவு செய்யும்படி சொன்னார். அவ்விதமே பேசி மிகுந்த வைபவத்துடன் என் எஜமானனுக்கும் கோமதிக்கும் விவாகம் நடந்தது குலகுரு வித்தியானந்தர் விவாகச் சடங்கு செய்து வைத்தார்.

"விவாகம் நடந்தபோது மேகவண்ணன் என் எஜமானரை நோக்கிப் பின் வருமாறு கூறினர் — 'மருகரே, என் புத்திரியைச் சுகமாயும் சந்தோஷமாயும் என்றும் வைத்து நடத்தி வருவீர் என்னும் முழு நம்பிக்கையுடனேயே நான் அவளை உமக்கு மணஞ் செய்து கொடுக்க இசைந்தேன். அவளுடைய தாயார் முன்னரே இறந்து போனாள். என் மனைவியுடைய ஆன்மா இப்போது இல்லுறை தெய்வமாக இருந்து எங்கள் குடும்பத்தைப் பாதுகாத்து வருகிறது. என் மனைவி ஆறு மக்களைப் பெற்றாள்; அவர்களுள் ஐவர் பெண் மக்கள், ஒருவன் ஆண்மகன். எனக்குப் பிறந்த ஆண் குழந்தை இரண்டு வயதிற் காணாமற் போய்விட்டது. நாடோடிகள் அக் குழந்தையைத் தூக்கிப்போயிருக்க வேண்டுமென்று நம்புவதற்கு இடமிருக்கிறது. என்னுடைய புத்திரிகள் நால்வர் கடவுளுக்குத் தொண்டுபூண்டு ஒழுகுகிறார்கள். அவர்கள் அவர்களுக்காகத் தனியே கட்டப்பட்டிருக்கும் மடத்தில் விவாகமில்லாமல் காலங்கழித்து வருகிறார்கள். ஆகவே, என்னுடைய இன்றுவரையில் இருந்து என்னுடைய துன்பதையும் துயரத்தையும் ஒருவாறு ஆற்றிவந்தவள் கோமதியே. அழகிலும், குணத்திலும் சிறந்த அவளை நான் என்

கண்மணியைப் போலும் இன்னுயிரைப்போலும் கருதி மிகுந்த செல்வாக்குடன் வளர்த்து வந்தேன். அவனை நீரும் உம்முடைய சொந்த உயிரைப்போல் கருதிக் கௌரவமாயும் கண்ணியமாயும் நடத்தி வருவீர் என்று நம்புகிறேன். புத்திரன் காணுமற் போனதால், என் மனம் பெரிதும் புண்பட்டிருக்கிறது. நான் என்னுடைய காலத்தை என் கோட்டையில் கழித்து வருகிறேன். காணுமற்போன என்னுடைய புத்திரன் அகப்படாவிட்டால் நீரே என்னுடைய கோட்டைக்கும், எனக்குரிய ஏனைய சொத்துக்களுக்கும் பாத்தியமுடையவராவீர். தற்செயலாகவோ, அலலது கடவுளுடைய திருவருட் செயலாகவோ, காணுமற்போன என் புத்திரன் மீண்டும் வருவானுனால் அவனிடம் ஜாம்புவன் கோட்டையையும் ஏனைய சொத்துக்களையும் ஒப்புவித்துவிட வேண்டும். புத்திரன் காணுமற் போயிருக்கிறான் என்பதைப் பலரும் அறிவார்களாதலால், நான் இறந்து போனபிறகு, என்னுடைய சொத்துக்களை அபகரிக்கக் கருதி மோசக்காரர்கள் எவரேனும் காணுமற்போன புத்திரன் தாங்களே என்று பொய்யாகவாயினும் நடித்து வாதிடுவார்கள். ஆதலால் என் புத்திரன் என்பதை நிச்சயிப்பதற்கு ஓர் அடையாளம் சொல்லுகிறேன். என் புத்திரனுடைய வலக்கையில் தோளோரமாய் தாமரை வடிவான ஒரு தழும்பு இருக்கும். அந்த அடையாளத்தைக்கொண்டு நீர் உண்மையைக் கண்டுபிடிக்கலாம். இனி என் புத்திரன் அகப்படக்கூடும் என்னும் நம்பிக்கை எனக்கு இல்லை. ஏனெனில் அவன் காணுமற் போய் இருபத்துமூன்று வருஷங்கள் ஆகின்றன. ஆனாலும் என்னை அறியாமலே ஓர் உணர்ச்சி சிற்சில சமயங்களில் உண்டாகிறது. என் புத்திரன் உயிரோடுதானிருக்கிறான் என்றும், அவன் எப்படியும்

ஒருகாலத்தில் வந்து சேருவான் என்றும் அந்த உணர்ச்சி சொல்லுகிறது. என் புத்திரன் ஒருகால் அவ்விதமே வந்து சேருவானுனால், அவனுக்கு எவ்விதமான மோசமும் செய்யாமல் என்னுடைய சொத்துக்களை எல்லாம் அவனிடம் ஒப்புவிப்பதாக எனக்குச் சத்தியம் செய்துகொடும்.' இவ்விதம் மேகவண்ணன் கூறவே, என் எஜமானனும் அவர் விரும்பியவாறு சத்தியம் செய்துகொடுத்தார்.

''விண்ணொளியானுக்கும் கோமதிக்கும் விவாகம் நடந்து நான்கு மாதங்களாயின. நான்காவது மாதத்து இறுதியில் கோமதி கருத்தரித்தாள். தான் கருவுற்றிருக்கும் நற்செய்தியைக் கோமதி விண்ணொளியானிடம் கூறினாள். அப்போது அவருக்குண்டான ஆனந்தத்திற்கு அளவே இல்லை. மகிழ்ச்சி மிகுதியால் மனைவியை மாறிமாறி முத்தமிட்டுத் தழுவி இன்புற்றார். இவ்விதம் தன்னையும் மறந்து ஆனந்த ஆழியில் ஆழ்ந்திருந்தபோது, கருமேகத்தினிடையே மின்னல் தோன்றுவதுபோல், திடீரென்று ஓர் எண்ணம் அவர் மூளையில் தோன்றிற்று. தழைத்துச் செழித்திருக்கும் ஒரு மரம், இடி விழுந்தால் எவ்விதம் தீய்ந்து நிற்குமோ அவ்விதம் அவருடைய ஆனந்தம் ஒரு நிமிஷத்தில் தீய்ந்து துயரமாக மாறிற்று. திடீரென்று தோன்றிய ஓர் எண்ணத்தினால், அவர் மனத்திலும் முகத்திலும் ஏற்பட்ட மாறுதலைக் கோமதிக்குந் தெரியாமல் மறைக்கவும் அவரால் முடியவில்லை. உடனே அவர் கோமதியின் அந்தப்புரத்திலிருந்து திடீரென்று நீங்கினார்; குதிரைக் கூடத்திற்குச் சென்று ஒரு குதிரையின்மீது ஏறிக்கொண்டு வெளியே புறப்பட்டார்; மனோவேக வாயுவேகமாகக் குதிரையைச் செலுத்தினார். எத்திசை

நோக்கிக் குதிரை சென்றது என்பதையாவது, எவ்வளவு தூரம் அது சென்றது என்பதையாவது, எத்தனை மணி நேரம் அது ஓடிற்று என்பதையாவது விண்ணெஞ்ஞியான் ஒரு சிறிதும் அறியார். ஏனெனில், அவருடைய மூளை கலங்கிப் போயிருந்தது; மனம் வேறு விஷயத்தில் பதிந்திருந்தது. இறுதியில் நெடுநேரம் கழித்து நித்திரையிலிருந்து விழிப்பவரைப் போல் அவர் விழித்தார். அவ்விதம் அவர் விழித்ததற்குக் காரணம் ஒரு மனிதர் அவர் பெயரைக் கூறி விளித்ததே யாகும். ஒரு காட்டின் மத்தியில், ஒரு மனிதன் மூன்னிலையில் தாம் நிற்பதை அவர் கண்டார். அந்த மனிதர் கன்னங் கறேலென்றும், மிக உயர்ந்துமிருந்த ஒரு குதிரைமீது ஏறிக்கொண்டிருந்தார். அவரைக் கண்டவுடன் என் எஜமானனுடைய உள்ளமும் உடம்பும் ஒருங்கே நடுங்கின. ஏனெனில், அந்த மனிதர் கேசரிக் கோட்டையின் சொந்தக்காரராகிய வீரவர்மர் என்பதை அவர் இனிதறிந்துகொண்டார்.

"'பிரபுவே, தற்செயலாக நாம் இங்கே சந்திக்க நேர்ந்தது பற்றி நான் பெரிதும் மகிழ்கின்றேன். அதிலும் தனிமையாக ஒருவரை யொருவர் சந்திக்க நேர்ந்தது இன்னும் அதிகமான மகிழ்ச்சியை விளைவிக்கிறது. நீர் பிரபலமான இடத்தில் சம்பந்தம் செய்திருக்கும் நற்செய்தி என் செவிக்கு எட்டிற்று. அச்செய்தி எனக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது. உம்முடைய மனைவி கர்ப்பவதியா யிருக்கிறாள் என்று கேள்வியுற்றேன். அச் செய்தியோ எல்லாவற்றைக் காட்டிலும் அதிகமான ஆனந்தத்தை எனக்கு அளித்திருக்கிறது. ஏனெனில் நாம் செய்துகொண்ட உடன்படிக்கைப்படி முதலில் பிறக்கும் குழந்தையை வெண்கலச் சிலைக்கு

மானால், இப்போது நடக்கப் போவதைப் பாரும்' என்று வீரவர்மர் அதிகாரத்தோடும் உக்கிரத்தோடும் கூறித் தம் விரலிலைத்து வாயினுள் வைத்து நெடுந் தூரம் கேட்கும்படி ஒரு சீழ்க்கை அடித்தார். அவர் ஊதிய வீரியின் ஒலி கேட்டவுடன் இரண்டு மூன்று வீரர்கள் குதிரைமீது ஆரோகணித்தபடியே அவர் முன்னிலையில் வந்து நின்றார்கள். விண்ணெளியானைச் சிறைப்படுத்தும்படி வீரவர்மர் அவர்களுக்குக் கட்டளை யிட்டார். அவர்கள் உடனே என் எஜமானரைப் பிடித்து அவருடைய கண்களை இறுகக் கட்டினார்கள். அவ் விதமே கைகளையும் கட்டி விட்டார்கள். பிறகு என் எஜமானை அவருடைய குதிரையின் மீதே ஏற்றி வைத்துக் குதிரையோடு சேர்த்துக் கட்டி அக் குதிரை யின் வாரை ஒரு போர்வீரன் தன்னுடைய குதிரையின் மீது இருந்தபடியே பற்றிக்கொண்டான். எல்லோ ரும் புறப்பட்டார்கள். குதிரைகள் நாற்கால் பாய்ச்ச லில் சென்றன.

"இச் சம்பவம் நிகழ்ந்தபோது சூரியன் மேற் சமுத்திரத்தின் கீழ்ச் சென்றான். கோட்டையைவிட்டு விண்ணெளியான் வெளியே சென்று நெடுநேரமாகி விட்டது. நாழிகை அதிகமாக அதிகமாக அவர் வரா மலிருப்பதைப் பற்றிக் கோமதிகொண்ட கவலையும் அச்சமும் அதிகமாகிக் கொண்டே வந்தன. நான் என்னால் இயன்ற வரையில் அவளுக்கு ஆறுதல் சொன் னேன். ஆனாலும், என் எஜமானன் அஸ்தமித்து நெடுநேரமாகியும் மாளிகைக்குத் திரும்பாததைப் பற்றி எனக்குண்டான அச்சமும் ஆச்சரியமும் வரை கடந்தனவாகும். அவர் தனிமையாகக் குதிரை மீது சென்றார் என்று நான் கேள்விப்பட்டவுடன் என்னு

டைய சந்தேகம் பலப்பட்டது. அவருக்கு ஏதோ அபாயம் நேர்ந்திருக்கிறது என்று நான் எண்ணினேன். அப்போது என் உடம்பு உச்சந்தலை முதல் உள்ளங் கால் வரையில் நடுங்கிற்று. நாழிகை செல்லச் செல்ல எனக்கு அச்சமும் ஐயமும் அதிகமாயின. கோமதி பிடம், விண்ணெளியானுக்கு ஏதாவது அபாயம் நேர்ந் திருக்கக் கூடுமென்று சொல்லாமல் இருக்க என்னால் முடியவில்லை. அவளைச் சமாதானப் படுத்தவும், அவ ளுடைய துயரத்தையும் அச்சத்தையும் போக்கவும் என்னால் இயலவில்லை. பலமணி நேரங்கள் சென்றன. நடுராத்திரியாயிற்று. அப்போதும் என் எஜமானன் திரும்பவில்லை. இறுதியில் இரவு ஒரு மணி சுமாருக் குக் கோட்டைக்குச் சமீபமாய் ஒரு குதிரை மிகுந்த வேகத்துடன் ஓடி வருவது போன்ற காலடியோசை கேட்டது. சிறிது நேரத்திற்குள் குதிரையின் குளம்புச் சத்தம் கோட்டைக் குள்ளேயே கேட்டது. சந்தோஷ மும் பயமும் ஒருங்கு கலந்தவளாய்ச் சரேலெனக் கோமதி அந்தப்புரத்திலிருந்து வெளியே வந்தாள். அவளைப் பின் தொடர்ந்து நானும் சென்றேன். ஏனெ னில், குதிரையின் காலடியோசை கேட்டவுடனேயே விண்ணெளியான் வந்து விட்டார் என்பதை நாங்கள் இருவரும் அறிந்து கொண்டோம். மாளிகையின் முன் வாயிலில் அவரைச் சந்தித்தோம். ஆ! அப்போது அவ ரிடம் காணப்பட்ட பயங்கரமான மாறுதல்களை நான் என்னென்று கூறுவேன்! அவருடைய முகம் சலவைக் கல்போல் வெளுத்திருந்தது. அவருடைய கண்களில் அச்சம் பிரதிபலித்துக்கொண் டிருந்தது. அவரணிந் திருந்த உடைகள் புழுதியிற் புரண்டு அழுக்காயிருந் தன. அவருடைய உடம்போ நடுங்கிற்று. பேசுவ

தற்கு நா ளழவில்லை. அவருடைய நாசித்துவாரங்களி லிருந்து மிகுந்த வேகமாய்ப் பெருமூச்சு போய்க் கொண்டும் வந்துகொண்டு மிருந்தது. அதிகம் கூறு வானேன்? அவருடைய தோற்றம் எங்களுக்குப் பேரச் சத்தையே விளைவித்தது. தன் கணவனுக்கு ஏதோ அபாயம் நேர்ந்திருக்கிறது என்பதைக் கோமதி இனி தறிந்து கொண்டாள். அவள் அச்சத்தினாலும் துயரத் தினாலும் வாய்விட்டு அலறிக் கொண்டே விண்ணெளி யானை நெருங்கி அவரை அப்படியே கட்டிக்கொண் டாள். நானே ஏதும் தோன்றுதவனாய் ஸ்தம்பித்து நின்றேன். கோமதி கட்டிப் பிடித்தவுடன் விண்ணெ னியான் ஓவென்று ஓல மிட்டுக்கொண்டே அவள் கால டியில் வீழ்ந்தார், — அப்படியே மெய் மறந்து மூர்ச்சித் தவராய் நெடுநேரம் பிணம்போற் கிடந்தார்.

அதிகாரம் — 73

பரந்தாமன் சரித்திரத் தொடர்ச்சி.

"உடனே வைத்தியரை அழைத்து வந்தோம். அவர் சிகிச்சை செய்தபிறகு விண்ணெளியானுக்கு மூர்ச்சை தெளிந்தது; சய அறிவுவந்தது; கண்கள் திறந்தன. அவர் தம் பக்கத்தில் கோமதி நிற்பதைக் கண்டு புன்சிரிப்புடன் அவள் கையைப் பிடித்து இழுத் துக் கட்டிலின்மீது தம் பக்கத்தில் உட்காரச் செய் தார். கோமதி ஜன்னலைத் திறந்தாள்; சூரியன் கீழ்த் திசையில் புறப்பட்டுவிட்டான் என்பதை அறிந்தாள். அப்போது அவளுக்குச் சிறிது தைரியம் பிறந்தது; நம் பிக்கை உண்டாயிற்று. முதல் முதல் விண்ணெளியா

னுடைய சரீரநிலைமை எவ்விதம் இருக்கிறதென அவரையே கேட்டுத் தெரிந்துகொண்டாள். அவர் திருப்திகரமான பதில் அளித்தவுடன், இரவில் அவர் நெடுநேரம் வராமலிருந்ததற்கு காரணமும் வந்தவுடன் மூர்ச்சித்து விழுந்ததற்குக் காரணமும் விவரமாய்க் கூறவேண்டுமென்று அவள் அவரைக் கேட்டுக்கொண்டாள். அவ்விவரங்களைக் கூறுவதற்கு முன்பு, ஏற்கனவே நிகழ்ந்துள்ள சில சம்பவங்களைச் சொல்ல வேண்டுமென்று அவர் அவளுக்கு எடுத்துரைத்து, மூன்று வருஷங்களுக்கு முன் மணிபல்லவருக்கும் தமக்கும் யுத்தம் நேர்ந்ததையும், அந்த யுத்தத்தில் தாம் தோல்வியுற்றதையும், அச்சமயம் வீரவர்மர் உதவி செய்ததையும், அப்போது அவருக்குத் தாம் செய்து கொடுத்த சத்தியத்தையும் விவரமாய்க் கூறினர். அப்போது கோமதியின் உடல் நடுங்கிற்று. தனக்குப் பிறக்கும் மூதற் குழந்தையைக் கடவுள்தான் காக்கவேண்டுமென்று அவள் இறைவனை வேண்டினாள். பிறகு, இரவில் நடந்த நிகழ்ச்சியையும் விவரமாய்க் கூறும்படி அவள் விண்ணெளியானை வேண்டினாள்.

"'அன்பே, நேற்றிரவு நான் ஒருகனவு கண்டேன். அந்தக்கனவு மிகப் பயங்கரமானது. அக்கனவிற் றோன்றிய நிகழ்ச்சி உண்மையில் நிகழ்ந்துவிடுமானால் நம்மைப்போல் துர்ப்பாக்கியர்களும், பாவிகளும் இந்த உலகத்தில் வேறெவரும் இல்லை என்றே சொல்லலாம். அவ்வளவு பயங்கரமானது! என்று விண்ணெளியான் தம் மனைவியாகிய கோமதியை நோக்கிக்கூறினர்.

"'ஓ! நீங்கள் கண்டகனவு எவ்வளவு பயங்கரமானதாயிருந்தபோதிலும் சரியே; அல்லது அக்கனவு

கனவாயிருந்தபோதிலும் சரியே! எனக்கு விவரமாய்க் கூறுங்கள்!' என்று கோமதி மிகுந்த பரபரப்போடு விண்ணெளியாணைக் கெஞ்சினாள்.

"'எனதருமைக் காதலியே! அந்தப் பயங்கரமான கனவின் விவரத்தை எவ்வளவுதூரம் சொல்லுவதற்கு எனக்குத் தைரியம் இருக்கிறதோ அவ்வளவுதூரம் சொல்லுகிறேன். நேற்று நாம் அந்தப்புரத்தில் சல்லாபமாய்ப் பேசிக்கொண்டிருந்த போது நீ கருவுற்றிருக்கும் நற் செய்தியை என்னிடம் மகிழ்ச்சியோடு தெரிவித்தாயன்றோ? அச்செய்தியைக் கேட்ட அந்த நிமிஷத்தில் என் மனம் பேரானந்தப் பெருவாரியில் அமிழ்ந்ததாயினும் மறு நிமிஷத்தில் பெருந்துயர சாகரத்தில் முழுகிற்று. அதற்குக் காரணம் வீரவர்மருக்கு நான் செய்து கொடுத்த நிபந்தனையே. நமக்குப் பிறக்கும் முதற்குழந்தை வளர்ந்து உரிய பருவத்தை அடைந்தவுடன் அதனை வீரவர்மர் வந்து கேட்பாரென்றும் வெண்கலச் சிலைக்கு ஊழியம் செய்யும்படி நாம் பெற்ற மகளை அவரிடம் அப்போது கொடுக்க வேண்டுமே என்றும் நினைத்தேன்; உடனே என்னை அறியாமலே என் கண்களில் நீர் தளும்பிற்று; மனம் துயர சாகரத்தில் ஆழ்ந்தது. என்னிடம் தோன்றிய மாறுதலை நீ அறியக் கூடாதென்று கருதி திடீரென்று உன்னைவிட்டு நீங்கிக் குதிரைமீது ஏறிக்கொண்டு வெளியே சென்றேன். இன்ன இடத்திற்குத் தான் செல்லுகிறேன் என்பதுகூடத் தெரியாமல் நான் குதிரையை அதிவேகமாய்ச் செலுத்திக் கொண்டு போனேன். அவ்விதம் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு காட்டின் நடுவே வீரவர்மர் என்னைத் தற்செயலாய்ச் சந்தித்துக் கொண்டார். உன்னை விவாகம்

செய்து கொண்டதைப்பற்றி என்னைச் சிலாகித்து அவர் முதலில் பேசிவிட்டுப் பிறகு நீ கர்ப்பவதியா யிருக்கும் செய்தி தமக்குத் தெரியுமென்றும், குழந்தை பிறந்து உரிய பருவம் அடைந்தவுடன் மூன்று வருஷங் களுக்கு முன்பு செய்துகொண்ட நிபந்தனையின்படி அதைத் தம்மிடம் ஒப்புவித்து விடவேண்டு மென்றும் கேட்டார். வெண்கலச் சிலை என்றால் என்னவென்றும் அதனைச் சேர்ந்த இரகசியச் சங்கத்தின் விவரம் யாதென்றும் நான் கேட்டேன். அவர் அவைகளைப்பற்றி விவரமாய்ச் சொன்னார். அந்த விவரங்கள் இன்னும் என் மனதில் நன்றாய் பதிந்திருக்கின்றன. ஆதலால், நான் கண்டது கனவென்றும், உண்மையிலேயே அவரோடு வார்த்தையாடிக் கொண்டிருந்தேன் என்றும் நினைப்பதற்குக் கூட என் மனம் மூங்குகின்றது. அந்த விவரங்கள், ஆ! எவ்வளவு பயங்காமானவை —' என்று விண்ணெளியான் சொன்னார்.

"'அந்த விவரங்கள் யாவை? அவைகளை நான் தெரிந்துகொள்ளவேண்டும். ஏனெனில், அப்போது தங்களுக்கு ஏதாவது ஆலோசனை சொல்வதற்குச் சௌகரியமா யிருக்கும்' என்று கோமதி வற்புறுத்திக் கேட்டாள். தன் கணவன் சொல்வது கனவிற் றோன்றிய நிகழ்ச்சி அன்று என்பதையும் தன்னை ஒருவாறு ஆறுதல் செய்யவே, அவர் உண்மையில் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கனவில் நிகழ்ந்ததாக மாற்றிக் கூறுகின்றார் என்பதையும் கோமதி இனிதறிந்துகொண்டாள்.

"'அன்பே, அவ்விவரங்களை நான் எவ்விதம் கூற வேன்! அவ்விவரங்களை நினைக்கும்போதே என் மனம் துணுக்குறுகின்றது. அவைகளை நீ அறிந்தால், பெரிதும் அஞ்சுவாய்!' என்று விண்ணெளியான் கூறினார்.

"'காதலரே, பாதகமில்லை; சொல்லுங்கள்!' என்று கோமதி மீண்டும் அவரை வற்புறுத்தினாள்.

"'அன்பே, நீ இவ்வளவுதூரம் வற்புறுத்துகிறபடியால் சுருக்கமாகக் கூறுகிறேன்; கேட்பாயாக: வெண்கலச் சிலையும் அதனைச் சேர்ந்த இரகசியச் சங்கமும் ஓரிடத்தில் இருக்கிறதென்றும், அச் சங்கத்தின் விசாரணைக்குக் கொண்டு வரப்படும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் முறை மிகக் கொடுமையானதென்றும், அத் தண்டனை விதிப்பதற்கும் இன்னும் சங்கத்தின் வேலைகளைச் செய்வதற்கும் அங்கத்தினர் பலர் இருக்கிறார்களென்றும் வீரவர்மர் சொன்னார். கொடுமையான கொலைத்தொழில் புரியும் வேலைக்கு எனக்குப் பிறக்கும் மகவை அர்ப்பணம் செய்யச் சம்மதப் படாதவனைப் போல் நான் பேசினேன். வீரவர்மருக்குக் கோபம் வந்து விட்டது. அவர் ஒரு சீழ்க்கை அடித்தார். உடனே இரண்டு மூன்று குதிரைவீரர்கள் காட்டுக்குள்ளிருந்து ஓடி வந்தார்கள். அவர்கள் வீரவர்மருடைய கட்டளையின்படி என்னுடைய இரண்டு கண்களையும் இறுகக் கட்டியதோடு, இரண்டு கைகளையும் சேர்த்துக் கட்டி என் குதிரைமீது என்னை ஏற்றி வைத்து அதனோடு சேர்த்து என்னைப் பிணித்தார்கள். பிறகு என் குதிரையையும் ஓட்டிக்கொண்டு அவர்களுடைய குதிரைகளையும் செலுத்தலானார்கள். குதிரைகள் மின்சாரத்தினும் அதிக வேகமாய்ப் பாய்ந்து சென்றன. என்னை எங்கே கொண்டு போகிறார்கள் என்றும், எதற்காகக் கொண்டு போகிறார்கள் என்றும் எனக்குத் தெரியவில்லை. குதிரைகள் சுமார் மூன்று மணி நேரம் அவ்விதம் ஓடின; பிறகு திடீரென்று நின்று விட்டன. என்னைக் குதிரையினின்றும் கீழே இறக்கி

விட்டார்கள்; ஆனால் என் கண்களின் கட்டை அவர்கள் அவிழ்த்து விடவில்லை. என்னுடைய கைகளைப் பிடித்துக்கொண்டே அவர்கள் என்னை நடத்தி அழைத்துக் கொண்டு போனார்கள். அவர்கள் அழைத்துச் சென்ற வழி சரிவாயும், கீழ்நோக்கிச் செல்லுவதுபோலும், கற்களினால் கட்டப்பட்ட படிகளை உடையதாயும் இருந்ததென்று நான் நினைக்கிறேன். ஆகவே, ஒரு பெரிய சுரங்கத்திற்குள் என்னை அழைத்துப் போனார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அவர்கள் அழைத்துச் சென்றவழி சிறிது தூரம் நேராயும், சிறிது தூரம் வளைவாயும் போனது. சில இடங்களில் ஏறிச் செல்வது போலும் சில இடங்களில் இறங்கிச் செல்வதுபோலும் எனக்குத் தோன்றியது. இறுதியில் ஒரு வாயிலண்டை சென்று வாயிற் கதவைத் திறந்தார்கள் போலிருக்கிறது. உடனே குளிர்ந்த காற்று சில்லென்று வீசிற்று பிணங்கள் புதைக்கப் படுதற்கும், சமாதிகள் கட்டப் படுதற்குமுரிய ஓர் இடமாக அஃது இருத்தல் வேண்டுமென நான் முதலில் நினைத்தேன். ஏனெனில், காற்றோசையைத் தவிர வேறு எவ்விதமான ஓசையும் அந்த இடத்தில் கேட்கப்படவில்லை. நிசப்தமான அமைதி குடிகொண்டிருந்தது. சிறிது தூரம் சென்று மீண்டும் ஒரு கதவைத்திறந்து கொண்டு நடந்தார்கள். கருங்கற்றரையில் ஜலம் மோதினால் எவ்விதம் சத்தம் கேட்குமோ அவ்விதமான சத்தம் கேட்டது. ஜலத்தின் அலைகளால் ஏற்படும் சத்தமே அதுவென்றும், அந்த இடத்தில் ஜலவோட்டம் இருக்கிறதென்றும் நான் தெரிந்துகொண்டேன். அந்த இடத்திற்குச் சென்றவுடன் அவர்கள் திடீரென என்னுடைய கண்கட்டை அவிழ்த்துவிட்டார்கள். எண்ணிறந்த பந்தங்கள் எரிவதனாலுண்டான பேரொளியை நான்

பார்த்தேன்; அவ்வெளிச்சத்தைப் பார்ப்பதற்கு முடியாமல் என் கண்கள் கூசின. நான் நின்ற அறையை ஒரு முறை சுற்றிப் பார்த்தேன். அங்கே ஒரு பெரிய யந்திரம் வைக்கப்பட்டிருந்தது. அந்த யந்திரத்தின் அமைப்பு மிகப் பயங்கரமாயிருந்தது. அந்த யந்திரம் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்குக் கீழே, ஓர் ஆறு ஓடிக் கொண்டிருந்தது. இந்தப் பயங்கரமான காட்சிகளை நான் பார்த்துக்கொண்டு நின்றபோதே, வீரவர்மருடைய கட்டளையின்மீது, அவர்கள் என்னை இந்த அறைக்கு நேரே மேற்புறத்திலிருந்த மற்றோர் அறைக்கு அழைத்துச் சென்றார்கள். அந்த அறையில் வெண்கலத்தினால் மிகப் பெரிதாயும் பயங்கரமாயும் அமைக்கப்பட்டிருந்த ஒரு சிலையைக் கண்டேன்; அச்சிலை ஒரு கன்னியின் உருவம்போலிருந்தது. அதனைக் கண்டவுடன் என் மனம் பேரச்சத்தினால் நடுங்கிற்று. அந்தச் சிலையை நான் இமை கொட்டாமல் நோக்கிக் கொண்டிருந்தபோது வீரவர்மர் என் சமீபத்தில் வந்து அச் சிலையைப்பற்றிய பயங்கரமான பரமரகசியத்தை என் செவிக்குள் ஓதினார். ஆ! அச்சமயம் எனக்குண்டான அச்சத்தை நான் எவ்விதம் உரைப்பேன்! இப்போது நினைத்தாலும் என் உடம்பு சிலிர்க்கிறது. ஐயோ! அதை நான் எவ்வாறு கூறுவேன் — எவ்வாறு கூறுவேன் —' என்று விண்ணெளியான் கூறி மேற்கொண்டு ஏதும் பேச முடியாதவரைப்போல் கண்ணீர் உதிர்த்தார்.

"'காதலரே, — காதலரே! இவ்விதம் நீங்கள் துயருறுவது நலமன்று! பயங்கரமான அந்தக் கதையை விரைவில் கூறி ஒருவாறு முடித்து விடுங்கள்! வீரவர்மர்

தங்கள் காதில் ஓதிய இரகசியம் யாது?' என்று கோமதி மீண்டும் வற்புறுத்தினாள்.

"'ஆ! அதை நான் எவ்விதம் மனந் துணிந்து கூறுவேன்! அதைக் கூறுதிருப்பதற்குப் போதிய மனவன்மையைக் கடவுள் எனக்கு அருளுவாராக! கோமதியே, — இல்லை; நான் கூறவே மாட்டேன்! அந்தப் பயங்கரமான சிலையினின்றும், — அந்தப் பயங்கரமான யந்திரத்தினின்றும், — நான் என்னுடைய கவனத்தை வேறு வழியில் திருப்ப வேண்டும்; அவைகளை அடியோடு மறந்துவிடவேண்டும். இல்லாவிட்டால் இப்போதே என் மனம் படீரென வெடித்துவிடும். வீரவர்மருடைய வார்த்தைகள், நெஞ்சில் அம்புபாய்வது போல், என் செவிக்குள் பாய்ந்து மூளையைத் தாக்கின. வீரவர்மர் சொன்னதைக் காட்டினும் ஆயிரம் மடங்கு பயங்கரமானதாகவே, அந்தச் சிலையைச் சேர்ந்த இரகசிய சங்கத்தினால் செய்யப்படும் செயல் இருக்கவேண்டுமென்பதை நான் இனிதறிந்து கொண்டேன். வீரவர்மர் என் செவியில் இரகசியமாய் ஓதிய செய்தியினால் என் அறிவு திரிந்து மூளைகலங்கிப் பிரதிமைபோல் நான் நின்று கொண்டிருந்தபோது என்னை அவ்விடத்திலிருந்து அழைத்துக் கொண்டு மற்றோர் அறைக்குச் சென்றார்கள். அந்த அறையில் ஒரு மேஜையும் அந்த மேஜையின்மீது ஒரு பிங்கான் ஜாடியும், ரணவைத்தியர்களுக்குரிய ஆயுதங்கள் போன்ற சில ஆயுதங்களும் இருந்தன. அந்த அறைக்குள் சென்றவுடன் வீரவர்மர் தம்முடைய ஆட்களுக்கு ஏதோ சைகை செய்தார். உடனே அவர்கள் என்னைப் பிடித்து என்னுடைய இரண்டு கண்களையும் இறுகக்கட்டி, மேஜையின் மீது என்னைப் படுக்க வைத்தார்கள். என்னுடைய

கைகளையும், கால்களையும் கட்டிவிட்டார்கள். இவ் வளவு வேலையும் ஒரு நிமிஷத்திற்குள் நடந்தன. எதற் காக இவ்விதம் செய்கிறார்கள் என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோதே, என்னுடைய வலது மணிக்கட் டில் மிகக்கூர்மையான ஊசியினால் குத்துவது போன்ற ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. அப்போது மணிக்கட்டில் ஏற்பட்ட எரிச்சலுக்கும் வலிக்கும் ஓர் எல்லையே இல்லை. அவ்விதம் ஒரு நிமிஷந்தான் இருந்தது. பிறகு அவர் கள் என்னை மேஜையினின்றும் எழுந்திருக்கச் செய்து முன்பு வந்த வழியாகவே மீண்டும் என்னை அழைத்துப் போனார்கள். கடைசியாகச் சுரங்கத்தின் வழியாக மேலேறி வெளியே வந்தோம். அப்போதும் என் கண் கள் கட்டப்பட்டே இருந்தன. அப்படியே என்னை என்னுடையகுதிரை மீது ஏற்றி வைத்துக் குதிரையை, மூதலில்காட்டில் வீரவர்மரை எந்த இடத்தில் சந்தித் தோமோ அந்த இடத்திற்கு ஓட்டிச் சென்றார்கள். அந்த இடத்திற்குச் செல்லுவதற்குள்ளாக என்னுடைய மூளை சுழல ஆரம்பித்தது; என் புத்தி கலங்க ஆரம்பித்தது; பேய் பூதங்களின் மத்தியில் அகப்பட்டுக் கொண்டது போன்ற ஓர் உணர்ச்சி எனக்குண்டாயிற்று! இறுதியில் கண்கட்டை அவிழ்த்து விட்டார்கள். 'பிரபுவே, வெண் கலச்சிலையைச் சேர்ந்த சங்கத்தின் ஆற்றலை உம்முடைய வலது மணிக்கட்டு அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண் டிருக்கும்' என்று வீரமர் என்னை நோக்கிக் கூறினர். பிறகு அவருடைய ஆட்களும் அவரும் என்னைக் காட் டில் தனியே விட்டுவிட்டுத் தங்களுடைய குதிரைகளில் ஏறிக்கொண்டு சென்றார்கள். அவர்கள் குதிரைகள் ஒரு திசை நோக்கி வேகமாய்ச் செல்ல, என்னுடைய குதிரை வெறொரு திசையில் நாற்கால் பாய்ச்சலில் செல்லத் தொடங்கிற்று. குதிரையை அடக்க என்னால்

முடியவில்லை. பெரும்புயலின் இடையிலே, நடுக்கடலில் அகப்பட்டுக்கொண்ட கப்பலைப்போல் நான் குதிரைமீது இருந்துகொண்டு தத்தளித்தேன். எனக்கோ பயம் ஒரு புறம்; துயரம் ஒரு புறம்; செய்வது யாதெனத் தெரியாமல் குதிரைமீது அப்படியே படுத்துக் குதிரையைக் கட்டிக்கொண்டேன். இருளோ பயங்கரமாயிருந்தது. அந்த இருளில் குதிரை காற்றினும் கடுகிச் சென்றுகொண்டிருந்தது. அஃது எத்திசை நோக்கிச் செல்லுகிறதென்றும், எங்கே செல்லுகிறதென்றும் அறிந்துகொள்ள என்னால் முடியவில்லை. சிறிது சிறிதாக ஞாபகசக்தி எனக்குண்டாயிற்று. இறுதியில் என்னுடைய மாளிகையில் கட்டிலின்மீது படுத்திருப்பதையும் நீ பக்கத்தில் வீற்றிருப்பதையும் கண்டேன்' என்று விண்ணெளியான் கோமதிக்கு எடுத்துக் கூறினர்.

"கோமதி இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டுச் சரேலெனத் தன் முகத்தை விண்ணெளியான் பார்க்க முடியாதபடி—அப்புறமாகத் திருப்பிக்கொண்டாள். திரும்பினவள் பூமியை நோக்கியபடியே நின்றுகொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். அவளுடைய கண்களிலிருந்து நீர் பெருகிக்கொண்டே இருந்தது. விண்ணெளியான் அவள் முகத்தைத் திருப்பிப் பார்த்தார். அவள் அழுதுகொண்டிருந்ததைக் கண்டு அவர் ஏதுந் தோன்றுதவராய் 'கண்மணி, ஏன் இவ்விதம் அழுகின்றாய்? உனக்கு ஏற்பட்ட துயரம் யாது? நான் கூறிய கதையைக் கேட்டு அஞ்சி வருந்துகின்றாயா, என்ன? அன்பே, நான் சொன்னவை அவ்வளவும் கனவில் நிகழ்ந்த சம்பவங்களே! கனவில் நிகழ்ந்ததை உண்மையில் நிகழ்ந்ததாக நினைத்துக் கொண்டு

யாராவது வருந்துவார்களா? கண்மணி, அழாதே! அன்பே, அஞ்சாதே!' என்று விண்ணெளியான் தன் மனைவிக்குத் தேறுதல் கூறி அவளுடைய கண்ணீரைத் துடைத்தார்.

"அவ்விதம் துடைத்தபோது அவரணிந்திருந்த கைச்சட்டை ஓரம் சிறிது விலகிற்று. அப்போது அவருடைய வலதுமணிக்கட்டைக் கோமதி பார்த்துவிட்டாள். பார்த்துவிட்டு நெஞ்சம் துணுக்குற்று ஓவென்று வாய்விட்டுக் கதறினாள், அதே சமயத்தில் விண்ணெளியானும் தன்னுடைய வலதுமணிக்கட்டை நோக்கினார், 'ஐயோ! கடவுளே! கடவுளே! அது கனவன்று!' என்று அவரும் வாய்விட்டரற்றினார். ஏனெனில், வலது மணிக்கட்டைச் சுற்றி ஒரு பட்டை நாடா சுற்றப்பட்டிருப்பதுபோன்ற ஒரு கறுப்புக் கறை இருந்தது. தூரத்துப் பார்வைக்கு அது நாடா சுற்றப் பட்டிருப்பது போல் தோன்றினும் நெருங்கிப் பார்த்தபோது ஊசியினல் தூளாக்கப்பட்ட சிறு சிறு புள்ளிகள் வரிசையாக இருந்தன. அந்தக் கறுப்புக் கறை என்றும் மாறவில்லை. அதனை அழிப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தோம். ஒன்றும் பயன்படவில்லை. வெண்கலச்சிலையின் ஞாபகம் அதை நோக்கும் போதெல்லாம் என் எஜமானனுக்கு வரும். மணிக்கட்டிலிருந்த அந்த அடையாளத்தைப் பார்த்துவிட்டு விண்ணெளியானும் கோமதியும் பெரிதும் துயருற்றார்கள். ஒருவரையொருவர் ஆற்றுவிக்க முயன்றும் ஆறுதலாக ஒரு வார்த்தை சொல்ல அவர்களால் முடியவில்லை; கண்களின் வழியாய் ஆறுதலான பார்வையை அனுப்பவும் அவர்களால் முடியவில்லை. இறுதியில் ஒருவரையொருவர் கூர்ந்து நோக்கினார்கள். இருவரும் கண்

ணீர் உதிர்த்தார்கள் ; பெரு மூச்செறிந்தார்கள்; முத்த மிட்டுக் கொண்டார்கள் !

"சுமார் இரண்டு மூன்று மணிநேரம் விண்ணெளி யானும் கோமதியும் செயற்பாலது யாதென்பதைப் பற்றி ஆலோசித்தார்கள். பிறகு இருவரும் கட்டிலை விட்டு எழுந்து தங்கள் குலகுருவாகிய வித்தியானந்தர் இருக்கும் அறைக்குச் சென்றார்கள். அச்சமயம் வித் தியானந்தர் எங்கள் மாளிகையில் தங்கி யிருந்தார். விண்ணெளியான் பயங்கரமான தன்னுடைய கதையை விவரமாய் வித்தியானந்தரிடம் கூறினர். குலகுரு முழு விவரத்தையும் கேட்டவுடன் வருத்த மிகுதியினல் கோமதியை நோக்கிக் கண்ணீர்விட்டார்.

"'குருவே, எங்களுக்குச் சமய சஞ்சீவி தாங்களே யாதலால், எங்களுக்கு நேர்ந்துள்ள அபாயத்தினின் றும் தாங்கள்தான் எங்களை விடுவிக்கவேண்டும். தங்க ளுடைய புத்திமதியையும் ஆலோசனையையுமே நாங் கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறோம். வெண்கலச் சிலையைச் சேர்ந்த இரகசிய சங்கத்தின் கொடுமையி லிருந்து நாங்கள் எவ்வாறு தப்புவோம் ? அச்சங்கத் தின் கொடுமைக்கு ஓர் அடையாளமாக என் வலக்கை யைப் பாருங்கள்!' என்று விண்ணெளியான் வித்தியா னந்தரிடம் கூறித் தமது வலது மணிக்கட்டையும் அவ ரிடம் காட்டினர்.

"'உம்முடைய மணிக்கட்டில் காணப்படும் அடை யாளம் அந்த இரகசிய சங்கத்தின் சக்தியையும் ஆற்ற லையும் அறிவிக்கக்கூடிய அடையாளமென்று நாம் எவ் விதம் கொள்ள முடியும்?' என்று வித்தியானந்தர் என் எஜமானனைக் கேட்டார்.

"'ஏனெனில், இந்த அடையாளம் வைப்பதற்கு உபயோகிக்கப்பட்ட ஆயுதம், சுரங்கத்தில் காணப்பட்ட பெரிய யந்திரத்தில் அமைந்திருக்கும் பற் சக்கரங்களைப் போன்றிருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. குருவே, அந்த விஷயமாய் மேற்கொண்டு என்னை ஒன்றும் கேட்கவேண்டாம். எனக்கு அச்சத்தை விளைவிக்கும்படியான கேள்விகளை எல்லாம் கேட்டு என் மனத்தைப் புண்படுத்தவேண்டாம்' என்று விண்ணொளியான் திடீரென்று கூவி, அழத் தொடங்கினர்.

"'குருவே, என் கணவனுக்கு அச்சத்தையும் துயரத்தையும் விளைவிக்கும்படியான கேள்விகளைக்கேட்டு அவரைத் துன்புறுத்தவேண்டாம்' என்று கோமதி கூறினள்.

"'குழந்தாய், உன்னுடைய விருப்பப்படியே நடந்துகொள்ளுகிறேன். உன் கணவனை நான் ஏதும் கேட்கவில்லை' என்று வித்தியானந்தர் கோமதிக்கு விடை இறுத்துப் பிறகு இருவரையும் நோக்கி, 'என் அருமைக் குழந்தைகளே, இந்த உலகத்தில் நேரும் எண்ணிறந்த துன்பங்களையும் துயரங்களையும் சகிப்பதற்குப் போதிய பலத்தையும் தைரியத்தையும் அளிக்கும்படி நாம் கடவுளைப் பிரார்த்திப்போம். நமக்கு நேரும் கஷ்டங்களையும் துயரங்களையும் விலக்குவதற்குப் போதிய ஞானத்தை அருளும்படி இறைவனை நாம் இறைஞ்சுவோம்' என்று கூறி, அவர் திருவாசகப் பாசுரங்களை உருக்கத்துடன் ஓதினர். விண்ணொளியானும், கோமதியும் அவரைப்போலவே இறைவனைப் பாடிப் பணிந்தார்கள். இவ்விதம் மூவரும் கடவுள் வழிபாடு

செய்து முடிந்தவுடன் வித்தியானந்தர் என்னுடைய தலை வரையும் தலைவியையும் நோக்கிப் பின் வருமாறு பேசி அவர்களுக்குப் புத்திமதிகளைப் போதித்ததோடு அவர் களுடைய துயரங்களையும் ஒருவாறு ஆற்றினர்:

"'எனதருமை மக்களே! உங்களுக்கு நேர்ந் திருக்கும் துரதிர்ஷ்டம் பலவகையான இன்னல்களை உங்களுக்கு விளைவிக்கக் கூடியதாயிருக்கிறது. ஆத லால் பலவகைகளில் நாம் யோசித்துப் பலவகையான மார்க்கங்களை அனுஷ்டிக்க வேண்டுவது இன்றியமை யாததாயிருக்கிறது. உங்களுக்குப் பிறக்கப்போகும் மூதற் குழந்தையை நீங்கள் இரகசிய ஊழியத்திற்கு,— கொடுமையையும் அநீதியையும் அடிப்படையாகக் கொண்ட இரகசிய ஊழியத்திற்கு,—அர்ப்பணம் செய் யவேண்டியவர்களாயிருக்கிறீர்கள். அவ்விதம் செய் தாலோ உங்களைவிடப் பாவிகள் இந்த உலகத்திலேயே இல்லை. வீரவர்மருக்குச் செய்து கொடுத்திருக்கும் சத் தியத்தினின்றும் பிறழ்ந்தாலோ, சத்தியம் தவறிய குற் றமுண்டாகும். அதுமாத்திரமன்று; வீரவர்மர் கோபா வேசங் கொண்டு பலவிதமான இன்னல்கள் இயற்று வார். வெண்கலச் சிலையைச் சேர்ந்த இரகசிய சங் கமோ சாமானியமானதன்று. அதற்கு இத் தேசத் தின் பல பாகங்களிலும் அங்கத்தினர்கள் இருக்கிறார் கள்; அதற்குத் தலைவர்களாகச் சந்நியாசிகள் பலரும், சந்நியாசினிகள் பலரும் இருக்கின்றார்கள். இவர்கள் செய்யும் அக்கிரமங்களோ எண்ணிறந்தன. ஆதலால், எனக்கொரு யோசனை தோன்றுகிறது. அஃதாவது,— உங்களுக்குக் குழந்தை பிறந்தவுடனேயே அதனைச் சிவாலயத்திற்கு அர்ப்பணம் செய்துவிடலா மென்பது

தான். ஆண் குழந்தையாக இருந்தால், சிவபெருமானுக்கு அபிஷேகத்திற்குத் தண்ணீர் எடுத்தல், சந்தனம் அரைத்தல், புஷ்பமாலை கட்டல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்துகொண்டு விவாகமின்றி கோவிலிலேயே ஆயுள் முழுதும் இருக்கட்டும். பெண் குழந்தையாக இருந்தால், ஆலயத்தைப் பெருக்குதல், மெழுகுதல், விளக்குத் துடைத்தல் முதலிய தேவ ஊழியங்களைச் செய்துகொண்டு கன்னிப் பெண்ணாகவே ஆயுள் முழுதும் ஆலயத்திலேயே இருக்கட்டும். கடவுளுக்கு அர்ப்பணம் செய்துவிட்டால், பிறகு வீரவர்மரால் அக் குழந்தையை ஒன்றும் செய்ய முடியாது. கடவுளுடைய திருவருட் சக்தியின் முன்னிலையில் அவருடைய இரகசிய சங்கத்தின் சக்தி என் செய்யவல்லும்? ஆனால், வீரவர்மரும் அவருடைய ஆட்களும் உங்கள் கோட்டை மீது படையெடுத்து வருவார்கள். அப்போது, நீங்களும் யுத்தத்திற்குத் தயாராகவே இருக்கவேண்டும். வெற்றி உங்கள் புறமானால் நீங்கள் பாக்கியசாலிகளே. ஒருகால் அவர் வெற்றி பெற்று, நீங்கள் உங்கள் கோட்டையையும் சொத்துக்களையும் இழக்க நேரிட்டால் அவ்விதம் இழப்பதும் பாதகமில்லை. குழந்தையை மாத்திரம் பாவத்திற்கு ஒரு களஞ்சியம்போலிருக்கும் அந்த இரகசிய சங்கத்திற்கு அர்ப்பணம் செய்யக் கூடாது; சத்தியம் தவறினாலும் பாதகமில்லை!' என்று வித்தியானந்தர் எடுத்துக் கூறினார்.

"அவருடைய வார்த்தையை இருவரும் அங்கீகரித்தார்கள். அந்த அறையிலேயே வித்தியானந்தர் சிலவைதிகச் சடங்குகளைச் செய்து பிறக்கப்போகும் குழந்தையைச் சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்துவிட்ட

தாக இருவரையும் கூறச்சொல்லி உறுதிமொழி வாங்கினர். பிறகு எல்லோரும் அறையிலிருந்து வெளியே போவதற்கு எழுந்தார்கள். அச்சமயத்தில் அறைக்கு வெளியே யாரோ கலகலவென்று பரிகாசச் சிரிப்பு சிரித்ததுபோன்ற சத்தம் கேட்டது. கதவைத் திறந்து பார்த்தார்கள். ஒருவரும் காணப்படவில்லை.

அதிகாரம் — 74

பரந்தாமன் சரித்திரத் தொடர்ச்சி.

"விண்ணெளியான் வெளியே சென்று சற்றுமுன்பு யாராவது கோட்டைக்குள்ளிருந்து வெளியே சென்றார்களா என்று வாயில்காப்போனைக் கேட்டார். யாரோ ஒருவர் கறுப்பு நெடுஅங்கி தரித்துக் கொண்டும் முகத்தை முகமூடியால் மூடிக்கொண்டும் அரை மணி நேரத்திற்கு முன்பு வந்ததாகவும், அவர் விண்ணெளியானைச் சில அவசரகாரியமாய் நேரில் பார்க்க வேண்டுமென்று சொன்னதால் உள்ளே விட்டதாகவும், அந்த மனிதர் சற்றுமுன்பு மிகுந்த அவசரத்தோடு வெளியே வந்து வாயிலில் நின்ற தம் குதிரைமேல் ஏறிக்கொண்டு போனதாகவும் வாயில்காப்போன் சொன்னான். ஆனும் வந்துபோன மனிதர் யாரென்பது ஒருவருக்குமே தெரியவில்லை. ஒரு சமயம் வீரவர்மராய் இருக்கக் கூடுமோ என்றும், அவர் அறைக்குள் வித்தியானந்தருக்கும் தனக்கும் நிகழ்ந்த சம்பாஷணையை மறைந்திருந்து கேட்டுச் சிரித்துவிட்டுப் போயிருக்கக்கூடுமோ வென்றும் என் எஜமானனுகிய விண்ணெளியான் சந்தேகித்தார். வாயில்காப்போன் கூறியதையும், அதன்

மேல் தமக்குண்டான சந்தேகத்தையும் விண்ணுணர்வியான் வித்தியானந்தரிடமும் கோமதியிடமும் கூறினர். ஒருகால் வந்து போன மனிதர் வீரவர்மராயிருந்தால் என்ன செய்கிறதென்று மூவரும் ஆலோசித்தார்கள்; மனக் கவற்சி உற்றார்கள். ஆனாலும், அவர்களால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. பிறக்கப் போகும் குழந்தையைச் சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்வதாய்க் கூறி, ஏற்கனவே சூளுரைத்துவிட்டார்கள். ஆதலால், வருவது வரட்டுமென்று ஒருவாறு மூவரும் மனந் தேறிப் பேசாமலிருந்துவிட்டார்கள்.

"சிவகரே, இது வரையில் நான் சொல்லி வந்த சம்பவங்கள் எல்லாம் இற்றைக்குச் சற்றேறக்குறைய இருபது வருடங்களுக்கு முன் நிகழ்ந்தவையாகும். இறுதியாக நான் கூறிய சம்பவம் நிகழ்ந்து ஒரு வாரங் கழித்த பின்பு, என்னுடைய எஜமானிடத்தில் புதிதாக ஓர் ஏவலாளன் வேலைக்கு அமர்ந்தான். இந்த வேலைக்காரன் வாலிபனும், அழகிய தோற்ற முடையவனும், மிகுந்த தைரிய சாலியாயும், சிறந்த புத்திமானும், விடாமுயற்சியும் தளரா ஊக்கமும் உடையவனும் இருந்தான். என் எஜமானனிடம் வேலைக்குச் சேர்ந்த போது இவனுக்கு வயது இருபத்து நான்கு அல்லது இருபத்தைந்து இருக்கும். இவனுடைய பெயர், — நிகும்பன்! இந்த இலவந்திகைக் கோட்டையில் இவன் வேலைக்கு அமர்ந்தபோது இவனுக்குக் குடிக்கக் கூழுமில்லை; படுக்கப் பாயுமில்லை; இருக்க இடமுமில்லை! வீதிகள்தோறும் அலைந்து திரியும் பிச்சைக்காரர்களைப்போலிருந்தான். இவன் இதற்கு முன்பு யாரிடம் வேலை பார்த்தான் என்பதைப்பற்றியாவது, இவனுடைய உற்றார் பெற்றார் யாரென்றாவது அறிந்துகொள்ள முடிய

வில்லை. ஏனெனில், தன்னைப்பற்றிய எவ்வித விவரமும் கூறுவதற்கு இவன் மறுத்து விட்டான். தனக்குப் பல கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தன வென்றும், தன்னுடைய நண்பர்கள் தன்னைப் புறக்கணித்து விட்டார்கள் என்றும், தனக்கு விரோதிகள் பலர் இருக்கிறார்களென்றும், அவர்கள் தன்னைக் கொல்லுவதற்குச் சதியாலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும், தன்னுடைய ஆயுள் காலத்தில் தான் புரிந்தது ஒரே ஒரு குற்றந்தான் என்றும், அஃதாவது: தன்னைக்காட்டிலும் இயல்பிலும் அந்தஸ்திலும் உயர்ந்த ஒரு பெண்மணியைக் காதலித்ததுதான் என்றும் இந்த வேலைக்காரன் சொன்னான். இவைகளைத் தவிர வேறு எத்தகைய விவரமும் அவன் கூறவில்லை.

"இவன் என் எஜமானனிடம் வேலைக்கு அமர்ந்தபோது, இவனுக்கு இரண்டு கண்களும் நன்றாகவே இருந்தன; அப்போது ஒரு கண் குருடாக இல்லை. வேட்டையாடுவதிலும், போர்த்தொழில் புரிவதிலும் இவனுக்கு இணையானவர்கள் எவருமே அக்காலத்தில் இல்லை. கவலையும் மனோ வியாகுலமும் பெரிதும் உடையவனாக இவன் இருந்தானெனினும், உற்சாகமும் முக மலர்ச்சியும் இவனிடம் இல்லாமல் இல்லை. இவனுடைய செயலும் பேச்சும் ஒரு காலத்தில் இவ்வுலகத்திலேயே பெரிய புரட்சியை உண்டாக்கக் கூடிய ஒரு பெரிய போர்வீரனையும் ஜனத் தலைவனையும் இவன் வரக் கூடும் என்பதை அப்போதே நன்கு புலப்படுத்தின. இவன் நீண்ட நாள் ஒருவரிடம் ஊழியம் பார்க்க மாட்டான் என்றும், சுயேச்சையாயும் சுதந்தரமுடையவனாயுமே இவன் இருப்பான் என்றும் நான் அப்போது நினைத்தேன். நான் நினைத்தபடியே இப்போது இவன்

மகா வீரனுயும், சாக்கியர் கூட்டத் தலைவனுயும் விளங்கு கிறுன். இவனுடைய பெயரைச் சொன்னலே இப் போது உலகம் நடுங்குகிறது. அவ்வளவு மதிப்பும் செல்வாக்கும், புகழும், கீர்த்தியும், பலமும், தைரிய மும் வாய்ந்தவனக நிகும்பன் இப்போதாகிவிட்டான். என்னுடைய எஜமானனே இவன் மூன்று நான்கு முறை பிராணபத்திலிருந்து இரட்சித்திருக்கிறன். அதனல், என் எஜமானனுக்கு இவன் மீது அதிக விசுவாசமும் நன்குமதிப்பும் இயல்பாகவே ஏற்பட்டன. எஜமான னுடைய மனைவியாகிய கோமகியும், தன் கணவன் உயி ரைப் பலமுறை இவன் காத்ததற்காக, இவன் மீது மிகுந்த அன்பும் நன்றியறிதலும் செலுத்தியதோடு பல சம்மானங்களும் இவனுக்குச் செய்தாள். இவ்விதம் நிகும்பன் ஆண் மக்களுடைய மதிப்புக்கும் பெண்மக்க ளுடைய புகழ்ச்சிக்கும் உரியவனுன்.

"சிவகரே, நிகும்பன் இவ்விதம் என் எஜமான னிடம் வேலே பார்த்து வந்தான். இந்த இலவந்திகைக் கோட்டையில் அவனுக்கிருந்த செல்வாக்கும் மதிப்பும் வேறு எந்த உத்தியோகஸ்தருக்கும் இல்லே. நிகும்ப னுடைய வார்த்தை விண்ணெளியானுக்குச் சட்ட மாகும். நிகும்பனுடைய விஷயத்தை இவ்வளவில் நிறுத்திவிட்டுப், பிறகு நிகழ்ந்த சில சம்பவங்களேப் பற்றிக் கூறுகிறேன். விண்ணெளியானுக்கு நேர்ந் தள்ள அபாயத்தை இனிதறிந்த வித்தியானந்தர், இக் கோட்டையில் இருக்க மனமற்றவராய் இப் பாஞ்சால தேசத்தின் தலே நகராகிய குந்தி நகரத்துக்குப் பிரயா ணப்பட்டுப் போனர். அவர் குந்தி நகரத்தில் இரண்டு மூன்று வாரங்கள் தங்கி யிருந்துவிட்டு மீண்டும் இலவந் திகைக் கோட்டைக்கு வந்துவிட்டார். ஆனல், குந்தி

நகரத்திற்குத் தாம் எக்காரியத்தை முன்னிட்டுச் செல்ல நேர்ந்தது என்பதைப்பற்றி அவர் விண்ணெளியானி டமாவது மற்றவர்களிடமாவது ஒரு சிறிதும் சொல்ல வில்லை. விண்ணெளியான் அவ் விஷயத்தைப்பற்றி வற்புறுத்திக் கேட்டபோதும், சொல்லுவதற்குச் சமயம் இதுவன்று என்றும், சமயம் நேரும்போது சொல்லக் கூடுமென்றும் வித்தியானந்தர் கூறிவிட்டார். விண்ணெளியானும் பிறகு அவரை அவ்விஷயமாய் வற்புறுத்திக் கேட்கவில்லை. சில மாதங்கள் கழிந்தன. கோமதி பிரசவிக்கும் காலம் சமீபித்தது. அவ்விஷயத்தில் விண்ணெளியான் கவனம் சென்றிருந்தபடியால், அவர் ஏனைய விஷயங்களைக் கவனிக்கவில்லை. இறுதியில் கோமதி ஒரு பெண் மகவை ஈன்றனள். அதுசம்பந்தமாய் ஜனங்கள் சந்தோஷம் பாராட்டியும் விழாக்கள் நடத்தியும் ஆரவாரித்தார்கள். ஆனால், விண்ணெளியானுக்கு மகிழ்ச்சி ஒரு சிறிதுமில்லை.

"'ஓ! கடவுளே, கடவுளே! நான் இப்போது ஒரு குழந்தைக்குத் தந்தையாயிருக்கும் பாக்கியத்தைப் பெற்றும், அவ்விதம் பெற்றிருப்பதுபற்றி ஒரு சிறிதும் சந்தோஷிக்க முடியாதவனாயிருக்கின்றேனே! முன்யோசனை சிறிதுமின்றி நான் செய்த சத்தியம், இக் குழந்தையை மடத்தில் காலங்கழிக்கும்படி செய்து விட்டதே! இக் குழந்தை, ஏனைய பெண்களைப்போல் உலக சுகங்களை அனுபவிக்க முடியாதே!' என்று விண்ணெளியான், வித்தியானந்தர் முன்னிலையில், தன்னுள்ளே நொந்துகொண்டு கூறினன்.

"'பிரபுவே, நீர் இவ்விதம் கவலல் நியாயமன்று. உலகப்பற்றை அடியோடு ஒழிக்கும்படியும், வெறுக்கும்படியும் இந்த குழந்தையை நாம் செய்துவிடலாம்.

குழந்தைப் பருவத்திலிருந்தே அதனை நாம் தேவ ஊழி யத்தில் பழக்கி வந்தால், பிறகு இவ்வுலக இன்பமும், பொருளும் அதற்கு வெறுப்பாய்த் தோன்றுமென் பதை நான் சொல்லவும் வேண்டுமா? அவ்விதம் தேவ ஊழியத்திலிருக்கும் ஒரு பெண்ணினுடைய ஆன்மா எவ்வளவு பரிசுத்தமுடையதாயும், சுவர்க்கத்தி லிருப்பதற்கு ஏற்றதாயும் இருக்கும். அவ்வித மிருப் பது சிறந்ததா? அல்லது சாதாரண மனிதர்களைப் போல் கீலையற்ற சிற்றின்பமும், பொன்னும், பொரு ளுமே சிறந்தனவென்று கருதி, அவைகளிற் கிடந்து உழல்வது சிறந்ததா? ஆதலால், நீர் கவலைப்படவேண் டாம்' என்று விந்தியானந்தர் என் எஜமானனுக்குத் தேறுதல் கூறினர்.

"'எவ்வளவுதான் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாலும் புத்திர வாஞ்சை மிகப் பெரிதாதலால், மனம் சமாதானப்படவில்லை. உரிய பருவத்தில் பூரண சந்திரனைப்போல் விளங்கும் என் முதல் புத்திரியின் அழகு, பரித்திரமுடைய ஓர் ஆண் மகனுக்குப் பிர யோசனப்படாமல் வியர்த்தமாகுமே' என்று விண் ணெனியான் பிரலாபித்தார்.

"'பிரபுவே, எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளா கிய சிவபெருமானுக்கு நம்முடைய குழந்தையை மனப் பூர்வமாய் அர்ப்பணம் செய்துவிட்டுப் பிறகு அவ்விதம் செய்ததைப்பற்றி மனம் வருந்துவது நியாயமாகுமா? அவ்விதம் செய்ததற்காக நாம் மனமகிழ்தல் வேண்டும்' என்று விந்தியானந்தர் மீண்டும் ஆறுதல் கூறினர்.

"'குருவே, அதற்காக நான் வருந்தவில்லை. வீர வர்மரிடம் முன் யோசனை இல்லாமல் நான் செய்த சத் தியத்திற்காக வருந்துகிறேனே தவிர வேறில்லை. வீர

வர்மருடைய தலைமையின் கீழ் இருந்து வரும் இரகசிய சங்கத்தையும், அந்த வெண்கலச் சிலையையும், அதனைச் சேர்ந்த பெரிய சங்கத்தையும் அடியோடு நாசம் செய்தால் என்னுடைய துயரம் ஒருவாறு நீங்கும், பழிக்குப் பழிவாங்கினேம் என்னும் ஒரு வகையான திருப்தியாவது ஏற்படக்கூடும்' என்று விண்ணெளியான் கோபத்தோடும், துயரத்தோடும் உரைத்தார்.

"'பிரபுவே, உம்முடைய விருப்பம் நிறைவேற இறைவன் அருள் புரிவாராக! அவ்விதமே அவைகள் அழிக்கப்படும். அதற்கு வேண்டும் முயற்சி நான் ஏற்கனவே செய்திருக்கிறேன். ஆதலால், நீர் கவலைப்பட வேண்டாம்' என்று வித்தியானந்தர் இயம்பினர்.

"'குருவே, அவ்விதம் செய்யவும் நம்மால் முடியுமா? நீங்கள் என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்பதைத் தயைசெய்து விவரமாய்த் தெரிவியுங்கள்' என்று விண்ணெளியான் ஆவலோடு கேட்டார்.

"'பிரபுவே, விவரம் தெரிவிப்பதற்கு இது சமயந்தான். ஆதலால் தெரிவிக்கிறேன்; கேளும்! சில மாதங்களுக்கு முன்பு நான் குந்தி நகரம் சென்று, அங்கே இரண்டு மூன்று வாரம் தங்கியிருந்ததற்குக் காரணம் இவ்விஷயத்தைக் குறித்து ஏதாவது ஓர் ஏற்பாடு செய்யவேண்டுமென்பதே. குந்தி தேசத்திற்குச் சென்றவுடன், பாஞ்சால தேசத்து அரசனை கேரில் பார்ப்பதற்கு வேண்டும் முயற்சி செய்தேன். இறுதியில் அரசருடைய பேட்டி எனக்குக் கிடைத்தது. அவர் என்னை மிக்க அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்று வந்த காரியம் யாதென்று கேட்டார். வெண்கலச் சிலையைப்பற்றியும், அதனைச் சேர்ந்த இரகசிய

சங்கத்தைப் பற்றியும், அச்சங்கத்தார் செய்யும் கொடுமைகளைப் பற்றியும், வெண்கலச் சிலையும் அதனைச் சேர்ந்த பெரிய யந்திரமும் ஒரு மாளிகையின் கீழ்சுரங்கத்திற்குள் இருக்கின்றன என்பதைப் பற்றியும், அச்சங்கத்தின் தலைவராகிய வீரவர்மர் செய்யும் அக்கிரமங்களைப் பற்றியும் நான் விவரமாய் அரசருக்குக் கூறி, அச்சங்கம் அரசனுக்குத் தெரியாமல் இரகசியமாய் இருப்பது நன்றன்றென்றும், அச் சங்கத்தை அடியோடு ஒழித்தல் அவசியமென்றும் வற்புறுத்தி உரைத்தேன். ஆனல், அச்சுரங்கம் இருக்குமிடம் எங்கே என்று மாத்திரம் நிச்சயமாய்க் கூற என்னல் முடியவில்லை. ஏனெனில், உம்மைக் கண்ணைக்கட்டி அழைத்துப் போனர்களாதலால், உமக்கு அதன் இருப்பிடம் தெரியவில்லை. நீர் சொன்னலன்றி எனக்கு எவ்விதம் தெரியும்? உம்மைக் குறித்தும் நான் ஏதும் சொல்லவில்லை. ஆனல், உம்முடைய சம்பந்தமான எல்லா விஷயங்களையும் உம்முடைய பெயரைக் குறிப்பிடாமல், வேறொருவர் மீது ஏற்றி அரசனிடம் தெரிவித்தேன். வீரவர்மர் தலைவராயிருத்தலால், அவருக்குச் சொந்தமான கேசரிக் கோட்டைக்குள்தான் அச்சுரங்கம் இருக்கவேண்டுமென்று அரசர் உத்தேசமாய்க் கூறினர்' என்று வித்தியானந்தர் *விண்ணெளியானிடம் புகன்றார்.

"'நானும் அவ்விதந்தான் அபிப்பிராயப் பட்டேன்; வெண்கலச் சிலையும், பெரிய யந்திரமும் கேசரிக் கோட்டைக்குள்ளிருக்கும் சுரங்கத்திற்றான் இருக்கின்றன என்று இப்போதும் நான் நினைக்கிறேன்' என்று விண்ணெளியான் வித்தியானந்தரிடம் இடைமறித்துக் கூறினர்.

"'பிரபுவே, பாஞ்சால தேசத்து மன்னர் நான் கூறிய எல்லா விஷயங்களையும் பொறுமையோடும் கவனத்தோடும் கேட்டுக்கொண்டு சந்தோஷகரமான நற்பதிலே அளித்தார். நம்முடைய பக்கத்திலுள்ள இரண்டு மூன்று பிரபுக்களை ஒன்று சேரும்படியும், அவ்விதம் சேர்ந்தவுடன் வீரவர்மர்மீது யுத்தத்திற்குச் செல்லத் தயாராயிருக்கும்படியும் அரசர் கட்டளையிட்டார். தவிர, அவ்விதம் தயாராயிருந்துகொண்டு தமக்குத் தெரிவித்தால், வீரவர்மரைப் பிடித்துக் கைது செய்யும்படி தம்முடைய தளகர்த்தரைக் கட்டளையுடன் அனுப்புவதாகவும், அவருடைய கோட்டையை எதிர்த்துப் பிடிப்பதற்காக ஐயாயிரம் போர் வீரர்களைப் பிரபுக்களுடைய சைனியத்திற்கு உதவியாக அனுப்புவதாகவும் அரசர் வாக்குறுதி செய்திருக்கிறார்' என்று வித்தியானந்தர் தொடர்ந்து மொழிந்தார்.

"'ஓ! அப்படியா? மிகவும் சந்தோஷம்! குருவே, தாங்கள் செய்த இத்தகைய அரிய செயலுக்கு யான் யாது கைம்மாறு செய்வேன்? குருவே, என்னுடைய மாமனாரும், ஜாம்புவன் கோட்டையின் சொந்தக்காரருமாகிய மேகவண்ணன் நமக்குத் துணையாக வருவார். இதிற் சந்தேகமே இல்லை' என்று என் எஜமானன் வித்தியானந்தருக்குக் கூறினார்.

"'நல்லது, நாளையதினம் புறப்பட்டு நான் குந்தி நகரம் செல்லுகிறேன். நான் திரும்பி வருவதற்குள் நீர் உம்முடைய சைனியத்தை யுத்தத்திற்குத் தயாராயிருக்கும்படி செய்யவேண்டும். உம்முடைய மாமனாரிடமும் விஷயத்தை அறிவித்து அவருடைய சைனியங்களையும் தயாராயிருக்கும்படி செய்யவேண்டும். இதற்குள் நான் அரசரிடம் விஷயத்தைத் தெரிவித்துச் சைனியங்கள்

அனுப்பும்படி செய்கிறேன். மூவருடைய சைனியங்களும் ஒன்று சேர்ந்துகொண்டு கேசரிக் கோட்டையை எதிர்த்தால், வீரவர்மரைச் சுலபத்தில் கைதியாகப் பிடித்து விடலாம், — அவருடைய கோட்டையைத் தகர்த்து சுரங்கத்திலிருக்கும் வெண்கலச் சிலையையும் யந்திரத்தையும் அழித்துவிடலாம்!' என்று வித்தியானந்தர் கூறிவிட்டு விண்ணெளியானுடைய அறையிலிருந்து தம்முடைய அறைக்குச் சென்றார்.

''விண்ணெளியானுடைய அறையிலிருந்து வித்தியானந்தர் பின்புறக் கதவைத் திறந்துகொண்டு தம்முடைய அறைக்குச் சென்றார். அதே சமயத்தில் அறையின் மூன்புறக்கதவினைத் திறந்துகொண்டு வீரவர்மர் உள்ளே நுழைந்தார். திடீரென்று அவர் பிரவேசித்துக் கண்களில் தீப்பொறி பறக்க மிகுந்த கோபாவேசத்துடன் எதிர் நின்றதைக் கண்டவுடன் என் எஜமானன் மூளை கலங்கி உடல் நடுங்கி ஏதும் தோன்றாமல் ஸ்தம்பித்து மரம்போல் நின்றார்.

''' 'பிரபுவே இன்று சரியான சமயத்தில் உம்முடைய மாளிகைக்கு வரும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஐந்து மாதங்களுக்கு முன்பு நான் வந்த சமயம் எவ்விதம் நல்ல சமயமாயிருந்ததோ அவ்விதமே இன்று வந்த சமயமும் இருந்தது' என்று வீரவர்மர் கூறினார்.

''' 'வீரவர்மரே! மறைந்திருந்து பிறர் என்ன பேசுகிறார்கள் என்று கவனிக்கும் வழக்கம் கீழ்மக்களுக்கு உரியது. அவ் வழக்கத்தை நீர் கைக்கொண்டது நகையாடற் கேதுவாம்' என்று விண்ணெளியான் வீரவர்மரை நோக்கிக் கூறினார்.

"'பிரபுவே, இரையாதீர்! உம்முடைய மனைவி அடுத்த அறையில் படுத்திருக்கிறாள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும். நீர் என்னுடைய நடத்தையைக் கீழ்மக்களுக்கு உரியது என்கிறீர். ஐந்து மாதங்களுக்கு முன்பு உம்மை நான் வெண்கலச் சிலை இருக்கும் சுரங்கத்திற்கு அழைத்துக்கொண்டு போய் அங்கே காணப்படும் காட்சிகளை உமக்குக் காண்பித்தேன். அங்கே செய்யப்படும் தண்டனை இத்தகையது என்பதையும் உமக்கு விவரமாய்க் கூறினேன். அக்காட்சி உம்முடைய மனத்தில் எத்தகைய மாறுதலை உண்டாக்கி யிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளும்படி மறுநாள் உம்முடைய மாளிகைக்கு வந்தேன். அப்போது உமக்குப் பிறக்கப் போகும் குழந்தையைச் சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்யும் விஷயமாய்ப் பலவகையான ஆலோசனைகளை வித்தியானந்தர் உமக்குக் கூறியதைக் கேட்டேன். அவர் உமக்குத் தூர்ப்புத்தி போதித்தது ஓர் ஆச்சரியமன்று. அவருடைய துராலோசனைக்கு நீர் இணங்கியதுதான் ஆச்சரியம். அப்போது நீங்கள் இருவரும் பேசிக்கொண்ட எல்லா விஷயங்களையும் நான் அறிவேன். உங்களுடைய சம்பாஷணை முடிந்த பிறகு கோபத்தினால் பரிகாசச் சிரிப்பு சிரித்துவிட்டு நான் சென்றேன். இரகசியமாக நியமிக்கப்பட்டிருக்கும் என்னுடைய வேவுகாரன் ஒருவன் இன்று காலையில் என்னிடம் வந்து உம்முடைய மனைவிக்குப் பெண் மகவு பிறந்திருக்கிறது என்னும் செய்தி தெரிவித்தான். ஏற்கனவே, நீர் செய்துகொடுத்திருக்கும் சத்தியத்தின்படி அந்த மகளை வெண்கலச் சிலைக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும் என்பதை ஞாபகப் படுத்துவதற்காக இன்று வந்தேன். நான் வந்த சமயம் நல்ல சமயமேயாகும்.

ஏனெனில், வித்தியானந்தரும் நீரும் பேசிக்கொண் டிருந்த எல்லா விவரங்களையும் அறியும்படியான சந் தர்ப்பம் எனக்கு வாய்த்தது. நீங்கள் இருவரும் செய் திருக்கும் சதியாலோசனை யாதென்பதை நான் அறி வேன். பிரபுவே, மணிபல்லவரோடு யுத்தம்செய்து தோல்வியடைந்து நீர் இனிச் செய்வது யாதென அறி யாதபடி மயங்கியபோது நான் உமக்கு உதவி செய்து உம்முடைய மானத்தையும் பெருமையையும் காப் பாற்றினேன். இலவந்திகைக் கோட்டையையும் எதிரி கள் கைப்பற்றுதபடி செய்தேன். நான் தக்க சமயத் தில் உமக்குச் செய்த அவ்வளவு பெரிய உதவியையும் மறந்து நன்றி கெட்டவராய் எனக்கே தீங்கு செய்யும் படி சதியாலோசனை புரிந்தீர். செய்ந்நன்றி கொன்ற உம்முடைய செயல் அருவருக்கற்பாலதா? அல்லது மறைந்திருந்து உற்றுக்கேட்ட என்னுடைய செயல் அருவருக்கற்பாலதா? நீரே யோசித்துப்பாரும்! என்னைக் கெட்டவனென்றும், கொடியவனென்றும் சொல்லுவதற்கும் உமக்கு வாயிருக்கிறதா? பிரபுவே, பாஞ்சால தேசத்து அரசருடைய உதவியினால் உங்க ளுடைய சதியாலோசனை நிறைவேறும் என்று நீங்கள் மனப்பால் குடித்து மகிழ வேண்டாம். அவ்வரச னுக்கு ஆலோசனை கூறும் மந்திரிமார்களுக்குள்ளும் எங்களுடைய சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பலர் இருக்கிறார்கள். அந்த உண்மை அரசனுக்குத் தெரியாது. அவர்கள், பிரபுக்களோடு சேர்ந்து என் னுடைய கோட்டையை எதிர்ப்பதற்கு ஐயாயிரம் போர்வீரர்களை அனுப்பவாவது, அல்லது என்னைப் பிடித்துக் கைதியாக்கவாவது அரசனுக்கு ஒரு சிறிதும் இடங்கொடுக்க மாட்டார்கள். ஆதலால் உம்முடைய யோசனையும், உமது குருவுடைய போதனையும் ஒரு

சிறிதும் பயன்படமாட்டா. இதை உறுதியாய் நம்பும்' என்று வீரவர்மர் என் எஜமானனை நோக்கி ஆத்திரத்தோடு பேசினர்.

"'வீரவர்மரே, நான் நன்றிகெட்டவனுகவே உம் விஷயத்தில் நடந்துவிட்டேன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனலும், புத்திர வாஞ்சையால் அவ்விதம் நடக்க நேர்ந்ததே தவிர வேறில்லை. நான் செய்து கொடுத்த சத்தியத்தினின்றும் என்னை விடுவித்து, என் குழந்தையை என்னிடத்திலேயே இருக்கும்படி செய்யும். நான் எப்போதும் உம்மோடு நட்புரிமையோடிருந்து உமக்குக் கீழ்ப்பட்ட ஒரு ஜமீனப்போல் கப்பம் கட்டி வருகிறேன். தயவுசெய்து இந்த ஓர் உதவி எனக்குச் செய்யக்கூடாதா?' என்று விண்ணெளியான் கெஞ்சினர்.

"'பிரபுவே, முடியாது, — முடியாது! உம் மூடைய வேண்டுகோளுக்கு நான் இசைந்தபோதிலும், சங்கத்தார் சம்மதியார்கள். தவிர, உங்களைப் போன்ற பிரபுக்கள்வீட்டுப் பெண்களும் புருஷர்களும் எங்களுடைய சங்கத்தில் சேர்ந்தால், சங்கத்திற்கு எவ்வளவோ கௌரவம் ஏற்படும். பெரிய குடும்பங்களில் உதித்த அழகிய பெண்மணிகளை அடைவதற்காக எத்தனையோ பெரிய மனிதர்கள் எங்கள் சங்கத்தில் சேருவார்கள். அவர்களால் சங்கம் பலப்படும். ஆதலால் உம்மூடைய வேண்டுகோளுக்கு இசைய முடியாது' என்று வீரவர்மர் கண்டிப்பாய்ப் பேசினர்.

"'ஓ! கடவுளே, — கடவுளே! இவை யெல்லாம் உண்மைதானு, — அல்லது நான் கனவு காண்கின்றேனு?' என்று என் எஜமானன் வருத்த மிகுதியால் வாய்விட்டுக் கூவினர்.

"'பிரபுவே, நீர் கனவு காணவில்லை! எல்லாம் உண்மையே! சந்தேக மிருந்தால் உம்முடைய வலது மணிக்கட்டைப் பாரும்! வெண்கலச் சிலையின் ஆற்றல் உமக்குத் தெரியும். எங்கள் சங்கத்தின் சக்தியையும் அதிகாரத்தையும் உமக்கு விளக்கிக் காட்டக் கூடிய மற்றோர் அடையாளம் இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் காணப்படும். அதைக் கண்ட பின்பாவது எங்கள் சங்கத்தின் பேராற்றலை நீர் அறிந்துகொள்ளும். ஆதலால், மீண்டும் ஒரு முறை நான் எச்சரிக்கிறேன். உம்முடைய சதியாலோசனையை விட்டுவிடும். நீர் செய்து கொடுத்திருக்கும் வாக்குறுதியின்படி உமக்குப் பிறந்திருக்கும் பெண் மகவை அர்ப்பணம் செய்துவிடும். இல்லாவிட்டால் மீண்டும் ஒரு முறை அச்சுறுத்திற்கு உம்மைக் கொண்டுபோய் வெண்கலச் சிலைக்கும் கன்னியின் முத்தத்திற்கும் பாத்திரமாகும்படி செய்வேன். இது சத்தியம். ஜாக்கிரதை' என்று வீரவர்மர் வற்புறுத்திக் கூறிவிட்டுச் சரேலென அறையிலிருந்து வெளியே சென்றுவிட்டார்.

"அவர் சென்ற பிறகு விண்ணெளியான் ஏதுந் தோன்றாமல் சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றார். பிறகு சற்றேறக் குறைய ஒரு மணிநேரம் அவரே பலவாறு ஆலோசனை செய்து பார்த்தார். அவருக்கு ஒரு யோசனையும் தோன்றவில்லை. குலகுருவாகிய வித்தியானந்தரிடம் விஷயத்தைக் கூறி அவருடைய யோசனையைக் கேட்கலாம் என்னும் எண்ணத்துடன் சரேலெனப் புறப்பட்டு என் எஜமானன் வித்தியானந்தர் அறைக்குச் சென்றார். கதவு சாத்தப்பட்டிருந்தது! கதவைத் தட்டினார். உள்ளேயிருந்து பதில் வரவில்லை. மீண்டும் பலமாய்க் கதவைக் காலால் உதைத்தார். கதவு திறந்து கொண்டது. சரேலென உள்ளே சென்

ரூர், — வித்தியானந்தர் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதைக் கண்டார். அறை முழுவதும் இரத்தம் வெள்ளம்போல் ஓடிக்கிடந்தது. 'எங்கள் சங்கத்தின் சக்தியையும் அதிகாரத்தையும் உமக்கு விளக்கிக் காட்டக்கூடிய மற்றோர் அடையாளம் இன்னும் ஒரு மணிநேரத்திற்குள் காணப்படும்' என்று வீரவர்மர் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. வித்தியானந்தரைக் கொலை செய்தவர் வீரவர்மரே என்பதை அவர் இனிதறிந்து கொண்டார்.

அதிகாரம் — 75

பரந்தாமன் சரித்திரத் தொடர்ச்சி.

"வித்தியானந்தரைக் கொலை செய்தது வீரவர்மரே என்ற உணர்வு தோன்றியபொழுதே வேறு பலவகையான எண்ணங்களும் விண்ணெளியான் மனதில் ஒன்றின்மீது ஒன்றுகத் தோன்றி அவர் மூளையைக் கலக்கிவிட்டன. அக் கலக்கந் தெளிந்து அவர் தம்முணர்வு பெறுவதற்குப் பல நிமிஷங்கள் சென்றிருக்க வேண்டும். ஒரு நெறியின்றி சிதறுண்டு சென்ற தமது எண்ணங்களை யெல்லாம் ஒருவழிப்படுத்திச் சிந்திக்கத் தொடங்கியபோது, அவருக்குத் தோற்றிய முதற் கருத்தாவது 'நாம் இவ்வறையை விட்டு ஓடி வீரவர்மர் செய்த கொலையைப் பகிரங்கப்படுத்தி அவர் செய்த கொடிய செயலுக்குத் தகுந்த தண்டனையாக நமது படைகளை யெல்லாம் திரட்டி, அவரோடு போர் புரியச் செய்து அவரைக் கொன்று பழிக்குப் பழி வாங்கி விடலாம்' என்பதே. ஆனல் மறு நிமிஷமே அக்

கருத்து மாறிவிட்டது. வீரவர்மரோடு போர்க்குச் செல்வதென்றால், விண்ணெளியான் தமது அந்தரங்கத்தைப் பகிரங்கப்படுத்தாமல் முடியுமோ? சற்குண சீலரான வித்யானந்தரை வீரவர்மர் கொல்வதற்குக் காரணம் என்னவென்று ஜனங்கள் கேட்பார்களே. அப்பொழுது, விண்ணெளியான் தமக்குப் பிறக்கும் முதற் குழந்தையை வெண்கலச் சிலைக்கு அர்ப்பணம் செய்வதாக உடம்பட்டது வெளிப்பட்டு விடுமே. அதை மறைத்து வைக்க முடியாதே! இந்த விஷயங்க ளெல்லாம் விண்ணெளியான் அறிவிற்கு நன்றாய் விளங்கின. இவை மட்டுமல்ல. தமது மனைவி தற்போது இருக்கும் நிலைமையில் அவள் மனத்தைக் கலக்கக் கூடியதாக எச் செயலும் செய்தல் தகாதென்ற உண்மையும் விண்ணெளியான் புத்திக்குப் புலனாயிற்று. இவைகளையெல்லாம் கருதி, விண்ணெளியான் வீரவர்மரே கொலை செய்தவர் என்பதை வெளியிடாமல், வித்தியானந்தர் கொலையுண்டிறந்தார் என்பதைமட்டும் வெளியிடலாமென்றாலோ, சந்தேகம் அவர்மீது விழும். எல்லோருடைய நன்கு மதிப்புக்கும், அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரரா யிருந்த ஒரு சுகுணசீலரைக் கொன்றவர் விண்ணெளியான் என்ற எண்ணம் ஜனங்கள் மனதில் தோன்றிவிட்டால் பாஞ்சாலதேசம் முழுதும் ஒன்றுபட்டு அவரைக் கொன்று சின்னபின்ன மாக்கி விடும்.

"இவைகளையெல்லாம் யோசித்து, வித்தியானந்தர் கொல்லப்பட்டார் என்பதை வெளிவிடாமல் அவர் காணப்படாமைக்கு வேறு யாதாவதொருகதை கற்பித்துக் கூறுவதெனத் தீர்மானித்து விண்ணெளியான் அவ்வறையைப் பூட்டி அதன் சாவியைப் பத்திரப்படுத்

திக்கொண்டு வெளியே சென்றார். தம் மனைவி யிருக்கும் இடம்சென்று அவ்வள் ஈன்ற மகவைக் காணச் செல்ல விண்ணெளியான் விரும்பினராயினும், உடனே அவ் விதம் செய்வதற்கு அவரால் கூடவில்லை. தமது முக வேறுபாட்டைத் தம் மனைவிக்குப் புலப்படுத்த அவர் விரும்பிலர். ஆதலால், சிறிது நேரம் தாமதித்து — தமதுமனம் அக்கொடிய செயலைக் கருதுவதனின்றும் ஒருவாறு சிறிது நீங்கி, சற்று முகத் தெளிவுண்டான பிறகு — அவர் தமது மனைவி யிருக்குமிடம் சென்று அவள் ஈன்ற தமது குழவியைப் பார்த்துவிட்டு, அதிக நேரம் அங்குத் தாமதியாமல், தம்முடைய அறைக்குச் சென்று, தன்னந்தனியே இருந்து தம் உள்ளத்தில் அடங்காமல் பொங்கித் ததும்பிக்கொண்டிருந்த பெருந் துயரைப் போனபோக்குக்கு விட்டுச் சிறிது ஆற்றலா மென்ற அவாவோடு கதவைச் சார்த்தித் தாளிட்டுக் கொண்டார்.

"நாழிகைகள் பல கடந்தன. நள்ளிருளாயிற்று. இலவந்திகைக் கோட்டை முற்றும் ஆழ்ந்த அமைதி பரவியிருந்தது. அப்பொழுது விண்ணெளியான் வித்தியானந்தர் கொலையுண்டுகிடக்கும் அறைக்குச் சென்று, அவர் பிரேதத்தை ஒரு சாக்குப்பையிலிட்டுக் கட்டி, அந்தப் பெருஞ் சுமையைச் சுமந்துகொண்டு அதிவிரைவாய்த் தோட்டத்திற்குள் சென்றார். அவர் கருத்து அப்பிரேதத்தைத் தோட்டத்தின் ஒரு மூலையில் குழிவெட்டிப் புதைத்துவிட வேண்டு மென்பதே. ஆனால், குழி தோண்டுவதற்குள் யாராவது அங்கு வந்துவிடுவார்களோ, தமதுசெயல் வெளிப்பட்டு விடுமோ என்ற அச்சத்தினால் அவர் உடல் நடுங்கிற்று. குழிதோண்ட அவரால் இயலவில்லை. ஆதலால் மீண்டும் அச்சுமையைச்

சுமந்துகொண்டு தோட்டத்தின் புறத்தே ஓடும் நதியில் அதை வீழ்த்திவிடக் கருதிச் சென்றார். ஆற்றுநீரில் வீழ்த்தப்பட்ட பிறகு அது மேலே மிதவாதிருக்கும்படி, அவர் மூட்டையைக் கரையில் இறக்கி, அதைத் திறந்து அதனுள் பல பருங்கற்களைப் பொறுக்கிப்போட்டு மறு படியும் மூட்டையைக் கட்டி ஆற்றில் உருட்டிவிடப் போனார். அச்சமயம், அங்கிருந்த மரப்பொதும்பரி லிருந்து ஒருமனிதன் வெளிப்பட்டு அவர் எதிரே வந்து நின்றான். விண்ணெளியான் திடுக்கிட்டு மூட்டையை விட்டு விட்டு ஓட எத்தனித்தார். ஆனால் திடீரென்று அவர் முன்னே தோன்றிய மனிதன் சரேலென்று அவர் மீது பாய்ந்து அவர் கையைப் பிடித்தான். எதிர் பாராத இத்தடையால் விண்ணெளியான் ஆடியோயும் பம்பரம்போல் ஒரு சுழற்சி சுழன்று நின்றார். மணி வல்லபர் தோல்வியுற்றபிறகு விண்ணெளியானால் தம்மி டம் வேண்டாமென்று அகற்றப்பட்டவனும், ஒழுக்க வீனனுமாகிய மதிவல்லபன் இப்போது தம் எதிரே நிற் கக் கண்ட விண்ணெளியான் அடைந்த ஆச்சரியத்தை யும் திகிலையும் என்னென்றுரைப்பது.

"'ஆ! எனது பழைய எஜமானரே!' என்று மதி வல்லபன், விண்ணெளியானை விளித்துக் கூறுகின்றான்: 'என்ன ஆச்சரியம்! இது என்னுடைய அதிர்ஷ்ட வசமே —'

"'என்ன சொல்லுகிறாய்?' என்று கோபத்தோடு விணவி, விண்ணெளியான் அவன் பிடியினை விடுவித்துக் கொண்டு விலகிநின்று 'எதற்காக நீ என் கையை பிடிக் கிறாய்?' என்று உசாவினார்.

"'எஜமானே! என்மீது கோபித்துக் கொள்ளா தீர். தங்களைப் பார்த்தவுடன் தாங்கள் இன்னுரென்

பது எனக்குப் புலப்படவில்லை. தங்கள் செயல் சந்தேகத்துக்கிடமா யிருந்தமையால், இந்த நள்ளிரவில் ஒரு பெருஞ் சுமையை இச் சிந்துநதியில் எறிவார் யார் என்றறிய வேண்டுமென்று நிச்சயித்துத் தங்கள் கரத்தைப் பற்றினேன்' என்றான் மதிவல்லபன்.

''நல்லது, அகௌரவமான உனது விருப்பம் நிறைவேறிவிட்டமையால், நீ இக்கணமே இவ்விடம் விட்டுச் செல்வது தகுதியானது' என்றார் விண்ணெறியான்.

''மதிவல்லபன் 'எஜமானே!' என்று விளித்து 'அப்படியல்ல; தெய்வச் செயலால் இவ்விடத்தில் இந்நேரத்தில் நாமிருவரும் சந்திக்கும்படி நேரிட்டதாதலால், நாம் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிவது எளிதிற் கூடாது. சுருங்கச் சொல்லுகிறேன்: நான் துரதிர்ஷ்டத்தால் எச் செயலுக்கும் தகுதியற்றவனாக்கப் பட்ட ஒரு மனிதன். எனக்கு இருக்க இடமில்லை; உடுக்க உடையில்லை; உண்ண உணவில்லை. நான் எச்செயலைச் செய்தபோதிலும் அது எனது நிலைமையை விருத்திசெய்வதே யாகும். ஏனெனில், எச் செயலாலும் என் நிலைமை இன்னும் தாழ்வதற்கு இடமில்லை' என்றான்.

''உனக்குப் பொருள் வேண்டுமானால் வேண்டுமளவு தரச் சித்தமாயுள்ளேன். ஆனால் நீ இக்கணமே இவ்விடம் விட்டு அப்புறம் போகவேண்டும்' என்றார் விண்ணெறியான்.

''அதற்கு மதிவல்லபன் 'பிரபுவே, தங்கள் பொருள் என்னைச் சில வாரங்கள் — அல்லது மாதங்கள் காப்பாற்றும். பிறகு—அந்தப் பொருளெல்லாம் செல

வழிந்த பிறகு — நான் எப்பொழுதும் போல சன ஸ்திதியில் இருப்பதைத் தவிர வேறு விதியில்லை. வேண் டாம், இந்தச் சமாதானத்திற்கு நான் உடம்படேன்' என்றான்.

"இதைக் கேட்கவும் விண்ணெளியாளுக்குக் கோ பம் பொங்கிற்று. 'சமாதானமா! என்னிடத்திலா இந்த வார்த்தை! ஜாக்கிரதை! இனி இவ்விதமாக வார் த்தை யாடுவையானால், எனது வாளுக்கு இரையா வாய்' என்றார்.

"'ஐயா!' மதிவல்லபன் கூறுகிறான்: 'அரைக் காசுக்கு விதியற்றவனையினும், என்னிடத்திலும் ஒரு வாள் உள்ளது. உம்முடையதை நீர் கையில் எடுத் தால், என்னுடையதை யான் எடுக்க அதிக நேர மாகாது'

"இங்ஙனம் உரைத்த மதிவல்லபனை, விண்ணெளி யான் மிகுந்த கோபத்தோடு நோக்கி 'துஷ்டா! நீ என் பால் வேண்டுவ தென்ன? விரைவிற் கூறு. என் னைத் தாமதப்படுத்தாதே' என்றார்.

"'எஜமானே! தயவுசெய்து நான் கூறுவதைப் பொறுமையாய்க் கேளுங்கள்' என்று மதிவல்லபன் கூறுகின்றான்: 'நான் நிமிஷங்களுக்கு மேல் தங்களைத் தாமதப் படுத்தமாட்டேன். நான் இங்கு வந்தது உண்மைக் கருத்து நாளைக்காலையில் தங்களைக் கண்டு, என் கடந்தசெயல்களுக் கெல்லாம் தங்கள் மன்னிப் பைப் பெற்று இனியாவது என்மீது கருணைகாட்டும் படி தங்களை வேண்டிக் கொள்வதற்கே. இச்சம்பவம் நிகழாதிருக்குமாயின் நாளைக்காலையில் நான் தங்களைக் கண்டு தங்கள்காலில் விழுந்து, எனக்கு ஓர் அற்ப உத்தி

யோகமாவது கொடுக்கும்படி குறையிரந்திருப்பேன். ஆனல் இந்த நள்ளிரவில் இங்ஙதிக்கருகே, 'இம் மூட்டையை' என்று கீழே கிடந்த பிரேதமூட்டையைக் காலாற் புரட்டிக்காட்டி 'இப்பிரேத மூட்டையைத் தாங்கள் செய்த கொலே வெளிப்படாவண்ணம் —' என்று மேற்கூறி முடிப்பதற்குள், விண்ணெளியான் இடைமறித்து, 'அடா பாதகா! மற்றொருகால் அவ்விதம் கூறுதே' என்றார்.

''' 'எது எவ்விதமாயினும் இது பிணமூட்டை யென்பதைத் தாங்கள் மறுக்கமுடியாது. கொன்றது தங்கள் கரமன்றுயினும், இருக்கும் சந்தர்ப்பம் முற்றும் தங்களுக்குப் பிரதிகூலமா யுள்ளது. ஆதலால், நான் கூறும் நிபந்தனைகளைக் கவனமாய்க் கேளுங்கள். இந்தப் பிரேத மூட்டையைப்பற்றி நான் அறிந்துள்ளன யாவும் எக்காலத்தும் என் மனத்திலேயே புதைபட்டுக் கிடக்கும். இதைப்பற்றி என் நாவிலிருந்து ஒரு வார்த்தை யாவது வராது. இதற்குப் பதிலாகத் தாங்கள் செய்ய வேண்டுவது யாதென்றால், முன்னம் நான் தங்களிடம் வகித்திருந்த பிரதான மந்திரி உத்தியோகத்தை மீண்டும் எனக்கு அளிக்கவேண்டும். அவ் வுத்தியோகத்தை நான் பொறுப்பாகவும், கௌரவமாகவும், ஜாக்கிரதை யாகவும்; உண்மையாகவும் செய்து வருவேன்' என்றான்.

''' 'மதிவல்லபரே! இதைத் தவிர நீர் வேறெதை வேண்டுமானலும் கேளும். ஏனெனில், மிகவும் விசுவாசத்துடனும், யோக்கியதையுடனும் வேலே பார்த்து வரும் பரந்தாமனை நீக்கிவிட்டு உம்மை அவ்வுத்தியோகத்தில் அமர்த்தினால், எனது மனைவி, நண்பர், குடிகள்

அனைவரும் என்னை ஒரு பித்தனென்று இகழ்வார்கள்' என்றார் விண்ணெளியான்.

"'தங்கள் மனைவி, நண்பர், குடிகள் அனைவரும், தாங்கள் ஒரு கொலைகாரர் என்பதை அறிந்தால் பின்னும் அதிகமாக இகழ்வார்களே' எனப் புகன்றான் மதிவல்லபன்.

"'விண்ணெளியானுக்கு ஆத்திரம் பொங்கியது. 'மதிவல்லபா! இந்த அபாண்டமான பழியை என் மீது சுமத்தாதே' என்றார்.

"'ஐயா, இருக்கும் சந்தர்ப்பம் அப்படியிருக்கிறதே. நான் என்ன செய்வேன்' என்று கூறிக் கீழே கிடந்த பிரேத மூட்டையைச் சுட்டிக் காட்டி 'இந்த சாக்ஷியின் உண்மையை யார் மறுக்கக்கூடும்?' என்றான் மதிவல்லபன்.

"'நம்முடைய கெட்டகாலம் நமக்குக் கஷ்டத்தின் மேற் கஷ்டம் கொடுக்கிறது. இதற்கு யாரை நோவது' என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டு விண்ணெளியான் தன் கைவிரலில் அணிந்திருந்த முத்திரை மோதிரத்தைக் கழற்றி மதிவல்லபன் கையிற் கொடுத்து 'இந்தா, மதிவல்லபா! நீ வேண்டியதை நான் அளிப்பேன் என்பதற்கு ஓர் உறுதியாக இந்த முத்திரை மோதிரத்தை நீ வைத்துக்கொள். நீ நாளைக் காலையில் என்னை என் வீட்டிலேயே வந்து கண்டு, அதற்கு முன் என்னைப் பாராதவன் போல நடித்து, என் பாதங்களில் விழுந்து உனது கடந்த செயல்களை மறந்து உன்னை மன்னிக்கும்படி, எல்லோருமறிய என்னை மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள். உனது வேண்டுகோள்களால் மனமிரங்கியவன் போல் நான் உன்னை மன்னித்து

விடுகிறேன். அப்பால் சில நாட்கள் கழியட்டும். நீ திரும்பிவந்ததா லுண்டான கலவரம் அடங்கிய பிறகு நான் உன்னை உன் பழைய உத்தியோகத்தில் அமர்த்திக் கொள்கிறேன். இதை நீ உறுதியாக நம்பி இப்பொழுது என்னைவிட்டுச் செல்' என்றார்.

"மதிவல்லபன் அதற்குச் சம்மதித்துப் போய்விட்டான். அப்பால் விண்ணெளியான் வித்தியானந்தர் பிரேத மடங்கிய மூட்டையைச் சிந்து நதியில் அடக்கஞ் செய்துவிட்டுத் தம் வீட்டிற்குச் சென்றார். அவர் படுக்கைக்குப் போகும்பொழுது, காலைக் கதிரவனது இளங் கிரணங்கள் கீழ்க்கடல் முகட்டில் தோன்றும் சமய மாய்விட்டது. விண்ணெளியான் உறங்கியிருக்க முடியாது ஒருகால் சிறிது உறங்கியிருந்த போதிலும் அவ் வுறக்கம் அவர் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆறுதலை அளித்திருக்க முடியா தென்பதை நான் சொல்லாமலே தாங்கள் அறிந்துகொள்ளலாம்.

"விண்ணெளியானுக்கும் மதிவல்லபனுக்கும் உள்ள உடன்படிக்கை உரிய காலத்தில் நிறைவேறிற்று. விண்ணெளியான், நண்பர், குடிகள் முதலாயினோர், முன்னம் பிரதான மந்திரி உத்தியோகத்தினின்றும் விலக்கப்பட்ட ஒழுக்கவீனனாகிய மதிவல்லபன், மீண்டும் விண்ணெளியான் தயவைப் பெற்றுள்ளதைக் கேட்டபோது பெரியதோர் ஆச்சரியமும் அவன்மீது மிக்க தோர் அருவருப்பும் கொண்டனர். நான் அவ்விஷயமாக ஒரு வார்த்தையும் பேசவில்லை. உண்மையான அபிப்பிராயத்தை வெளியிட்டால், பொறுமையினுற் கூறுவதாக எங்கே கருதி விடுகிறார்களோ வென்றஞ்சி அமைந்திருந்தேன். சில நாட்களுக்குப் பிறகு கோட்டைத் திறவுகோல்களை அம் மதிவல்லபனிடம் ஒப்பு

விக்கும்படி எனக்கு உத்தரவானது. அப்பொழுதும் நான் சிறிதும் குறை கூறாமல் சாவிகளை அவனிடம் ஒப்புவித்து விட்டேன். ஆனால் விண்ணெளியான் என்னைத் தனியே அழைத்து என்மீது தமக்கு மிகவும் மதிப்புண்டென்றும் அப்பொழுது என்னை உத்தியோகத்தை விட்டு நீக்கியது என்மீது ஏதும் அதிருப்தி கொண்டல்ல, எதிர்பாராது நேர்ந்த சில சம்பவங்களால் அப்படிச் செய்யவேண்டிய அவசியம் நேர்ந்ததென்றும், பிரதான மந்திரி உத்தியோகத்தை இழந்துவிட்டதால் யாதொரு குறைவும் நேரிடாதபடி, மதிவல்லபன் அதிகாரத்துக் குட்படாத வேறோர் உத்தியோகம் தருவதாகவும் கூறினர். நான் அவர் கூறியதற் கொப்பினேன். ஆனால் எனக்குச் சிறிதும் மனச் சந்துஷ்டி இல்லை. என்னைப்பற்றி எனக்குச் சற்றும் துக்கம் உண்டாகவில்லை. மற்றும் என் மனைவருத்தத்திற்குக் காரணம் எனது எஜமானரது நிலைமையே. அவர் மனத்தில் ஏதோ ஓர் அந்தரங்கம் இருந்து கொண்டு அவரைப் பெரிதும் துன்புறுத்துகிறது என்பதை நான் தெளிவாய்க் கண்டேன். ஆனால் அவ்வந்தரங்கத்தின் தன்மை இத்தகையதென்பது எனக்கு அப்பொழுது சற்றும் விளங்கவில்லை.

'ஆயினும், அவர் சிரசிற்கு மேலே தொங்கிக் கொண்டிருந்த கார்மேகம், ஆயிரக் கணக்கானவர்கள் மனங்களைக் கலக்கும் பேராரவாரத்தோடு இடிமுழக்கமிட்டு வெடிக்கும் காலம் சமீபத்தில்தான் இருந்தது.

அதிகாரம் — 76.

பரந்தாமன் சரித்திர முடிவு.

"முன்னம் நான் கூறியதுபோல், மதிவல்லபனைப் பிரதான மந்திரியாக வைத்துக்கொண்டதால் விண்ணெளியானது நண்பர்களும் குடிஜனங்களும் அவன்மீது மிகவும் அருவருப்புற்றார்கள். கோட்டையெங்கும் கலவரம் மிகுதியாயிருந்தது. ஒரு கிராமத்தினர் மதிவல்லபனைத் தங்கள் கிராமத்தில் அடிவைக்க வொட்டாமல் துரத்திவிட்டார்கள். மதிவல்லபன் அதனால் மிகவும் கோபமூண்டு அக் கிராமத்தாரை அடக்கிவரும்படி சில போர்வீரர்களை அனுப்பினன். அவர்களை கிராமத்தார் எதிர்த்தனர். போர்வீரர்கள் மதிவல்லபன் போதனையைக் கேட்டு கிராமவாசிகளுள் கலகத்துக்குக் காரணராயிருந்த பலரை மூன்பின் பாராது கொன்றுவிட்டனர். அதனால், குடிகள் முதலாய எல்லோருக்கும் விண்ணெளியான்மீது மிகவும் கோபமூண்டது. அவன் மாமனாராகிய கேகவண்ணன் அவன் செயல்கள் திருப்திகரமாயில்லை யென்றும் சற்று மூன்யோசனையுடன் நடப்பது அவசியமென்றும் செய்தி சொல்லியனுப்பினர். விண்ணெளியானது வேலையாட்கள் அனைவரும் நிகும்பனைத் தலைவனாகக் கொண்டு ஒன்று திரண்டு தமதெஜமானிடம் சென்று தங்களுக்கு அவரிடம் வேலை செய்ய விருப்பமில்லையென்று தெரிவித்தார்கள். ஆனால் விண்ணெளியான் அவர்களை ஒருவகையாகச் சமாதானப்படுத்தி, அவர்கள் தம்மைவிட்டு நீங்காமல் செய்துகொண்டார்.

"இதற்கிடையில் வித்தியானந்தர் காணப்படாமைக்குக் காரணமாக விண்ணெளியான் ஒரு கதை கற்

பித்துக் கூறினர். அதாவது: ஏதோ ஓர் அவசரகாரிய மாய் அவர் குந்திதேசத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறார் என்பதே. அநேக நாட்கள் கழிந்தபிறகு இன்னும் வித்தியானந்தர் திரும்பி வராமைக்குக் காரணம் ஏதோ என்று ஜனங்கள் ஐயுறுவார்களென்றஞ்சி, அவர் (வித்தியானந்தர்) குந்தி தேசத்துக்குப் போன விடத்தில் இறந்து விட்டதாகச் செய்தி வந்திருக்கிறதென்று வெளியிட்டு மிகவும் துக்கிப்பதுபோல் நடித்தார். வித்தியானந்தர் இறந்து விட்டாரென்ற செய்தியைக் கேட்ட ஜனங்கள் அனைவரும் மிகவும் வருந்தினர்கள். வித்தியானந்தர் அவ்வளவு நற்குண முடையவர். விண்ணெனியான் மனைவி, தன் உறவினர் ஒருவர் இறந்து விட்டதுபோல அத்துணை வருத்தமுற்றுப் புலம்பினாள். அவள் தன் கணவனைச் சற்றும் சந்தேகிக்கவில்லை. சந்தேகிக்க அவளுக்கு அவகாசமுமில்லை. அவள் கவனமெல்லாம் தனக்குப் பிறந்துள்ள பெண் குழவியின்மீது லகித்திருந்தது. அக் குழந்தை தேவாலயத்திற்கு அர்ப்பணம் செய்யப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, வான்மகளிர் வயிற்றுதித்த குழவியைப் போல் அது காண்பார் கருத்தைக் கவரும் பேரழகுற்றுப் பொலிவதைக் கண்டு அதற்குத் தேவகி என்று பெயரிட்டு, வறியவன் கண்ட புதையல் போலவும், குருடன் பெற்ற கண்போலவும், அரும் புலவர்பாடிய பெரும் பனுவல் ஒன்றில் அறிஞர் கண்ட அரும் பொருள் போலவும், குழலும் யாழும் இனியவல்ல வென்று மழலை மிழற்றும் அவ்விளங் குழவியை அன்புடனும் ஆர்வத்துடனும் வளர்த்து வந்தாள்.

"காலங் கடந்தது. மூன்று வருஷங்கள் சென்றன. கோமதி பெற்ற தேவகி உருவிலும் வடிவிலுஞ் சிறந்து,

விண்மீது தவழ்ந்த இளஞ் சந்திரன் வகைதப்பி இம் மண்மீது வந்து வளர்வதுபோல விளங்கினாள். அவள் மென்மழலையும், புன்முறுவலும், பொன்மலர் புரையும் நன்முகமும், கன்மனங் கரைக்க நன்கினிது வல்ல கவின்பெறு மேனியும் கோமதியைப் பேரின்ப சாகரத்தில் ஆழ்த்தின. ஆனால் — அந்தோ! — விண்ணெளியான் அவளைக் கண்டபோதெல்லாம் நெஞ்சம் நடுங்கினார். பேரெழில் வாய்ந்த இப் பெண்மகவு அறிவினும் உருவினும் வளர்ந்து வடிவுடை மங்கைப் பருவமுற்றவுடன், தன் வடிவுக்கேற்ற ஓர் இளங் குமரனைத் தெரிந்தெடுத்து, முறைப்படி விவாகம் செய்துகொண்டு அங்ஙனம் மணந்த காதற் கணவனோடு கலந்திருந்து இல்லற நெறிநடத்தும் செவ்வியைக் கண்டு களிக்க இயலாத வண்ணம் சிறிதும் முன்யோசனையின்றி நாம் இவளைத் தேவாலயத்துக்கு அர்ப்பணம் செய்து விட்டோமே என்று அவர் பெரிதும் மனமுளைந்தார். ஒரோருகால் அவர் சிறிது மனவெழுச்சி கொண்டு, தம் மாமனுரைத் துணைகொண்டு வீரவர்மரை எதிர்த்து அவரையும் அவர் கூட்டத்தாரையும் அழித்து வெண் கலச்சிலையைப் பற்றிய பீதியை அடியோடு ஒழித்துவிடலாமாவென்று சிந்திப்பார். அப்படி அழித்துவிட்டால், தேவகியை தேவாலயத்துக்கு அர்ப்பணம் செய்யவேண்டிய அவசியமில்லை. அதற்கு ஈடாக வேறு ஏதாவதொரு தேவகைங்கரியம் செய்துவிடலாமென்பது அவருடைய உத்தேசம். இக்கருத்தைத் தமது மனைவியிடமும் பன்முறை வெளியிட்டார். ஆனால் கோமதிக்கு அதில் அவ்வளவு திருப்தியில்லை. ஏனெனில், வெண்கலச்சிலைக் கூட்டத்தாரைப் பகைத்துக் கொண்டால், அதனால் நேரிடக்கூடிய இன்னல்கள் பல. ஒருகால் தேவகியை அடியோடு இழக்கும்படி

நேரிட்டாலும் நேரிடும். அதைவிட, தனது சகோதரி கள்போல, தேவகியும் தேவாலயப் பணிவிடை செய்து கொண்டு க்ஷேமமாயிருந்தால் போதும் என்பது அவள் கருத்து. விண்ணெளியானோ, வீரவர்மரை வென்றுவிடலாமென்று மிகவும் தைரியங் கொண்டிருந் தார். ஆனால் அக்காலத்தில், விண்ணெளியான் சிறி தும் எதிர் பாராதவிதமாய், நேர்ந்த ஒரு சம்பவம் மூன்னிருந்த நிலைமையினை முற்றும் மாற்றிவிட்டது.

"சில செம்படவர்கள் ஒருநாள் காலை வழக்கம் போல், சிந்துநதியில் வலைவீசி மீன் பிடித்துக்கொண் டிருந்த பொழுது, அவர்கள், வலையில் மிகவும் கனத்த ஒரு சாக்குப் பை அகப்பட்டது. அதன் உள்ளுறை யைப் பரிசோதித்துப் பார்த்த பொழுது அது ஒரு மனிதப் பிரேதமாகக் காணப்பட்டது. அதன் உடை மிகவும் கைந்து உருமாறி விட்டபோதிலும், ஒரு சன்னி யாசிக்கு உரியது என்பதுமட்டும் நன்றாய் விளங்கிற்று. பிரேதம் அழுகி மிகவும் ஈன ஸ்திதியிலிருந்ததால் அதன் அடையாளம் எளிதிற் காணக்கூடவில்லை. செம்படவர் கள் அதை மிகவும் ஆச்சரியத்தோடு சூழ்ந்து பார்த் துக் கொண்டிருக்கையில், விண்ணெளியான் வேலையாட் களுள் ஒருவன் அவ்வழியே வந்தான். அவன் செம் படவர்களை நெருங்கி அவர்கள் ஒரு பிரேதத்தைச் சூழ் ந்து கொண்டிருப்பதறிந்து தானும் அவர்களிடையே புகுந்து அதை உற்று நோக்கினான். அப்பொழுது அந் தப் பிரேதம் வித்தியானந்தர் பிரேதமே யென்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது. உடனே அவன் அவ் விடம் விட்டுச் சென்று வித்தியானந்தர் பிரேதம் செம் படவர்கள் சிலரால் ஆற்றினின் றெடுக்கப்பட்டுள்ள விஷயத்தை ஊரெங்கும் பிரசித்தப்படுத்திவிட்டான்.

"வித்தியானந்தர் குந்தி தேசத்தில் உயிர் துறந்து விட்டாரென்று செய்தி வந்திருப்பதாகப் பிரசித்தப் படுத்தியவர் விண்ணெளியானே யாகையால், ஊரா ரெல்லோரும் விண்ணெளியானே வித்தியானந்தரை ஏதோ காரணத்தால் கொன்று ஆற்றிலிட்டுவிட்டு அவர் குந்தி தேசத்தில் இறந்துவிட்டதாகப் பொய்ச் செய்தி பிறப்பித்துள்ளார் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இந்த அபவாதமொழி நாடெங்கும் பரவிற்று. வித்தியானந்தர் இறந்துவிட்டதாகச் செய்தி பிறந்த சமயத்திலேயே மதிவல்லபன் இலவந்திகைக் கோட்டையில் தான் முன்னிருந்த உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டான் என்னும் விஷயத்தையும் சிலர் எடுத்துக் காட்டி விண்ணெளியான் மீது ஏற்பட்ட சந்தேகத்தை உறுதிப் படுத்தியது மன்றி, மதிவல்லபனும் இதில் சம்பந்தப் பட்டிருப்பா னென்றனர். கள்ளங்கபடமற்ற காருண்ய சீலராகிய வித்தியானந்தரைக் கொன்ற கொலைபாதக னைச் சும்மா விடக்கூடாது என்று ஊராரெல்லோரும் ஒருங்குதிரண்டு வித்தியானந்தர் பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு கோட்டையை நாடிக் கோபாவேசத்துடன் சென்றனர்.

"சுந்தரரூப பொற்பாவை யொன்று உயிர் பெற்று உலாவுவது போல தேவகி தோட்டத்தில் இங்கு மங்கும் ஓடி விளையாட்டயர்வதை உவப்புடன் உற்று நோக்கி உரையளவிறந்த கரைகடந்த சந்தோஷத்துடன், விண்ணெளியானும் அவர் மனைவி கோமதியும் — இன்னும் சிறிது நேரத்திற் கெல்லாம் தமக்கு நேரப்போகும் பெரியதொரு மனக்கலக்கத்தைச் சிறிதும் உணர்ந்திலராய் — தமது உய்யான வனத்தில் உலவிக்கொண்டிருந்தனர். அப்பொழுது நான் அவர்களுக்கு வரும்

இடையூற்றை அறிந்து விரைந்து சென்று அவர்களை யணுகி, யாதோ காரணமாய் அவர்களது குடிஜனங் கள் அனைவரும் அவர்களை எதிர்க்கும் கருத்தோடு திரண்டு வருகிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரி வித்தேன். தன் கணவனுக்கு ஏதும் ஆபத்து நேரும் என்ற எண்ணம் சிறிது மில்லாதவளாதலால் கோமதி மிகவும் துணிவுடன் தானும் தன் கணவனுமாய்த் தம்மை எதிர்த்துவரும் குடி ஜனங்களை எதிர்கொண்டு சென்று அவர்கள் குறை முறைகளைக்கேட்டு அவற்றிற் கேற்றவாறு செய்யலாமென்று கூறித் தன் ஆருயிர்க் குமரி தேவகியை அருகழைத்து அவளொரு புறமும் விண்ணெளியான் மற்றொரு புறமும் வர உய்யான வனத்தைவிட்டு நீங்கி அரண்மனை வாயிலை நோக்கி வந் தாள். நானும் வேறு சில வேலைக்காரர்களும் அவர்கள் மூவரையும் பின் தொடர்ந்து சென்றோம்.

"ஜனங்கள், கோமதியையும் அவளருகே நின்ற பச் சிளங் குழவியையும் காணவும் சிறிது அமைதியுற்று நின்றனர். அவ் வமைதி இரண்டொரு நிமிஷங்களுக் கெல்லாம் கலைந்து போயிற்று. வித்தியானந்தரின் பிரே தம் விண்ணெளியானுக் கெதிரே கிடத்தப்பட்டது. அதைக் காணவும் கோமதி மிகவும் திகிலுற்று ஓவெனக் கூச்சலிட்டாள். குழந்தை தேவகி பயத்தினால் தன் தாயை இறுகக் கட்டிக்கொண்டாள். விண்ணெளி யானே இரண்டு வினாடி காலம் ஒன்றுந் தோன்றாது ஸ்தம்பித்து நின்று பிறகு 'ஆ! இது வித்தியானந்தர் பிரேத மன்றோ!' என்றார். கோமதி மனதில் திடீ ரென்று ஒரு கொடிய சந்தேகம் உண்டாயிற்று. 'ஆ, தெய்வமே! நீ தான் எமக்குத் துணை' என்று ஆகா யத்தை நோக்கிக் கூறிவிட்டுத் தன் கணவன் முகத்தை

ஏறிட்டுப் பார்த்து, 'காதலா, — அவ்விதம் இராது — இருக்க முடியாது — தாங்கள் செய்திருக்க மாட்டீர்கள் — நமது குலகுருவாயிற்றே! — அவ்விதம் இராது — இருக்கமுடியாது — இருக்குமென்று நான் நினைக்கவில்லை' என்றாள்.

"அச்சமயம் நான் ஜனங்களுக் கெதிரே ஓடி அவர்களைக் கையமர்த்தி 'நண்பர்களே! சற்று நிதானியுங்கள். உங்கள் எண்ணம் எதுவாயினும், தீரக் கேட்டறிவதற்கு முன் ஒரு முடிவுக்கு வாருங்கள். இவ்வொன்றுதான் நான் தங்களைக் கேட்டுக் கொள்வது' என்று கூறினேன்.

"அப்பொழுது ஜனங்கள் எல்லோரும் ஒரே குரலில் 'வித்தியானந்தரைக் கொலை செய்தவர்கள் யாராய் இருந்தபோதிலும் சரியே; நாங்கள் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டோம். விண்ணெளியானும், மதிவல்லபனும் எங்களுக்குச் சமாதானம் சொல்லியாக வேண்டும்' என்றனர்.

"நான் விண்ணெளியானை நோக்கி, அரசே! அவர்கள் சந்தேகத்தைச் சுடுதியில் ஒழியும். இக் கொலையில் தங்களுக்குச் சம்பந்தமில்லை யென்பதை வெளியிட்டுக் கூறும்' என்றேன்.

"'எல்லாமறிந்த தெய்வம் அறிய எனக்கு இக் கொலையில் சம்பந்தமில்லை' என்று கூறிவிட்டு விண்ணெளியான் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்துவிட்ட தம் மனைவியைக் கையாலணைத் தெடுத்தார்.

"அச்சமயம் மதிவல்லபன் ஆயுதசன்னத்தனாய் சில போர்வீரர்களோடு கோட்டைக்குள்ளிருந்து வெளிவந்தான். மிகப் பயங்கரமான ஒரு குழப்பம் உண்டா

யிற்று. மதிவல்லபன் போர் வீரர்களும் குடிஜனங்களும் போரியிற்றத் தொடங்கி விட்டார்கள். நான் மிகுந்த பிரயாசையுடன் கோமதியையும், அவள் குமாரியையும் அவ்விடத்தைவிட் டகற்றி அப்பாற்கொண்டு சென்றேன். தோட்டத்தை யடையவும் கோமதி தன் கணவன் எங்கே யென்று கேட்டாள். அந்தக் கூட்டத்தில் அவர் எங்குள்ளாரென்று கண்டு பிடிக்கக் கூடவில்லை. கோமதி துயர மிகுதியால், தான் சென்று தன் கணவனைத் தேடி அழைத்து வருவதாகவும், அப்படி அவரை அழைத்துவரக் கூடாமற்போனால் அந்த யுத்தத்திலேயே தானும் பட்டிறப்பதாகவும் கூறினாள். நான், ஒன்றும் அறியாது அச்சத்தால் அழுது கொண்டிருந்த குழந்தை தேவகியை அவள் கையில் கொடுத்தேன். அவள் அதைக் கையில் வாங்கி அதன் முகத்தைப் பன்முறை முத்தமிட்டுப் பிறகு என்னை நோக்கி, 'பரந்தாமரே! உமது கருத்து இன்னதென்பதை நான் அறிந்து கொண்டேன். யாருக்கு எங்கே என்ன நேர்ந்தபோதிலும் இந்தப் பசுங்குழவியின் நிமித்தம் நான் உயிர் தரித்திருக்க வேண்டுவது அவசியம் என்பது உமது கருத்து. ஆனால் சரி — உண்மை அன்புடைய நண்பரே! — நீர் சென்று கலகத்தின் முடிவு இன்னதென்று அறிந்து வாரும். அது வரையில் நான் உம்மை எதிர்பார்த்துக் கொண்டு இவ்விடத்திலேயே இருப்பேன்' என்றாள்.

"நான் அவள் கட்டளைப்படியே யுத்தம் நடக்கும் இடத்தை நாடிச் சென்றேன். சிறிது தூரம் சென்றதும் விண்ணெளியான், நிகும்பன் இருவரும் இரு குதிரைகளின்மீது ஆரோகணித்து என்னை நோக்கி வரக் கண்டேன். அவர்களும் என்னைக் காணவும் குதி

மையை நிறுத்தினார்கள். விண்ணெளியான் என்னை ஆவலோடு நோக்கிய குறிப்பறிந்து அவர் மனைவியும் மகளும் க்ஷேமமாய் இன்ன விடத்திலிருக்கின்றார்க ளென்பதை நான் அவருக்குத் தெரிவித்தேன்.

"உடனே அவர் 'இதோ நான் அவ்விடம் வருகின் றேன்' என்று எனக்குக் கூறிவிட்டு நிகும்பனை நோக்கி, 'நிகும்பா, வேட்டை நாய்கள்போல் என்னைச் சூழ்ந்து கொண்ட அவர்களிடமிருந்து என்னைத் தப்புவித்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகி றேன்!' என்றார்.

"அதற்குப் பிரதியுத்தரமாக நிகும்பன் அவரை நோக்கி, 'எஜமானே! எனக்குக் கைம்மாறு யாதொன் றும் வேண்டுவதில்லை. கோபாவேசங்கொண்ட குடி ஜனங்கள் இடையே தாங்கள் அகப்பட்டுள்ளதைக் கண் டேன். காணவும், என் கடமைப்படி நான் தங்களைக் காப்பாற்ற முன்வந்தேன். அதனால் எனது கண்களில் ஒன்றை நான் இழக்கும்படி நேரிட்டபோதிலும் தெய் வானுக்கிரகத்தால் தங்களை ஆபத்திற் குட்படாமற் கொண்டுவந்து பத்திரமான இடத்திற் சேர்த்து விட்ட தைப்பற்றி மிகவும் திருப்தியுறுகிறேன். இதுகாறும் தாங்கள் என்னைக் காப்பாற்றிவந்த நன்றியை நான் எந்காளும் மறவேன். ஆனால், பரிசுத்த ஹிருதயரான ஒரு பெரியவரைக் கொன்று தீவினையைத் தேடிக் கொண்ட ஒருவரது ஊழியனாக இருப்பதற்கு நான் சற்று மொப்பேன். ஆதலால், சென்று வருகிறேன், வந்தனம்!' என்று சொல்லிப் போய்விட்டான்.

"நிகும்பன் முடிவிற் கூறியவார்த்தைகளைக் கேட்டு விண்ணெளியான் திடுக்கிட்டு நின்றுவிட்டார். அவ

ருக்கு ஒன்றுந் தோன்றவில்லை. இரண்டொரு நிமிஷ நேரம் அங்கிலியில் நின்று, பிறகு ஒருவாறு தெளிவுற்று நிகும்பனுக்குச் சமாதானம் சொல்ல நினைத்து வாயெடுப்பதற்குள் அவன் கண்ணுக்கு மறைந்துவிட்டான். அப்பால் விண்ணெளியான் என்னை நோக்கி 'நண்பா, நிகும்பன் என்னைக் குற்றவாளியாக நினைத்துச் செல்கிறான், மற்றவர்களைப் போலவே அவனும் விஷயங்களின் வெளித்தோற்றத்தைக் கொண்டு அவ்விதம் நினைத்துவிட்டான். அருங்குண சீலரான வித்தியானந்தரைக் கொன்றவன் நானல்லன் என்பதை கடவுள் அறிவார். சாவகாசம் நேர்ந்தபோது, எனது துயரங்களையெல்லாம் உன்னிடம் வெளியிட்டுக் கூறுவேன். இப்பொழுது நாம் எனது மாமனார் மாளிகைக்குச் செல்ல வேண்டும். இனி இங்கிருப்பது நேரிதல்ல' என்றார்.

"பிறகு நான் அவரை அழைத்துக்கொண்டு போய் அவர் மனைவியும் மகளும் இருந்தவிடத்தில் விட்டேன். அவ்விடத்திலேயே நாங்கள் மேல் செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம். அதன்படி என் எஜமானர் தமது குதிரைமீதே தம் மனைவியையும் குழந்தை தேவகியையும் ஏற்றிக்கொண்டு மேகவண்ணன் வாசஸ்தலத்தினை நாடிச் சென்றார். நான் அவர்களைத் தொடர்ந்து நடந்து சென்றேன். ஆனால் மேகவண்ணன் வாசஸ்தலமாகிய ஜாம்புவன் கோட்டைக்குச் செல்வதற்கு மணிபல்லவர் நிலத்தின் ஒரு பகுதி வழியாகச் செல்ல வேண்டியிருந்தது.

"காலத்தின் கூத்தை என்னென்று சொல்வது. விண்ணெளியான், மணிபல்லவர் நிலத்தின் வழியாகத் தம் மனைவியுடனும் மகளுடனும் சென்றுகொண்டிருந்த

பொழுது அவரெதிரே மணிபல்லவர் தம் மெய்காப்பாளர் சிலரோடு குதிரைசவாரி செய்துகொண்டு வந்தார். அவர், விண்ணெளியாஞைக் காணவும், நெடு நாளாய்த் தாம் அவர் மீது கொண்டிருந்த பகைமை காரணமாக அவரை எதிர்த்து, — அவர் மனைவியும் மகளும் கூக்குரலிட்டழும் பரிதாபநிலைமையைக் கண்டும் சற்றும் பிரங்காமல் — அவரைச் சிறைசெய்து தம் மாளிகைக்குக் கொண்டு போம்படி மெய்காப்பாளருக்கு உத்தரவு செய்ய, அவர்கள் விண்ணெளியாஞைப் பிணித்துக்கொண்டுபோய் விட்டார்கள்.

"'பட்டகாலிலே படும்கெட்டகுடியே கெடும்' என்பதுபோல துன்பத்தின்மேல் துன்பம் அடிக்கடிக்காய் நேர்ந்ததால் மனமுடைந்த கோமதி, தேவகியுடன் தன் தந்தை வீடு சென்று சேர்ந்தாள். அவளை அன்புடன் வரவேற்ற அவள் தந்தை அவள் மூலமாகத் தம் மருமகனுக்கு நேர்ந்த இடுக்கண்கள் அனைத்தையும் அறிந்து கொண்டார். ஆனால், விதியானந்தர் கொலையைப் பற்றிக் கோமதிக்கு உண்மை யின்னதெனத் தெரியாதாகையால் அவள் அதைப்பற்றி ஒன்றும் சொல்லக் கூடவில்லை. தன் கணவர் அவ் விஷயத்தில் நிரபராதியென்பது தனது பூரணமான நம்பிக்கை என்பதைமட்டும் வற்புறுத்திக் கூறினாள். என் எஜமானியும் அவள் மகளும் ஜாம்புவன் கோட்டையை அடைந்து சில மணி நேரமான பிறகு நானும் அவ்விடம் சென்று சேர்ந்தேன். மணிபல்லவர் என் எஜமானரைச் சிறைசெய்து விட்டாரென்ற செய்தியைக் கேட்டபோது என் மதி கலங்கிற்று. ஆனால், மணிபல்லவரைக் கண்டு பேசி விண்ணெளியாஞைச் சிறைமீட்டு வரும்படி சில தூதர்கள் நான் வருவதற்கு முன்னமேயே அனுப்பப்பட்டிருக்

கிறார்களென்று தெரிந்ததால், அவர்கள் அனேகமாகத் தாம் குறித்துச் சென்ற காரியத்தை முற்றுவித்துக் கொண்டு வருவார்களென்றெண்ணி நான் ஒருவாறு மனமமைந்திருந்தேன். அத் தூதர்கள் திரும்பி வந்த போது என் நம்பிக்கை வீணானதறிந்து வருந்தினேன். ஏனெனில், மணிபல்லவர், தாம் விண்ணெழிலியானைச் சிறை செய்தது தக்க காரணம் பற்றியே எனவும், அக் காரணமாவது அவர் ஒரு சந்நியாசியைக் கொன்றதாகக் குற்றஞ் சாட்டப் பட்டிருப்பதுவே யெனவும், ஆதலால் பாஞ்சால தேசத்தரசர் இவ் விஷயமாகச்செய்யும் ஆக்ஞை இன்னதென்று தெரியும் வரையில் அவர் சிறையிலிருக்க வேண்டியதே யெனவும் கண்டிப்பாய்க் கூறி விட்டனராம்.

"இச்செய்தியால் என் எஜமானிக்கு இருந்த சிறிது தைரியமும் போய்விட்டது. அவள், தன் தந்தையோடு மற்றோர் ஆலோசனை செய்தாள். அப்பொழுது நானும் — அவர்கள் விருப்பப்படி — உடனிருந்தேன். இவ் வாலோசனையால் நான் மணிபல்லவரிடம் சென்று விண்ணெழிலியானை அவர் மனைவி கண்டு பேசுவதற்கு வது உத்தரவு பெற்று வரவேண்டுமென்று தீர்மானமாயிற்று. அவ்விதமே நான் மணிபல்லவரிடம் சென்று மிகவும் கெஞ்சிக் கேட்டேன். அவர் அவ்வேண்டுகோளுக்கு இசையவில்லை. ஆயினும் நான் விண்ணெழிலியாளோடு பேசுவதற்கு மட்டும் உத்தரவு கொடுத்தார். அதன்மேல் நான் சிறையில் இருந்த விண்ணெழிலியானைச் சென்று கண்டேன். அவர் தமக்கு நேர்ந்த துன்பங்களுக்கெல்லாம் காரணம் இன்னதெனத் தெளிவாய் எனக்கு அறிவிக்க விரும்பி அதுகாறும் நான் அறியாதிருந்த தமது அந்தரங்கச் சரித்திரத்தை எனக்கு முற்

மும் தெரிவித்தார். இப்பொழுது நான் கூறிவரும் வரலாறுகளெல்லாம் அப்பொழுதுதான் முதல் முதல் எனக்குத் தெரியும். அதற்கு முன் விளங்காதிருந்த விஷயங்கள் பலவும் அப்பொழுது எனக்கு விளங்கின. எல்லா விஷயங்களையும் எனக்கு அறிவித்த பிறகு என் எஜமானர், தாம் உண்மையை என்னிடம் கூறிய போதிலும் அதை உலகறிய வெளியிடுவது அச்சமயம் உசித மல்லவென வற்புறுத்தி எவ்வகையிலாவது பாஞ்சால தேசத்தரசரிடமிருந்து தம்மை விடுவிக்கும்படி ஒரு கட்டளைப்பத்திரம் மட்டும் பெற்று வந்துவிட்டால் அதனால் தாம் விடுதலை பெறக் கூடுமென்றும், அப்படி விடுதலை பெற்ற பிறகு, வீரவர்மரையும், மணிபல்லவரையும் தொலைத்துத் துஷ்ட நிக்கிரகஞ் செய்வதற்குத் தக்க ஏற்பாடு செய்யலாமென்றும் தெரிவித்தார். அவர் கருத்துப்படியே செய்வதாக வாக்களித்து நான் அவரிடம் விடைபெற்றுத் திரும்பி மேகவண்ணர் மாளிகைக்கு வந்து மேகவண்ணரிடமும் அவர் குமாரியிடமும் நான் மணிபல்லவக் கோட்டைக்குச் சென்று விண்ணெளியாளைக் கண்டு உரையாடியறிந்த வரலாறுகளையும் அவர் நோக்கத்தையும் தெரிவித்தேன்.

"அப்பால், மேகவண்ணர் தாமே நேரில் பாஞ்சால தேசத்துக்குச் சென்று அரசரைக் காண்பதாக நிச்சயித்து அன்றைய தினமே பயணம் புறப்பட்டு விட்டார். பாஞ்சால தேசத்தரசர் மேகவண்ணர் குறையைக் கேட்டு அதைத் தீர விசாரிக்கும்படி ஆலோசனை சபையாருக்கு ஆக்ஞாபித்தார். விஷயம் விசாரிக்கப் பெற்று முடிவுக்கு வர ஒரு வருஷகால மாயிற்று. முடிவில் விண்ணெளியாளைச் சிறையினின்று விடுவிக்கும்படி

அரசர் மணிபல்லவருக்கு ஒரு நிருபம் எழுதி அதில் தாமே கையெழுத்திட்டு மேகவண்ணரிடம் கொடுத் தனுப்பி விட்டார்.

"இதற்கிடையில் மணிபல்லவர், இலவந்திகைக் கோட்டையையும் தாமே கைப்பற்றிக் கொண்டார். விண்ணெளியான் குடிகளும் அவரைத் தமது தலைவராக ஏற்றுக் கொண்டார்கள். இந்நிலையில், மேகவண்ணர் மணிபல்லவத்திற்கு வந்து மணிபல்லவரிடம் தாம் கொண்டுவந்த அரசர் நிருபத்தைக் கொடுத்தார். அரசர் கட்டளையை நிராகரிக்க அஞ்சி, மணிபல்லவர், விண்ணெளியானைச் சிறையினின்றும் விடுவித்து விட்டா ராயினும், அரசர் கடிதத்தில் விண்ணெளியானை சிறை யினின்று விடுவிக்கும்படி மட்டும் குறித்துள்ளதை யன்றி இலவந்திகைக் கோட்டையை அவரிடம் ஒப்பு வித்து விடும்படி யாதும் குறிக்கப்பட வில்லை யென்ற ஒரு போலிக் காரணத்தைக் கூறி, விண்ணெளியானுக் குரிய கோட்டையை அவரிடம் ஒப்புவிக்க மறுத்து விட்டார்.

"இதனால், மேகவண்ணனுக்கும் விண்ணெளியானுக் கும் அடங்காத கோபம் மூண்டது. இருவருமாய்க் கூடி யோசித்து, இனி யொரு முறை பாஞ்சாலதேசம் சென்று இக் குறையை அரசரிடம் தெரிவித்துப் பரிகா ரம் பெற்று வருவதென்றால் எளிதல்லவாதலின், வரு வது வரட்டும், இந்த மணிபல்லவனை எதிர்த்து நமது கோட்டையைக் கைப்பற்றிக் கொள்வோம்; ஏலாவிட் டால் போரில் மாய்வோம் என்று தீர்மானித்து அதி விரைவில் ஒரு படை சேர்த்துத் திரட்டிக்கொண்டு மணிபல்லவரை எதிர்த்தார்கள். பலநாள் போர் நடந்தது. முடிவில் மணிபல்லவர் பலங்குறைந்து

ஒடுங்கிவிட்டார். விண்ணெளியான் தமது கோட்டைக்குள் பிரவேசித்தார். ஆனல் அவரது பழைய குடிகள் அவரைக் கோட்டைக்குள் பிரவேசிக்க வொட்டாமல் தடுத்தார்கள். விண்ணெளியான் கோபாவேசங் கொண்டு அவர்களைத் தம் போர்வீரர்களால் சின்னபின்னமாகக் கொலைசெய்யத் தொடங்கினர். குடிகள் ஏதும் செய்யத் தோன்றுதவர்களாய்க் கோட்டையில் நெருப்பிட்டுவிட்டார்கள். கோட்டை தீப்பற்றி எரிய ஆரம்பித்துவிட்டது. இச்சமயத்தில் முன்னம் தோற் றுஒடுங்கிய மணிபல்லவர் திடீரென்று அங்குத் தோன்றி விண்ணெளியானை எதிர்த்தார். விண்ணெளியான் படைவீரர் மிகவும் களைப்புற்றிருந்தபடியால் மணிபல்லவர் அவர்களை எளிதில் தோற்கடித்து விட்டார். விண்ணெளியான் மனம் உடைந்து தம் மாமனர் இருப்பிடத்திற்கு வந்துவிட்டார். அப்பொழுது அவர் நிலைமை படுக்கையிற் கிடக்கும்படியா யிருந்தது. ஐந்தாறு மணி நேரத்திற்கெல்லாம் அவர் உயிர் துறந்தார்.

"அதன்பின் அவர் மனைவிக்கும் மகளுக்கும் நேர்ந்த துன்பங்கள் பல. அத்துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அடுக்கடுக்காய் வந்த விரைவும், மிகுதியும் உள்ளத்தைக் கரைத்து உணர்வை யுருக்கும் வன்மை பெரிதும் வாய்ந்த ஒரு புனைகதைக்கு ஏற்றவாய்க் காணப்படுமேயன்றி, உண்மையில் நிகழ்ந்தவற்றை ஒளியாமற் கூறும் சரித வரலாற்றிற்கு ஏற்றனவாகக் காணப்படமாட்டா. ஏனெனில், விண்ணெளியான் உடலம் அடக்கஞ் செய்யப்பட்ட வுடனேயே — கோமதியும் தேவகியும் முறையே கணவனையும் தந்தையையும் இழந்தவுடனேயே — மணிபல்லவர் தமது சேனையுடன் ஜாம்புவன் கோட்டைக்கு வந்து, தம் மருமகனுக்கு உதவி

யாயிருந்தமைபற்றி மேகவண்ணனை எதிர்த்தார். மேக வண்ணன் தம்மாற் கூடியவரையில் தைரியத்துடன் போரியற்றினானேனும், எதிரியின் படைவலி மிகுந்திருந் தபடியால் தாம் யுத்த பூமியிலேயே பகைவனால் கொல் லப்பட்டார். மணிபல்லவர் சேனைகள், மேகவண் ணன் இறந்ததும் தமது வெற்றியால் மதிமயங்கி கோட் டைக்குட் புகுந்து செய்த கொடுஞ் செயல்கள் இனைய வென்று நாவாற் கூற முடியாது. மிருகத்தன்மை கொண்டு அவர்கள் செய்யத் தகாத அக்கிரமங்களெல் லாம் செய்து விட்டு மேகவண்ணன் மாளிகையில் தீவை த்து அதை நெருப்புக்கிரையாக்கி விட்டார்கள். இவை போதா வென்று அவர்கள், கோமதியின் சகோதரிகள் வசித்து வந்த கன்னியாமாடத்தையும் நெருப்பிட்டுக் கொளுத்தி விட்டார்கள். மணிபல்லவர் கோமதியை யும் அவள்மகள் தேவகியை மட்டும் தம் சேனைகள் கையிலகப்படாமற் காப்பாற்றித் தமது மாளிகைக்குக் கொண்டுபோய்ப் பத்திரப்படுத்திவிட்டார். அப்படி அவர் செய்தது அவர்கள்மேல் அனுதாபங் கொண் டல்ல. வேறெதனாலோவெனில் தமது தீய எண்ணத் தினாலேயே. கோமதியின் சிறந்த அழகு அவர் மனத் தைக் கவர்ந்தது. ஆதலால் அவளைத் தம் மாளிகைக் குக் கொண்டுபோய் விட்டால் எவ்விதத்திலாவது அவள் மனத்தை மாற்றித் தம் ஆசைநாயகி யாக்கிக் கொள்ள லாமென்று கருதினார்.

"நான் அவர் காலில் விழுந்து என் எஜமானியோடு என்னையும் அழைத்துப்போக வேண்டுமென்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். என் வேண்டுகோ ளுக்கு அவர் சற்றும் இரங்கவுமில்லை, இணங்கவுமில்லை. "நீ உயிருடன் தப்பித்ததே பெரியதோர் அதிர்ஷ்டம்

என்று நினைத்துக்கொள்' என்று கூறி, என்னைப் பல வாறு வைது துரத்திவிட்டார். இங்ஙனம் இந்தப் பரந்த உலகில் நிர்க்கதியாய் விடப்பட்ட நான் இறை வன் திருவுளம் இதுபோலும் என்று மனம் அமைந்து பற்றற்ற துறவியைப் போல இலவந்திகைக் கோட்டை யைநாடிச் சென்றேன். ஆ! ஒரு காலத்து மிகச் சிறப் புடன் விளங்கிய அக் கோட்டை இப்போது உயிரியக்க மற்றதாய்ப் பாழடைந்து தோன்றியது. அதைக் காண வும் எனக்கு ஆற்றுத்துயரம் பெருகியது. அவ் விடத்தி லேயே கிடந்த ஒரு கல்லின்மீது உட்கார்ந்து உள்ளடங் காத் துயரத்தை வெளிக்கொட்டுவதுபோல் கண்ணீர் பெருக்கினேன். அன்று தொடங்கிப் பதினொரு வரு ஷங்களுக்கு அதிகமாய்ச் சென்றுவிட்டன. ஆயினும் இன்று நினைத்தாலும் அத்துயரம் அதே விதமாகவே என் மனத்தில் நிலையூன்றி யிருக்கிறது. அது முதல் நான் பாழடைந்த இக் கோட்டையையே எனக்கு வாசஸ்தலமாகக் கொண்டுள்ளேன்.

"இவ் விஷயங்கள் நிகழ்ந்த ஒரு வருஷத்திற்கெல் லாம், வீரவர்மருக்கும் மணிபல்லவருக்கும் ஏதோ காரணமாய்ப் பகைமூண்டு வீரவர்மர் மணிபல்லவரை எதிர்த்தார். மணிபல்லவர் அதில் தோற்று உயிர் துறந் தார். அவர் சிப்பந்திகள் வீரவர்மர் வசப்படுவதற்குப் பின்வாங்கி மாளிகையில் தீவைத்துவிட்டுத் தாமும் அத் தீக்கிரையாகி மடிந்தார்கள். இதோடு நான் கூறிவந்த சரித்திரம் முற்றுப் பெறுகிறது.

"அது முதல் எனது எஜமானி கோமதியும் அவள் மகள் தேவகியும் எக்கதியாயினரென்பது சற்றும் தெரிய வில்லை. ஒருகால் — அந்தோ! — அவர்களிருவரும்

கூட தீக்கிரையாகி மடிந்திருப்பார்களென்று நினைக்க இடமுண்டாகிறது. ஆனால் கோமதி சிறைப்பட்ட நாள் தொடங்கி மணிபல்லவர் அவள் கூட்டுறவைப் பெறப் பெரிதும் முயன்றாராயினும் அவள் அதற்குச் சிறிதும் இடங்கொடுக்கவில்லை என்பது மட்டும் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.''

அதிகாரம் — 77.

மனக்கலக்கமும் ஐயுறவும்

பரந்தாமன் தனது சரித்திரத்தைக் கூறத் தொடங்கி சிறிது தூரம் சென்றதுமே, அவன் கூறும் சரித்திரமும், குந்தி தேசத்தில் பூதகி தன்னிடம் கூறிய சரித்திரமும் தம்மிற் பெரிதும் ஒற்றுமையுடையனவா யிருப்பதை சீவகன் கவனித்தான். பரந்தாமன் சரித்திரம் முடிந்த பிறகு அதற்கும் பூதகியின் சரித்திரத்திற்கும் உள்ள ஒற்றுமை மிகவும் தெளிவாயிருக்கக் கண்டான். பரந்தாமன் கூறிய உண்மைச் சரித்திரத்தையே, பூதகி சிறிது மாற்றித் தெய்வீக சம்பந்தமுடையதாக்கிக் கூறியிருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றியது. மேலும், பூதகி தனது அந்தரங்கக் கருத்து ஏதோ ஒன்றைச் சாதிக்க வேண்டி, உண்மைச் சரித்திரத்தைப் பெயர்களளவிற் சிறிது மாற்றியுரைத்துத் தன்னை ஏமாற்றியிருக்கிறாள் என்றும் அவன் கருதினான்.

வெண்கலச்சிலைக் கூட்டத்தாரின் தலைவராகிய வீரவர்மரையமன் என்றும் இன்னும் சில முக்கியமான பெயர்களை வேறு வேறு பெயர்களாகவும் மாற்றி

அவள் சரித்திரத்தைக் கூறியுள்ளாளென்பது சீவகனுக்கு நன்றாய் விளங்கியபோதிலும் சில விஷயங்கள் சந்தேகத்திற் கிடமாயிருந்தன. அவையாவன : பூதகி தான் கூறிய சரித்திரத்தில் நிகும்பனைப்பற்றி யாதொன்றும் கூறவேயில்லை ; காணுமற்போன மேகவண்ணன் குமாரனைப்பற்றி ஏதொன்றும் உரைக்கவில்லை. இவையொருபுறமிருக்க பரந்தாமன் சரித்திரத்தில் இரட்டைப் பிள்ளைகள் பிறந்த விஷயம் கூறப்படவேயில்லை— பூதகி அல்லது பூதகி போன்ற ஒரு பெண்ணைப்பற்றியும் யாதொன்றும் கூறப்படவில்லை.

ஆயின் பூதகி யார் ? — விண்ணெளியான் குடும்பத்தில் அவள் சம்பந்த முடையவளா ? — உடையவளாயின் என்ன வகையான சம்பந்த முடையவள் ? தேவகி, சரித்திரத்தில் சம்பந்த முடையவளே. அதில் யாதொரு சந்தேகமுமில்லை. ஏனெனில், சீவகன் அவளைப் பார்த்திருக்கிறான், அவளை அறிந்திருக்கிறான், அவளோடு உரையாடியிருக்கிறான், அவள் காதலுக்கு உறைவிடமாயிருக்கிறான், — அவள் செய்த கொடுஞ் செயல்களைக் கண்டு மனம் நடுங்கியுமிருக்கிறான். ஆனால் மற்றவளைப்பற்றி அவன் மனத்தில் சந்தேகம் மாறாது உதித்துக்கொண்டே யிருந்தது. அவள் யார் ? — பூதகி என்னும் அவள் யார் ?

அவள் தேவகியின் சகோதரியாயிருந்தால் கோமதிக்கு அவள் கணவன் இறந்த பிறகு நெறிதவறிப் பிறந்தவளாயிருக்கவேண்டும், அல்லது விண்ணெளியான் இறந்தபோது கோமதி கர்ப்பவதியா யிருந்திருக்கவேண்டும். ஆனால் பரந்தாமன் அவ்விதமாக ஏதொன்றுங் கூறவில்லை, மேலும் கோமதி சிறைப்பட்டபொழுது தேவகிக்கு ஆறு வயதாய்விட்டது. அதன்பிறகு

கோமதிக்கு ஒரு பெண் பிறந்திருந்தால் அவளுக்கு இப்பொழுது பதினொன்று வயதுதான் ஆகும். ஆதலால் அந்தப் பெண் இந்தப் பூதகியாய் இருக்கமுடியாது.

தேவகிக்கும் பூதகிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை ; இருவரும் சகோதரிகளல்லர் என்று எண்ணுவதற்கும் இடமில்லை. ஏனெனில், அவர்கள் இருவரும் — நிறத்திலும் சாயலிலும் சிறிது வேறுபட்டிருந்தபோதிலும் மற்ற விஷயங்களில் — அனேகமாய் ஒத்திருக்கிறார்கள். அவர்கள் உருவமைதி, அழகு, குரல், நடை முதலியன ஒரே வகையாயுள்ளன. ஆதலால் — மறுபடியும் மறுபடியும் அதே ஐயந்தான் உதிக்கிறது — பூதகி என்னும் இவள் யார் ?

இவ்வையம் ஒருபுறமாக, சீவகன் மனத்தில் மற்றோர் ஐயம் உதித்தது. அதாவது, பூதகி சரித்திரத்தில் அவள் கூறிய தெய்விக சம்பந்தம் புனைந்துரையென்று ஒதுக்கப்படவே, யமன் என்னும் தெய்வமும் அவள் கதையினின்று நீக்கப்படவேண்டியதே. அப்படி நீக்கிவிட்டால் முக வசமணிந்து கருங்குதிரை யேறிவந்து வெளியிடையில் நள்ளிருளில் தன்னோடு எதிர்த்தவன் யாவன் ? இந்த ஐயத்தைத் தீர்ப்பது மிகவும் கடினமாயிருந்தது. ஆயினும் சீவகன் தன் மனத்திற்றோன்றும் சந்தேகங்களைப் பரந்தாமனுக்குப் புலப்படுத்த விருப்பமின்றி, அவைகளைச் சாவகாசமாய் யோசித்துக் கொள்ளலாமென்று தீர்மானித்து பரந்தாமனை நோக்கி, "ஐயா, நீர் கூறிவந்த சரித்திரம் என் மனத்தை உருக்கிவிட்டது. அது ஒருபுறமிருக்க, உமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் ஒரு செய்தியை நான் அறிவிக்கிறேன். அதாவது, நீர் கூறிய தேவகி இன்னும் உயிரோடிருக்கிறாள் என்பதே" என்றான்.

"தேவகி உயிரோடு இருக்கிறாளா!" என்று ஆச்சரிய மேலீட்டாற் கூவி, "ஆ, ஆனல் அவள் எங்கே? நான் விரைவில் அவளைக் கண்டு அவளை ஆர்வத்துடன் தழுவி, நான் இறப்பதற்குமுன் ஒரு முறையாகிலும் அவளை ஆவலடங்கப் பார்த்துவிட விரும்புகிறேன்" என்றான் பரந்தாமன்.

"நண்பரே! உமது அன்பின் திறத்தை நான் நன்றாய் அறிவேன். ஆயினும் உம்மை அவளிருக்குமிடத்திற்கு அழைத்துப்போக அசக்தனாயிருக்கிறேன். அவளை அனேகமுறை பார்த்திருக்கிறேனேயொழிய, இப்பொழுது அவள் எங்கிருக்கிறாள், அவள் உறைவிடம் எதுவென்று எனக்குத் தெரியாது" என்றான் சிவகன்.

இதைக் கேட்ட பரந்தாமன் சிறிது அமைதியுற்று "அவள் இப்பொழுது அதிரூப சுந்தர மங்கையாயிருக்கவேண்டுமே? அவள் சுகமாயிருக்கிறாளா?" என்று விஞவினன்.

"ஆம், அவள் மிகவும் அழகுடையவளாகவே விளங்குகிறாள்" என்று கூறிவிட்டு "மற்ற விஷயங்களைப் பற்றி நாம் நாளையதினம் சாவகாசமாய்ப் பேசிக்கொள்வோம். இப்பொழுது உம்மிடம் இரண்டொரு விஷயங்களைப் பற்றி மட்டும் கேட்க விரும்புகிறேன். முதலாவது, நீர் கூறிய இச்சரித்திரம் இப்பிரதேசத்திலுள்ள ஜனங்களுக்கு நன்றாய்த் தெரியுமோ?" என்று கேட்டான் சிவகன்.

"சரித்திரத்தின் ஸ்தூல வரலாறுமட்டும் எல்லோருக்கும் தெரியும். வீரவர்மருக்கும் விண்ணெளியானுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை, விக்யானந்தர்

கொலையைப் பற்றிய உண்மை, — பொதுவாக வெண் கலச்சிலைக் கூட்டத்தாரை சம்பந்தப் படுத்தும் எந்த விஷயமும் — பெரும்பாலார்க்குத் தெரியாது. அவ் வந்தரங்கங்கள் வெளிவர வேண்டுமானால் என் மூலமா கத்தான் வெளிவரவேண்டும். நான் தங்களிடம் பேசி யிருந்ததுபோல இவ்வளவு தாராளமாக வேறெவ ரிடத்திலும் பேசுவதரிது'' என்றான் பரந்தாமன்.

''ஆனால், என்னிடத்தில் மட்டும் ஏன் இவ்வந்தரங் கங்களை வெளியிட்டீர்?'' என்று கேட்டான் சிவகன்.

அதற்குப் பிரதியுத்தரமாக, சற்றும் தாமதமின்றி ''ஏனெனில், தங்கள் முகத்தில் ஒருவகையான தயாள குணமும் பெருந்தகைமையும் காணப்பட்டன. ஆத லால் எந்த அந்தரங்கத்தையும் தங்களிடம் வெளியிடுவ தற்கு நான் சிறிதும் அஞ்சவில்லை'' என்றான் பரந் தாமன்.

''அன்பரே! என்னிடத்து நீர் கொண்ட நல்லபிப் பிராயத்திற்காகப் பெரிதும் நன்றிபாராட்டுகிறேன். நிற்க, தயவுசெய்து இவ்வொரு விஷயத்தை எனக்குத் தெரிவியும். கோமதி, தேவகியைத் தவிர வேறொரு குமாரியைப் பெற்றிருக்கக் கூடும் என்று நினைக்க இடமுண்டா?'' என்று கேட்டான் சிவகன்.

இக் கேள்வியைக் கேட்டு பரந்தாமன் மிகவும் ஆச்சரியமுற்று, ''ஒருநாளு மில்லை. கோமதிக்குத் தேவகியைத் தவிர வேறு புத்திரப்பேறே கிடையாது'' என்று நிச்சயமாய்க் கூறினான்.

''நல்லது, தேவகிக்கு ஒருங்கிய உறவுடையவ ளும், பெரும்பாலும் தேவகியைப் போன்ற உருவுடை யவளும் எவளேனும் உண்டா? உள்ளதாக நீர் கேட்ட

தாவதுண்டா ?'' என்று மிகவும் ஆவலோடு கேட்டான் சீவகன்.

''இல்லை, ஒரு சிறிதும் இல்லை'' என்று கூறி ''என் இதைப்பற்றி இவ்வளவு வற்புறுத்திக் கேட்கிறீர்கள் ?'' என்று கேட்டான் பரந்தாமன்.

''அதைப் பற்றி நாளைக்குச் சொல்கிறேன்'' என்றான் சீவகன்.

இந்தச் சமயத்தில் பூதகி யிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. மீனாட்சி, காமாட்சி என்னும் தோழிப் பெண்கள் இருவரும் அறையினின்று வெளியில் வந்தார்கள். சீவகன் பரந்தாமனை விட்டு விரைவில் நீங்கி அவர்களிருவரையும் எதிர்கொண்டு சென்று ''உங்கள் எஜமானிக்கு உடம்பு எப்படி யிருக்கிறது ?'' என்று கேட்டான்.

''ஐயா, அவர்கள் இப்பொழுதுதான் கண் விழித்தார்கள். தங்களைப் பற்றி விசாரித்தார்கள்'' என்றாள் காமாட்சி.

''ஆனால், நீங்கள் என்னைத் தேடிதான் வந்தீர்கள் போலிருக்கிறது'' என்றான் சீவகன்.

''ஆம்''

''ஆனால் நான் சென்று உங்கள் எஜமானியைக் காணட்டுமா ?'' என்று கேட்டான் சீவகன்.

''இதோ, நாங்கள் சென்று எஜமானிக்குத் தங்கள் வரவை அறிவித்து வருகிறோம்'' என்று கூறி மீனாட்சி, காமாட்சி இருவரும் அறைக்குட் புகுந்து பூதகியிடம், சீவகன் வருவதை அறிவித்துவிட்டு மீட்டும் சீவகனிடம் வந்து அறைக்குட் சென்று எஜமானியைக்

காணலாம் என்பதை அறிவித்தபிறகு தாங்கள் வெளியே சென்று விட்டார்கள்.

சிவகன், பலபல எண்ணங்களுடனும், பலபல சந்தேகங்களுடனும், பூதகி வசித்த அறைக்குட் சென்றான்.

அதிகாரம் — 78.

ஏமாற்றியவளும் ஏமாற்றப்பட்டவனும்.

பூதகி ஒரு சோபாவின்மீது சாய்ந்து படுத்துக்கொண்டிருந்தாள். அவள் கூந்தல் விரிந்து தொங்கியது. அவள் முன்னங்கைக் காயத்தைச் சுற்றிக் கட்டியிருந்த கட்டு அவிழ்க்கப்படாமலிருந்தது. சிவகன் அறையினுள் நுழைந்ததும் அவள் தலையைச் சிறிது நிமிர்த்தி அவன் முகத்தை உற்றுநோக்கினாள். அவள் ஊன்றிப் பார்த்த பார்வை, அவன் உள்ளத்தில் நிகழும் எண்ணங்களையெல்லாம் துருவித்துருவிப் பார்ப்பதுபோலிருந்தது. அவனும் அவளை உற்று நோக்கினான்.

இருவர் கண்களும் சந்தித்தன. ஆனால், அவள் பார்வை மிகுந்த ஐயமும், மனத்தை வதைக்கும் கவலையும் உடையதாயிருந்தது; அவன் பார்வை மிகுந்த விசனமும், சிறிது இகழ்ச்சியும் உடையதாயிருந்தது. பூதகி, சிவகன் முகத்தை உற்று நோக்க நோக்க அவன் மனத்தில் பயமும் திகிலும் அதிகரித்தன. உள்ளுந்தும் துயரத்தை அடக்க முடியாமல் மெல்லப் பொருமினாள்.

சிவகன், அறையின் கதவைச் சார்த்திவிட்டு அவளருகே சென்று உட்கார்ந்துகொண்டு, அவள் கரத்தைத்

தன் கரத்தில் எடுத்து, சுமார் ஒரு நிமிஷநேரம் உற்று நோக்கிப் பின்னர் "பூதகி, உன்னோடு சில முக்கியமான விஷயங்களைப் பற்றிச் சம்பாஷிக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் போதுமான பலம் உனக்கிருக்கிறதா?" என்று கேட்டான்.

"அன்பரே! நான் இறக்குந் தறுவாயிலிருந்தாலும் எனது பலாபலத்தைச் சற்றும் சிந்தியாது, உமது உள்ளத் துள்ளதை உரைக்கக்கேட்டு, உம்முடைய முகக் குறியாலும் பார்வையாலும் பலபல நினைத்துக் கலங்கியுள்ள எனது மனதை அமைதிப் படுத்திக் கொள்வேன்" என்றாள் பூதகி.

"ஆனால், பூதகியே! இன்று நீ இக் கட்டிடத்தில் கண்ட ஒருவரிட மிருந்து எனக்கு எட்டியிருக்கக் கூடிய இரகசியங்கள் இருக்கின்றன என்பதை நீ அறிவை போலும்" என்றான் சிவகன்.

"ஆம்; பரந்தாமர் தமக்கு விருப்ப மிருக்குமானால் வெளியிடத்தக்க கதையொன்று அவர் மனத்தில் உள்ளதென்பதை நான் அறிவேன். அவர் அக்கதையைத் தங்களுக்குக் கூறியிருக்கிறார் என்பது தங்கள் முகக் குறியாலும் வாய்மொழியின் வகையாலும் தெரியவருகிறது. ஆயின், சிவகரே! சீக்கிரம் இதைச் சொல்லிவிடும்: உமக்கும் எனக்கும் உள்ள எவ்வித சம்பந்தமும் இதோடு நீங்கிவிட்டதாக நான் கருதிக்கொள்ள வேண்டியதுதானே?" என்று விஞ்சி, பூதகி நன்றாய் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு — தனது குற்றத்தை நன்றாய் உணர்ந்த ஒரு கைதி, நியாயாதிபதி வாயிலிருந்து வரும் தீர்ப்பை அறிய எவ்வளவு ஆவலோடு நோக்குவானோ, அவ்வளவு ஆவலோடு — அவன் முகத்தை உற்று நோக்கினாள்.

சிவகன் அவளை நோக்கி, "பூதகி, உடனே பதில் சொல்லக் கூடாத ஒரு கேள்வியை நீ என்னைக் கேட்கிறாய். ஆயினும், அந்தக் கேள்விக்கு மறுமொழி உன் நெஞ்சத்திலேயே நீ கண்டுகொள்ளலாம். எனெனில், மெய்யான நீதிநெறி எதுவோ அதினின்றும் ஒரு மயிரிழையளவும் விலகி நடக்க உடன்படாத உள்ளத்தவன் நான். ஆதலால் தீரவிசாரியாது எவரையும் குற்றவாளியாகக் கருதுவதும் எனது இயற்கைக்கு மாறுனது. மேலும், உன்மீது நான் ஒருவகை அன்பு பூண்டுள்ளேனென்பதை நீயறிவாய். ஆகையால் விதிவலிவேறுயிருந்தாலொழிய, அவசரப்பட்டு அவ்வன்புக்கு இழுக்கம் தேடி எனது வாழ்க்கை யின்பத்தைப் பாழ்படுத்தவாவது, உனது வாழ்க்கை யின்பத்தை அலட்சியஞ் செய்யவாவது நான் ஒப்பேன். சென்ற மூன்றுமணி நேரத்திற்குள் நான் ஆச்சரியமும் அபூர்வமுமான பல விஷயங்களைக் கேட்டேன். அவ் விஷயங்களடங்கிய சரித்திரம் கொடிய பல சந்தேகங்களை என் மனத்தில் உற்பத்தி செய்துவிட்டது. அந்தச் சந்தேகங்களுக்கு — அந்தோ! — நீ திருப்திகரமான சமாதானங்கள் சொல்ல — முடியாதென் றெண்ணுகிறேன்" என்றான்.

"ஆ, ஆயின் நான் சந்தேகித்தபடி நம் இருவர்க்கும் உள்ள சம்பந்தம் அற்றுப்போய்விட்டதுபோலிருக்கிறது!" என்று கூறிப் பெருமூச்செறிந்து, முகத்தைக் கையால் மூடிக்கொண்டு பூதகி சோபாவின் மீது சாய்ந்துவிட்டாள்.

அப்பொழுதுதான் சிவகன் மனதில் அவள் தன்னை உண்மையாய்—அன்போடும் ஆர்வத்தோடும்—அவளை அதிஉன்னத பதவியில் உயர்த்தி வைக்கக்கூடிய ஆற்றல் தனக்கு உள்ளதென்று அவள் அந்தரங்கமாக

அறிந்திருந்தாலும் அறிந்திராவிட்டாலும் தன்னைத் தனக்காகவே — காதலிக்கிறாள் என்பது நிச்சயமாய்த் தெரிந்தது. அவன் பேச முயன்றான் — அவளுக்கு ஆறு தலான வார்த்தைகள் கூற விரும்பினான்—ஆனால் அவன் உதடுகள் நடுங்கின. அவன் பேசுவதைத் தடுக்க யாரோ ஒருவர் — ஏதோ ஒன்று — தொண்டையைப் பிடித்து நெரிப்பதுபோல் தோற்றியது. அவனுக்கு மேலான ஏதோ ஒரு பெரிய சக்தி அவன் வாயைத் திறக்க வொட்டாமற் செய்தது.

அனேக நிமிஷங்கள் தொடர்ந்தாற் போல், அவ் வறையில் ஒரே அமைதி பரவியிருந்தது. அந்த நிறைந்த அமைதியிடையே, பூதகி அதிபிரயாசையோடு மெல்ல விடும் பெருமூச்சின் மெல்லிய ஓசை தெளிவாய்க் கேட் டது. அவள் அழவில்லை — அரற்றவில்லை — மார்பகம் விம்மி விம்மி அடங்கும்படி அதி தீர்ப்பலமாய் விடும் பெருமூச்சைத் தவிர வேறு அங்க இயக்கம் ஏதும் அவ ளிடம் காணப்படவில்லை. அவள் நிலையை நோக்க நோக்க சிவகன் மனம் இளகிற்று. அவளை வாரித் தழுவி அவள் பயத்தையெல்லாம் போக்கிவிடலாமா என்று கருதினான். ஆனால், அதே சமயத்தில் அவன் மனத்தில் திடீரென்று ஒரு கருத்துத் தோன்றி, அவன் விரும்பிய வாறு செய்வதால் நேரும் ஆபத்து இன்னதென அவ னுக்கு எடுத்துக்காட்டி எச்சரிப்பதுபோ லிருந்தது.

அவன் நா தளர்ந்தது. அவன் மிகவும் உருக்கத் தோடு மெல்லிய குரலில் பூதகியை நோக்கி, "பூதகி, தீர்ப்பு இன்னதென உன் வாயிலிருந்தே வந்துவிட்டது. இனி உன்னிடம் விடைபெற்றுச் செல்வதைத்தவிர நான் செய்யத்தக்கது வேறொன்றுமில்லை. ஆதலால் —போய் வருகிறேன்" என்று சொல்லி எழுந்தான்.

"ஆ, தெய்வமே! இதுவா என் விதி!" என்று பூதகி, குரல் மாறி, நா குழறி, பொறுக்கக் கூடாத துயரத்தோடு அரற்றினாள். அந்தப் பரிதாபமான குரலைக் கேட்கவும் சீவகனுக்கு உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் நடுங்கிற்று. அவன் கண்களில் நீர் அரும்பியது. பிறகு அவள் முகத்தை மறைத்திருந்த தன் கையை எடுத்து விட்டு, மெல்ல எழுந்து உட்கார்ந்து தன் வலது முழங்கையைத் தலையணையில் ஊன்றி அக்கைமீது தன் தலையைத் தாங்கிக்கொண்டு, சீவகனை நோக்கிக் கூறுகிறாள்: "சீவகரே, நாம் இருவரும் ஒருவரைவிட் டொருவர் நீங்கவேண்டியது அவசியமே. அதைத் தவிர்க்க வகையில்லை — விதியில்லை. தடுக்கக் கூடாத ஒன்றைப் பொறுமையுடன் வகித்துத்தான் ஆகவேண்டும். அதைப்பற்றி நான் வருந்திப் பயனில்லை — வருந்தக் கூடாது. ஆயினும் என்னைப்பற்றி நான் தங்களுக்குச் சொல்லவேண்டிய தொன்றுள்ளது. தங்களிடம் நான் எவ்விஷயத்தை எவ்வாறு மாறுபடுத்திச்சொல்லி யிருந்தபோதிலும், தங்களை என் வலையில் சிக்குவிக்க நான் என்ன தந்திரம் செய்திருந்தபோதிலும், எனது வஞ்சச் செயல்கள் எத்துணைப் பெரிய வாயினும், — என் பொருட்டும் மற்றொருவர் கருத்துக்குட்பட்டும் — தங்களை நான் எவ்வளவு தூரம் ஏமாற்றியிருந்தபோதிலும், — தங்களை முதன்முதல் என்று கண்டேனோ அன்று தொடங்கி நான் தங்களிடத்துக் கொண்ட காதலைப்போல, அவ்வளவு உண்மையும், ஆழமும், அன்பும், ஆர்வமும் உடைய காதல் வேறெந்த ஸ்திரீயின் உள்ளத்திலும் தோன்றியிரா தென்பது சத்தியம். நாம் இருவரும் ஒருவரைவிட் டொருவர் நீங்கவேண்டியது அவசியமே. ஆனால் என்னைவிட்டு நீங்கும்போது தாங்கள் வெறுப்புடனும் கோபத்

ஆடனும் நீங்கக் கூடாதென்று மிகவும் வணக்கமாய் — தாழ்மையாய் — கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். சிவகரே! தயவுசெய்து, அடியாள்மீது கிருபா நோக்கம் வைத்து, எனது கடந்த செயல்களே யெல்லாம் மன்னிக்கும்படியும் — இனி எப்பொழுதாவது என்னைப் பற்றிச் சிறிது நினைக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பற்றித் தாங்கள் இனி ஏதொன்றும் கேள்விப்பட மாட்டீர்கள். தங்கள் குறை வாழ்நாளுக்குக் குறுக்கே நான் வரமாட்டேன். அதிதூரத்தில் எங்காவது சென்று, என் தீராத் துயரத்தை அனுபவித்தற்கேற்ற ஒரு தனிமை வாசம் கொண்டு, தங்கள் திருவுருவத்தையே சதா மனதிலிருத்தி, தங்கள் வாழ்நாள் பெருகவென்றும், தங்கள் செல்வம் சிறக்கவென்றும், தங்கள் புகழ் பெருகவென்றும் நோற்றிருந்து என் காலத்தைக் கழிப்பேன். ஆதலால், என்னை சிறுமதி படைத்த பேதையென்று விலக்காதீர்கள்; புவியில் ஒளியும் புழுப்போல் என்னை இழித் தொதுக்காதீர்கள்; ஒரே ஒரு வார்த்தை மட்டும் தாங்கள் திருவாய் மலர்ந்தருளுங்கள். 'மன்னித்தேன்' என்ற பட்ச வார்த்தை ஒன்றுமட்டும் எனக் கருளுங்கள். அப்படி அருளுவீர்களானால், அந்த ஒரு வார்த்தையை, முன்னம் தாங்கள் எனக்குச் சூட்டிய, நிறந் தெரிந்த முழு மணிகள் பல விழைத்த காதற் கிரீடத்திலிருந்து விழுந்த ஒரு மரகதமணியாகப் பாவித்து என் உள்ளப் பொக்கிஷத்திற் பத்திரப்படுத்தி வைப்பேன்.''

இவ்வாறு கூறிய பூதகியின் மொழிகளைக் கேட்டு சிவகன் மனமுருகி, அவள் கரத்தை அழுந்தப்பற்றி, ''பூதகி, கடந்த செயல்கள் அனைத்தையும் மன்னித்தேன் — மனப்பூர்வமாய் மன்னித்தேன். என்னை

ஏமாற்றியதற்கு உனது நோக்கம் யாதாயிருந்தபோதிலும், நீ என்னை உள்ளன்போடு காதலித்திருக்கிறாய் என்பதை நான் மறவேன். உன்னைவிட்டு நான் — இனிக் கூடாவதை — பிரிகின்றேனாயினும், — உனது சௌமத்தைக் கோரும் உனது மெய் நண்பனாயிருப்பேன் என்பது நிச்சயம். இது நிற்க, நம்மை இங்கிலேக்குக் கொண்டுவந்த அந்த இரகசிய சங்கதிகளை நீ சற்றும் விளக்கமாட்டாயா?'' என்றான்.

பூதகி, தனது கண்களினின்று பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ''சிவகரே! நான் தங்கள் கருத்தை அறிந்துகொண்டேன். எல்லாவிஷயங்களையும் இப்பொழுதே விளக்கிவிடவேண்டுமென்று தாங்கள் விரும்புகிறீர்கள். ஆனால் சில விஷயங்களைப்பற்றி நான் ஏதும் சொல்லத் தகாதவளாயிருக்கிறேன். ஏனெனில், அவைகள் மற்றொருவர் சம்பந்தத்தையும் முடையன'' என்றாள்.

''பூதகி, உன்னைச் சூழ்ந்துள்ள இரகசிய இருளை நீக்கி, உன் உண்மை உருவத்தை எனக்குக் காட்டாயா? நான் அறிந்துகொள்ள விரும்பும் அவை யாவை என்று நீ அறியாயா? விண்ணெழிலியான் உண்மைச்சரிதத்தை நீ ஏன் மாற்றியுரைத்தாய்? நீ யார்? தேவகிக்கும் உனக்கும் உள்ள உண்மை உறவென்ன? வெட்டவெளியில் என்னை டெதிர்த்த வீரன் யார்? என்னை இவ்வளவு தூரம் காதலித்த நீ, குந்திதேசத்தில் என்னிடம் விடைபெற்றுக்கொண்டு என்னை தேவகியின் சாகசத்துக்கு ஆளாக்கிவிட்டுச் சென்றதேன்? தேவகி, தான் செய்த குற்றங்களால் என்னைவிட்டு அடியோடு பிரியும்படி நேர்ந்த பிறகு, நீ என்னைத் தேடி வந்தடைந்த தென்னகாரணத்தால்? உனது சூழ்ச்சிகளெல்லாம் நிகும்பனுக்குத்

தெரியுமா! என்னைப்பற்றிய அந்தரங்கம் ஏதாவது அவன் உன்னிடம் எப்பொழுதாவது கூறியுள்ளானு? இவ்விஷயங்களையெல்லாம் நீ எனக்கு விளக்குவாயானால் நான் உன்பால் மிகவும் நன்றிபாராட்டுவேன்" என்றான் சிவகன்.

"சிவகரே! இவைகளைப்பற்றித் தாங்கள் விரும்பும் விளக்கத்தை நான் நாளையதினம் தங்களுக்குச் சொல்கிறேன். இப்பொழுது என் உடம்பு மிகவும் பலவீனப்பட்டிருக்கிறது" என்றாள் பூதகி.

"ஆனால் சரி; உன் இஷ்டம் போலவே செய். நாம் நாளைக் காலையில் சந்திப்போம்" என்று கூறி சிவகன் அவ்வறையை விட்டு வெளிச் சென்றான்.



அதிகாரம் — 79

கடைசி சந்திப்பு

இரவு கழிந்தது. கீழ் வானம் ஆழ்கடலின் மேற்பரப்பைத் தொடுமிடத்துக் கதிரவன் தோன்றி மெல்லிய கிரணங்களால் துல்லிய ஒளிபரப்பி உலகை விளக்கி உயிர்களுக்கு உவகை ஊட்டியது. காற்று மெல்லெனத் தவழ்ந்தது; வாத்தியங்கள் பல ஒலிப்பதொப்பப் புள்ளினங்கள் சத்தமிட்டன; வண்டுகள் முரன்றன.

இங்ஙனம் பேரின்பப் பெருங் காட்சி பயந்த சூரியோதயத்திற்கு ஒருமணிநேரம் கழித்ததும், சிவகன் தன் படுக்கையறையை விட்டு வெளிவந்து வேறெதை

யும் கவனியாமல் நேரே பூதகி யிருக்கும் அறையை நாடி ஆவலோடு சென்றான். அவ்வறை வாயிலை அடைந்ததும் அவன் உட்செல்ல அஞ்சினான். ஏனெனில், முன்னள் இரவு முற்றும் அவனுக்கு நித்திரையென்பது சற்றும் கிடையாது. படுக்கையிற் படுத்தபடியே, தான் பரந்தாமனிடம் அறிந்த சரித்திரத்தைப்பற்றியும், பூதகியின் மாயச் செயல்களைப்பற்றியும், அவள் தன்மீது கொண்டுள்ள கரைகடந்த காதலைப்பற்றியும், தான் அவள்மீது கொண்டுள்ள ஒரு வகையான பற்றைப் பற்றியும், இன்னும் அவள் சம்பந்தமான பல அபூர்வ, ஆச்சரிய, அந்தரங்க விஷயங்களைப்பற்றியும் பலபல சிந்தித்துச் சிந்தை சிதறியிருந்தமையால் அவனுக்கு உறக்கம் வரவில்லை. எப்பொழுது பொழுதுவிடியும், எப்பொழுது பூதகி தனக்கு விளங்காத விஷயங்களனைத்தையும் விளக்குவாள் என்று ஆவலோடு எதிர் பார்த்திருந்தமையின், உண்மையிற் பொழுது விடிந்து விட்டதாயினும், உண்மையில் அவன் படுக்கைவிட்டெழுந்து பூதகியின் அறையை நாடி வந்துள்ளானாயினும் இவையெல்லாம் தனது சித்தப் பிரமையா யிருக்குமோ, அதே நினைவால் மனத்திற் கரணும் கனவாயிருக்குமோ என்று தன்னைத் தானே ஐயுற்றான். அவ்வையத்தை நீக்கி, தான் நல்ல சாக்கிர உணர்வோடிருக்கிற விஷயத்தை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காகவே அவன் அறைவாயிலண்டை நின்றான். தன் நெற்றியைக் கையால் அழுத்திக்கொண்டு, தன் எண்ணங்களைச் சிதறவிடாமல் ஒருமுகப்படுத்திப் பார்த்துக்கொண்டான். தான் காண்பது கனவல்லவென்று தெளிந்தபின்னர் அறைக் கதவைத் தட்டினான். உடனே பூதகியின் தோழிகள் இருவரும் வந்து கதவைத் திறந்து அவனுக்கு வழிவிட்டு நின்றார்கள். சீவகன் உட்செல்லவும்

அவர்கள் இருவரும் வெளியில் வந்து கதவைச் சார்த்தி விட்டுப் போய்விட்டார்கள்.

பூதகி, சிவகாமைக் காணவும் மிகவும் மெல்லிய குரலில், "சிவகரே, இதுவேயன்றே நமது கடைசி சந்திப்பு? ஆ! இதென்ன தங்கள் கண்கள் சிவந்துள்ளன! முகம் வெளுத்துள்ளது! ஆ, தெரிகிறது. நேற்றிரவெல்லாம் கித்திரை யின்றிப் பலவகைக் கொடிய துக்ககரமான எண்ணங்களுக்கு இடங் கொடுத்திருக்கிறீர்கள்போலிருக்கிறது" என்றாள்.

"ஆம், பூதகி! நான் ஒரு கொடிய இராப்பொழுதையே கழித்தேன். அது ஓர் ஆச்சரியமா? என் மனத்தைச் சிதறச்செய்யத்தக்க துயரங்கள் எனக்கும் உண்டு என்பது உனக்குத் தோன்றவில்லையா? உன்னை அடையலாமென்று நான் ஆவலோடு எதிர் பார்த்திருந்தது நிறைவேறுதற் கிடமில்லாமற் போய் விட்டதல்லவா? உன்னை இனி நான் என்னுடையவளாக்குவது—ஏலாது—ஆகாது—கூடாது; ஆயினும்—உன்னிடத்தில் எனக்கு ஏற்பட்ட காதல் சிறிதும் மாறுபடவில்லை. அது ஒருபுற மிருக்கட்டும். உன்னுடைய சம்பந்தத்தால் நான் கேட்க நேரிட்டவும், அனுபவிக்க நேரிட்டவுமான அநேக விஷயங்களின் உண்மை அந்தரங்கம் என்னும் திரையால் மூடப்பட்டிருக்கிறது. அந்தத் திரையை யகற்றி ஒவ்வொரு விஷயத்தின் உண்மை சொரூபத்தைக் காட்டவேண்டியவள் நீயே — காட்டுவதாக நேற்று வாக்களித்தவள் நீயே. ஆதலால் அவ்வந்தரங்கங்களின் விளக்கத்தை அறிந்துகொள்ள நான் எவ்வளவு ஆவலுடையவனாய் இருப்பேன் என்று நீ எளிதில் ஊகித்துக்கொள்ளலாம். ஆதலின், பூதகி! சீக்கிரம் எனக்கு அறிவிக்கவேண்டியவைகளை அறிவித்து

என் ஐயங்களையும் அச்சங்களையும் அகற்று'' என்றான் சிவகன்.

அப்பொழுது பூதகி, அவன் முகத்தை அன்புடன் நோக்கி, ''சிவகரே, தாங்கள் ஒரு கொடிய இரவைக் கழித்ததாகக் கூறினீர்கள். அது உண்மை யென்பதை நான் நன்கறிவேனுயினும் நான் கழித்த நேற்றிரவின் கொடுமைக்குத் தங்களிரவின் கொடுமை எத்தனையோ மடங்கு குறைந்ததாய்த்தா னிருக்கவேண்டும். நேற்றிரவு நிகழ்ந்த சம்பவங்களால் நான் பல விஷயங்களையும் பற்றி எண்ணி எண்ணித் துயருழந்தேன். அத்துயரமிகுதியால் என் கையிலுள்ள காயத்தின் வலி அதிகமாயிற்று. நான் கடுந்துயர்க்கு ஆளாயிருக்கிறேன் என்பதை எனது தோழிகள் நன்றாய்த் தெரிந்துகொண்டார்களாகையால், நான் அவர்களுக்கு அனேக விஷயங்களை வெளியிட்டுச் சொல்லவேண்டியதாயிற்று. தங்களை விட்டு நானும், என்னை விட்டுத் தாங்களும் பிரிய வேண்டியது அவசியம் என்பதை அவர்களுக்கு அறிவிக்கவேண்டியவளானேன். முடிவாக, நான் துக்கமும் துன்பமும் நிறைந்த ஒருகொடிய இரவைக் கழித்தேன். எனது ஜன்மவிரோதிக்கும் அவ்விதமான இரவின் அனுபவம் நேரிடும்படி நான் ஒருகாலும் கோரமாட்டேன்'' என்றாள்.

''பூதகியே! உனது நிலைமையைக் குறித்து நான் பெரிதும் வருந்துகின்றேன். எனது சினேகத்தால் நீ அடைய விரும்புவது ஏதாவ துள்ளதாயின், அதைக் கூறு. நான் திரண்ட செல்வமும் மிகுந்த அதிகாரமும் உடையவன் என்பதை மூன் ஒருமுறை உனக்குத் தெரிவித்துள்ளேன்'' என்று கூறிவந்த சிவகன் திடீரென்று விழித்துக்கொண்டவன்போல் ''ஒருகால் அத்துணைச்

செல்வத்துக்கும் அதிகாரத்திற்கும் பிறப்பிடம் யாதென நீ அறிந்திருந்தாலும் இருக்கக்கூடும்'' என்றாள்.

பூதகி, அவன் கடைசியில் சொன்ன வாக்கியத்தைக் கவனியாதவள்போல, ''தங்கள் காதலி இழந்த எனக்குத் தங்கள் சினேகம் ஆறுதல் அளிக்கவல்லதோ? ஆயினும் என் நிலைமைக்கிரங்கி எனக்கு உதவிபுரிய முன் வந்த தங்கள் பெருங்கருணைக்கு வந்தனம். ஆனால், எனக்குத் தங்கள் 'மன்னிப்பு' ஒன்றைத் தவிர வேறெவ்விதமான உதவியும் வேண்டுவதில்லை. இனி, நான் தங்களுக்குக் கூறுவதாக வாக்களித்த அந்தரங்க விவரங்களைக் கூறுவேன்'' என்றாள்.

அவள் வாயினின்று வரும் அந்தரங்கங்களை அதி கவனமாய்க் கேட்கவேண்டி, சீவகன் தனது இருக்கையை இழுத்து அவளருகே போட்டுக்கொண்டான். பூதகி கூறத் தொடங்கினாள் :

''மணிபல்லவக்கோட்டை தீக்கிரையாகி யழிந்ததென்றும், அதில் கோமதியும் தேவகியும் உயிர் துறந்திருக்கவேண்டுமென்றும் பரந்தாமர் கூறினரன்றோ? அதற்குமுன் நடந்த சரித்திரம் தங்களுக்குத் தெரியும். ஆதலால் நான் அதற்குப் பிறகு நிகழ்ந்த சரித்திரத்தையே கூறுகிறேன். இவ்விடத்தில் ஒரு விஷயம் குறிக்க வேண்டியிருக்கிறது. அதாவது, பரந்தாமர் கருதியதுபோல் கோமதியும் தேவகியும் மணிபல்லவர் மாளிகையில் மரித்துவிடவில்லை யென்பதே. அவர்கள் எவ்விதம் தப்பித்தார்கள் என்பதைப்பற்றிக் கூறுவதற்கு முன் சில விஷயங்கள் கூறவேண்டும். கோமதி சிறைப்படுத்தப்பட்டது முதல், மணிபல்லவர் அவளைத் தமது தீய எண்ணத்துக்கு இணக்கும்படி மிகவும் முயன்றார். கோமதி அதற்குச் சற்றும் இணங்காது

கண்டு அவர் அவளைப் பலவகையிலும் பயமுறுத்தத் தொடங்கினர். அதற்கு அஞ்சி, கோமதி அவரைப் பகைத்துக் கொள்வது உசிதமல்லவென்று கண்டு, அவர் விருப்பத்திற்கு இணங்குபவள்போல் நடித்து, தனது புருஷன் இறந்தாள் தொடங்கி ஒரு வருஷம் கடந்து விட்டால், அப்பால் அவர் கருத்துக்கு இணங்குவதாகத் தெரிவித்தாள். ஒரு வருஷத்திற்குள், தெய்வச் செயலால் தனக்கு ஏதாவது விமோசனம் பிறக்கக்கூடுமென்று அவள் எதிர்பார்த்தாள். அவள் அழகில் மதிமயங்கிய மணிபல்லவர், எவ்விதமாவது அவள் தன் கருத்துக்கு உடன்பட்டாற்போதும் என்று இருந்தவராகையால், அவள் கூறியபடி ஒரு வருஷம் செல்லுமளவும் பொறுத்திருக்கச் சம்மதித்தார். குறித்த ஒரு வருஷகாலம் அநேகமாய்க் கடந்து விட்டது. அப்பொழுது வீரவர்மர் மணிபல்லவரிடம் ஒரு தூதுவனை அனுப்பி, குழந்தை தேவகியைத் தன்னிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்று தெரிவித்தார். இச் செய்தியை மணிபல்லவர் கோமதிக்குத் தெரிவித்தார். கோமதி தன் மகளைவிட்டுப் பிரிய மனம்பொறுமல், வீரவர்மர் விருப்பத்திற்கு இணங்கி தேவகியை அவரிடம் அனுப்பிவிடக் கூடாதென்று மணிபல்லவரை மிகவும் கெஞ்சிக்கேட்டுக் கொண்டாள். மணிபல்லவர், கோமதி மனத்தைத் திருப்தி செய்தால் அவள் காதலைப் பூரணமாய்ப் பெறலாமென்று கருதி, தேவகியை வீரவர்மரிடம் ஒப்புவிக்க மறுத்துவிட்டார்.

"வீரவர்மர் இதனால் மிகவும் கோபங்கொண்டு படை திரட்டிவந்து மணிபல்லவக்கோட்டையை எதிர்த்தார். யுத்தமுடிவில் மணிபல்லவர் தோற்றுவிட்டார். வீரவர்மர் சேனைகள் மணிபல்லவர் மாளிகையுட் புகுந்தனர்.

மணிபல்லவர் கொல்லப்பட்டார். அவர் சிப்பந்திகள் கோட்டையில் நெருப்பு வைத்துத் தாமும் உயிர் துறந்தனர். அதனுலுண்டான பெருங் குழப்பத்தில், கோமதி தன் மகளே எடுத்துக்கொண்டு ஒருவர் கண்ணிலும் அகப்படாமல் கோட்டையைவிட்டுத் தப்பித்துக் கொண்டு போய் அதை அடுத்த ஒரு காட்டிற் புகுந்து, தனது உயர்ந்த ஆடையணிகளே நீக்கிவிட்டுத் தானும் தன் மகளும் சாதாரண குடிஜனங்களேப்போல் உடுத்திக்கொண்டு அங்கிருந்து நடந்து சென்று குந்திதேசத் தருகாமையை அடைந்தாள். அங்கே தான் கொண்டு வந்த ஆபரணங்களே யெல்லாம் விற்று ஒரு சிறு குடிசையை விலைக்கு வாங்கிக்கொண்டு அதில் தன் மகளுடன் சாதாரண ஏழைக் குடிகளேப்போல வசித்துவந்தாள். வீரவர்மர் தமது ஆட்களேக் கொண்டு தன்னைக் கண்டு பிடிக்கக்கூடாமல் தனது பெயரையும் தன் மகள் பெயரையும் மாற்றிக்கொண்டாள்.

"ஒரு நாள் — அப்பொழுது தேவகிக்கு ஒன்பது வயதாகிவிட்டது — கோமதி தனது குடிசை வாயிலில் தன் மகள் தேவகிக்குக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தாள். அச்சமயம் ஒரு குதிரை அதிவேகமாய் ஓடிவரும் சத்தங்கேட்டு, அவள் திகிலடைந்து இருக்கையிட்டு எழுந்தாள். அடுத்த நிமிஷமே ஓடிவந்த குதிரை குடிசையை நோக்கித் திரும்பித் தன்மீது ஏறிவந்த ஒரு புருஷனேக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிட்டது. கோமதி கீழே விழுந்தது யாரென்று பரிதாபத்தோடு சென்று பார்த்தபோது அவளுக்கு உண்டான ஆச்சரியம் கொஞ்சமல்ல. விழுந்தவன், தனது கணவரிடம் வேலை பார்த்துவந்த நிகும்பனுயிருக்கக் கண்டாள். ஆனல், அவன் அவளே அறிந்துகொள்ளக்கூடிய நிலேமையிலில்லே.

விழுந்த அதிர்ச்சியால்ஸ்மரணந தப்பியிருந்தான். அவனை அவள் அவ்வழி வந்தார் சிலர் உதவியால் தன் குடிசைக்குள் எடுத்துச் சென்று படுக்கையிற் கிடத்தி, அவனுக்கு ஏதும் காயமுண்டாவென்று பார்த்தாள். அவன் வலது புஜம் காயமுற்றிருப்பதுகண்டு அவன் மேற்சட்டையைக் கழற்றி சிகிச்சை செய்யத் தொடங்கினாள். ஆ, தெய்வச்செயலின் விசித்திரத்தை என்னென்று சொல்வது! அவன் கையிற் காணப்பட்ட ஒரு குறியால், நெடுநாட்களுக்கு முன் காணாமற்போன மேகவண்ணர் குமாரன் — தனது உடன்பிறந்த சகோதரன் — அவனே என்பதைக் கோமதி அறிந்தாள். நிகும்பன் உணர்வு தெளிந்த பிறகு தனக்குச் சிகிச்சை செய்தவள் தனது பழைய எஜமானியாயிருப்பதைக் கண்டான். அப்பால் அவள் வாயிலிருந்தே தான் அவள் சகோதரன் என்பதையும் அவன் அறிந்தான். பின் அவன் விண்ணெளியானிடமிருந்து நீங்கிய பின் தான் செய்துவந்த வேலைகளைப் பற்றிக் கூறி, முடிவில் கடந்த நாலைந்து மாதங்களாக, பாஞ்சால தேசத்தாரிடம் ஒரு பொறுப்பான உத்தியோகத்தை வகித்திருப்பதாகவும் கூறினான். குதிரையினின்று வீழ்ந்ததால் தனக்குண்டான காயங்கள் குணப்படுவதற்குச் சில வாரங்களாயின. அதுவரையில் அவன் தன் சகோதரியின் வீட்டிலேயே இருந்து, பிறகு பாஞ்சால தேசம் சென்றான்.

"ஆயினும் இரண்டொரு மாதங்கள் சென்ற பிறகு அவன் தன் சகோதரியைப் பார்த்துப்போக விரும்பி பாஞ்சால தேசத்தினின்றும் வந்தான். அச் சமயம் கோமதி உடற்பிணியுற்று வருந்திக்கொண்டிருந்தாள். ஆதலால், அவன் சில நாட்கள் தங்கும்படி நேரிட்டது. கோமதி வியாதியினின்றும் தப்புவது அரிதாகக்

காணப்பட்டபடியால் தன் மகளை அவன் வசம் ஒப்புவித்து, 'இனி இவளை நீயே காப்பாற்றி, இவளுக்குத் தக்க பருவம் வந்தவுடன், செய்துகொண்ட பிரதிக்கினைப்படி, இவளை தேவாலயப் பணிவிடைக்கு அர்ப்பணம் செய்துவிடவேண்டியது' என்றாள். நிகும்பன் அவ்விதமே செய்வதாக வாக்களித்தான். அதற்குப் பின் சில மணிநேரத்திற்கெல்லாம் கோமதி உயிர் துறந்தாள். நிகும்பன், அவள் இறந்தது குறித்துப் பெரிதும் வருந்தி அவள் உடலை அடக்கம் செய்துவிட்டுத் தேவகியைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போய்விட்டான்.''

இந்த விதம் பூதகி சொல்லிக்கொண்டு வரும்போது அறைக்கு வெளியே மனிதரரவம் கேட்டது. அதென்ன வென் றறியவேண்டி அவள் தான் கூறிவந்த வரலாற்றை நிறுத்திக்கொண்டு காது கொடுத்துக் கேட்டாள். மறு நிமிஷம் அவள் இருந்த அறைக்கதவம் திறக்கப்பட்டது. சிவகன் திடுக்கிட்டுத் தன் உடைவாளை உருவிக்கொண்டு எழுந்தான். நிகும்பன் பரிவாரத்தைச் சேர்ந்த சேவகர்கள் அறுவர் அறைவாயிலருகே நின்றனர்.

சிவகன் அவர்களை நோக்கி, ''நண்பர்களே! யார் உத்தரவின்மேல் நீங்கள் இங்கு வரத் துணிந்தீர்கள்?'' என்றான்.

பூதகி அவர்களை நோக்கி, ''ஐயன்மீர், நீங்கள் இங்கு வரக் காரணமென்ன?'' என்று கேட்டாள்.

அப்பொழுது அவ்வறுவருள் தலைவன் அவளை நோக்கி, ''அம்மா, எங்கள் தலைவர் கட்டளைப்படி நாங்கள் தங்களைச் சிறைப்படுத்திச் செல்ல வந்துள்ளோம்'' என்றான்.

"யாரை? — என்னையா? என்னையா சிறை செய்ய வந்திருக்கிறீர்கள்!" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"ஆம், அம்மா! தங்களைத்தான். பாஞ்சால தேசத் தலைவர் நிருபர் கட்டளைப்படி நாங்கள் தங்களைக் கைதிசெய்து குந்திதேசத்திற்குக் கொண்டுபோகக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்றான் படைத் தலைவன்.

"இதென்ன அநியாயம்! நான் உங்கள் கைதியாய் வாரேன்" என்று கூறி பூதகி சிவகனை நோக்கினாள்.

சிவகன் படைஞர்களை நோக்கி, "என் முன்னிலையில் நீங்கள் இவ்வம்மையைத் தொடத் துணிவீர்களோ?" என்றான்.

படைத் தலைவன் அவன் கூற்றைக் கவனியாதவன் போல் தனக்குட்பட்டவர்களை நோக்கி, "நீங்கள், உங்கள் கடமையை நிறைவேற்றலாம்" என்றான்.

உடனே படைஞர்கள் உள்நுழைந்து, சிவகன் தடுக்கமுயலுவதற்குமுன், பூதகியைப் பிடித்தார்கள். அவள் அவர்கள் கையினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ள செய்த முயற்சியில் அவள் கையைச்சுற்றிக் காயத்திற்குச் சிகிச்சையாகக் கட்டப்பட்ட துணி அவிழ்ந்து கீழே விழுந்துவிட்டது. அப்பொழுது அவள் கரத்தைக் கண்ட சிவகனும் படைஞர்களும் ஆச்சரியமேலீட்டால் பிரமித்து நின்றனர். அவள் கரத்தின் எந்தப் பாகம் துணியால் முன்னம் சுற்றப்பட்டிருந்ததோ அந்தப்பாகம் நிறத்தில் அவளுடைய மற்ற அவயவங்களைப் போல இல்லாமல் மிகவும் வெளுப்பாய் இருந்தது. ஆகவே பூதகியின் நிறம் அவளுடைய இயற்கை நிறமல்ல வென்பது செவ்வனே விளங்கிற்று.

சற்றுநேரத்திற்கெல்லாம், படைஞர் தலைவன் மற்றவர்களை நோக்கி, "நல்லது, ஏன் தாமதிக்கிறீர்கள்?" என்றான்.

சீவகன் அவனை நோக்கி, "ஐயா, இந்த மோதிரத்தில் ஏதும் மகத்துவமிருந்தால் நீங்கள் இக்கணமே இவளை விட்டுவிட்டுச் செல்லுங்கள்" என்று கூறி, நிகும்பன் தனக்களித்த மோதிரத்தை அவர்களிடம் காட்டினான்.

உடனே படைஞர்கள் எல்லோரும் பின்வாங்கினர்கள். படைத்தலைவன் சீவகனுக்கு வந்தனம்செய்து, தன் சட்டைக்குள் வைத்திருந்த ஒரு முத்திரை யிடப்பட்ட கடிதத்தை வெளியிலெடுத்து அவனிடம் கொடுத்தான்.

சீவகன் அதை வாங்கி, முத்திரையை உடைத்துப் பிரித்து அதனுள்ளிருந்த கடிதத்தை எடுத்துப் பார்த்தான். பார்க்கவும், சீவகன் இடிவிழுந்ததுபோல் திடுக்கிட்டான்; அவன் மனம் சுழன்றது; மூளை கலங்கிற்று; ஒரு கையிற் பிடித்திருந்த உடைவாள் நழுவி கீழே விழுந்தது; மறு கையில் வைத்திருந்த கடிதமும் கீழே விழுந்தது. சீவகனும் பெருமூச்சுவிட்டுக் கீழே சாய்ந்து விட்டான். இவ்வளவுக்கும் காரணமாயிருந்த அக் கடிதத்தின் செய்தி வருமாறு :—

"தயவுசெய்து எதையும் நிதானித்துச் செய்யுங்கள்; எனது ஆட்கள் நெறிப்படியோ நெறிமுறை பிறழியோ நான் இட்ட கட்டளையை நிறைவேற்றுவார்கள். அதைத் தாங்கள் தடுக்காதீர்கள். ஏனெனில், தேவகி, பூதகி இருவரல்லர்; இருவரும் ஒருவரே!"

மூன்றும் பாகம்

முற்றுப்பெற்றது.

தமிழ் நவீன நாவல்கள்

இதனடியிற் கண்ட கதைப் புத்தகங்கள், இனிய செந்தமிழ் நடையில் படிப்போர்க்கு மனோற்சாகத்தை யுண்டாக்கும் வண்ணம் எழுதப்பட்டுள்ளன. வாசிக்கப் புகுவோர் புத்தகத்தை முடிக்கா முன்னர் திருப்தி யடையார் என்பது திண்ணம். ஆரம்பத்தில் மாத்திரம் இனிமை வாய்ந்து செல்லச் செல்ல படிப்போர்க்கு வெறுப்பை யுண்டாக்காமல் இவைகள் சதா பெரு நகைப்பு, வியப்பு முதலிய ரசங்களைப் பயக்கும். புத்தகங்கள் தடித்த கடிதத்தில் திருத்தமாய் அச்சிடப்பட்டுள்ளன.

	ரூ.	அ.	பை
பக்தவிஜயம்	3	0	0
மாண்டிகிரிஸ்டோ (இரண்டு பாகம்) ..	2	8	0
தியாகராஜ கீர்த்தனைகள்	1	4	0
இரங்க நாயகி	1	4	0
சுகுணதீரன் (முதற்பாகம்)	1	0	0
,, (இரண்டாம் பாகம்) ...	1	4	0
ஞானசம்பந்தன்	1	0	0
பிருதிவி ராஜன் (நாடகம்)	1	0	0
மனோரஞ்சிதம் (முதற் பாகம்)	1	0	0
,, (இரண்டாம் பாகம்) ...	1	0	0
ஜெயசீலன்	1	0	0
அஞ்சனாக்ஷி (முதற் பாகம்)	1	0	0
திரிலோக மோஹனாங்கி	1	0	0
சந்திரோதயம்	1	0	0